
# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

காரைக்குடி - 630003

# ONLINE PROGRAMMES

## எம்.ஏ. (தமிழ்)



# கல்வெட்டியல்

இரண்டாம் பருவம்

# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் **A+(CGPA: 3.64)** தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003


எம்.ஏ. (தமிழ்)
இரண்டாம் பருவம்

205124

# கல்வெட்டியல்

**Author:**

**DR. M.CHITHAMBARAM**, *Associate Professor in Tamil, Tamil Research Centre, Alagappa Government Arts College, Karaikudi-630003*

& **DR.K.LAKSHMI** *Assistant Professor in Tamil, Rajah Serfoji Government College, Thanjavur-613005.*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: 7361, Ravindra Mansion, Ram Nagar, New Delhi 110 055
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE1-291/Preparation and Printing of Course Materials/2018 Dated 19.11.2018 Copies 500**

# கல்வெட்டியல்

## பிரிவு – I கல்வெட்டு

கூறு 1: வரலாற்று உருவாக்கத்தில் கல்வெட்டுகளின் பங்கு

கூறு 2: கல்வெட்டுகள் எழுதும் முறை

கூறு 3: இந்திய கல்வெட்டுகளில் காணும் மொழிகள்

கூறு 4: கல்வெட்டுகளின் தன்மை

## பிரிவு – II தமிழக, இந்திய கல்வெட்டுகள்

கூறு 5: அசோகர் கால கல்வெட்டுகள்

கூறு 6: தமிழக கல்வெட்டுகளின் பொதுத்தன்மை

கூறு 7: இந்தியக் கல்வெட்டாய்வின் வரலாறு

கூறு 8: தென்னிந்திய கல்வெட்டாய்வின் தோற்றமும்-வளர்ச்சியும்

## பிரிவு – III காலம்

கூறு 9: கல்வெட்டுகளின் கால கணிப்பு

கூறு 10: எழுத்துக்களின் தோற்றம்

கூறு 11: சிந்து வெளி எழுத்துகள்

கூறு 12: பிராமி, கரோஷ்மி, தமிழ் பிராமி, வட்டெழுத்து

## பிரிவு – IV எழுத்துகள் குறியீடுகள்

கூறு 13: கிரந்த எழுத்து, தமிழ் எழுத்துக்கள்

கூறு 14: குறியீடுகள்

குறிப்பு

# பிரிவு – I கல்வெட்டு

கல்லில் வெட்டப்படுகின்ற, பொறிக்கப்படுகின்ற எழுத்து கல்வெட்டு எனப்படும். இதனை வெட்டெழுத்துக்ள், பொறிப்புகள் சிலாசாசனங்கள் என்று கூறுவர். கல்லாலான கோயில்கள் உருவாகிய காலம் முதல் இவை பல்கிப் பெருகின. கோயிலின் உட்புற, வெளிப்புற சுவர்கள், பொதுக் கட்டிடங்களின் உட்புற வெளிப்புறச் சுவர்கள், குன்றுகள், கற்றூண்கள், சிற்பங்கள், பீடங்கள், குகைகள் மற்றும் மேற்கூரைகளின் மேலும் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளைப் பொறித்தவர்கள் கல்லெழுத்தாளர், முகவெட்டி, ஓலை முதலிய சொற்களால் அழைக்கப் பெற்றனர்.

## கூறு 1: வரலாற்று உருவாக்கத்தில் கல்வெட்டுகளின் பங்கு

இந்தியாவில் கிடைக்கின்ற கல்வெட்டுக்களில் பெருமளவு தென்னிந்தியாவில் கிடைக்கின்றன. தென்னிந்தியக் கல்வெட்டுக்களில் தமிழ் கல்வெட்டுக்கள் முதன்மை பெறுகின்றன. இதுவரை தமிழ் 24,000, கன்னடம் 11,000, தெலுங்கு 5,000 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தமிழ் மொழியில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகள் கிடைக்கின்றன.

'மற்ற வரலாறு மூலங்களை விட கல்வெட்டுகள் நம்பத் தகுந்தவை. ஏனெனில், இவை பொறிக்கப்பட்ட காலத்திற்குப் பின் பெரும்பாலும் எந்த மாற்றத்தையும் அடைவதில்லை".

கி.பி. 4ஆம் நூற்றாண்டு தொடங்கி 17ஆம் நூற்றாண்டு முடிய உள்ள காலத்து 'தமிழ்நாட்டு வரலாற்றைப்" பெரும்பாலும் கல்வெட்டுக்களை அடிப்படையாக வைத்தே எழுத வேண்டியுள்ளது. ஆறாம் நூற்றாண்டு வரை கல்வெட்டுக்கள் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளன. மேலும் அவை ஓரிரு வரிகள் கொண்டவையாகவே உள்ளன. 550க்குப் பின் வட தமிழ்நாட்டில் பல்லவர் அரசும், தெற்கே பாண்டியர் அரசும், வளர்ந்த போது கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் எண்ணிக்கையிலும் வகையிலும் வளர்ந்தன. அதற்குப்பின் சோழர் ஆட்சிக் காலத்தில் 10-13ஆம் நூற்றாண்டுகளில் கல்வெட்டுக்களின் எண்ணிக்கை உலகில் வேறு எங்கும் எப்பொழுதும் கண்டிராத அளவுக்கு உயர்ந்தது. 13ஆம் நூற்றாண்டுக்குப் பின் அவற்றின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்தது. விஜயநகர அரசாட்சிக் காலத்தில் செப்பேடுகள் ஏராளமாக வெளியாயின.

குறிப்பு

தமிழ்க் கல்வெட்டுக்களில் 95% கோயில் சுவர்களின் மீதே பொறிக்கப்பட்டுள்ளன. ஓலையில் எழுதப்படுவது அழியுமாதலின் கல்லிலும் செம்பிலும் எழுதிக் கொடை மற்றும் இதர செய்திகளைப் பாதுகாத்துள்ளனர். இதனைக் கீழ் வரும் தொடர்கள் வழி அறியலாம்.

**‘கல்லிலும் செம்பிலும் வெட்டி**
**இவ்வூர் விட்டோம்’ (தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் 17-253)**

**‘கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளச் சம்மதித்தோம்’**
**(கல்வெட்டு ஆண்டு அறிக்கை 1904 எண் 670)**

**‘ஓலை பிடிபாடாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளுக’**

**(மேலது எண். 14)**

கல்வெட்டுகள் உண்மைத் தன்மையை அதிகம் உடைய காலத்தால் அழிக்க இயலாத மிகுதியான வரலாற்றைத் தாங்கியிருக்கும் பெட்டகங்கள் எனில் மிகையில்லை.

**சங்க கால சேரர் கல்வெட்டு**

திருச்சிக்கு அருகில் உள்ள கருவூர்க்கு அருகில் புகளூர் என்னும் ஊர் உள்ளது. இதற்கு அருகில் உள்ள ஆர் நாட்டார் மலையில் உள்ள குகைகளில் இக்கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளின் எழுத்தமைதியைக் கொண்டு வடபுறக் குகைக் கல்வெட்டு கி.மு. 2ஆம் நூற்றாண்டிற்கு உரியது. மற்றவை கி.பி. முதல் நூற்றாண்டிற்குரியவை என இரா. நாகசாமி கூறியுள்ளார்.

நாகன் மகன் இளங்கீரனால் செய்யப் பெற்றது வடபுறமுள்ள கல்வெட்டு. தென்புறக்குகை கல்வெட்டிலிருந்து பெருஞ்சேரல் இரும்பொறை மகன் பெருங்கருங்கோ, இவன் மகன் இளங்கருங்கோ, இவ் இளங்கருங்கோ இளங்கோப் பருவத்தில் ஆற்றூர்ச் செங்காயபனுக்கு இக்குகையில் கல் அமைப்பித்தான், மேலும் கொற்றந்தை படுக்கைகள் அமைந்த முன்று (முற்றம்) செய்வித்தான் எனும் செய்திகள் அறியலாகின்றன.

1.நாகன் மகன் இளங்கீரன் - வடபுறம் உள்ள கல்வெட்டு

2.அ) மூதா அமண்ணன் யாற்றூர் செங்காயபன்

ஆ) கோ அல்லிரும்புறை மகன் பெருங்

இ) கடுங்கோன் மகன் ளங்கடுங்

ஈ) கோ ளங்கோ ஆக அறுபித கல்

3.மூத்த அமணன் யாற்றூர்ச் செங்காய பன் உறையக்
கோ ஆதன் செல் லிரும் பொறை மகன்
பெரு கருங் கோன் மகன் இளங் கடுங்கோ
இளங்கோ ஆகி அறுத்த கல் - தென்புறக் குகைக் கல்வெட்டு

2-ல் (ஈ)யில் ஆக என்றுள்ளது, 3-ல் ஆகி என்றிருப்பதால் முன்னது இளங்கோ ஆதற் பொருட்டு என்றும் பின்னது இளங்கோ ஆகிய பின் என்றும் பொருள்படும்.

குறிப்பு

4. கொற்றந்தை செய் முன்று

ஐராவதம் மகாதேவன் கொற்றந்தை இளவல் மூன்று என்ற பொருள் கூறுவார்.

**இச்சேர அரசர்கள் பற்றிய அறிஞர்களின் முடிபுகள்**

கோஆதன் செல் இருமபொறையின் மகன் பெருங்கடுங்கோன்செல் எனக் குறிக்கப்படுபவன் செல்வக்கடுங்கோ வாழி ஆதன் ஆவான். இவன் பதிற்றுப்பத்தின் 7-ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவன் ஆவான். இவனே இக்கல்வெட்டில் கண்ட கோ ஆதன் செல் இரும்பொறை ஆவான். இவன் மகனாகிய பெருங்கடுங்கோ பதிற்றுப்பத்தில் 8ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவன் பெருஞ்சேரல் இரும்பொறை ஆவான். இவன் மகன் இளங்கடுங்கோ 9ஆம் பத்தில் குறிக்கப் பெறும் இளஞ்சேரல் இரும்பொறை ஆவான். எனவே 7, 8, 9ஆம் பத்துகளின் பாட்டுடைத் தலைவர்கள் இவர்கள் என ஐராவதம் மகாதேவன் கூறியுள்ளார்.

ஆயின், மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் ஏழாம்பத்தின் பாட்டுடைத் தலைவன் செல்வக்கடுங்கோ வாழியாதன், இவனுடைய முதல் மகன் தகடூர் எறிந்த இளஞ்சேரல் இரும்பொறை, மற்றொரு மகன் குட்டுவன் இரும்பொறை இக்குட்:டுவன் இரும்பொறையின் மகன் இளஞ்சேரல் இரும்பொறை எனப் பதிற்றுப்பத்து கூறுகின்றது.

கோ ஆதன் செல் சேரல் இரும்பொறை 7ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவனாகிய செல்வக் கடுங்கோ வாழி ஆதன் ஆக இருக்க முடியாது. பெருஞ்சேரல் இரும்பொறைக்குப் பெருங்கடுங்கோ என்னும் பெயர் சங்க இலக்கியத்தில் எங்கும் இல்லை. சாசனத்தில் உள்ள இளங்கடுங்கோ 9ஆம் பத்தின் தலைவனாகிய இளஞ்சேரல் இரும்பொறையாக இருக்க முடியாது. இளஞ்சேரல் இரும்பொறைக்கு இளங்கடுங்கோ என்ற பெயர் எங்கும் கூறப்பெறவில்லை. மேலும் 8ஆம் பத்துக்குரியவன் குட்டுவன் இரும்பொறை என்பவனுடைய மகன் ஆவான். எனவே இவர்கள் 7, 8, 9ஆம் பத்துகளின் பாட்டுடைத் தலைவர்கள் அல்லர். பெருஞ்சேரல், சேரல் இரும்பொறையின் மகனாகிய பெருங்கடுங்கோ நற்றிணை முதலாகிய சங்க நூல்களில் பாடல்கள் பாடிய பாலை பாடிய பெருங்கடுங்கோ ஆகலாம். இவன் மகன் இளங்கடுங்கோ நற்றிணையில் ஒரு பாடலும், அகநானூற்றில் இரண்டு பாடல்களும் பாடிய மருதம் பாடிய இளங்கடுங்கோ ஆகலாம் என்கிறார்.

இங்குள்ள கல்வெட்டுகள் மொத்தம் 11 ஆகும். இவைகள் சங்க கால சேரர்கள் பற்றி குறிப்பிடுவதால் சங்க இலக்கியங்களின் தொன்மையை நிறுவும்

வகையில் உள்ளதை அறியலாம். மேலும் பதிற்றுப்பத்து நூல் வெளியான பிறகே அந்நூலின் பெருமையை நம்மால் கல்வெட்டு வழி அறிய முடிந்தது.

**பல்லவர்களின் கல்வெட்டுகள்**

பல்லவர் ஏறத்தாழ 700 ஆண்டுகள் தென் இந்தியாவில் நிலைத்த ஆட்சி புரிந்திருந்தும் அவர்களைப் பற்றிய பல பட்டயங்களும் கல்வெட்டுகளும் கிடைத்திருந்தும் அவர்கள் யார் எங்கிருந்து வந்தவர்கள் என்பன போன்ற கேள்விகளுக்குச் சரியாக விடை கூறமுடியவில்லை. மேலும் பல்லவர்களை,

1. முற்காலப் பல்லவர் - கி.பி. 250-340
2. இடைக்காலப் பல்லவர் - கி.பி. 340-575
3. பிற்காலப் பல்லவர் - கி.பி. 575-900

எனும் மேற்கண்ட முறைகளில் வைத்து அவ்வவ் கால மன்னர்களை கல்வெட்டுகளின் மூலம் அறியமுடிகிறது. பல்லவர் காலத்தைச் சார்ந்ததாக இதுவரை முந்நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. காஞ்சிபுரம் மாவட்டம் வயலூரில் உள்ள வியாகபுரிசுவரா் கோவில் தூணில் உள்ள கல்வெட்டு இரண்டாம் நரசிம்மன் காலத்தில் வெட்டப்பட்டதாகும். புராண அடிப்படையில் பிரம்மன் தொடங்கித் தொடர்ந்து 54 பல்லவ அரசர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டில் கிடைத்துள்ள மிகவும் தொன்மையான வடமொழிக் கல்வெட்டு சீவன்வாயில் என்னுமிடத்தில் கிடைத்த சிம்ம வா்மன் என்னும் பல்லவ மன்னனின் கல்வெட்டு ஆகும்.

பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் வடமொழியில் ஞானம் உள்ளவன், மண்டகப்பட்டு என்ற இடத்திலுள்ள அவனது வடமொழிக் கல்வெட்டு வரலாற்றுச் சிறப்புடையது. இக்கோயிலில் நான்முகன், திருமால், சிவன் ஆகிய முப்பெரும் கடவுளர்க்கும் ‘செங்கலின்றி, மரமின்றி, உலோகமின்றி, சுதையின்றி, விசித்திர சித்தனாகிய அரசனால் தோற்றுவிக்கப்பட்டது என்று கூறுகிறது. அச்செய்தி வருமாறு,

**‘ஏதத் அனிஷ்டகம் அத்ருமம் அலோவரம்**
**அஸுதம் விசித்ர சித்தேன!**
**நிா்மாபிதம் ந்ருபேண**
**ப்ரும்மேச்வர விஷ்னு லHதாயதனம்’**

இம்மன்னன் ‘மத்தவிலாசப் பிரஹசனம்’ என்னும் நாடக நூலை வடமொழியில் இயற்றியுள்ளான். மாமண்டூர் குகைக்கோயில் கல்வெட்டில் இச்செய்தி இடம் பெற்றுள்ளது.

பல்லவ குலத்தில் சிம்ம விஷ்ணு, சிம்ம விஷ்ணுவின் தம்பி பீமவா்மன் மரபில் வந்தவர்களில் சிம்ம விஷ்ணுவின் மக்கள் நாட்டை வழி வழியாக ஆண்ட செய்தியும், பின்னாட்களில் பீமவா்மனின் வழித் தோன்றலில் இரண்டாம் நந்திவர்மன் பல்லவ அரசனான நிகழ்வைக் கூறும் கோயில் கல்வெட்டு உள்ளது.

**பல்லவ மரபு**

| | |
|---|---|
| சிம்ம விஷ்ணு | பீமவர்மன் |
| ↓ | ↓ |
| மகேந்திரவர்மன் - 1 | புத்தவர்மன் |
| ↓ | ↓ |
| நரசிம்மவர்மன் | ஆதித்தவர்மன் |
| ↓ | ↓ |
| மகேந்திரவர்மன்-1 | கோவிந்தவர்மன் |
| ↓ | ↓ |
| பரமேச்சுரவர்மன்-1 | இரண்யவர்மன் |
| ↓ | ↓ |
| நரசிம்மவர்மன்-2 | நந்திவர்மன்-2 |
| ↓ | |
| பரமேஸ்வரவர்மன்-2 | |
| ↓ | |
| சித்திரமாயன் | |

12வயதில் பல்லவ மல்லன் ‘நந்திவர்மன்’ என்னும் பட்டம் சூட்டப் பெற்றதையும், ராஜ்யாபிஷேகம் செய்ததையும், அப்பொழுது சமுத்திரகோஷம் என்ற முரசு முழங்க மந்திரிகளும், சிற்றரசர்களும், நந்திவர்மனுக்குக் கட்டு வாங்கக் கொடியும் இடப முத்திரையும் அளித்து விடேல் விடுகு எனும் (விடை + (காளை) + வெல் + விடுகு) திரு ஆணையையும் உரிமையாக்கினர்.

**நந்திவர்மன் அரசேற்றான்**

பல்லவர்கள் யார் முதல் யார் வரை ஆட்சி புரிந்தனர் என்பதை முழுவதுமாக கல்வெட்டுகள் வழி அறியினும் அவர்கள் யார் எங்கிருந்து வந்தனர் என்பதை அறிதற்கில்லை, எனினும் தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர் வரலாறுகளைவிட பல்லவர் வரலாறு சாசனங்களில் உறுதியாக உள்ளது.

**பாண்டியர் கல்வெட்டுகள்**

சங்க இலக்கியங்கள் பல சங்க காலப் பாண்டியரைப் பற்றி அறிய முதன்மைச் சான்றுகளாகின்றன. சங்க காலத்திற்குப்பின் பாண்டிய நாட்டைக் களப்பிரர்கள் ஆண்டனர். அவர்களிடமிருந்து பாண்டிய நாட்டை மீண்டும் கைப்பற்றி ஆளத் தொடங்கிய கடுங்கோன் (கி.பி.575-600) காலம் முதல், விசயநகர மன்னர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்ட காலம் வரை முதற் பாண்டிய பேரரசு (கி.பி. 575-920) என்றும் கி.பி. 1190 முதல் 1310 வரையில் நிலவியதை இரண்டாம் பாண்டிய பேரரசு என்றும், பிந்தியதைப் பிற்காலப் பாண்டியராட்சி என்றும் அழைக்கிறோம்.

இதற்குப் பின்னர் விசயநகர ஆட்சி ஏற்பட்டதின் விளைவாக நாயக்கர் ஆண்டனர். இடைஇடையே பாண்டிய நாட்டில் சோழராட்சியும் சுல்தான்கள் ஆட்சியும் பிறவும் ஏற்பட்டன.

குறிப்பு

இப்பாண்டியர்களின் இடைஇடையே அறுபட்ட ஆயின் நீண்ட ஆட்சிக் காலத்தை அறிவதற்கு உள்ள அடிப்படைச் சான்றுகளை அறிய பெரிதும் இலக்கியங்கள் துணை நிற்கின்றன. சங்க இலக்கியம் முதல் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திவ்யப் பிரபந்தம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், பாண்டிக் கோவை, இறையனார் களவியல் உரை, இலங்கை வரலாற்று நூலான மகாவம்சம், தீபவமிசம் போன்ற நூல்களும், பட்டினத்தாரின் பாடல்களிலும், நம்பியாண்டார் நம்பி, செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி முதலிய பல நூல்களில் பாண்டியர் இடம் பெறுகின்றனர்.

கி.பி. 1000த்திற்கும் முன் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்களின் காலத்துக் கல்வெட்டுகள் ஏறத்தாழ 300 இதுவரையில் கிடைத்துள்ளன. இவற்றில் சமண சமயம் சார்பான கொடைகளைக் குறிக்கும் சிறுசிறு துண்டுக் கல்வெட்டுகள் ஏறத்தாழ 125 ஆகும். இவை பெரும்பாலும் மதுரைக்கு அண்மையில் உள்ள ஆனைமலை, கழுகுமலை, ஐவர்மலை ஆகிய மலைகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. மலையடிக் குறிச்சிக் கல்வெட்டு பாண்டியரின் மிகப் பழமை வாய்ந்த கல்வெட்டாகும். இதன் மூலம் மாறன்சேந்தன் குடைவரைக்கோயில் அமைத்த செய்தியை கலப்புத் தமிழிலும் வட்டெழுத்திலும் எழுதப்பட்டவை இவ்வரசனைப் பற்றி தெரிவிக்கின்றது.

**பாண்டியர் கல்வெட்டுகள்**

1. செழியன் சேந்தன் - 1
2. அரிகேசரி பராங்குச மாறவர்மன் - 2
3. ஜடில வர்மன் பராந்தக நெடுஞ்சடையன் - 23
4. ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன் - 4
5. இரண்டாம் வரகுணவர்மன் - 22
6. இரண்டாம் இராசசிம்மன் - 34
7. சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் - 17

இது தவிர சோழர் கல்வெட்டுகளிலும் பட்டயங்களிலும் பாண்டியர் பற்றிய குறிப்புகள் உள்ளன. கி.பி.966இல் நடைபெற்ற போரில் இரண்டாம் ஆதித்த கரிகாலன் என்பான் வீரபாண்டியனைக் கொன்றான் என்பதை ஆதித்தனின் இரண்டாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு கூறுகின்றது. வீரபாண்டியன் இறந்த செய்தியைச் செப்பேடும் உறுதி செய்கின்றது. வீரபாண்டியன் மறைவுக்குப் பின்னர் பாண்டிய மன்னரைப் பற்றிய செய்திகள் ஒன்றும் கிடைத்தில.

குறிப்பு

## சோழர் கல்வெட்டுகள்

சோழர்களை புராண காலச் சோழர், சங்ககால சோழர், இடைக்கால சோழர், பிற்கால சோழர் எனும் நான்கு நிலைகளில் பிரித்தறிய வேண்டியுள்ளது. எனினும் கல்வெட்டு வழி காண்கையில் பிற்கால சோழர்கள் 'வரலாற்று மன்னர்கள்' ஆகின்றனர். இவர்களைப் பற்றிய சாசனங்கள் பெருமளவு கிடைக்கின்றன.

**சோழர்களில் வரலாற்று மன்னர்கள்**

| மன்னர் | காலம் |
|---|---|
| விஜயாலயன் | - கி.பி. 850 – 907 |
| முதலாம் ஆதித்தன் | - கி.பி. 850 – 907 |
| முதலாம் பராந்தகன் | - கி.பி. 907 – 955 |
| முதலாம் பராந்தகன் மறைவிலிருந்து முதலாம் இராஜஇராஜன் அரியணை ஏறும் வரை | - கி.பி. 955 – 985 |
| இராஜஇராஜப் பெருவேந்தன் | - கி.பி. 985 – 1014 |
| இராஜேந்திரன் | - கி.பி. 1012 – 1044 |
| இராஜேந்திரனின் பின்னோர் | - கி.பி. 1044 – 1070 |
| முதலாம் குலோத்துங்கன் | - கி.பி. 1070 – 1120 |
| முதலாம் குலோத்துங்கனுக்குப் பிற்பட்ட அரசர்கள் | - கி.பி. 1120 – 1163 |
| இரண்டாம் இராஜாதிராஜனும் மூன்றாம் குலோத்துங்கனும் | - கி.பி. 1163 – 1216 |
| மூன்றாம் இராஜராஜனும் மூன்றாம் இராஜேந்திரனும் (சோழர்களின் இறுதிக்காலம்) | - கி.பி. 1216 – 1279 |

வரலாற்றுச் சோழப் பேரரசர்களில் காலத்தால் முற்பட்டவனாக விஜயாலயன் விளங்குகிறான். இவனின் மகனே முதலாம் ஆதித்தன் ஆவான். இவன் பல்லவ ரோடு இணைந்து போரிட்டு உதவி செய்தவன். பாண்டியர்களின் தலைவனான வரகுணனை (முதலாம் பிரதிவீபதி) வென்றான். தோல்வியுறாத அபராஜிதனைத் (பல்லவன்) தன் நண்பனாகக் கொண்டான். சாளுக்கியர் - பாண்டியரிடையே பல்லவர் இருமுனைப் போராக ஈடுபட்டு சோர்வுற்று பல்லவர் தாம் பெற்ற வெற்றியைப் பயன்படுத்தாது போயினர். இதில் முதலாம் ஆதித்தன் போரில் வெற்றி பெறுமளவிற்குத் தன்னை உயர்த்திக் கொண்டு சோழகுலம் சிறக்க முன்னின்று காட்டினான். காஞ்சிபுரம், சுசீந்திரம் போன்ற இடங்களில் கிடைக்கும் பரகேசரி என்று தொடங்கும் சில கல்வெட்டுகளை விஜயாலயச் சோழனின் ஆட்சி காலத்தவை என்று ஹூல்ஷ் வெளியிட்ட ஆராய்ச்சி குறிப்பிடுகிறது. திருக்கோவிலூர் வட்டம் வீரசோழபுரம் என்னுமிடத்தில் கிடைத்துள்ள இம்மன்னனது மூன்றாம் ஆட்சி ஆண்டின்

கல்வெட்டு ஒன்றில் தஞ்சை கொண்ட பரகேசரி என்று இவன் வா்ணிக்கப்பட்டுள்ளான் எனுமாறு சோழா்களின் கல்வெட்டுகள் பலவாறு உள்ளன. அவற்றைக் கொண்டே சோழரின் வரலாறு எழுதப் பெற்றது.

குறிப்பு

இவ்வாறு நாயக்கா், மராட்டியா், போசளா் முதலானவா்களின் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் தமிழக வரலாற்றை எழுத துணை புரிகின்றன.

## கூறு 1: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. கல்லெழுத்துக்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

   வெட்டெழுத்துக்கள், பொறிப்புகள், சிலாசாசனங்கள்

2. கல்லெழுத்தாளா்கள் எவ்வாறு அழைக்கப் பெற்றனா்?

   முகவெட்டி, ஓலை

3. கல்வெட்டுகள் நம்பத்தகுந்தவை ஏன்?

   பொறிக்கப் பெற்ற காலத்திற்குப் பின் பெரும்பாலும் எந்த மாற்றத்தையும் அடைவதில்லை.

4. செங்கலின்றி மரமின்றி உலோகமின்றி கல்லால் கோயில் கட்டியவன் யாா்?

   மகேந்திரவா்மன்

5. வரலாற்றுச் சோழப் பேரரசா்களில் காலத்தால் முற்பட்டவன் யாா்?

   விஜயாலயன்

### II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)

6. தென்னிந்தியக் கல்வெட்டுகளின் சிறப்பை விவரி?

   (கல்லில் எனத் தொடங்கியது முதல் பெட்டகங்கள் எனில் மிகைஇல்லை என்பது வரை)

7. பல்லவா் கல்வெட்டுகளின் சிறப்பை விவரி?

   (பல்லவா்களின் கல்வெட்டுகள் எனுந் தலைப்பில் உள்ள செய்திகளை எழுதுக.)

### III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)

8. வரலாற்று உருவாக்கத்தில் கல்வெட்டுகளின் பங்களிப்பை விரித்தெழுதுக.

   (கூறு 1ல் உள்ள குறுந் தலைப்புகளுக்குரிய செய்திகளைத் தொகுத்து எழுதுக)

## கூறு 2: கல்வெட்டுகள் எழுதும் முறை

அரசனின் ஆணைகள் முதலில் பனை ஓலைகளில் எழுதப்பட்டு பின்னா் கல்வெட்டிலும், செப்பேட்டிலும் பதிவு செய்யப் பெற்றன. அப்போது மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடாமல் எழுதுவது வழக்கம். கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் கூட அவ்வாறே எழுதி வந்தனா்.

தொடக்க காலத்தில் உயிர்மெய் எழுத்துக்களுடன் உயிர்க்குறில்கள் எவ்வித இடைவெளியுமின்றி சேர்த்து எழுதப்பட்டன. கி.பி. 8ஆம் நூற்றாண்டு முதல் இவை பிரித்து எழுதப்பட்டன. எழுத்துமுறை வளர்ச்சியை வல்லம், திருக்கழுக்குன்றம் கல்வெட்டுக்களிலும், கூரம் செப்பேட்டிலும் காணமுடிகிறது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தற்போதைய நிலையை அடைந்தாலும் தமிழ் எழுததுக்களின் தாக்கத்தை அம்மன் கோவில்பட்டி, அரச்சலூர் கல்வெட்டுகளால் அறியலாம்.

செங்கற்பட்டு மாவட்டம் வல்லத்தில் கிடைத்த கி.பி. 600ஐ ஒட்டி பொறிக்கப்பட்ட பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் வல்லம் கல்வெட்டே காலத்தால் முற்பட்ட முழுமையான தமிழ் எழுத்து வரிவடிவம் கொண்ட கல்வெட்டாகும். கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழ் எழுத்து தன் செல்வாக்கைப் பெறத் தொடங்கியது. இராஜராஜனும் அவனுக்குப் பின் வந்தவர்களும் சீரான வரிவடிவ முறையை ஏற்படுத்தினர் எனலாம். கி.பி.11ஆம் நூற்றாண்டு முதல் வட்டெழுத்து ஏற்றுக் கொள்ளப்படாமல் தமிழ் எழுத்துக்கள் நிலைபெற்றன.

ஆயின் பழந்தமிழ் எழுத்துக்கள் பிராமி, தமிழி என்று அழைக்கப்படுகின்றன. இப்பழந்தமிழ் எழுத்துகள் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளதைக் கொண்டே சங்க காலம் கண்டறியப் பெற்று சங்க இலக்கியங்களின் பெருமை அறியப்படுகிறது. இவ்வகையில் கி.மு.2 அல்லது 3ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக மாங்குளம் கல்வெட்டு கருதப்படுகிறது. இக்கல்வெட்டில் குறிக்கப்படும் நெடுஞ்செழியன் சங்க காலத்திற்கும் முற்பட்டவன் என ஜே. தர்மராஜ் கூறுகிறார். சித்தன்னவாசல், அழகர்மலை, புகளூர் கல்வெட்டு, அரச்சலூர் கல்வெட்டு ஆகியவை பழந்தமிழ் கல்வெட்டுகள் ஆகும்.

**அரச்சலூர் கல்வெட்டு**

ஈரோட்டிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் காங்கேயம் செல்லும் பாதையில் அரச்சலூர் என்ற கிராமம் உள்ளது. இந்த ஊரின் எல்லையில் நாகமலை உள்ளது. இதில் ஆண்டிப்பாறை என்ற பகுதி உள்ளது. அங்குப் பாண்டியர் குழி என்ற பகுதியில் பண்டைய எழுத்துக்கள் உள்ள குகைத்தளம் உள்ளது. இதில் தமிழி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள மூன்று கல்வெட்டுகள் உள்ளன. இவையே அரச்சலூர் கல்வெட்டுகள் என்று அழைக்கப்படுகின்றன. அக்காலத்தில் நிலவிய இசையின் மேன்மையை இக்கல்வெட்டுகள் பறைசாற்றுகின்றன. அரச்சலூரில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. முதல் இரண்டு கல்வெட்டுகளில் ஐந்து எழுத்துக்களைக் கொண்ட ஐந்து வரிகள் உள்ளன. மூன்றாவது கல்வெட்டில் இரண்டு வரிகள் உள்ளன.

குறிப்பு

**முதல் கல்வெட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| த | தை | தா | தை | த |
| தை | தா | தே | தா | தை |
| தா | தே | தை | தே | தா |
| தை | தா | தே | தா | தை |
| த | தை | தா | தை | த |

**இரண்டாம் கல்வெட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| கை | த | தை | த | கை |
| த | தை | த | தை | த |
| தை | த | தை | த | தை |
| த | தை | த | தை | த |
| கை | த | தை | த | கை |

இவற்றை இடமிருந்து வலமாகப் படித்தாலும், மேலிருந்து கீழாகவோ, கீழிலிருந்து மேலாகவோ எப்படிப் படித்தாலும் ஒரே மாதிரியாக அமைந்திருப்பதைக் காணலாம்.

**மூன்றாம் கல்வெட்டு**

**எழுத்துப் புணருத்தான் மணிய்**
**வண்ணக் கன்தேவன் சாத்தன்**

என்றுள்ளது. இதனால், முதலிரண்டு கல்வெட்டிலுள்ள இசைக் குறியீடுகளைத் தொகுப்பித்தவனைக் கூறுகிறது.

இதே போல் வட்டெழுத்துக்கள் கன்னியாகுமரி திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, கோவை, சேலம், த்ர்மபுரி, வட ஆர்க்காடு, தென்ஆர்க்காடு ஆகிய பகுதிகளிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் சில பகுதிகளிலும் வழக்கில் இருந்துள்ளன. சோழநாட்டில் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் வழக்கில் இல்லை. ஆயின் வட்டெழுத்து க்ர்நாடகம் வரை பரவியிருந்து, இவ்வட்டெழுத்து பாண்டியர்களால் எழுதப்பெற்ற தமிழ் எழுத்தாகும்.

தொடக்க கால கல்வெட்டுகள் நடுகற்கள் மீது பொறிக்கப்பட்டிருந்தன. சோழர் கால நடுகற்களில் தமிழ் எழுத்துக்கள் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. இதுவரை தென்னிந்தியாவில் 726 நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைதான் கல்வெட்டு எழுத்துக்களை முதலில் சுமந்திருப்பவை எனவே ‘நடுகல்’ என்றால் என்ன என்பதையும் புகழ்மிக்க நடுகற்கள் பற்றியும் காணலாம்.

**நடுகல்**

- நடுகல் அமைப்பு
- நடுகற்களின் பெயர்கள்,
- நடுகற்கள் இருக்குமிடங்கள்
- நடுகல்லில் உள்ள கல்வெட்டின் அமைப்பு

எனும் அடிப்படையில் காணலாம்.

குறிப்பு

**நடுகல் அமைப்பு**

நடுகல் எனில் இறந்தவர் உடலை புதைத்த பின் அவ்விடத்தின் மேல் நடப்படும் கல் ஆகும். இந்நடுகல் பற்றி தமிழின் தொன்மை சிறப்பு மிக்க தொல்காப்பியம் பலவாறு கூறியுள்ளது. நடப்போகும் கல்லில் இறந்து போன வீரனின் உருவம் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்படும், வீரனின் உருவம் நின்ற கோலத்தில் இடக்கையில் வில் ஏந்தி, வலக்கையால் இடுப்பில் உள்ள உடைவாளை உருவுவது போல் காணப்படும். வேட்டையாடியதில் உதவி செய்து இறந்துபட்ட நாய்க்கும் நடுகல் நட்டுள்ளனர்.

**நடுகற்களின் பெயர்கள்**

நடுகற்கள் இருக்கும் இடங்கள் வேடியப்பன் கோவில் என்று அழைக்கப்படுகிறது. வேடர், கிருஷ்ணாரப்பன், மீனாரப்பன், சன்யாசியப்பன் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது.

**நடுகற்கள் இருக்கும் இடங்கள்**

தமிழ் நாட்டில் வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சேலம், தர்மபுரி, கோவை ஆகிய மாவட்டங்களில் கிடைத்துள்ளன. பெரும்பாலும், ஊர்களின் புறத்தே காணப்படுகின்றன. ஊரின் நடுவே காணப்படுவதில்லை.

**நடுகல்லில் கல்வெட்டின் அமைப்பு**

நடுகல்லில் உள்ள கல்வெட்டுகள் சுருக்கமாக இருக்கும். மன்னனின் பெயர், ஆட்சி ஆண்டு, வீரமரணம் எய்தியவரின் பெயர், அவரது செயல்கள், நிறைகோடல் மீட்டல்கள் போன்றவை பொறிக்கப்பட்டுள்ளன.

**நடுகற்களில் எழுத்தும் மொழியும்**

தமிழகத்தில் பல்லவர், பாண்டியர், கங்கர், சோழர், நுளம்பர், போசளர், விஜயநகர மன்னர்கள் காலத்து நடுகற்கள் கிடைத்துள்ளன. இவை கி.பி. 5 முதல் 15 வரையிலான நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. பல்லவ மன்னர் காலத்து நடுகற்களில் வட்டெழுத்துகளும் சிலவற்றில் தமிழ் எழுத்துக்களும் காணப்படுகின்றன. கன்னட எழுத்துக்களும் உள்ளன. ஆனால், வடமொழியில் எழுதப்பட்ட நடுகற்கள் இதுவரை கிடைக்கவில்லை. பல்லவ மன்னன் கம்பவர்மனின் காலத்திய நடுகல்லில் நல்ல தமிழில் உரைநடைப்பகுதி உள்ளது. நாட்டுப்பிரிவு, ஆட்சி ஆகியனவும் சிலவற்றில் இடம் பெறுவதுண்டு.

குறிப்பு

**சங்க கால நடுகற்கள்**

தமிழகத்தில் இதுவரை கிடைத்த தமிழ் பிராமி கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியது தேனி மாவட்டம் புலிமான் கோம்பையில் தஞ்சை, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் துறை பேராசிரியர் கா. ராஜன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று நடுகற்கள். இவை சங்க காலத்தை சார்ந்தவை

**புலிமான் கோம்பை நடுகற்கள்**

புலிமான் கோம்பையில் மூன்று நடுகற்களும், தாதப்பட்டியில் ஒரு கல்லுமாக மொத்தம் நான்கு நடுகற்கள் கண்டறியப்பட்டன. இவை கிறித்துவிற்கு முற்பட்ட காலத்தினைச் சார்ந்த இறந்தோரைப் புதைக்கும் கல் பதுக்கை, கல் திட்டை எனப்படும் கல்லறைக்கு அருகில் நடப்பட்டிருந்தன.

தமிழ் நாட்டில் மட்டுமின்றி இந்திய அளவில் இதுவரை கிடைத்த நடுகற்களில் இவை மிகப் பழமையான நடுகற்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு கிடைத்த நடுகற்கள் சுமார் இரண்டு மீட்டர் உயரமான நடுகற்கள் ஆகும்.

சங்ககால ஈமச் சின்னங்களில் ஒன்றான மென்ஹிர் எனப்படும் குத்துக்கல் வகையே எழுத்துடை நடுகற்களாக மாறின என்பதை இந்நடுகற்கள் உணர்த்துகின்றன.

**புலிமான் கோம்பை**

**நடுகல் 1**

1. அன் ஊர் அதன்

2.. . . . . அன் கல்

**நடுகல் 2**

1.வேள் ஊர் அவ்வன்

2.பதவன்.

**நடுகல் 3**

1.கல்

2.பேடு தீயன் அந்தவன்

3.கூடல் ஊர் ஆகோன்

**தாதப்பட்டி நடுகல்**

**. . . . அடி ஒன் பாகல் பாளிய் கல்**

**'கல் பேடு தீயன் அந்தவன் கூடல் ஊர் ஆகோன்''** என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட இதன் பொருள் கூடல் ஊரில் நடைபெற்ற ஆகோள் பூசலில் உயிர் நீத்த பேடுதீயன் அந்தவன் என்பவனுக்கு எடுப்பித்த கல் என்று பொருள் கொள்ளலாம். ஆகோள் என்பதற்குப் பகைவரின் பசுக்களைக் கவர்தல் என்று பொருள் கொள்வதால் இது வெட்சிப் பூசலில் ஈடுபட்ட வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் ஆகும். இதுவே ஆகோளைப் பற்றி வரும் தெளிவான முதல் நடுகல் ஆகும். மேலும் உள்ள நடுகற்களில் 'அன் ஊர் அதன் அன் கல்' என்ற வரி கி.மு. மூன்றாம்

நூற்றாண்டுக்கும் முற்பட்ட தமிழ் பிராமி எழுத்தாகும். வேள் ஊர் பதவன் அவ்வன் என்பது வேள் ஊரைச் சார்ந்த பதவன்-அவ்வன் என்பவனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் என்று பொருள்படும். உயிரெழுத்துக்களில் தொடங்கும் பகுதிகள் முந்தைய பெயர்ச் சொற்களுடன் இணையும் போது சேர்த்தெழுதப்படாமல் பிரித்தெழுதப்படுதல் மரபு ஆகும். அதே மரபு இந்த மூன்று நடுகற்களில் பின்பற்றப்பட்டு உள்ளது. இவை மாங்குளம் தமிழ் பிராமி கல்வெட்டுகளை விட காலத்தால் முற்பட்டதாக விளங்குவதால் இதன் காலம் கி.மு. நான்காம் நூற்றாண்டிற்கு முன்னதாகக் கருதலாம்.

குறிப்பு

சங்க இலக்கியங்களிலும், தொல்காப்பியத்திலும் நடுகல் பற்றிய செய்திகள் பல இருப்பதால் நடுகல்லின் தொன்மை வரலாற்றை அறியமுடிகிறது. மருதனிளநாகனார், கல் பாடிய நாகனார் என்று அழைக்கப்படுகிறார். மூதின் முல்லைத்துறை நடுகல்லைக் கடவுளாகக் குறிப்பிடுகின்றது.

**நல்லமர் கடந்த நாணுடை மறவர்**
**பெயரும் பீடும் எழுதி யதாதொறும்**
**பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல் (அகம். 67)**

என்று அகநானூறு நடுகல்லில் வீரருடைய பெயரும் பெருமைகளையும் எழுதி நடுகல் நாட்டப்பட்டது என்ற செய்தியை விளக்குகிறது.

**காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்**
**சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தல் என்று**
**இருமூன்று மரபில் கல்லொடு புணர (தொல்.பொருள். 63: 19-21)**

எனத் தொல்காப்பியமும் அதன் பின் வந்த இலக்கண நூல்களும் நடுகல் பற்றி கூறியுள்ளன.

இது தவிர போரில் வீரமரணம் அடைந்தவர்களுக்கும், புலியைக் கொன்றவர்களும் என புடைப்புச் சிற்பங்கள் உள்ளவாறு பல நடுகற்கள் கிடைத்துள்ளன. மேலும் கணவனை இழந்த நிலையில் தீப் பாய்ந்து உயிர்நீத்த பெண்களுக்கு எடுக்கப்பட்ட நினைவு கற்கள் நாயக்கர் காலத்தில் அதிகமாக கிடைத்துள்ளன.

இவை சதிக்கல் என்று அழைக்கப்படுகின்றன. இவ்வகை கற்கள் இந்தியா முழுமையும் கிடைக்கின்றன. அசோகரின் கல்வெட்டுகள் கூட குறும்பாறை, தூண் கல்வெட்டுகளாக கிடைத்ததை அறியலாம்.இந்நடுகற்கள் இறந்தவர்கள் முடிவையும் அதில் உள்ள கல்வெட்டு எழுத்துகள் ‘கல்வெட்டின் தோற்றத்தையும்’ கொண்டிருப்பதை மறுக்க இயலாது.

குறிப்பு

இவ்வாறு எழுதும் பொழுது சுவடி அல்லது செப்பேட்டில் உள்ளதை அக்கல்லின் மேல் எழுதிவிட்டு அவ்வாறே வெட்டுதலை செய்வர். எழுத கூடிய பலர் மொழியறிவு பெற்றில்லாமல் கூட இப்பணியை செய்ததால் சிற்சில தவறுகளும் ஒழுங்கின்மையும் கல்வெட்டுகளில் காணப்படினும், பிற்கால வளர்ச்சியில் கல்லெழுத்தாளர்களின் மொழிநடையை காணும் பொழுது பன்மொழி அறிவு பெற்றவர்களாக அவர்கள் விளங்கியதை கண்கூடாக காணமுடிகிறது.

## கூறு 2: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. தமிழ் எழுத்துமுறை வளர்ச்சியை வெளிப்படுத்தும் கல்வெட்டுகள் எங்குள்ளன?

   வல்லம், திருக்கழுக்குன்றம் முதலிய இடங்களில் உள்ளன.

2. பழந்தமிழ் எழுத்துக்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

   பிராமி, தமிழி

3. நடுகல் என்றால் என்ன?

   இறந்தவர் உடலை புதைத்தபின் அவ்விடத்தின் மேல் நடப்படும் கல் நடுகல் எனப்படும்.

4. தமிழ் நாட்டில் மட்டுமின்றி இந்திய அளவில் பழமை வாய்ந்த நடுகற்கள் கிடைத்த இடம் எது?

   புலிமான் கோம்பை

5. நடுகல் பற்றி கூறும் தமிழின் தொன்மை நூல்கள் யாவை?

   தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள்

### II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)

6. தொடக்க கால தமிழ் கல்வெட்டுகள் பற்றி விவரி?

   (அரசனின் ஆணைகள் - என்பதில் தொடங்கி – அரச்சலூர் கல்வெட்டு ஆகியவை பழந்தமிழ் கல்வெட்டுக்கள் ஆகும். என்பது வரை)

7. அரச்சலூர் கல்வெட்டுகளின் சிறப்பை விவரி?

   அரச்சலூர் கல்வெட்டுகள் - எனுந் தலைப்பின் கீழ் உள்ள செய்திகளை எழுதுக.

### III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)

8. கல்வெட்டுகள் எழுதும் முறையை விவரி?

   (கூறு 2ல் உள்ள செய்திகளை சுருக்கி எழுதுக.)

## கூறு 3: இந்தியக் கல்வெட்டுகளில் காணும் மொழிகள்

இந்தியாவில் கரோஷ்டி, பிராமி, நாகரி, கிரந்தம், தமிழி, வட்டெழுத்து, தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மோடி ஆகிய எழுத்துக்கள் புழக்கத்தில் இருந்தன. மௌரியப் பேரரசன் அசோகன் காலத்திலிருந்து இந்தியாவில் இருவகை எழுத்துக்கள் வழக்கிலிருந்தன. இவை பிராமி, கரோஷ்டி இவ்விரண்டும் வடசெமிடிக் பகுதியினா்

தோற்றுவித்ததாகக் கூறுவர். இந்தியாவில் வழங்கப்படும் எழுத்துக்கள் அனைத்திற்கும் பிராமி எழுத்து வகையே முன்னோடி என்ற கருத்து நிலவுகிறது. வடஇந்தியாவில் வழங்கப்பட்டது வடபிராமி என்றும், தென் இந்தியாவில் வழங்கப்பட்டது தென்பிராமி என்றும் கூறுவர்.

குறிப்பு

கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்தது 'சமயவங்கசுத்த' என்னும் சமண நூல் இதில் 18 வகையான எழுத்துக்களின் பெயர்கள் குறிக்கப்படுகிறது. எழுத்துக்களின் பெயர்களைக் குறிக்கும் நூல்களுள் இதுவே பழமையானது. இதில் பிராமி, கரோஷ்டி என்ற பெயர்களோடு 'தமிழி' என்ற பெயரும் குறிக்கப்படுகிறது. இது தமிழகத்தில் வழங்கிய எழுத்தாகும். எனவே பிராமியின் சமகாலத்திலேயே தமிழி வழக்கில் இருந்ததை அறியலாம்.

'லலிதவிஸ்தரம்' எனும் பௌத்த நூல் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் எழுந்தது. இதில் 64 வகையான எழுத்துக்கள் குறிக்கப்பட்டுள்ளன. தெலுங்கு, கன்னடம், கிரந்தம் ஆகியவை ஒன்று போல இடைக்காலத்தில் இருந்ததால் 'திராவிடி' எனும் பெயர் வந்தது. இது பிற்காலத்தில் 'திராவிட மொழி' என்ற சொல் உருவாக வித்திட்டது எனலாம்.

இந்திய நாட்டில் 1700க்கும் அதிகமான மொழிகள் உள்ளன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவற்றுள் பல தனி மொழிகளாக இருக்கும் பல கிளை மொழிகளாக இருக்கும், சில நன்கு அறியப்பட்டு அறுதி இடுவதற்குரிய நிலையில் இருக்கும், இன்னும் பல அறியப்படாத நிலையில் இருக்கும் மொழியியல் ஆராய்ச்சியாளர்கள், இந்திய நாட்டில் பேசப்படும் மொழிகளனைத்தும்,

1. இந்தோ-ஆரிய மொழிகள்
2. திபெத்திய – ப்ர்மிய மொழிகள்
3. ஆஸ்டிரிக் மொழிகள்
4. திராவிட மொழிகள்

என்ற நான்கு பெரும் பிரிவுகளில் அடங்கும் எனக் கருதுவர். (நூல்: திராவிட மொழிகள்-1 பாகம், டாக்டர் அ. அகத்தியலிங்கம், பக்.14, 21-27)

இந்தியப் பெருநாட்டில் பேசப்படும் மொழிகளில் இரண்டாம் இடத்தில் இருப்பது திராவிட மொழிகளாகும். இந்த மொழிக் குடும்பத்தில் திருந்திய மொழிகளும் உண்டு. திருந்தாத மொழிகளும் உண்டு. திருந்திய மொழி என்பது எழுத்துகளுக்கு வரி வடிவம் இலக்கியம், இலக்கணம் எனப் பல வளர்ச்சிகளைப் பெற்றிருப்பது எழுத்து வடிவம் பெறாத மொழிகளை திருந்தாத மொழி என்பர். மொழி நூலார் இவற்றை குடும்ப மொழிகள் என்று சொல்லுவது மரபு.

குறிப்பு

திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் 23க்கும் மேல் உள்ளன. திராவிட மொழிகள் குமரி முதல் காஷ்மீர் வரை, பாக்கிஸ்தான் முதல் வங்காளம் வரை இந்தியாவின் பல பகுதிகளிலும் பேசப்படுகின்றன. எனவே அவற்றை தென் திராவிட மொழி, நடுத்திராவிட மொழி, வடதிராவிட மொழி என வகுத்து உள்ளனர்.

**தென் திராவிட மொழிகள்**

1. தமிழ், 2. மலையாளம், 3. கன்னடம், 4. குடகு, 5. துளு, 6. தோடா, 7. கோத்தா, 8. இருளா.

| திருந்திய மொழிகள் | திருந்தாத மொழிகள் |
|---|---|
| 1.தமிழ் | 1. தோடா |
| 2.மலையாளம் | 2. கோத்தா |
| 3.கன்னடம் | 3. இருளா (படகா) |
| 4.குடகு | |
| 5.துளு | |

**நடுத்திராவிட மொழிகள்**

1. தெலுங்கு, 2. கோண்டி, 3. கோடா, 4. கூயி, 5. கூவி, 6. கொலாமி, 7. பர்மி, 8. கடபா, 9. கொண்டா, 10. நாய்க்கி, 11. பொங்கோ, 12. மண்டா என்பன போன்ற 20 மொழிகள் உள்ளன. இவற்றில் 'தெலுங்கு' மொழி மட்டுமே இலக்கிய வளம் பெற்ற மொழியாகும். இம்மொழி பேசுவோர் ஆந்திர மாநிலத்திலும் தென்னப்பிரிக்க பகுதிகளிலும் உள்ளனர்.

**வடதிராவிட மொழிகள்**

1.குருக்

2.மால்தோ

3.பிராகூயி

4.எருகா

திராவிட, திரமிள என்னும் இரு சொற்களும் தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழிகளையும் குறிப்பதாக இருந்தது. பின்னர் திராவிடமொழி குடும்பத்திலுள்ள அனைத்து மொழிகளையும் குறிப்பதாக அமைந்தது. கி.பி.1000இல் இச்சொல் பஞ்ச திராவிட என்று வழங்கப்பட்டது. குஜராத்தி, மராத்தி, கன்னடம், தெலுங்கு, தமிழ் மலையாள மக்களை 'பஞ்ச திராவிடர்கள்' என்று அழைத்தனர்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் குமாரிலபட்டர் 'திராவிட' என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார். ஆதி சங்கரர் 'திராவிட' என்ற சொல்லை பயன்படுத்துகிறார். கி.மு. 3ஆம் நூற்றாண்டு அளவில் தமிழி மருவி மகர ஈறு பெற்று (தமிழி. . . . . . திராவிடி. . . . திராவிடம்) திராவிடம் என்று வந்தது என சொல்வது பொருத்தமாகும்.

குறிப்பு

**திராவிட மொழியின் தொன்மை**

திராவிட மொழிக் குடும்பம் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பது அறிஞர்கள் கண்ட முடிவு ஹரப்பா, மொகஞ்சதாரோ, லோத்தல் போன்ற பகுதிகளில் ஏற்பட்ட நகர நாகரிகங்களுக்குச் சொந்தக்காரர்கள் திராவிடர்கள். ஆரியர்களின் நுழைவுக்கு முன்னர் இந்தியா முழுவதிலும் பரவி வாழ்ந்து வந்தனர். சிந்து கங்கைச் சமவெளிகளில் பேசப்பட்டது திராவிட மொழிகளே என்கிறார் ஹீராஸ் பாதிரியார். பலுசிஸ்தானில் பேசப்படும் பிராகுயி என்னும் மொழி திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்பது டென்னிஸ் டி.சாமாரஸ் பிரே என்பவரால் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து திராவிடர்கள் ஒரு காலத்தில் இந்தியாவில் பலுசிஸ்தான் வரையிலும் பரவியிருந்தனர் என்று கூறுகிறார் பேராசிரியர் S.K. சட்டர்ஜி. திராவிடவியலின் தந்தை என்ற சிறப்புக்குரிய கால்டுவெல் அவர்கள் ‘திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்’ எனும் நூலில் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகள் தனியான ஒரு குடும்பத்தைச் சார்ந்தனவெனக் கொண்டு அதற்குத் திராவிட குடும்பம் என்று முதலில் பெயரிட்டார்.

இத்திராவிட மொழிகள் அனைத்திலும் கல்வெட்டுகள் உள்ளன எனினும் அவற்றில் தொன்மைமிக்கது திராவிட மொழிகளின் தாயாக விளங்குவது ‘தமிழ்’ மொழி கல்வெட்டுகளே ஆகும். இதே போல் அசோகரின் பிராமி கல்வெட்டுகள் வடபிராமி கல்வெட்டுகள் இந்திய அளவில் தொன்மை வாய்ந்தவை. இடைஇடையே தோன்றிய சாசனங்கள் முழுமை பெற வில்லை எனினும் வடபிராமியை விட தென்பிராமி எழுத்துக்கள் (தமிழி) தொன்மை வாய்ந்தவை என தொல்லியல் அறிஞர்கள் பட்டியலிடுகின்றனர். தவிர நாகரி, கரோஷ்டி, மோடி எழுத்துகள் வட நாட்டிலும் தமிழகத்திலும் கிடைக்கின்றன. இவை வடஇந்தியாவிலிருந்து வந்தவை எனலாம். பல்லவர்களில் தொடக்ககால கல்வெட்டுகள் வடமொழியில் இருந்தது இதற்கு சான்று.

இந்திய கல்வெட்டுகளில் காணும் மெரிழிகளில் தொன்மை வாய்ந்த மொழி தமிழ் என்பது தொல்லியல் அறிஞர்களின் முடிபாக உள்ளது.

## கூறு 3: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. மௌரிய பேரரசன் அசோகன் காலத்திய இருவகை எழுத்துக்கள் யாவை?
   பிராமி, கரோஷ்டி
2. இருவகை பிராமி எழுத்துக்களைக் குறிப்பிடுக?
   வுடபிராமி, தென்பிராமி
3. 64 வகையான எழுத்துக்களை கூறிய நூல் எது?
   லலிதவிஸ்தரம்
4. இந்திய நாட்டில் பேசப்படும் மொழிகளை எங்ஙனம் பகுப்பர்?

குறிப்பு

1. இந்தோ-ஆரிய மொழிகள்

2. திபெத்திய – பர்மிய மொழிகள்

3. ஆஸ்டிரிக் மொழிகள்

4. திராவிட மொழிகள்

5. திராவிட மொழிகளில் தொன்மையானது எது?

தமிழ்

**II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)**

6. இந்தியாவில் வழங்கப்பெற்ற எழுத்துக்கள் பற்றி எழுதுக.

(கூறு -3 இன் தொடக்கம் முதல், நான்கு பெரும்பிரிவுகள் முடியும் வரை)

7. திராவிட மொழிகள் பற்றி விவரி?

('இந்திய பெருநாட்டில்.'. . . . . என்பதில் தொடங்கி, கூறு 3 முடியும் வரை உள்ள செய்திகளை சுருக்கி எழுதுக)

**III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)**

8. இந்திய கல்வெட்டுகளில் காணும் மொழிகள் குறித்து விவரி.

(கூறு 3 - இல் உள்ளவை முழுவதையும் சுருக்கி எழுதுக.)

**கூறு 4: கல்வெட்டுகளின் தன்மை**

இந்திய வரலாற்றை உருவாக்க நமக்குக் கிடைத்துள்ள சான்றுகளில் இதுவே முதன்மையானது. இக்கல்வெட்டுகள் மன்னனின் ஆணைகளையும், அவன் கோயில்களுக்கு வழங்கிய கொடைகளையும் கூறுகின்றன. சிலவற்றில் வேந்தனின் வெற்றி, அவனது விருதுப் பெயர்கள் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.

கல்வெட்டுகளின் வழியாக மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள், சலுகைகள், கட்டப்பட்ட மண்டபங்கள், வெட்டப்பட்ட குளங்கள், எரிகள், வரி மற்றும் வரிச்சலுகைகள் ஆகியவையும் மன்னன் மட்டுமின்றி அரசிகள், இளவரசர், அமைச்சர், உயர் அலுவலர், வணிகர், செல்வந்தர் ஆகியோர் அளித்த அறக்கொடைகள் அறியப்பெறுகின்றன.

போரில் வீரமரணமடைந்ததன் நினைவாக எடுக்கப்படும் நடுகற்களிலும் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. தவிர மன்னனின் புகழ் பாடும் மெய்க்கீர்த்திகளும் இடம் பெற்றுள்ளன.

கல்வெட்டில் பல்வேறு வகைகள் உள்ளன. 1. ஆரசியல் தொடர்பான கல்வெட்டுகள், 2. சமயம் சார்ந்த கல்வெட்டுகள், 3. தல ஆட்சித் தொடர்பான கல்வெட்டுகள், 4. இலக்கியத் தொடர்பான கல்வெட்டுகள், 5. நினைவுச் சின்னங்களான கல்வெட்டுகள், 6. உரிமைச் சாசனங்கள் என பிரித்து காணல் வேண்டும்.

குறிப்பு

**கல்வெட்டின் அமைப்பு முறை**

கல்வெட்டுகளில் ஐந்து பகுதிகள் இருக்கும். ஆவை (அ)மங்கல வாசகம் அல்லது சொல் தொடர், (ஆ) மன்னன் பெயரும் ஆட்சி ஆண்டும், (இ) சாசனச் செய்தி, (ஈ) கையெழுத்துக்கள், (உ)ஓம்படைக்கிளவி என்பனவாகும்.

**(அ) மங்கல வாசகம்**

கல்வெட்டின் தொடக்கம் மங்கல வாசகம் கொண்டு தொடங்கப்படும். பெரும்பாலான கல்வெட்டுகள் 'ஸ்வஸ்தி ஸ்ரீ' (மங்கலம் உண்டாகட்டும்) எனத் தொடங்கும்.

**(ஆ) மன்னன் பெயரும் ஆட்சியாண்டும்**

கல்வெட்டினை வெளியிட்ட மன்னனின் பெயரும் ஆட்சி ஆண்டும் இரண்டாவதாக பொறிக்கப்பட்டிருக்கும், சில கல்வெட்டுகளில் மன்னனது பெயரையும் ஆண்டையும் குறிக்கும் முன்னர் மெய்க்கீர்த்தி இடம்பெறும்.

**(இ) சாசன செய்தி**

மூன்றாவதாக சாசனத்தில் இடம்பெற வேண்டிய செய்திகள் இருக்கும்.

**(ஈ) கையெழுத்துக்கள்**

நான்காவதாக கொடை அளித்தவர், எழுதியவர், சாட்சிகள் ஆகியோரின் கையொப்பங்கள் இருக்கும்.

**(உ) ஓம்படைக்கிளவி**

ஐந்தாவதாக அளிக்கப்பெற்ற கொடையை மஹேஸ்வரர்ரக்ஷை என்றோ வைஷ்ணவர் ரக்ஷை என்றோ குறித்துவிட்டு, அக்கொடையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறிக்கப்பட்டிருக்கும். அதில் 'இதற்கு தீங்கிழைத்தால் கங்கை கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்தில் போவார்கள்' என்பது போன்று ஏதாவது ஒரு எச்சரிக்கையும் இருக்கும். இந்த இறுதிப் பகுதியே ஓம்படைக்கிளவி எனப்படும்.

**வடமொழிக் கல்வெட்டுக்கள்**

வடமொழிக்கு சாசனங்களில் முன்னுரிமை அளிக்கப் பெற்றுள்ளது. அரசனின் உத்தரவை எழுதுவதும் பின்னர் கேட்கும் பொழுது அதை எடுத்துக் கொடுத்தலும் பிராமணர்களாக பெருமளவில் இருந்ததால் அவர்கள் முதலில் வடமொழியில் தொடங்கி விட்டு தம் நினைவில் நிறுத்தி பின்னர் தமிழிலில் எழுதும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். எனவே பெருமளவு கல்வெட்டு, செப்பேட்டு செய்திகள் தொடக்கம் வடமொழியாக இருந்தது. சோழர்கள் ஆட்சி தொடங்கியதும் இவ்வழக்கம் குறைந்துள்ளதை அறிய முடிகிறது. எனினும் தொடக்க காலத்தில் தமிழ் மன்னர்களின் சாசனங்கள் கூட வடமொழியில் இருந்துள்ளன. வடமொழிக் கல்வெட்டுக்கள் இருவகைப்படும். (அ) இராஜகீயம் - (அரசுடையது), (ஆ) ஜானபாதம் - (மக்களுடையது), அரசனோ,

அமைச்சர்களோ அல்லது அதிகாரிகளோ அளிக்கும் உத்தரவுகள் இராஜகீயம் எனப்படும். மக்கள் தமக்குள்ளே செய்து கொள்ளும் உடன்பாடுகள் ஜானபாதம் என்றழைக்கப்படும்.

குறிப்பு

**அ. இராஜகீயம்**

இது நான்கு வகைப்படும். 1. சாசனம், 2. ஜெயபத்ரம், 3. ஆக்ஞாபத்ரம், 4. பிரக்ஞாபனம்.

**(i) சாசனம்**

கட்டளை, உத்தரவு என்ற பொருளில் கோயில்களுக்கும் அந்தணர்களுக்கும் கொடை அளித்ததைக் குறிக்கும்.

**(ii) ஜெயபத்ரம்**

வழக்குகளை அரசனே நேரில் ஆராய்ந்து அறங்கூறும் பெரியோரின் கருத்தையும் ஏற்று எடுத்த முடிவை அறிவிக்கும் ஓலைக்குப் பெயராகும்.

(iii) ஆக்ஞாபத்ரம்

ஆரசாங்க அதிகாரிகளுக்கு அரசன் அளிக்கும் ஆணை.

(iv) விக்ஞாபனம் (பிரக்ஞாபனம்)

ஆரசாங்க அதிகாரிகள் அரசனிடத்தில் விண்ணப்பித்தல்.

**(ஆ) ஜான பாதம்**

பொது மக்களின் உடன்பாடுகளைக் குறிக்கும். எனினும் இது, ஊர் கணக்கரால் எழுதப்படல் வேண்டும். அரசனைப் பற்றிய செய்திகளும், ஆண்டு, மாதம், ப≥ம், கிழமை முதலியவைகளும் குறிக்கப்பட்டிருக்கும்.

**கல்வெட்டுகளை ஒப்பிட்டு காணல்**

ஓரிடத்தில் உள்ள கல்வெட்டு செய்தியையும், மற்ற இடத்தில் உள்ள கல்வெட்டு செய்தியையும் ஒப்பிட்டு அறிய கல்வெட்டுகளை படியெடுப்பர். அப்பொழுதுதான் கல்வெட்டுகளைத் தெளிவாகப் படியெடுக்க இயலும். படியெடுக்கத் தேவையான பொருட்கள் வருமாறு,

1.அடிப்படை (பெரியது), 2. அடிமட்டை – சிறியது, 3. மையொற்றி (பெரியது), 4. மையொற்றி (சிறியது), 5. நார்மட்டை, 6. இரும்பு மட்டை, 7. தட்டு, 8. சிறுகுவளை, 9. வாளி, 10. படியெடுதாள், 11. சணல், 12. படியெடு எழுதுகோல், 13. மை, 14. சுரண்டும் கத்தி, 15. நீர் உறிஞ்சி (ஸ்பாஞ்ச்)

கல்வெட்டு படியெடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் மை கீழ்க்காணும் பொருட்களால் தயாரிக்கப்படுகிறது.

1. மயில் துத்தம், 2. இந்தியன் இங்க், 3. விளக்குக்கரி, 4. தந்தக்கரி, 5. கோந்து.

குறிப்பு

விளக்குக் கரியையும், தந்தக் கரியையும் ஒரு குறிப்பிட்ட அளவில் எடுத்துக் கொண்டு அவற்றில் இந்தியன் இங்கை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஊற்றி நன்கு பிசைந்த பிறகு, குறைந்த அளவில் கோந்தும் மயில் துத்தமும் சேர்த்து அம்மியில் வைத்து நன்கு அரைத்தல் வேண்டும். பசை தாளில் நன்கு ஒட்டுகின்ற பக்குவத்துக்கு வந்த பின்பு, அதனை எடுத்து ஒரு இருப்பு டப்பாவில் அடைத்துக் கொள்ளுதல் (மூடி உள்ள டப்பா) வேண்டும். நாளாக ஆக அது காய்ந்து விடும். கல்வெட்டுப் படியெடுக்கையில் அதில் சிறுபகுதியை எடுத்துத் தட்டில் வைத்துக் கொண்டு, தண்ணீர் சேர்த்து குழப்பிக் கொள்ளுதல் வேண்டும்.

கல்வெட்டு காணப்பெறும் இடத்தை முதலில் இரும்பு மட்டையாலும், நார் மட்டையாலும் தேய்த்து சுத்தம் செய்து கொள்ளுதல் வேண்டும். சுண்ணாம்புக் காரை அல்லது பாசி படிந்திருந்தால் சுரண்டும் கத்தியால் சுத்தம் செய்தல் வேண்டும். பின்னர் தண்ணீரைக் கொண்டு கழுவி விடுதல் வேண்டும். பிறகு ஸ்பாஞ்ச் கொண்டு நீர் அதிகமாக உள்ள பகுதிகளை ஒற்றி எடுக்க வேண்டும். பிறகு தண்ணீரில் நனைக்கப் பெற்ற படியெடுதாளை ஒட்டுதல் வேண்டும். கல்லில் ஈரப்பசை இருப்பதாலும் தாள் ஈரமாக இருப்பதாலும் அது நன்றாக ஒட்டிக் கொள்ளும். அவ்வாறு ஒட்டப்பெற்ற தாள் மீது அடிமட்டை கொண்டு பக்குவமாக அடித்தல் வேண்டும். தாள் கிழிந்து விடாமலும், எழுத்துக்குச் சேதம் ஏற்பட்டு விடாமலும் அடித்தல் வேண்டும். எழுத்து வெட்டப் பெற்ற குழிவான பகுதிகளில் தாள் அமிழ்ந்து விடும். சம பகுதியில் தாள் மேலாக ஒட்டிக் கொள்ளும். அப்பொழுது தட்டில் குழப்பி வைத்திருந்த மையில் சிறிது எடுத்து பெரிய மையொற்றியில் வைத்துச் சிறிய மையொற்றியால் நன்கு குழப்பிக் கொண்டு, கல்வெட்டின் மீது ஒட்டி அடிக்கப் பெற்றுள்ள தாளின் மீது சீராக ஒற்றுதல் வேண்டும். அவ்வாறு ஒற்றுகையில் சமமாக உள்ள பகுதி மை ஒற்றுவதால் கறுப்பாகவும், எழுத்துப் பள்ளங்களில் ஒட்டிய தாள் பகுதி வெள்ளையாகவும் காணப்படும். ஆதலால் எழுத்து வெள்ளையாக நன்கு காணப்படும். இலேசாகக் காய்ந்த பின்பு மை ஒற்றப் பெற்ற தாளினைக் கல்வெட்டுப் பகுதியிலிருந்து தோல் உரிப்பது போன்று பெயர்த்து எடுத்துவிட வேண்டும்.

அவ்வாறு, பெயர்த்து எடுக்கப் பெற்ற கல்வெட்டுப் படியின் தொடக்கப் பகுதியின் பின்புறத்தில் அக்கல்வெட்டு எந்த இடத்திலிருந்து படி எடுக்கப்பட்டதென்ற விபரத்தைப் படியெடு எழுதுகோலால் எழுதி விடுதல் வேண்டும். பின்பு அக்கல்வெட்டுப் படியை நிழலில் உலர வைத்தல் வேண்டும். உலர்ந்த பிறகு இறுதிப் பகுதியிலிருந்து மடித்து தொடக்கப் பகுதி மேலே இருக்குமாறு வைத்துச் சணலினால் கட்டிக் கொள்ளுதல் வேண்டும். அப்பொழுதுதான் தேவைப்படும்போது அக்கல்வெட்டு எங்கு படிஎடுக்கப் பெற்றது

குறிப்பு

என்பதைக் கண்டறிய எளிதாக இருக்கும். அவ்வாறு எடுக்கப் பெற்ற கல்வெட்டுப் படிகளைக் குளிர்பாங்கான இடத்திலோ அல்லது குளிர்ச்சாதன அறையிலோ வைத்துப் பாதுகாப்பது நலம்.

கல்வெட்டு செய்திகளை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டு பார்க்கவும் கல்வெட்டு செய்திகளைப் பாதுகாக்கவும், தொலைதூரத்தில் உள்ளவர்கள் அறியும் வகையில் செயல்படுத்தவும், பல்வேறு ஆய்வுகளுக்கும், கல்வெட்டு இருக்கும் இடம் தேடிச் செல்லாமல் ஓரிடத்தில் இருந்தபடி ஆய்வினை, மேற்கொள்ளவும் இம்முறை பெரியளவில் துணை நிற்கும்.

இத்தகைய படியெடுக்கும் முறை அறியா அக்காலத்தில் கல்வெட்டில் உள்ள செய்தியை அறிய விரும்பிய மன்னன் செயல் வருமாறு,

‘சாமஸ்-இ-சிராஜ்’ செய்தி வழியாக ‘பெரோஸ்ஷா துக்ளக்’ என்பவர் பழமையான வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டும் எனும் ஆவலில், அரியானா மாநிலத்தின் அம்பாலா மாவட்டத்தில் உள்ள ‘தோப்ரா’ என்ற இடத்தில் நிறுவப்பட்டிருந்த அசோகர் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருந்த தூணினைத் தில்லி கோட்டைக்குக் கொண்டு வந்து தமது கோட்டையில் நிறுவி அதிலுள்ள வரலாற்றைப் படித்துக் கூறும்படி பிராமணர்களைக் கேட்டுக் கொண்டான் என்பதை அறிகிறோம்.

**கல்வெட்டுகளின் நோக்கமும் பயனும்**

பெரும்பாலான கல்வெட்டுகள் ஏதாவது ஒரு கொடையைப் பதிவு செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. கொடையாளர், கொடையைப் பெறுபவர், கொடை (தானம்) ஆகியன பற்றிய செய்திகள் காணப்பெறும்.

கொடுப்பவர், பெறுபவர் ஆகியோருடைய ஊர், நாடு முதலியன அவர்கள் சமுதாயத் தகுதியோடு கூட்டியோ குறைத்தோ இடம் பெறும், கொடை நிலம், தானியம், பொன், காசு, பாத்திரங்கள், நகைகள், விலங்குகள் (ஆடு, பசு, எருமை) என்று கொடைகள் பல வகைப்படும். பத்தாம் நூற்றாண்டு வரை ஆடு, மாடுகள் கொடுப்பது பெரும் வழக்கமாக இருந்தது. பின்னால் நிலக்கொடைகள் பெருகின.

நிலத்தைப் பொறுத்து அது கொடுத்தவரின் சொந்த நிலமா? வாங்கிய நிலமா? அது எங்கிருந்தது, நன்செயா, புன்செயா எவ்வளவு விளைந்தது, எப்படி நீர் பெற்றது, இப்படித் தொடர்புடைய செய்திகள் பல கொடுக்கப்படும்.

கொடையாளர் அரசனாக இருந்தால் ஓலை, அதிகாரிகள் புரவுவரித் திணைகளத்தார் முதலிய பல அரச அலுவலர்கள் குறிக்கப்படுவார்கள்.

குறிப்பு

நாட்டுப் பிரிவுகள், ஊர்கள் ஆகியவற்றின் ஆட்சிக் குழுக்களான, நாட்டார், சபையார், ஊரார், நகரத்தார் முதலியோர் கொடையாளர்களாகவும், கொடையைக் கோயிலுக்காக வாங்கிப் பேணுபவர்களாகவும் பல கல்வெட்டுக்களில் காணப்படுகிறார்கள். கொடை பெறுபவர்கள் பெறுபவை பெரும்பாலும் கோயில் சார்ந்திருப்பதால் கோயில்களிலேயே பெரும்பாலான தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன.

தானம் யார் தரினும், தன் உடன்பிறந்தவர் தரினும் அதை கல்வெட்டில் பொறித்தனர். முதலாம் இராசஇராசன் தன் தமக்கை குந்தவையார் தந்ததை கல்வெட்டில் பொறிக்க ஆணையிட்ட செய்தி இதை உறுதிப்படுத்துகிறது.

முதலாம் இராஜஇராஜன் எடுப்பித்த தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு அறக்கட்டளை வழங்குவோரைப் பற்றிக் கல்வெட்டில் பொறித்த அவன், ஓர் ஆணையைப் பிறப்பித்துள்ளான். ஆவ்வாணை வருமாறு,

**‘நாம் குடுத்தனவும்**
**நம் அக்கன் கொடுத்தனவும்**
**நம் பெண்டுகள் கொடுத்தனவும்**
**மற்றும் குடுத்தார், குடுத்தனவும்**
**கல்லில் வெட்டுக’**

என்று அறிவுறுத்துகிறது.

இதனால் அப்பொருளை யாரும் எடுக்க இயலாது பொதுகாரியத்துக்கு பயன்படுத்த இயலும். தவறுகள் நடைபெறாத வகையிலும், கொடை தருவோரை ஊக்குவிக்கும் வகையிலும், ஒருவாறு அரச நடவடிக்கையுமாக கல்வெட்டுகள் அமைந்துள்ளன.

**கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்தி பெறும் இடம்**

சோழர், பாண்டியர் கல்வெட்டுகளில் தனித்தன்மை பெற்றிருப்பது மெய்க்கீர்த்திகள் ஆகும்.

பாண்டியரும், பல்லவரும், பிறருக்குத் தானங்களை வழங்கிய போது, அறச் செயல்களை, தரும சாத்திரங்களைத் தழுவி, செப்பேடுகளில் பொறித்து உரியவர்க்கு அளித்து வந்தனர். இச்செப்பேடுகளில் தம் முன்னோர் வரலாறுகளை முதலில் எழுதுவித்தனர். தன் ஆட்சியில் நிகழ்ந்த வரலாற்று உண்மைகளை அதிகாரப் பூர்வமாகத் தெரிவித்து நன்கு விளக்கும் மெய்க்கீர்த்திகளை இனிய தமிழ் அகவற்பாவில் தன் கல்வெட்டுகளின் தொடக்கத்தில் பொறிக்கும் வழக்கத்தை உண்டாக்கியவன் இராஜராஜனே. இவனுக்குப் பிறகு இவன்வழி வந்த சோழ மன்னர்கள் அனைவரும் இந்த பழக்கத்தைப் பின்பற்றினர். இவன் மகன் முதலாம் இராஜேந்திரனின் ஆட்சித்

தொடக்கத்தில் குறைந்த அளவிலான மெய்க்கீர்த்தி, நாளடைவில் விரிந்து அவ்வப்போது நடைபெற்ற நிகழ்ச்சியும், தன்னுள் சேர்த்துக் கொண்டது. சோழர் கல்வெட்டுகளில் காணப்படும் இத்தகைய வரலாற்று முன்னுரைகள் ஒவ்வொரு மன்னனுடைய ஆட்சிக் காலத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சியை அறியவும், கல்வெட்டுகள் எந்தெந்த மன்னர்களுடையவை என்பதை அறிய பெரிதும் உதவுகின்றன. மெய்க்கீர்த்தி என்பதற்கு அபிதான சிந்தாமணியில் (பக்.1122) 'சொற்சீரடி என்னும் கட்டுரைச் செய்யுளால் குலமுறையில் செய்த கீர்த்தியைக் கூறுவது', என்றும் சென்னைப் பல்கலைக்கழக பேரகராதியில் (பக். 3336) 'அரசனது புகழ் வரலாறுகளைக் கூறி அவன் தேவியுடன் வாழ்க என்று வாழ்த்தி அவள் இயற்பெயருடன் ஆட்சி வருடத்தைக் கூறும் பாடல் வகை என்கிறது. மெய்க்கீர்த்தியின் தொடக்கத்தைக் கொண்டு அது எந்த மன்னனுடையது என்பதை அறியலாம். அவ்வகையில் சோழரின் மெய்க்கீர்த்திகள் வருமாறு.

**சோழர் மெய்க்கீர்த்தி**

**மன்னன் — மெய்க்கீர்த்திகளின் தொடக்கம்**

1. முதலாம் ராஜராஜன் - காந்தளுர் சாலை கல மறுத்தருளிய
   திருமகள் போல
2. முதலாம் ராஜேந்திரன் - திருமன்னி வளர இருநில மடந்தையும்
   பூர்வ தேசமும் கங்கையும் கடாரம். . . .
3. இராஜாதி ராஜன் - திங்களேர் தரு தன் தொங்கல்….
   திங்களேர் பெறவளர்
   திருக்கொடியொடு தியாகக் கொடி
4. இரண்டாம் ராஜேந்திரன்- திருமாது புவியெனும்
   திருமகள் மருவிய செங்கோல்
   இரட்டபாடி ஏழரை இலக்கம்
5. வீரராஜேந்திரன் - திருவளர் திரள் புயத் திருநில வலயந்
   வீரமே துணையாக
6. அதிராஜேந்திரன் - திங்களேர் மலர்ந்து வெண்குடை மண்டிய
7. முதலாம் குலோத்துங்கன் - திருமன்னி விளங்கு
   புகழ்மாது விளங்க
   புகழ் சூழ்ந்த புணரி
   பூமேலரிவையும்
   பொற்செயப்பாவையும்
8. விக்கிரம சோழன் - பூமாது புணர
   பூமாலை மிடைந்து
9. இரண்டாம் குலோத்துங்கன்- பூமன்னு பதுமம்
   பூமருவிய புவியேழும்

பூமேவி வளர்

பூமேவு திருமகள்

பூமன்னு பாவை

பூமன்னு பூத்த

குறிப்பு

10. இரண்டாம் ராஜராஜன் - பூமருவிய பொழிலேழும்

பூமருவிய திருமாதும்

11. இரண்டாம் ராஜாதிராஜன் - கடல் சூழ்ந்த பார்மா தரும்

கடல் சூழ்ந்த பாரேழுங்

12. மூன்றாம் குலோத்துங்கன் - புயல் பெருக வளம் பெருக

புயல் வாய்த்து

மதுரையும் ஈழமும் கருவூரும்

பாண்டியன் முடித்தலையும்

கொண்ட

13. மூன்றாம் ராஜராஜன் - சீர்மன்னி இரு நான்கு திசை

விளங்கு

சீர் மன்னு மலர் மகளும்

14. மூன்றாம் ராஜேந்திரன் - பூமியும் திருவும்

பூமருவிய திருமடந்தை

## முதலாம் இராஜராஜனின் மெய்க்கீர்த்தி
## (தஞ்சை கல்வெட்டு)

முதலாம் இராசராஜன் மூன்று வித மெய்க்கீர்த்திகளைக் கையாண்டாலும் திருமகள் போல என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியே எட்டாம் ஆண்டிலிருந்து பெரும் அளவில் பயன்படுத்தப்பட்டது. இவ்வகை மெய்க்கீர்த்தி இவனது ஆட்சியில் நடைபெற்ற முதற்போரைக் குறிக்கும் வகையில் காந்தளூர்ச்சாலை கலமறுத்த என்ற பட்டத்தைக் குறிப்பிடுகிறது. இரண்டாம் வகையான மெய்க்கீர்த்தியில் காந்தளூர்ச்சாலை வெற்றிக்கே முதலிடம் அளிக்கிறது. இவனது 20ஆம் ஆண்டைச் சேர்ந்த மூன்றாம் வகை மெய்க்கீர்த்தியில் இராஜராஜன் மதுரையை அழித்தான் என்றும் கொல்லம் கொல்லதேசம், கொடுங்கோளூர் ஆகிய நாட்டு மன்னர்கள் அவனுடைய பரிவாரமாகப் பணிபுரிந்தனர் என்றும் கூறுகிறது.

தஞ்சைப் பெருஉடையார் கோயிலில் காணப்படும் அவனது 29ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் உள்ள மெய்க்கீர்த்தி அவனது புகழை,

*ஸ்வஸ்தி ஸ்ரீ*

*திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்*

குறிப்பு

*தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்*
*காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி*
*வேங்கை நாடுங் கங்க பாடியுந்*
*தடிகை பாடியும் நுளம்ப பாடியுங்*
*குடமலை நாடும் கொல்லமுங் கலிங்கமும்*
*முரட்டெழில் சிங்களர் ஈழமண் டலமும்*
*இரட்டபாடி ஏழரை இலக்கமும்*
*முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமுந்*
*திண்டிறல் வென்றி தண்டாற் கொண்டதன்*
*னெழில் வள ரூழியு ளெல்லா யாண்டுந்*
*தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்*
*தேசுகொள் கோராச கேஸரி வன்மரான*
*ஸ்ரீராசராச தேவர்க்கு யாண்டு உகூ ஆவது*

என்கிறது.

இராசராசனின் வெற்றிகளைக் கூறும் மெய்க்கீர்த்தி தஞ்சை இராசராசசேச்சுரத்து வடக்குச் சுற்றுப்புறச் சுவரில் கல்வெட்டாகக் காணப்படுகிறது. இக்கல்வெட்டு முதலாம் இராசஇராசனின் வெற்றிகளை எடுத்துக்காட்டுகிறது. முதலாம் இராசராசன் காந்தளூர்ச் சாலையில் சேரனை வென்றான். வேங்கை நாட்டையும், கங்கபாடியையும் வெற்றி கொண்டான். நுளம்பபாடியிலும், தடிகைபாடியிலும் வெற்றிக் கொடி நாட்டினான். குடமலை நாட்டையும் வென்றடக்கினான். கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம் ஆகியவற்றைப் போரில் வென்றான். இரட்டபாடி, ஏழரையிலக்கம் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் ஆகியவற்றை வென்றான் எனும் செய்திகள் இதனால் அறியப்படுகின்றன.

காந்தளூர்ச்சாலை சேரநாட்டுத் திருவனந்தபுரத்தில் ஒரு பகுதியாகும். அ∴து ஒரு படைக்கலங்களின் கருவூலம், சேரன் பாஸ்கரரவிவர்மன் சோழனுடைய தூதுவனை அவமானப்படுத்தினான். இதனால் சினங்கொண்ட சோழன் தன்னுடைய கடற்படையைச் செலுத்தி சேரநாட்டின் காந்தளூர் சாலையில் சேரர் கடற்படையைச் சின்னாபின்னம் ஆக்கினான்.

வேங்கை நாடு கீழைக்கடற்கரையில் உள்ளது. இதனைச் சாளுக்கிய மன்னன் அரசாண்டான். அவனை வென்று வேங்கை நாட்டைக் கைப்பற்றி நாடிழந்த சக்திவர்மனுக்கு முடிசூட்டினான். இராசராசன் சோழப் பேரரசின் வடபகுதியை விரிவுபடுத்துவதற்காகக் கங்கபாடியின் மீது படையெடுத்துக் கங்கர்களை வென்றான்.

இராட்டிரகூட சிற்றரசர்களை ஒடுக்குவதற்காக இராசராசன் நுளம்ப பாடியையும் தடிகைபாடியையும் வென்றான். அச்சமயம் குடமலை நாட்டை வென்றடக்கினான் இராசஇராசனுடைய படைத்தலைவன். காந்தளூர் சாலை போருக்குப்பின் தொடர்ந்து இராசராசன் கேரளப்பகுதியைச் சேர்ந்த கொல்லம் என்ற பகுதியைக் கைப்பற்றினான். வேங்கி நாட்டின் வடபகுதியாகிய கலிங்கத்தையும் வென்றான்.

ஈழ மன்னன் மகிழ்ந்தன். இவன் பாண்டியனோடும் சேரனோடும் இணைந்து அடிக்கடி இராசராசசோழனுக்கு இடையூறு விளைவித்தான். இதனால் சினங்கொண்ட இராசராசன் ஈழ மண்டலத்தை வென்று அனுராதபுரத்தை அழித்தான். பொலன்னருவா என்ற ஊரின் பெயரை ஜனநாதபுரம் என்று மாற்றி இலங்கையின் புதிய தலைநகரை இராசராசன் உருவாக்கினான். மகிழ்ந்தன் இலங்கையின் தென்பகுதிக்கு ஓடிவிட்டான். வடக்கு இலங்கையில் சோழர் ஆட்சி ஏற்பட்டது.

இராச இராசனும், அவனுடைய மைந்தன் முதலாம் இராசேந்திரனும் மேலைசாளுக்கிய சத்யாசிரையன் என்பானை வென்று அடக்கினர். இரட்டப்பாடி, ஏழரை இலக்கம் என்ற பகுதிகளைக் கைப்பற்றினர். இந்த வெற்றியின் பயனாகத் துங்கபத்திரை ஆறு சோழப் பேரரசின் வட எல்லையாக அமைந்தது.

பாரதத்தின் தென் மேற்குத் திசையில் கடல் நடுவே அமைந்த சிறுசிறு தீவுக் கூட்டங்கள் முந்நீர்ப் பழந்தீவுகள் (மாலத்தீவுகள்) எனப்பெற்றது. இந்த முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தையும் இராசராசன் கையகப்படுத்தினான்.

அமரபுயங்கன் என்ற பாண்டியனை இராசராசன் வென்றான். சோழனால் வெல்லப்பட்ட பாண்டிய நாடு இராசராசப்பாண்டி மண்டலம் எனப் பெயர் பெற்றது. இவ்வாறு தஞ்சையில் காணப்படும் முதலாம் இராசராசனின் மெய்க்கீர்த்தி கல்வெட்டு அப்பேரரசனுடைய வெற்றிகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

முதலாம் இராசஇராசன் காலந்தொடங்கி மெய்க்கீர்த்தியானவை சாசனங்களில் இடம் பெறுகின்றன மெய்க்கீர்த்தியின் முடிவில் மன்னன் பெயரும் ஆட்சியாண்டும் கூறப்பட்டிருக்கும்.

**பிரசஸ்தியும் மெய்க்கீர்த்தியும்**

பாண்டியர்களின் தமிழ் பிரசஸ்திகளைக் கண்ட முதலாம் இராசராச மன்னன் தம்முடைய சாசனங்களில் மெய்க்கீர்த்தி என்ற பகுதியினை அறிமுகப்படுத்தியுள்ளான். இவனுக்கு முன்பு ஒருவரியோ இருவரியோதான் மன்னருக்குப் புகழாகக் கூறப்படும். முதலாம் இராசரானுக்கும் தொடக்கத்தில் காந்தளூர்சாலை கலமறுத்த செயல் மட்டுமே இருந்துள்ளது. மெய்க்கீர்த்திகள் தோன்றிய பின்னர் பிரசஸ்திகள் செல்வாக்கை இழந்தன. இம்மெய்க்கீர்த்தி முதலாம் இராசராசனின் 29ஆம் ஆண்டில் 1014ல் வெட்டப்பெற்றுள்ளது.

குறிப்பு

இராசராசேச்சுரம் என்னும் திருக்கோயிலுள் உறையும் சிவபரம் பொருளுக்குத் திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய 48 பிடாரர்களை நியமித்தான். கொட்டி மத்தளம் வாசிப்போன் ஒருவன் ஆகியோரையும் சேர்த்து ஒவ்வொருவருக்கும் நாள்தோறும் இராசகேசரியோடு ஒக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் உள்ளூர்ப் பண்டாரத்தே மூன்று குறுணி நெல் சம்பளமாக வழங்க ஏற்பாடு செய்தான்.

இராசராசன் கல்வெட்டுகளில் முதலில்,

**சாலை கலமறுத்த கோவி ராசகேசரி**

**காந்தளூர்ச்சாலை கலமறுத்த கோவிராசகேசரி**

என்ற தொடர் மட்டுமே மெய்க்கீர்த்தியாகக் காணப்படுகிறது. காலம் செல்லச் செல்ல வெற்றிகள் பெருகப் பெருக மெய்க்கீர்த்தியும் வளர்ந்துள்ளது. (எ.கா.) வீரராசேந்திரசோழன் மெய்க்கீர்த்தி 158அடிகளும், சுந்தரபாண்டியனின் மெய்க்கீர்த்தி - 132 அடிகள் ஆகும்.

## பாண்டியர் மெய்க்கீர்த்தி

மாறஞ்சடையன், சடையமாறன் என்ற சொற்களை அல்லாது பாண்டிய மன்னர்களின் பெயருக்கு முன்னால் மெய்க்கீர்த்திகள் இடம் பெறவில்லை. வீரபாண்டியனுக்குச் சோழன் தலை கொண்ட கோவீரபாண்டியர் என்று கல்வெட்டுக்கள் தொடங்குகின்றன. பாண்டிய மன்னர்களது கல்வெட்டுகளில் விரிவான மெய்க்கீர்த்திகள் இன்மையால் அரசர்களது பட்டத்து அரசிகளின் பெயர்களை அறிய முடியவில்லை. தளவாய்புரச் செப்பேட்டின் மூலம் சிரீமாற சிரீவல்லபனின் அரசிகளில் ஒருத்தி அக்களநிம்மடி என்று அறிய முடிகிறது. மேலும் சின்னமனூர் பெரிய செப்பேட்டின் மூலம் பராந்தக நெடுஞ்சடையனின் பட்டத்தரசி வானவன் மாதேவி என்றும் தெரிகிறது.

பாண்டிய மன்னர்கள், மாறவர்மன், சடையவர்மன் என்ற அடைமொழிகளை அடுத்தடுத்து சூட்டிக் கொண்டனர்.

பிற்காலச் சோழர்களைப் போன்றே இவர்களின் மெய்க்கீர்த்தியும் அவரவர்க்கென ஒரு தொடக்கத்தைக் கொண்டிருந்தது. மெய்க்கீர்த்தியை வைத்தே அரசர்களை அடையாளம் கண்டு கொள்ளலாம்.

வேள்விக்குடி செப்பேட்டில் உள்ள மெய்க்கீர்த்தி தமிழ் பிரஸஸ்தி என்றழைக்கப்படுகிறது. பெரும்பான்மையும் கலிவஞ்சி என்ற பாவின் ஓசையைக் கொண்டு அமைந்துள்ளது. சொற்சீரடி பெற்றது. தமிழ் நடையில் வடசொற்கள் பல கலந்துள்ளன. எல்லா மெய்யெழுத்துக்களும் எகர, ஒகர குறில்களும் புள்ளி பெற்றுள்ளன.

| மன்னன் | மெய்க்கீர்த்திகளின் தொடக்கம் |
|---|---|
| 1. சடையவர்மன் ஸ்ரீவல்லபன் (குலசேகரபாண்டியன் மகன்) | - 'திருமடந்தையும்' |
| 2. சடையவர்மன் ஸ்ரீவல்லவபன் (சுந்தரபாண்டியன் மகன்) | - 'பூமாது புண' |

3. மாறவர்மன் பராக்கிரமன் - 'திருமகள் புரண'
4. மாறவர்மன் ஸ்ரீவல்லபன் - 'பூமகள் ஜெயமகள்'
5. சடையவர்மன் குலசேகரன் - 'பூதல மடந்தை'
6. சடையவர்மன் வீரபாண்டியன் - 'பூமடந்தையும் ஜெயமடந்தையும்'
7. முதலாம் சடையவர்மன்-குலசேகரன் - 'பூவின் கிழத்தி'
8. முதலாம் மாறவர்மன்-சுந்தரபாண்டியன் - 'பூமருவிய திருமடந்தையும்'
9. முதலாம் மாறவர்மன் - விக்கிரமபாண்டியன் - 'திருமகள் ஜெயமகள்'
10. இரண்டாம் சடையவர்மன்- குலசேகரன் - 'பூதல வனிதைமேதக விளங்க'
11. இரண்டாம் மாறவர்மன்- சுந்தரபாண்டியன் - 'பூமலர்த் திருவும்'
12. இரண்டாம் மாறவர்மன்-விக்கிரமன் - 'திருமலர் மாது'
13. முதலாம் சடையவர்மன் - சுந்தரபாண்டியன் - 'பூ மலர் வளர் திகழ்'
14. இரண்டாம் சடையவர்மன் - வீர பாண்டியன் - 'திருமகள் வளர் திகழ்'
15. முதலாம் மாறவர்மன்-குலசேகரன் - 'தேர் போல்'

மதுரை நகர் பாண்டிய நாட்டின் தலைநகரமாகும். சங்க இலக்கியங்கள், மகாபாரதம் ஆகியவற்றில் பாண்டியர் குறிப்பிடப்படுகின்றனர். கல்வெட்டுக்களில் அசோகனது கல்வெட்டுக்களில் முதன் முதலாகப் பாண்டியரைக் காண்கின்றோம். எனவே கிறிஸ்துவ சகாப்தத்திற்கு முன்பிலிருந்து பாண்டியர் இருந்துள்ளனர் என்பதை அறியலாம். மூன்றாம் நூற்றாண்டின் மத்தியில் களப்பிரர் என்போர் மதுரையைப் பிடித்து ஆளத் தொடங்கினர். சுமார் 300ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் பாண்டியர் தலை தூக்கினார்கள். பாண்டியர் வரலாற்றை இந்த இடத்திலிருந்து தான் கோர்வையாக எழுத முடிகிறது. அவர்களது கல்வெட்டுக்கள் 7-ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டு வரை கிடைக்கின்றன. இந்தியாவிலேயே கிறித்துவ சகாப்தத்திற்கு முன்பிருந்து 17ஆம் நூற்றாண்டு வரை அரசு கோலோச்சிய பழமையான அரச பரம்பரையினர் பாண்டியரே ஆவார்கள். இப்பாண்டிய மன்னர்களை நான்கு நிலையில் காணலாம்.

1. முற்காலப் பாண்டியர் - (கி.பி. 550 – 1000)
2. இடைக்காலப் பாண்டியர் - (1000 – 1200)

3.பாண்டியப் பேரரசு – (1200 – 1371)

4.பிற்காலப் பாண்டியர் (1371 – 1650)



களப்பிரர் வருகைக்கு முன் அரசாண்ட பாண்டியர்களைச் சங்க இலக்கியங்களில் அங்கும் இங்குமாகவே காணமுடிகின்றது. அவர்களது வம்சாவளி, காலங்கள் இவைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இல்லை. கல்வெட்டுகளும் கிடைக்கவில்லை. சமீபத்தில் சங்க கால காசு ஒன்று கிடைத்துள்ளது. இதன் ஒரு பக்கத்தில் குதிரையின் வடிவமும், பெருவழுதி என்று பிராமியிலும் பொறிக்கப்பட்டு உள்ளது. மறுபக்கத்தில் பாண்டியர்களுக்கு உரிய இருமீன் சின்னங்கள் உள்ளன. இக்காசை வெளியிட்ட மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிப் பாண்டியன் என்று அறியலாம். இவன் அஸ்வமேதயாகம் செய்ததைக் குதிரைச் சின்னம் அடையாளம் காட்டுகின்றது. முதலாம் வரகுணனின் (கி.பி. 768 முடிசூடியவன்) வேள்விக்குடிச் செப்பேடு, பெருவழுதியும், அவனது வம்சத்தவர்களும் களப்பிரர் வருகைக்கு முன் அரசாண்டதாகக் கூறுகிறது. இக்காசின் காலம் கி.மு. அல்லது கி.பி. முதலாம் நூற்றாண்டாக இருக்கலாம். இம்மாதிரியான புதிய கண்டுபிடிப்புகள் சங்க காலப் பாண்டியரை அறிவதற்குப் பெரிதும் துணை புரிகின்றன.

பாண்டியரது கிரந்தமும் வட்டெழுத்துத் தமிழும், கலந்து தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் சில சோழ மண்டலத்தில் காணப்படுகின்றன. இவை கி.பி. 863 முதல் 888 வரை சோழ மண்டலத்தைத் தனது ஆதிக்கத்துக்குள் வைத்திருந்த இரண்டாம் வரகுணன் காலத்தவை. இவைகளை நீக்கிவிட்டால், முற்காலப் பாண்டியரின் கல்வெட்டுகள் கி.பி.600லிருந்து 1000 வரையிலானவை பாண்டி மண்டலத்திலும், கேரளாவின் தென்பகுதியிலும் கிடைக்கின்றன. கல்வெட்டுகள் மன்னனை மாறன்சேந்தன் அல்லது சேந்தன்மாறன் என்று அறிமுகப்படுத்துகின்றன. காலம் செல்லச் செல்ல இப்பெயர்கள் சடையன் மாறன், மாறன் சடையன் என்றும் காணப்படுகின்றன. இப்பெயர்கள் பாண்டியர் மரபின் பட்டப்பெயர்கள் ஆகும். பிற்காலத்தில் இவை சடையவர்மன், மாறவர்மன் என மாறலாயின.

கி.பி. 550 முதல் 1000 வரை 15 பாண்டிய மன்னர்கள் ஆண்டு உள்ளனர். பத்து செப்பேடுகளும், 150 கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன.

### குலசேகரப் பாண்டியனின் மகன் சடையவர்மன் ஸ்ரீவல்லபன் மெய்க்கீர்த்தி (1101-1124)

திருமடந்தையும் ஜெயமடந்தையும் என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியை உடையதிரிபுவனச் சக்கரவர்த்திகள் சடையவர்மன் ஸ்ரீவல்லபனின் கல்வெட்டுகள் பல கிடைத்துள்ளன. அவைகளில் ஆட்சியாண்டு 2 முதல் 23 வரை உள்ளன. இம்மன்னனின் மெய்க்கீர்த்தி வருமாறு:

குறிப்பு

திருமடந்தையும் ஜெயமடந்தையும் திருப்புயங்கள் இனிதிருப்ப
இருநிலமும் பெருமையெய்த எண்டிசையும் குடைநிழற்ற
மன்னரெல்லாம் வந்திறைஞ்ச மரபில் வரு மணிமுடிசூடித்
தென்குமரி முதலாகத் திரைகடலோர் எல்லையாகப்
பார் முழுதும் கயலாணை பரந்து செங்கோலுடன்
வளர்மன்னிய வீரசிம்மாசனத்து உலகமுழுதுடையாரோடும்
வீற்றிருந்தருளிய மாமுதல் மதிக்குலம் விளக்கிய
கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவல்லபதேவர்
மாடக்குளக்கீழ் மதுரைக் கோயிலுனுள்ளாலை அழகிய பாண்டியன்
கூடத்துப் பள்ளிக் கட்டில் பாண்டியராஜனில் எழுந்தருளி இருந்து. . . .
.

இம்மெய்கீர்த்தியால் இவனது தலைநகரம், மதுரை என்பதை அறியலாம்.

'திருமடந்தையும் ஜெயமடந்தையும்' மெய்க்கீர்த்தியுடைய சடையவர்மன் ஸ்ரீவல்லபன் கி.பி. 1101-இல் முடிசூடினான். குருவித்துறை பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் மிகப் பழமையானவை ஸ்ரீவல்லபனுக்கு உரித்தாகும். 'திருமடந்தையும், ஜெயமடந்தையும்' என்று தொடங்குகின்றன. இக்கோயில் பாகனூர் கூற்றத்துச் சோழாந்தக சதுர்வேதிமங்கலத்து திருச்சக்கரத்து ஆழ்வார் கோவில் எனக் கூறப்பட்டுள்ளது. இன்று சித்திரரத வல்லப பெருமாள்கோயில் என்று பெயர் மாற்றம் கொண்டுள்ளது எல்லாக் கல்வெட்டுகளும் கர்ப்பக்கிரகத்தில்தான் உள்ளன.

இக்கோயிலும், ஊரும் கி.பி. 1102இல் எடுப்பிக்கப்பட்டன. குலசேகரமங்கலம் என்னும் திருநாமத்தால் - என்பதால் ஸ்ரீவல்லபனின் தந்தையின் பெயர் குலசேகரன் என்பதாகக் கொள்ளலாம்.

திருமகளும், வீரமகளும் புகழ்வாய்ந்த தோள்களில் இனிதாக வீற்றிருக்க, மண்ணுலகமும், விண்ணுலகமும் பெருமையடையும் விதமாக எட்டுத் திசைகளிலும் கொற்ற குடையானது மக்களைக் காக்க, மன்னர்கள் இரந்து வேண்டும்படி மரபு வழியில் தம்மிடம் வந்து சேர்ந்த மணிமுடியைச் சூடிநீர் சூழ்ந்த இந்நிலவுலகை மீன்சின்னம் கொண்டு, செங்கோலாட்சி உயர்ந்து விளங்க வீரனான இவன் தன் துணைவியாம் உலக முழுதுடையாளோடு அரியணையில் வீற்றிருந்தது. சந்திரக்குலம் விளங்க மதுரை கோயிலில் உள்ளாக அமைந்த அழகிய பாண்டியன் கூடத்துப் பள்ளிக் கட்டில் பாண்டிய ராஜனாக வீற்றிருந்தான் என்கிறது.

மெய்க்கீர்த்தி கல்வெட்டுகள் இராசராச சோழன் காலம் முதல் குறிப்பாக சோழ, பாண்டியரிடையே செல்வாக்கு பெற்றிருந்தன. இவற்றின் இன்றியமையா பகுதிகள் மட்டும் இங்கு இடம் பெற்றன. இம்மெய்க்கீர்த்தி

தனித்து ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும், எனினும் தமிழக கல்வெட்டுகளின் பொதுத் தன்மையை பின்னர் காணலாம்.

குறிப்பு

## கூறு 4: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. இந்திய வரலாற்றை உருவாக்க நமக்கு கிடைத்துள்ள சான்றுகளில் முதன்மையானது எது?

கல்வெட்டு

2. நடுகல் என்றால் என்ன?

வீரமரணம் அடைந்தவர்களை புதைத்த இடத்தில் நடப் பெற்ற கல்.

3. கல்வெட்டின் வகைகளில் சிலவற்றை குறிப்பிடு

1. அரசியல் தொடர்பான கல்வெட்டுகள், 2. சமயம் சார்ந்த கல்வெட்டுகள், 3. தல ஆட்சித் தொடர்பான கல்வெட்டுகள், 4. தானத் தொடர்பான கல்வெட்டுகள்

4. ஓம்படைக் கிளவி என்றால் என்ன?

கொடையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் கூறி தவறின் ‘கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திற்கு ஆளாவீர்கள் எனும் எச்சரிக்கை தருவதே ஓம்படைக்கிளவி எனப்படும்.

5. வடமொழிக் கல்வெட்டுகளின் வகைகள் யாவை?

1. இராஜகீயம் - (அரசுடையது)
2. ஜானபாதம் - (மக்களுடையது)

6. இராஜராஜன் இட்ட ஆணையில் குறிப்பிடத்தக்க ஒன்றை எழுதுக.

‘நாம் குடுத்தனவும்
நம் அக்கன் கொடுத்தனவும்
நம் பெண்டுகள் கொடுத்தனவும்
மற்றும் குடுத்தார், குடுத்தனவும்
கல்லில் வெட்டுக’

என அறமாக கொடுத்ததை பதிவுசெய்த ஆணை சிறப்பானது.

7. மெய்க்கீர்த்தியை உண்டாக்கியவன் யார்?

இராஜராஜன் சோழன்

8. அசோகரது கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்ற தமிழ் மன்னர்கள் யாவர்?

பாண்டியர்

9. பிரகஸ்தி என்றால் என்ன?

பாண்டியர்கள் மெய்க்கீர்த்தியை போல பிரகஸ்தி என்ற சொல்லால் தமிழில் இயற்றப் பெற்றதை குறித்தனர்.

10. ஸ்வஸ்தி ஸ்ரீ - என்றால் என்ன?

‘மங்களம் உண்டாகட்டும்’ என்னும் பொருள் உடைய சொல்.

குறிப்பு

**II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)**

11. தமிழ் கல்வெட்டின் அமைப்பு முறையை விவரி.

(கல்வெட்டுகளின் அமைப்பு முறை தலைப்பின் கீழ் உள்ளது.)

12. வடமொழி கல்வெட்டுகளின் அமைப்பினை விவரி?

(மேலே சொல்லப்பெற்றதன் கீழ் உள்ள செய்தி)

13. கல்வெட்டுகளின் நோக்கமும் - பயனும் குறித்து விளக்கு.

(இத்தலைப்பில் உள்ள செய்திகளை படித்தறிக.)

14. மெய்க்கீர்த்தி என்றால் என்ன? இராஜ இராஜ சோழனின் மெய்க்கீர்த்தி தரும் செய்தி யாது?

(மெய்க்கீர்த்தி விளக்கம் தந்த பின், இராஜஇராஜ சோழனின் 'ஸ்வஸ்தி ஸ்ரீ' எனத் தொடங்கிடும் திருமகள் போல' எனும் பாடலின் பொருள் தருக.)

15. பாண்டியரின் மெய்க்கீர்த்தி குறித்து எழுதுக.

(பிரசஸ்திப ற்றி விளக்கி பின் பாண்டியர் மெய்க்கீர்த்தி எனுந் தலைப்பில் உள்ள செய்திகளை சுருக்கி எழுதுக.)

**III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)**

16. கல்வெட்டுகளின் தன்மையை விளக்கி கட்டுரை வரைக.

(ஐந்து மதிப்பெண் வினாக்களை குறுந்தலைப்புகளாக மாற்றி சுருக்கி எழுதுக.)

குறிப்பு

## பிரிவு – II தமிழக, இந்தியக் கல்வெட்டுகள்

**'நல்லா ரொருவர்க்குச் செய்த உபகாரம்**
**கல்மே லெழுத்துப் போற் காணுமே – அல்லாத**
**ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்**
**நீர்மே லெழுத்திற்கு நேர்' (மூதுரை- 2)**

கல்லின் மேல் எழுதப்பெற்ற எழுத்து அழியாதிருப்பதை இப்பாடல் உறுதி செய்கிறது. இந்திய வரலாற்றை குறிப்பாக தமிழக வரலாற்றை நன்கு அறிவதற்கு இக்கல்வெட்டுகள் பெருந்துணைப் புரிகின்றன.

வரலாறு பயில்வதற்குச் சுவையானது. வரலாறு என்றால் என்ன? எனும் வினாவிற்கான விடையை புரிந்து கொண்டால் மட்டுமே அச்சுவையை அனுபவிக்க இயலும். ஹிஸ்ட்ரி *(History)* எனுஞ் சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்தது. அம்மொழயில் 'இஸ்டோரியா' எனக் கூறப்பட்ட சொல்லே ஆங்கிலத்தில் ஹிஸ்டரி ஆகியது. இஸ்டோரியா *(Istoria)* எனில் 'அறிந்து கொள்ள' புலனாய்வு செய்து அறிந்து கொள்ள எனும் பொருளில், ஆழமான ஆய்வு, விசாரணை, பகுத்தாய்தல் போன்றவற்றையும் உள்ளடக்கி உள்ளது. வடமொழியில் 'இதிகாசம்' என்பது வரலாற்றைக் குறிக்கிறது. எனினும் இதன் மூலப் பொருள் பழங்கதை என்பதாகும். தமிழில் வரலாறு என்பதை வரல்-ஆறு என்று கொண்டால் வருதலை ஆற்றுப் படுத்துதல் எனக் கொள்ளலாம். அதாவது வருகின்ற நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல் என்று பொருள்படும். வரலாறு என்பது மாறாத, மாற்றப்பட முடியாத கடந்த காலத்தின் குறிப்பு என அரிஸ்டாட்டில் கூறுகிறார். மாற்ற முடியாத கடந்த காலத்தின் குறிப்பேவரலாறு ஆகும்.

மனிதர்களை மையமாக்கி வரலாற்றை எழுதத் தொடங்கிய ஹெரடோடசு வரலாற்றின் தந்தை என்றழைக்கப்படுகிறார். 'ஏன் நிகழ்ந்தன' என்பதை ஆய்வு செய்யும் முறையினை அறிமுகப்படுத்திய 'தூசிடைட்சு' அறிவியற் பூர்வமான வரலாற்றின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

வரலாற்று வரைவியல் தொடர்பாக இந்தியர்கள் அக்கறை காட்டவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில வரலாறு சார்ந்த நூல்கள் படைக்கப்பட்டன. பண்டைக் கால இந்திய வரலாற்றாளர் எனும் சிறப்பினைப் பெறுபவர் கல்ஹணர் *(Kalhanar)* ஆவார். கல்ஹணர் எழுதிய வரலாற்று நூல் 'இராஜதரங்கினி' என்பதாகும். இந்நூல் 8000 செய்யுட்களை உடையது. இதன் மையக்கரு மிகத் தொன்மையான காலத்திலிருந்து கல்ஹணர் காலம் வரைக் காஷ்மீரை ஆண்ட அரசர்களைப் பற்றியும் அரசியல் பற்றியும் சமுதாய அமைப்பு பற்றியும் இந்நூல்

விவரிக்கிறது. இந்நூலினை இவர் கி.பி. 1148 முதல் 1150க்குள் படைத்திருக்க வேண்டும். 'காஷ்மீர வரலாற்றைத் திறம்பட எழுதிய கல்ஹணர்' தமக்கு உதவியாக இருந்தவைகளுள் முக்கியமானவை பழங்கால கல்வெட்டுக்களே எனத் தாம் எழுதிய நூலான ராஜதரங்கினியில் சொல்லியிருக்கிறார்.

குறிப்பு

இந்திய வரலாற்று வரைவியலில் இடைக்கால வரலாற்று வரைவியலைச் சிறப்பிக்கும் வகையில் நூல்களைப் படைத்தவர்கள் இசுலாமிய வரலாற்றாளர்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அல்பெரூனி, பரானி மற்றும் அபுல்பாசல் ஆகியோர் ஆவர். அபுல்பாசல் அயினி அக்பரி, அக்பர் நாமா எனும் நூல்களில் அக்பரின் ஆட்சி முறையைத் தெளிவாக எழுதியுள்ளார்.

ஐரோப்பியர்களின் வருகை இந்தியாவில் அறிவான மாற்றங்களை உருவாக்கியது. பல்வேறு ஐரோப்பியச் சிந்தனையாளர்கள் இந்திய வரலாற்றில் நாட்டம் காட்டினர். மொகஞ்சதாரோ மற்றும் ஹரப்பா போன்ற இடங்களில் செய்யப்பட்ட அகழ் ஆய்வுகள் இந்திய வரலாற்றின் தொன்மையை வெளிப்படுத்தின. இந்திய வரலாற்றை முறைப்படுத்தி புது விதமாக எழுதினர். வரலாற்று மூலங்களை முறைப்படுத்துதலை அவர்கள் வலியுறுத்தினர். ஆவணக் காப்பகங்களை உருவாக்கி ஆவணங்களைக் காப்பதில் நாட்டம் காட்டினர். அவ்வகையில் தற்கால இந்திய வரலாற்று வரைவியலுக்குச் சிறப்பான கொடையினை அளித்தவர் 'சாதுநாத் சர்க்கார்' ஆவார். தற்கால இந்திய வரலாற்றியலில் தென்னிந்திய வரலாற்றாளராகத் திகழ்பவர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி ஆவார். தென்னிந்திய வரலாற்றாளர்களிடையே இவர் சிறப்பான இடம் பெறுகிறார்.

தமிழகத்தில் சிறப்புப் பெற்றிருந்த சேர, சோழ, பாண்டிய வம்சங்கள் வரலாற்றில் முந்திய காலத்தில் வந்து மிகப் பிந்தியகாலம் வரை இருந்த வம்சத்தார் ஆவர். இவர்களது வரலாறு பற்றிப் போதுமான மூலங்கள் கிடைக்கப் பெறாததால் இவரின் பாண்டிய அரசு நூல் முழுமை அடையவில்லை. நீலகண்ட சாஸ்திரி படைத்த நூல்களில் மகத்தான படைப்பாகக் கருதப்படுவது 'சோழர்கள்' என்ற நூலாகும். இந்நூல் சோழர்களின் வரலாற்றை விவரிக்கிறது. இவரின் தென்னிந்திய வரலாறு எனும் நூலில் தமிழகம் பற்றி மட்டுமின்றிப் பிற பகுதிகளும் கூறப்பட்டுள்ளன.

தென்னிந்தியாவில் தமிழ் அரசுகள் எனும் நூலில் தமிழகத்தின் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் அரசியல் வரலாறு இடம் பெற்றுள்ளது. இவரின் நூல்களில் அதற்குரிய கல்வெட்டுச் செய்திகள் உள்ள இடம், செப்பேடு என்றால் அது உள்ள இடம் அதில் உள்ள அடிகள் பற்றிய குறிப்புகளோடு கூறியுள்ளார்.

இந்திய வரலாறு என்றாலே அது வடபுலத்தின் வரலாறு என்ற நிலை அன்று நிலவியது. தென்னிந்திய வரலாற்றை இந்திய வரலாற்றாளர்கள் புறக்கணித்தனர். தென்னிந்திய வரலாற்றை நூல்களின் கருக்களாகக் கொண்டு அதற்கு முக்கியத்துவம் அளித்தார் சாஸ்திரி. 'தென்னிந்திய வரலாற்றைக் கால வரிசைப்படி ஒழுங்கு செய்த பெருமை இவரையேச் சாரும். தமிழக வரலாறு இவரால் முக்கியத்துவம் பெற்றது. இவரை தம் முன்னோடியாகத் தென்னிந்திய வரலாற்றாய்வாளர்கள் கொண்டனர். அவ்வகையில் கே.கே.பிள்ளை, T.V. மகாலிங்கம், மீனாட்சி, கோபாலாச்சாரி, ஏ.அப்பாத்துரை, என்.சுப்பிரமணியன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

### கூறு 5: அசோகர் கால கல்வெட்டுகள்

மௌரியப் பேரரசை நிறுவியவர் சந்திரகுப்தர் ஆவார். பீகார் மற்றும் நேபாளத்தில் உள்ள லிச்சாவி மக்களைப் போன்ற ஒரு பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் மௌரியர்கள்.

சந்திரகுப்தன் சிறந்த படைத்தளபதியாகவும், அரசியல்வாதியாகவும் விளங்கினான். பரந்துகிடந்த நந்தப்பேரரசில் கலிங்க நாட்டைத் தவிர்த்து மற்ற நாடுகள் அனைத்தையும் தன் அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வந்தான். அத்தோடு மகா அலெக்சாந்தரின் தளபதிகளை விரட்டியத்து பஞ்சாப், வடமேற்கு பாகிஸ்தான், சிந்து ஆகிய நிலப் பகுதிகளைத் தன் நாட்டோடு இணைத்துக் கொண்டான். கி.மு. 305இல் அலெக்சாந்தரின் தளபதிகளில் ஒருவனான செலூகஸ் நிகேடாரின் படையெடுப்பை முடியறிடித்தான். செலூகஸ் நிகேடார் அலெக்சாந்தரின் இறப்புக்குப் பிறகு மேற்கு ஆசியாவின் தன்னிகரற்ற தலைவனாக விளங்கினான். சந்திரகுப்தனிடம் தோற்ற செலூகஸ் நிகேடார் அவனோடு திருமண உறவு வைத்துக் கொண்டு ஆப்கானிஸ்தான் மற்றும் பலூசிஸ்தான் நாடுகளில் சில பகுதிகளைச் சீதனமாகப் பெற்றான். ஆப்கானிஸ்தானின் பெரும்பகுதி மௌரியப் பேரரசோடு இருந்ததைச் சமீபத்தில் கந்தஹாருக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட அசோகனின் கல்வெட்டு சுட்டிக்காட்டுகிறது.

சந்திரகுப்தனுக்குப் பின் அவருடைய மகன் பிந்துசாரன் (தோரணமாக கி.மு. 300-272) ஆட்சிக் கட்டில் ஏறினான்.

கி.மு. 272ஆம் ஆண்டு பிந்துசாரன் இறந்த பிறகு ஆட்சிப் பொறுப்பு இளவரசனான அசோகனிடம் வந்தது. இருந்தபோதிலும் அரச குடும்பத்தினரிடையே நடந்த அதிகாரப் போட்டியில் அசோகனின் முடிசூட்டுவிழா நான்கு ஆண்டுகள் கழித்தே நடந்தது. கி.மு.269ஆம் ஆண்டை ஆட்சி ஆண்டாகக் கொண்டு கணக்கிட்டால் சுமார் 37 ஆண்டுகள் அசோகன் ஆட்சி நடத்தினான். தன் தந்தை மற்றும் தாத்தா காலத்தில் இருந்ததைவிட பல மடங்கு பரந்திருக்குமாறு அசோகன் தன் நாட்டின் நிலப்பரப்பை விரிவுபடுத்தினான். கலிங்கநாட்டைத் தன் நாட்டோடு இணைத்தான். ஆந்திரத்தின் கடற்கரைப் பகுதியும் ஓரிஸ்ஸாவும் அசோகனின் பேரரசுக்குள் வந்தன. சென்னைக்கு அருகிலிருந்து காஞ்சிபுரம் அசோகப் பேரரசின்


ஒரு பகுதியாக விளங்கியதை யுவான் சுவாங் எழுதிய கி.பி.7ஆம் நூற்றாண்டுக் குறிப்பு தெரிவிக்கிறது.

அசோகனின் கல்வெட்டுகளை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். அவை:

1. பாறைகளில் செதுக்கப்பட்ட கல்வெட்டுகள்
2. கல்தூண்களில் வெட்டப்பட்ட கல்வெட்டுகள்

பாறைக் கல்வெட்டுகளை மேலும் மூன்று சிறு பிரிவாகப் பிரிக்கலாம். அவை:

1. குறும்பாறைக் கட்டளைகள்
2. பாறைக் கட்டளைகள்
3. குகைக் கல்வெட்டுகள்



**ரும்மிந்தெய் தூணில் உள்ள பிராமிக் கல்வெட்டு**

அதுபோலவே, தூண்கல்வெட்டுகளையும் மூன்று சிறு பிரிவாகப் பிரிக்கலாம். அவை:

1. குறும்தூண் கட்டளைக் கல்வெட்டுகள்
2. தூண் கல்வெட்டுகள்
3. தூண் கட்டளைக் கல்வெட்டுகள்

குறிப்பு

குறிப்பு

பாறைக் கட்டளைக் கல்வெட்டு VIன் படி தான் ஆட்சிக் கட்டில் ஏறி பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு (கி.மு.269), அதாவது பதின்மூன்றாவது ஆட்சி ஆண்டில் (கி.மு.257) புத்தமத தர்ம நெறிகள் தொடர்பான ஆணைகளை அசோகன் வெளியிடத் தொடங்கினான். இவற்றில் குறும்பாறைக் கல்வெட்டுகளே அசோகன் முதன்முதலில் வெளியிட்டது ஆகும். ஆதன் பிறகே பாறைக் கல்வெட்டுகள் வெளியிடப்பட்டன.

**குறும்பாறைக் கட்டளைக் கல்வெட்டு :** பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட அசோகனின் பதினான்கு கல்வெட்டுகளில் சேராத மற்ற கவ்வெட்டுகள் கீழ்க்கண்ட இடங்களில் காணப்பட்டன.

1.உத்திரப்பிரதேசத்தின் மிர்சாபூர் மாவட்டத்தில் உள்ள அஃரௌரா

2.டெல்லியைச் சேர்ந்த பகாபூர்

3.இராஜஸ்தானின் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் உள்ள பைரத்

4.கர்நாடகத்தின் ரெய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள கொப்பலுக்கு அருகில் உள்ள கவிமத்

5.மத்தியபிரதேசத்தின் தாடியா மாவட்டத்தில் உள்ள குஜ்ஜரா

6.கர்நாடகத்தின் ரெய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள மஸ்கி

7.கர்நாடகத்தின் ரெய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள கவிமத்துக்கு அருகில் உள்ள பல்கிகுண்டு

8.மத்தியபிரதேசத்தின் ஜபல்பூர் மாவட்டத்தில் உள்ள ரூப்நாத்

9.பீகாரின் ஷகாபாத் மாவட்டத்தில் உள்ள சஹஸ்ரம்

இந்த ஆவணம் பொதுவாகக் குறும்பாறைக் கட்டளைக் கல்வெட்டு 1 என்று அழைக்கப்படுகிறது.

**பாறைக் கல்வெட்டுகள் :** அசோகனின் பதினான்கு பாறைக் கல்வெட்டுகள் ஒரு தொகுதியாகக் கீழ்க்கண்ட இடங்களில் கண்டெடுக்கப்பட்டன.

1. ஆந்திரத்தின் கர்னூல் மாவட்டத்தில் உள்ள எர்ராகுடி
2. குஜராத்தின் ஜுனாகட்டுக்கு அருகில் உள்ள கிர்நார்
3. உத்திரபிரதேசத்தின் டேராடூன் மாவட்டத்தில் உள்ள கல்சி.
4. ஆப்கானிஸ்தானின் தற்போதைய காந்தகாருக்கு அருகில் உள்ள பழைய காந்தகார்.
5. பாகிஸ்தானின் ஹஸ்ரா மாவட்டத்தில் உள்ள மன்சேரா
6. பாகிஸ்தானின் பெஷாவர் மாவட்டத்தில் உள்ள ஷபாஸ்கரி
7. மகாராஷ்டிரத்தின் தானா மாவட்டத்தில் உள்ள சொபாரா.

டெல்லி-தோப்ரா, டெல்லி-மீரட் லௌரியா- அரராஜ், லௌரியா-நந்தன்கர், ராம்பூர்வா ஆகிய இடங்களில் காணப்படும் தூண் ஆவணங்களில் உள்ள வாசகங்களில் டெல்லி தோப்ரா தூண் கல்வெட்டு செய்தி வருமாறு.

குறிப்பு

இறைவனின் அருளுக்குப் பாத்திரமான பிரியதர்சி மன்னன் கூறியது : 'நல்லதைச் செய்யவே ஒருவனுக்குக் கண் படைக்கப்பட்டுள்ளது. எனவே, நான் நல்லதைச் செய்துள்ளேன் என்று கூறலாம். ஆனால், அதே சமயம் பாவம் செய்த ஒருவர், நான் பாவம் செய்துவிட்டேன். இதுதான் பாவச்செயல் என்று கூறி வருந்துவதில்லை. சுயபரிசோதனை செய்துகொள்வது என்பது கடினமான செயலாகும். வன்முறை, கொடுமை, கோபம், ஆடம்பரம், பொறாமை போன்றவை பாவம் செய்யத் தூண்டும். எனவே. இந்தத் தீயக் குணங்களால் நான் என்னை அழித்துக் கொள்ள விரும்பவில்லை என்று ஆய்ந்துணர வேண்டும்.

டெல்லியில் உள்ள தோப்ரா தூணில் மட்டும் தற்போது காணப்படும் கல்வெட்டின் செய்திகளில் சில.

சாலைகளின் ஓரத்தில் ஆல மரங்களை நடக்கட்டளையிட்டுள்ளேன். இந்த மரங்கள் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் நிழல் அளிக்கும். இதே நோக்கத்தோடு மாந்தோப்புகளை அமைக்கக் கட்டளையிட்டுள்ளேன். எட்டு குரோசா தூரத்துக்கு ஒரு கிணறு தோண்டுமாறு கட்டளையிட்டுள்ளேன். அத்தோடு ஓய்விடங்களையும் அமைக்கச் சொல்லியுள்ளேன். மேலும், மனிதர்களும் விலங்குகளும் தாகத்தைத் தணித்துக் கொள்ள நீர்த்தொட்டிகளைக் கட்டச் சொல்லியுள்ளேன். இவ்வாறு நான் செய்துதரும் வசதிகளெல்லாம் ஒரு தூசு என்று கூறலாம். என்னைப் போலவே முற்காலத்தில் இருந்த அரசர்களும் இது போன்ற வசதிகளை அமைத்துக் கொடுத்தார்கள். ஆனால், மக்கள் தர்ம வழியில் நடக்க வேண்டும் என்பதற்காகவே, இந்த வசதிகளை நான் செய்து தந்துள்ளேன்.

மக்களிடம் தர்ம நெறி பரவ இரண்டு வழிகளைக் கையாண்டேன். முதலாவதாகத் தர்ம நெறிகளின்படி மக்கள் நடக்க வேண்டும் என்று கட்டுப்பாடு விதித்தேன். இரண்டாவதாக அவ்வாறு மக்கள் நடக்க வேண்டும் என்று ஊக்குவித்தேன். நான் கையாண்ட இரண்டு வழிகளில் கட்டுப்பாடு விதித்தது எந்தவித மாற்றத்தையும் மக்களிடம் விளைவிக்கவில்லை. அதே சமயம் புத்த தர்மத்தைப் பின்பற்றுமாறு ஊக்குவித்தது குறிப்பிடத்தக்க அளவுக்கு மக்களிடம் மாற்றத்தை ஏற்படுத்தியது. நான் கடைப்பிடித்த சில நெறிமுறைகளையே மக்களிடம் கட்டுப்பாடுகளாக விதித்தேன். அதாவது விலங்குகளைக் கொல்வதைத் தவிர்த்தல் வேட்டையாடுவதைத் தவிர்த்தல் போன்ற தர்ம நெறி சார்ந்த கட்டுப்பாடுகளையே நான் விதித்தேன்.

என்னுடைய மகன்களும் பேரன்களும் ஆட்சியில் உள்ள வரையிலும் நிலவும் சூரியனும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் வரையிலும் மக்கள் அவற்றை ஏற்றுக் கொள்ளும் வரையிலும் தர்மநெறிகள் பின்பற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடே இந்தக் கல் ஆவணம் தயாரிக்கப்பட்டது. நான் முடிசூட்டிக்

குறிப்பு

கொண்ட இருப்பதேழு ஆண்டுகளுக்குப் பிறகு தர்ம நெறியைப் போதிக்கும் இந்த ஆவணம் எழுதுமாறு செய்யப்பட்டது.

தர்ம நெறிகளைப் போதிக்கும் இந்த ஆவணம் கற்றூண்களிலும் கற்பலகைகளிலும் பொறிக்கப்பட வேண்டும். எங்கெல்லாம் பொறிக்க முடியுமோ அங்கெல்லாம் இந்த ஆவணம் பொறிக்கப்படுவதன் மூலம் இந்த ஆவணம் நீண்ட காலத்திற்கு நிலைத்துக் காணப்படும்' என்றார்.

அசோகர், தனது ஆட்சிக்காலத்தின் இறுதிப் பகுதியில் புத்தமதத்தைத் தழுவினார். அம்மதத்தின் கருத்துக்களைப் பாறைச்சரிவுகளில் எழுதி வைத்தார். இவரது கால எழுத்துக்கள் தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியா மட்டுமின்றி, இலங்கை வரை காணப்படுகின்றன. அசோகர் கல்வெட்டின் எழுத்து வடிவத்தைப் 'பிராமி' எழுத்து என்று அழைக்ககின்றனர். பிராமி எழுத்துக்கள் வடமொழியினுள்ள வல்லின எழுத்துக்களுக்கான வர்க்கக் குறியீடுகளைப் பெற்றுள்ளன. இவரது கல்வெட்டுகள் மிகுதியும் புத்தமதக் கருத்துக்களைச் சுமந்தவையாக இருக்கின்றன. மாறாக இரண்டாவது பாறைக் கல்வெட்டும், 13ஆவது பாறைக் கல்வெட்டும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றன. அவற்றுள் தனது ஆட்சிக்கு உட்படாத நாடுகளானச் சேர, சோழ, பாண்டிய, கேரளபுத்திரர், சத்தியபுத்திரர், இலங்கை ஆகிய நாடுகளைக் குறித்துள்ளார். இவர்கள் யாவரும் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### கூறு 5: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. மௌரிய பேரரசை நிறுவியவர் யார்?

   சந்திரகுப்தர்

2. செலூகஸ் நிகேடார் யார்?

   அலெக்சாந்தரின் தளபதிகளுள் ஒருவன்

3. சந்திரகுப்தரின் மகன் பெயரென்ன? பிந்துசாரன்

4. பிந்துசாரனுக்கு பின் அரியணையேறியது யார்?

   அசோகன்

5. அசோகரின் கல்வெட்டுகளை எங்ஙனம் பிரிக்கலாம்?

   1. பாறைகளில் செதுக்கப் பெற்றவை
   2. கல்தூண்களில் செதுக்கப் பெற்றவை

6. அசோகரின் தூண் கல்வெட்டுகள் உள்ள இடங்களில் சிலவற்றைக் குறிப்பிடுக.

   1. டெல்லி-தோப்ரா, 2. டெல்லி-மீரட், 3. லௌரியா-அரராஜ்

   4. லௌரியா-நந்தன்கர், ராம்பூர்வா

### II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)

7. மௌரியப் பேரரசின் தோற்றம் பற்றி எழுதுக.

   (தொடக்கம் முதல் அசோகர் அரியணையேறும் செய்தி வரை எழுதுக.)

8. அசோகரின் வருகைக்கு பின் இயற்றப் பெற்ற கல்வெட்டுகள் பற்றி விவரி?

(குறும்பாறை – தூண் கல்வெட்டுகள் ஆகியவை)

9. அசோகா் கல்வெட்டுகள் உணா்த்தும் செய்தியை விவரி?

(தூண் கல்வெட்டுகளும், பாறை கல்வெட்டுகளும் தரும் செய்திகளை விவரித்து எழுத வேண்டும்).

குறிப்பு

**III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)**

10. இந்திய அளவில் அசோகா் கல்வெட்டுகள் பெறும் சிறப்பை விளக்குக.

(ஐந்து மதிப்பெண் வினாக்களை குறுந்தலைப்புகளாக மாற்றி சுருக்கி எழுதுக.)

### கூறு 6: தமிழக கல்வெட்டுகளின் பொதுத் தன்மை

இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில்தான் பேரளவில் வெட்டெழுத்துக்கள் உள்ளன. இந்திய வரலாற்றை உருவாக்க நமக்குத் கிடைத்துள்ள சான்றுகளில் இதுவே முதன்மையானது. பெரும்பாலான கல்வெட்டுகள் மன்னன் ஆணைகளையும் அவன் திருக்கோயில்களுக்கு வழங்கிய அறக்கொடைகளையும் கூறுகின்றன. சிலவற்றில் வேந்தனது வெற்றிகளும், விருதுப் பெயா்களும் மக்களுக்கு வழங்கிய உரிமைகளும், சலுகைகளும், கட்டிய திருக்கோயில்களும் மண்டபங்களும், வெட்டிய குளங்களும், விதித்த வரிகளும், வரிச் சலுகைகளும் நீதி, நிா்வாகத்திறன், அரசு அதிகாரிகள், குற்றங்களும் அதற்கானத் தண்டனைகளும், பட்டங்களும் பெயா்களும், ஆவணப்பதிவு முறை, போர்கள், ஆண்டுகளைக் கணக்கிடும் முறை, பழக்க வழக்கங்கள், உணவுமுறை, நீா் மேலாண்மை, மருத்துவமும் கல்வியும், கல்வெட்டால் அறியலாகும் சமயப்பொறை, ஊா், பேர், வாணிகம், செல்வவளம், அளவுமுறைகள், இலக்கியங்கள், கலைகள் உள்ளிட்ட அரிய செய்திகளைத் தமிழகக் கல்வெட்டுகள் சுமந்துள்ளன. கல்லில் பொறிக்கப்பட்ட எழுத்துகள் கல்வெட்டு என அழைக்கப்பட்டதைப் போல செப்புத் தகட்டில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள், செப்பேடு அல்லது செப்பேட்டுச் சாசனம் என அழைக்கப்படுகிறது. கல்வெட்டுகளும் செப்பேடுகளும் வரலாற்றுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை தொல்லியலாா் கல்வெட்டு செப்பேடு இரண்டையும் ஒன்றாகவே கணக்கில் கொள்வா். அவ்வகையில் செப்பேடு பற்றியும் அறிதல் அவசியம். ஏனெனில் தமிழகத்தில் முதன்முதலில் செப்பேடுகள் தொடா்பாகத் தமிழில் அறிஞா் திரு.நா. சுப்பிரமணியம் கட்டுரை எழுதியுள்ளாா். தமிழக வரலாறு என்ற குழந்தைக்குத் தாயாகக் கல்வெட்டும், தந்தையாகச் செப்பேடும் விளங்குகிறது.

**செப்பேடுகள்**

செம்பு அல்லது தாம்பிரத்தில் எழுதப்பட்ட ஆவணங்கள் பாரத நாடெங்கும் கண்டுபிடிக்கப்பட்டாலும் வட இந்தியாவைக் காட்டிலும் தென்னிந்தியாவில் மிகுதியாகக் கண்டறியப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில் தமிழகத்தில் தான் பிற

மாநிலங்களைக் காட்டிலும் எண்ணிக்கையில் மிகுதியான செப்பாலான ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

குறிப்பு

**தொன்மை வாய்ந்த செப்பேடு**

தமிழ் மொழியில் நிறைய செப்பேடுகள் இருப்பினும் வட இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட சோகௌராச் செப்பேடே தொன்மை வாய்ந்த செப்பேடாகக் கருதப்படுகிறது. இச்செப்பேடு பற்றி எபிகிராபிகா இண்டிகா 22ஆம் தொகுதி மூலம் அறிய முடிகிறது. சோகௌரா என்ற இடத்தில் கிடைத்த செப்பேடு நான்கே வரிகளைக் கொண்டது. பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த இதில் உணவு தானியம், கால்நடைத் தீவனம், வைக்கோல் ஆகியவை சேமித்து வைப்பதற்கு இரண்டு கொட்டாரங்கள் நிறுவப்பெற்ற செய்தி உள்ளதாகத் தி.நா.சுப்பிரமணியம் கூறுகிறார்.

**செப்பேடுகளின் மொழி அமைப்பு முறை**

இருமொழிகள் கூடிய சமஸ்கிருத, தமிழ்ச் செப்பேடுகள், சமஸ்கிருத செப்பேடுகள், சமஸ்கிருத, கன்னட, தெலுங்கு செப்பேடுகள், தமிழ்ச் செப்பேடுகள், பெர்ஷியன் மொழிச் செப்பேடுகள், மராத்திய செப்பேடுகள், பன்மொழிச் செப்பேடுகள் என மொழி அடிப்படையில் அறிவதோடு, அச்செப்பேடுகள் பல்லவர், பாண்டியர், சோழர், ஆய்மன்னர், சேரர், விஜயநகர மன்னர், சுல்தான், நாயக்கர், ஜமீன்தார் ஆகியவர்களால் வெளியிடப்பட்டுள்ளன என்பதையும் அறிதல் வேண்டும். இச்செப்பேடுகள் தொல்லியல்துறை மற்றும் அருங்காட்சியகம், கோயில்கள், மடங்கள், சமூக நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமும் இருக்கின்றன.

**தமிழில் தொன்மைச் செப்பேடு**

தமிழகத்தில் தமிழ்மொழியில் இருக்கும் தொன்மை வாய்ந்த செப்பேடு, சிம்ம வர்மனுடைய பள்ளன்கோயில் செப்பேடு ஆகும். இச்செப்பேட்டின் முதல் பகுதி வடமொழி கிரந்தத்தில் அமைந்துள்ளது. ஏறக்குறைய கி.பி. 550இல் எழுதப்பட்டது. பாண்டிய மன்னர்கள் வெளியிட்ட செப்பேடுகளில் வேள்விக்குடிச் செப்பேடு பழைமை வாய்ந்த செப்பேடு எனலாம். இச்செப்பேட்டில் சங்ககாலப் பாண்டிய மன்னன் பெருவழுதி பிராமணர்க்குத் தானம் வழங்கி ஆவணம் வழங்கிய விபரம் கூறப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தைக் காண்பித்தே நற்சிங்கன் மீண்டும் வேள்விக்குடி செப்பேடு பெற்றுள்ளான். எனவே பெருவழுதி மன்னன் வழங்கிய ஆணம் செப்பேடாக இருக்கலாம். வேள்விக்குடிச் செப்பேடு கி.பி.768இல் வழங்கப்பட்டது. இது இருமொழி ஆவணமாகும்.

செப்பேடுகள் மிகுதியாக தோன்றிய காலம்

தொடக்க கால மன்னர்கள் கல்வெட்டுகளை வெட்டி வைத்த அளவிற்குச் செப்பேடுகளை வெளியிடவில்லை. எனினும் பிற்காலச் சோழர், பாண்டியர் வீழ்ச்சிக்குப் பின் நாடாண்ட விஜயநகரப் பேரரசர்களும் அவர்களுக்குக் கீழிருந்து தஞ்சை, மதுரையை ஆண்ட நாயக்கர்களும், மதுரை நாயக்கர்களுக்குக் கீழிருந்தாண்ட

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களும், அறந்தாங்கித் தொண்டைமான்களும், புதுக்கோட்டைத் தொண்டை மான்களும், மராத்தியர்களும், ஜமீன்தார்களும், இனக்குழுத் தலைவர்களும் மிகுதியான செப்பேடுகளை வெளியிட்டுள்ளார்கள். கோயில்களுக்கும், பிராமணர்களுக்கும், மடங்களுக்கும் நிலங்களை வழங்கி உள்ளார்கள். மகமை என்ற பெயரில் பொதுமக்களிடமிருந்து கோயில்களுக்கும் மடங்களுக்கும் வருவாய் கிடைக்க ஏதுவாக ஆணை பிறப்பித்துச் செப்பேடுகளை வழங்கி உள்ளனர். இதுவரை ஏறக்குறைய 600 செப்பேடுகள் கண்டறியப்பட்டுள்ளன. எனினும் பாதிக்கு மேல் இன்னமும் பதிப்பிக்கப்படவில்லை.

**செப்பேடுகளில் இடம் பெறும் முத்திரைகள்**

பல்லவர், பாண்டியர், சோழர் வெளியிட்ட செப்பேடுகள் பெரும்பாலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஏடுகளாக இருப்பதால் ஏடுகளை ஒன்றாகச் சேர்த்து வளையத்துடன் வெளியிட்டுள்ளார். வளையத்தில் அரசின் சின்னம் அல்லது முத்திரை பதிப்பிக்கப்பட்டது. செப்பேடுகள் இடம் விட்டு இடம், நாடு விட்டு நாடு கூட எடுத்துச் செல்லப்படுவதுண்டு. எனினும் அதன் செய்தி அடிப்படையிலும் இதர ஆதாரங்களோடும் இணைத்து வரலாற்றை அறிய முடியும். உதாரணமாக, பரங்கியரும், டச்சுக்காரரும், பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும் இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் ஆட்சியில் இருந்தபோது ஏராளமான பழம்பொருட்களைத் தத்தம் நாடுகளுக்குக், கொண்டு சென்றனர். செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் ஆகியவற்றை இவர்கள் கொண்டு சென்று தங்கள் நாட்டு அருங்காட்சியகத்தில் வைத்துள்ளனர். ஹாலந்து நாட்டில் உள்ள லெய்டன் நகரில் இராஜராஜன் செப்பேடுகளுடன், குலோத்துங்கன் செப்பேடுகளும் உள்ளன. இவைகளை முறையே பெரிய லெய்டன் செப்பேடுகள் என்றும், சிறிய லெய்டன் செப்பேடுகள் என்றும் அழைக்கின்றனர். நாகப்பட்டினம் அருகில் உள்ள ஆணைமங்கலம் என்ற ஊரில் இருந்து மேற்கண்ட இரு தொகுதி செப்பேடுகளும் கிடைத்ததால் ஆனைமங்கலச் செப்பேடுகள் என்றும் இவைகளை அழைப்பர்.

குறிப்பு

**சாசனங்களில் செப்பேட்டின் அமைப்பு முறை**

**சாசனம் (உத்தரவு)**

ஓலை (முதல் பிரதி)
கல்வெட்டு (இரண்டாம் பிரதி)
செப்பேடு (மூன்றாம் பிரதி)

**செப்பேடுகளின் தொடக்கத்தில் வருபவை**

பிரசஸ்தி → (சமஸ்கிருத ஸ்லோகம்) → (பல்லவர், பாண்டியர் சோழர், விஜய நகர மன்னர்)

பிரசஸ்திசேஷம் → தமிழ்க்கவிதை → பாண்டியர் செப்பேடுகளில மட்டும் வரும் அதுவும் பிரசஸ்திக்குப் பின் வரும்

மெய்க்கீர்த்தி → தமிழ்க்கவிதை → இராசராசசோழனின் காலம்தொடங்கி வருபவை

புகழ்ச்சிமொழிகள் → பிற்காலம் நாயக்கர் மற்றும் சிற்றரசர்கள்

**செப்பேட்டின் அமைப்பு**

மங்கலச் சொல
பிரசஸ்தி
மெய்க் கீர்த்தி
ஆட்சி ஆண்டு
தான விவரம்
எல்லை கிளவி
ஓம் பெயர்
ஸ்தபதி
படைக் யின்

**செப்பேட்டின் வடிவங்கள்**

ஓலை வடிவில் நீள்வாக்கில் இருப்பவை
ஓலை வடிவில் அரசமுத்திரையுடன் இருப்பவை
புத்தக வடிவில் (செவ்வகம்) இருப்பவை
புத்தக வடிவில் அரச முத்திரை வளையத்துடன் இருப்பவை
சதுர வடிவில் இருப்பவை
அரைவட்ட வடிவில் இருப்பவை
வித்தியாசமானவை (அரித்துவார மங்கலச் செப்பேடுகள் போன்றவை)

**செப்பேடுகளைத் தயாரிக்கும் முறை**

செப்பேடுகள் தயாரிக்கும் முறையை அறிஞர் தி.நா. சுப்பிரமணியம் தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் தொகுதி மூன்றில் பகுதி இரண்டின் மூலம் விளக்கியுள்ளார். முதலில் ஏடுகளைக் காய்ச்சி வேண்டிய உருவத்தில் அடித்து வைத்துக் கொள்வர். பிறகு அதன்மீது எழுத்துக்களைப் பொறிப்பார்கள். பளிச்சென்று தெரியும் ஏதாவது ஒரு பொருளினால் ஏட்டிலே எழுதுவார்கள். அவர்கள் நன்கு படித்தவராக இருப்பர். பிற்காலச் சோழர் காலத்திற்குப் பிறகு செப்பேடுகளை எழுதியவர்கள் பலரும் தமிழில் புலமையுடையவர்கள் என்று கூற முடியாது. ஆகவே எழுத்துப் பிழைகளும் வாக்கியப் பிழைகளும் செப்பேடுகளில் காணப்படுகின்றன. ஏட்டில் எழுதிய பிறகு உளிபோன்ற கூரிய ஆயுதத்தால் எழுத்தக்களை ஏட்டில் ஆசாரி செதுக்கி அமைப்பான். செப்பேடுகளில் அதிக அளவு பிழைகள் இருப்பின் அந்த ஏட்டின் அப்பகுதியை மறுபடியும் காய்ச்சி அடித்துப் பழைய எழுத்துகளை அழித்துவிட்டுப் புதிய எழுத்துக்களை எழுதுவார்கள்.

எழுத வேண்டிய சொற்களை முதலில் மண்ணிலே சமம் செய்த தளத்தில் கூரிய எழுத்தாணியால் எழுதி, பிறகு செம்பை உருக்கி அதன் மீது ஊற்றித் தயாரித்த செப்பேடு வார்ப்புச் செப்பேடு என்றழைக்கப்படும். (எ.கா) சோகௌரா.

செப்பேட்டு வாசகத்தை எழுதுபவர் நெட்டெழுத்து என்றும் செப்பேட்டை கூரிய உளியில் பொறிப்பவர் வெட்டெழுத்து என்றும் பிற்காலச் செப்பேடுகளில் கூறப்படுகின்றனர். பல்லவர் காலம் தெடங்கியே தமிழகத்தில் செப்பேடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**பல்லவர் செப்பேடுகள்**

பிராகிருத மொழிச் செப்பேடுகள் வழி அறியலாகும். பல்லவ மன்னர்கள், இடைக்கால பல்லவ மன்னர்கள் மற்றும் பிற்காலப் பல்லவ மன்னர்கள் யாவர் என்பதனையும் கீழ்வருமாறு அறியலாம்.

**பிராகிருதமொழிச் செப்பேடு**

↓

**சிம்மவர்மன்**

↓

குறிப்பு

குறிப்பு

**சிவஸ்கந்தவா்மன்**

விஷ்ணுகோபன் பப்பதேவன்

(சமுத்திரகுப்தனால் தோற்கடிக்கப்பட்ட விஷ்ணுகோபன்)

காலம் கி.பி. 380

புத்தவா்மன்

புத்தரங்குரன்

(இவனுடைய தாய் சாருதேவி)

**இடைக்காலப் பல்லவ மன்னா்கள்**

| **மன்னா்கள்** | **செப்பேடுகள்** |
|---|---|
| விஜயஸ்கந்தவா்மன் | ஓங்கோடு செப்பேடு |
| சிம்மவா்மன் | வேசந்தா, நெடுந்தராய், உருவப்பள்ளி செப்பேடுகள் |
| இளவரசன் விஷ்ணுகோபா வா்மனின் மகன் சிம்மவா்மன் | தர்சி, சிக்மகளுர், மிகிரா, மங்களுர் விழிவெட்டி, ஓங்கோடு சாசனங்கள் |
| காலம் ஆட்சியாண்டு தெரியாதவை | சுரா, செந்தலூர், ஹொசக் கோட்டை சாசனங்கள். |

**பிற்காலப் பல்லவா்கள்**

**சிம்மவர்மன் (525 – 560)**

சிம்ம விஷ்ணு பீமவர்மன்

(550-590)

புத்தவர்மன்

முதலாம் மகேந்திரவர்மன்

(590-630) ஆதித்தவர்மன

முதலாம் நரசிம்மவர்மன் கோவிந்தவர்மன்

(630-668)

இரண்டாம் மகேந்திரவர்மன் இரண்ய வர்மன்

(668-670)

இரண்டாம் நந்திவர்மன்

என்ற பல்லவ மல்லன்

(731-796)

முதலாம் பரமேஸ்வரன்

(670-700) தந்திவர்மன் (790-796)

இரண்டாம் நரசிம்மவர்மன் மூன்றாம் நந்திவர்மன்

(847-869)

என்ற இராஜ சிம்மன் நிருபதுங்கவர்மன்(865-906)

(700-728)

கம்பவர்மன் (868-900)

(பூசலார் நாயனார்காலத்தவன்)

மூன்றாம் மகேந்திரவர்மன் அபராஜிதன்

(728-731) (870-890)

சித்திரமாயன்

(ஸ்கந்த சிஷ்யன்? காலம் இல்லை

குறிப்பு

குறிப்பு

## பல்லவர் செப்பேடுகள்

| வ.எ. | செப்பேடு கிடைத்த இடம் | காலம் | செப்பேட்டால் அறியலாகும் மன்னன் |
|---|---|---|---|
| 1. | மயிதவோலு | கி.பி. 4-5 | சிவஸ்கந்தவர்மன் |
| 2. | ஹீரஹடஹள்ளி | கி.பி. 4-5 | --- |
| 3. | குணபதேயம் | கி.பி. 4- | சாருதேவி |
| 4. | பள்ளன்கோயில் | கி.பி. 525-50 | சிம்மவர்மன் |
| 5. | கூரம் | 22.12.68 | பரமேஸ்வர்மன் |
| 6. | உன்னகுரவயம் | கி.பி. 688 | ---- |
| 7. | ரேயூரு | கி.பி. 712 | இராஜசிம்மன் |
| 8. | உதயேந்திரம்-1 | கி.பி. 752 | இரண்டாம் நந்திவர்மன் |
| 9. | காசாக்குடி | கி.பி. 753 | இரண்டாம் நந்திவர்மன் |
| 10. | புல்லூர் | கி.பி. 764 | இரண்டாம் நந்திவர்மன் |
| 11. | தண்டந்தோட்டம் | கி.பி. 713-96 | ---- |
| 12. | பட்டத்தாள் மங்கலம் | கி.பி. 692 | இரண்டாம் நந்திவர்மன் |
| 13. | வேலூர்ப் பாளையம் | கி.பி. 847-869 | மூன்றாம் நந்திவர்மன் |
| 14. | பாகூர் | கி.பி. 873 | நிருபதுங்க வர்மன் |
| 15. | சித்தூர் | கி.பி. 873 | நிருபதுங்க வர்மன் |
| 16. | திருத்தணி வேலஞ்சேரி | கி.பி. 879 | அபராஜிதன் |
| 17. | இராயக்கோட்டை | கி.பி. 713-728 | ஸ்கந்தசி‘யன் |
| 18. | உதயேந்திரம்-2 | கி.பி. 10 | --- |
| 19. | சுரா | கி.பி. 7 | சிம்மவர்மன் |
| 20. | ஓங்கோடு-1 | கி.பி. 7 | விஜயஸ் கந்தவர்மன் |
| 21. | ஓங்கோடு-2 | கி.பி. 5-6 | சிம்மவர்மன் |
| 22. | விழவெட்டி | 10ஆம் ஆட்சிஆண்டு | சிம்மவர்மன் |
| 23. | செந்தலூர் | கி.பி. 4-5 2ஆம் ஆட்சி ஆண்டு | குமாரவி‘ணு |
| 24. | பீகிரம் | கி.பி. 5-6 5ஆம் | சிம்மவர்மன் |
| 25. | மாங்களூர் | கி.பி. 5-6 8ஆம் ஆட்சி ஆண்டு | சிம்மவர்மன |
| 26. | நெடுங்கராயம் | கி.பி. 5-6 12ஆம் ஆட்சி ஆண்டு | சிம்மவர்மன் |
| 27. | வேசந்த் | 19ஆம் ஆட்சி ஆண்டு | சிம்மவர்மன் |
| 28. | உருவப்பள்ளி | கி.பி. 5, 11ஆம் ஆட்சியாண்டு | வி‘ணுகோபன் |
| 29. | ஹொசக்கோட்டை | கி.பி. 6 | சிம்மவி‘ணுதாய் |
| 30. | ஹால்திபூர் | கி.பி. 6 | கோபாலதேவன் பல்லவசிற்றரசன் |
| 31. | ஹல்லகெரெ | கி.பி. 713 | சிவமாறன் கங்கமன்னன் |
| 32. | தர்சி | கி.பி. 4-5 | வீர கூர்ச்சரவர்மன |

குறிப்பு

**பாண்டியர் கால செப்பேடுகள்**

பாண்டியர் கால செப்பேடுகளில் பாண்டிய மன்னர்களின் பெயர்களை வேள்விக்குடிச் செப்பேடும் சிவகாசி செப்பேடும் கூறுகின்றன.

**வேள்விக் குடிச் செப்பேடுகள் கூறும் பாண்டிய மன்னர்களின் பரம்பரை**

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

↓

மன்னர் பலருண்டு செப்பேட்டிவ் இல்லை

↓

பாண்டிய நாட்டில் சிறிது காலம் களப்பிரர் ஆட்சி

↓

1. பாண்டியன் கடுங்கோன் (கி.பி. 550இல் பட்டத்திற்கு வந்திருக்கலாம்)

↓

2. மாறவர்மன் (அவனி சூளாமணி)

↓

3. செழியன் சேந்தன்

↓

4. மாறவர்மன் (நின்ற சீர் நெடுமாறன்) கி.பி. 624-674

↓

5. கோச்சடையன் ரணதீரன் கி.பி. 674-725

↓

6. இராசசிம்மன் ஸ்ரீ மாறன் கி.பி. 725-768

↓

7. ஜடிலபராந்தகன் நெடுஞ்சடையன் கி.பி. 768-811 (முதல் வரகுணன்)

**சிவகாசிச் செப்பேடு கூறும் வீரபாண்டியனின் முன்னோர்**

தீவிர கோபன்

↓

ஸ்ரீ வல்லபன்

↓

மானாகுலாசலன்

↓

மானாபரணன்

(கேரள மன்னன் ரவியின் மகளை மணந்தான் தென்னவர்கோன் ராசமல்லன் போன்ற பட்டங்கள் உண்டு).

சுந்தரபாண்டியன் (அறிஞர்களின் புகழிடம்)

வீரபாண்டியன் (வீரகேரளன், விநயகஞ்சுகன், விசாலகலன்)

*Self-Instructional Material*

குறிப்பு

**பாண்டியர் செப்பேடுகள் (20)**

1. வேள்விக்குடிச் செப்பேடுகள் கி.பி. 770
2. ஸ்ரீவரமங்கலச் செப்பேடுகள் கி.பி. 785
3. சின்னமனூர் சிறிய செப்பேடுகள் கி.பி. 768-811
4. சின்னமனூர் பெரிய செப்பேடுகள் கி.பி. 916
5. சிவகாசிச் செப்பேடுகள் கி.பி. 940
6. தளவாய்புரச் செப்பேடுகள் கி.பி. 911
7. தளவாய் அக்ரஹாரம் செப்பேடுகள்-1 கி.பி. 1582
8. தளவாய் அக்ரஹாரம் செப்பேடுகள்-2 கி.பி. 1588
9. தளவாய் அக்ரஹாரம் செப்பேடுகள்-3 கி.பி. 1595
10. ஸ்ரீவில்லிபுத்தூர்ச் செப்பேடுகள் கி.பி. 1552
11. புதுக்கோட்டைச் செப்பேடுகள் கி.பி. 1563-1565
12. திருப்பூவணம் பெரிய செப்பேடுகள் கி.பி. 29.11.1214
13. திருப்பூவணம் தனிச்செப்பேடு கி.பி. 1200-01
14. குற்றாலம் செப்பேடு-1 கி.பி. 1754
15. குற்றாலம் செப்பேடு-2 கி.பி. 1754
16. ஏயூர் மங்கலம் செப்பேடு 02.02.1327
17. சாத்தக்குடிச் செப்பேடு கி.பி. 1359
18. சுந்தரபாண்டிய நல்லார்ச் செப்பேடு கி.பி. 1415
19. பிள்ளைவயல் செப்பேடு 05.11.1500
20. ஒக்கூர்ச் செப்பேடு கி.பி. 1513

சங்க காலம் தொடங்கி 18ஆம் நூற்றாண்டு வரை இடையிடையே சிறுசிறு காலம் தவிர்த்துப் பாண்டியர் வரலாறு மட்டுமே தொடர்ச்சியாக எழுத முடியும். குற்றாலம் கோயிலில் உள்ள சக ஆண்டு 1675 (கி.பி. 1754) இல் சீவல வரகுண பாண்டிய குலசேகர தேவதீஷதர் வழங்கிய செப்பேடே பாண்டியரின் இறுதிச் செப்பேடு பாண்டியர்களின் ஆட்சி சிறப்பைச் செப்பேடுகளின் வழி காணலாம்.

**1. வேள்விக்குடிச் செப்பேடு**

வேள்விக்குடிச் செப்பேட்டுத் தொகுதியில் வேள்விக்குடி என்றே எழுதப்பட்டுள்ளது. பாண்டியர் செப்பேடுகளில் தொன்மையானது மட்டுமின்றி மிகவும் முக்கியமானதும் ஆகும். இடைக்காலப் பாண்டிய மன்னர்களில் ஏழு மன்னர்களை இச்செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. அதில் சங்க கால மன்னான பெருவழுதியைப் பற்றியும் காணமுடிகிறது.

ஓலைச்சுவடி அமைப்பில் 7 ஏடுகளில் இச்செப்பேடு அமைந்துள்ளது. இச்செப்பேட்டின் இரண்டாம் பகுதி தமிழ்மொழியில் வட்டெழுத்தாக அமைந்துள்ளது.

**சோழர் கால செப்பேடுகள்**

குறிப்பு

திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் வடமொழிப் பகுதி வரலாற்றிற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. விசயாலய சோழனுக்கு முன்னும் பின்னுமாக 52 மன்னர்களை இச்சாசனம் குறிப்பிடுகிறது. இதில் புராணகால மன்னர்களின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. இச்செப்பேட்டின் வழி அறியலாகும் சோழ மன்னர்களின் பெயர்கள் வருமாறு:

1. சூரியன், 2. மனு, 3. இ≥வாகு, 4. விகுH, 5. காகுத்தன் அல்லது புரஞ்சயன், 6. ககஷிவத், 7. ஆரியமன், 8. ஆநலப்பிரதாபன், 9. வேனன், 10. பிரீது, 11. துந்துமாறன், 12.யுவனாசுவன், 13. மாந்தாத்ரி, 14. முசுகுந்தன், 15. வளவன் அல்லது வல்லபன், 16. பிரிதுல≥ர், 17. பார்திவ சூடாமணி, 18. தீர்க்க பாகு, 19. சந்திரஜித், 20. சங்கிருதி, 21. பஞ்சபன், 22.சத்தியவிரதன் (காசிராசனை வென்றவன்), 23. உசீநரன்-ருத்ரஜித், 24. சிபி, 25. மருத்தன், 26.துஷ்யந்தன், 27. பரதன் அல்லது துஷ்யாந்தி, 28. சோழவர்மன், 29. ராஜகேசரிவர்மன், 30. பரகேசரிவர்மன், 31. சித்ர ரதன், 32. சித்ராசுவன், 33. சித்ரதவனன், 34. சுரகுரு அல்லது மிருத்யுசித், 35. சித்ராரத்தன் (அ) வியாக்ரகேது, 36. நிரேந்திரபதி, 37. வசு அல்லது உபரீசரன், 38. விஸ்வஜித், 39. பெருநற்கிள்ளி, 40. கரிகாலன், 41. கோச்செங்கணான், 42. விஜயாலயன், 43. ஆதித்தன், 44. பராந்தகன், 45.இராசாதித்தன், 46. கண்டராதித்தன், 47. அரிஞ்சயன், 48. பராந்தகன் என்ற சுந்தரசோழன், 49.ஆதித்த கரிகாலன், 50. மதுராந்தகன் உத்தமசோழன், 51. இராசராசன், 52. இராசேந்திரசோழன். இச்சோழ மன்னர்களைப் பற்றியும் பிறசெய்திகளையும் சோழர்கால செப்பேடுகளின் வழி அறியலாம்.

**சோழர் செப்பேடுகள்**

1. உதயேந்திரம் செப்பேடுகள் - பராந்தகசோழன் - கி.பி. 922
2. திருத்தணி வேலஞ்சேரிச் செப்பேடுகள் - பராந்தகசோழன் - கி.பி. 932
3. அன்பில் செப்பேடுகள் - சுந்தரசோழன் - கி.பி. 961
4. பள்ளன் கோயில் செப்பேடுகள் - சுந்தரசோழன் - கி.பி. 957-970
5. திருச்செங்கோடு செப்பேடு-1- சுந்தரசோழன் - கி.பி. 961
6. திருச்செங்கோடு செப்பேடு-2- சுந்தரசோழன் - கி.பி. 967
7. சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள் -உத்தம சோழன்-கி.பி. 984
8. ஆனைமங்கலம் பெரிய செப்பேடுகள்-இராஜராஜன் -கி.பி.1006
9. திருவாலங்காட்டுச் செப்பேடுகள்-முதல் இராசேந்திரன் -கி.பி. 1018
10. கரந்தைச் செப்பேடுகள்-முதல் இராசேந்திரன் - கி.பி. 1018-19
11. எசாலம் செப்பேடுகள் -முதல் இராசேந்திரன் - கி.பி. 1020

குறிப்பு

12. திருக்களர்ச் செப்பேடுகள்-1- முதல் இராசேந்திரன்-கி.பி. 1040
13. திருக்களர்ச் செப்பேடுகள்-2- முதல் இராசாதிராசன் -கி.பி. 1049
14. சாரலாச் செப்பேடுகள் - வீர ராஜேந்திரன் - கி.பி. 1069
15. ஆனைமங்கலம் சிறிய செப்பேடுகள் -குலோத்தங்கன்-1-கி.பி. 1090
16. திருக்களர்ச் செப்பேடுகள்-3-குலோத்துங்கள் -1- கி.பி. 1098
17. திருக்களர்ச் செப்பேடுகள்-4- இரண்டாம் இராசாதிராசன்- கி.பி. 1164
18. திருக்களர்ச் செப்பேடுகள்-5-மூன்றாம் குலோத்துங்கள் - கி.பி. 1026.

சோழர்கள் வெளியிட்ட எல்லா செப்பேடுகளிலும் தமிழ் இடம் பெற்றுள்ளது. திருக்களர்ச் செப்பேடுகள் வடமொழி இல்லாமல் முழுவதும் தமிழில் அமைந்துள்ளன. சோழர்கள் தமிழுக்கு ஏற்றம் அளித்ததை இதனால் அறிய முடிகிறது.

சோழர்களின் செப்பேடுகளில் உதயேந்திரம் செப்பேடுகள் தொன்மையான செப்பேடுகள் எனலாம். மதுரை கொண்ட கோப்பரகேசரி பன்மரான முதலாம் பராந்தகன் இச்செப்பேடுகளை வெளியிட்டுள்ளான். பராந்தகனின் சிற்றரசனான கங்க மன்னன் இரண்டாம் பிருதிவிபதின் முன்னோர் வரிசையும் கூறப்பட்டுள்ளதால், பழைய வரலாற்றாசிரியர்கள் இச்செப்பேட்டுத் தொகுதியைக் கங்கர், செப்பேடாகக் கருதி வந்தனர். இராஜராஜன் காலந்தொட்டு சோழர் செப்பேடுகளில் மெய்க்கீர்த்திப் பகுதி இடம் பெறுகிறது. எனினும் சிலவற்றில் மெய்க்கீர்த்தி இல்லாமலும் உள்ளன.

**விஜயநகர மன்னர் (நாயக்கர்) செப்பேடுகள்**

விஜய நகர வேந்தர்கள் தமிழகத்தில் எண்ணற்ற கோவில்களுக்குத் தானங்கள் புரிந்து தமிழில் கல்வெட்டுக்களை வெட்டி வைத்துள்ளனர். தெலுங்கு, கன்னடம், வடமொழியிலும் கல்வெட்டுகள் வெட்டியிருப்பினும் தமிழ்க் கல்வெட்டுகளே மிகுதி. செப்பேடுகளைப் பொறுத்தவரை வடமொழி, கன்னடம், தெலுங்கு, தமிழ்மொழிகளில் வெளியிட்டுள்ளனர்.

விஜய நகர வேந்தர்களுடைய சிற்றரசர்களாகிய தஞ்சை நாயக்கர். மதுரை நாயக்கர், பிற்காலப் பாண்டியர் மற்றும் அறந்தாங்கித் தொண்டைமான்கள் போன்றோரின் செப்பேடுகளில் விஜயநகர வேந்தர் மெய்க்கீர்த்தியே முதலில் இடம் பெறும். மன்னர் வம்சாவளியுடன் செப்பேட்டின் கால விஜய நகர வேந்தரும் கூறப்பட்டிருப்பார். காஞ்சி சங்கராச்சாரியார் மடத்திலும் திருவாடுதுறை ஆதின மடத்திலும் திருப்பனந்தாள் காசிமடத்திலும் திருவரங்கக் கோயிலிலும் தனி நபர் சிலரிடமும் விஜயநகர வேந்தர் செப்பேடுகள் உள்ளன. பெரும்பாலும் நந்தி நாகரி எழுத்தும் சமஸ்கிருத மொழியுமாக இருப்பதால் இச்செப்பேடுகள் பற்றி அறிஞர்கள் மத்தியில் விவாதம் இல்லை. தமிழக வரலாற்றுடன் தொடர்புடைய தமிழகத்தில் கண்டெடுக்கப் பெற்ற முக்கியத்துவம் பெற்ற செப்பேடுகளாவன,

**உதயம் பாக்கம் செப்பேடுகள்,**

**கூனியூர்ச் செப்பேடுகள்,**

**திருவரங்கச் செப்பேடுகள்**

**சொரைக்காவூர் செப்பேடுகள்,** ஆகியனவாகும்.

இனி நாயக்கர்கள் வழங்கிய செப்பேடுகள் குறித்துக் காணலாம்.

**தஞ்சாவூர் நாயக்கர் செப்பேடுகள்**

விஜய நகரப் பேரரசின் கீழ் தமிழ்நாட்டில் மதுரை, தஞ்சை, செஞ்சி, வேலூர் ஆகிய நகரங்களிலிருந்து கொண்டு நாயக்கர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். தஞ்சை நாயக்கர்கள் கி.பி. 1535 முதல் 1675 வரை அரசு புரிந்துள்ளனர். ஏறக்குறைய 16 செப்பேடுகளை வெளியிட்டுள்ளனர்.

இச்செப்பேடுகளில் நாயக்கரின் சரித்திரம், நாயக்கர் கலைகள், திருக்கோயில்கள் காசுகள், சமுதாய அமைப்பு, ஊர்ப்பெயர்கள், உடன்பாடுகள் எனப் பல்வேறு கூறுகள் சாசனங்களில் இடம் பெற்றுள்ளன.

செப்பேடுகளால் அறியப்படும் செய்திகளை விடவும் பொன்னோலையில் உள்ள செய்தி இன்றியமையாதது அச்செய்தி வருமாறு.

**ரகுநாதரின் பொன்னோலை**

ரோலண்ட்கிரேப் தலைமையின் கீழ் வந்த டேனியரின் கப்பலைப் போர்த்துகீசியர் தாக்கி மூழ்கடித்தபோது அதிலிருந்த மாலுமிகள் தப்பித் தஞ்சையை அடைந்தனர். நாயக்கமன்னர் போர்த்துக்கீசிர்களுக்கு 12000 பொன் தண்டம் விதித்ததுடன் டேனியருடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டார். ஓவஜெட்டே என்பவர் மூலம் டேனிய மன்னருக்குப் பொன்னோலையில் இரகுநாத நாயக்கர் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். இச்சாசனம் தமிழில் எழுதப்பட்டள்ளது. தெலுங்கில் ஸ்ரீரகுநாத என்று ஒப்பமிட்டுள்ளார். இச்சாசனம் டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகன் ஆவணக் காப்பகத்தில் இச்சாசனம் உள்ளது வாசகத்தை வரலாற்றறிஞர்களுக்குக் கொண்டு வந்த பெருமை டாக்டர் இரா. நாகசாமி அவர்களைச் சாரும்.

**சாசன செய்தி சுருக்கம்**

டென்மார்க் நாட்டு மக்கள் இங்கே வந்து குடியேறத் தரங்கம்பாடி என்ற கடற்கரை நகரை விட்டுள்ளோம். மிளகு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். உங்கள் கப்பலுடன் மோதிய போர்ச்சுக்கீசியருக்கு 12000 பொன் தண்டம் விதித்ததுடன் வருங்காலத்தில் இவ்வாறு மோதக்கூடாது என்று எச்சரிக்கையும் விடுத்தோம். ரோலண்ட்கிரேப் இங்குத் தங்கியுள்ளார். தங்கள் தேசத்தவரை இங்கே குடியேறச் செய்வதுடன் தங்கள் நாட்டு அபூர்வமான பொருள்களை அடிக்கடி இங்கு அனுப்பி வைக்கவும் தற்போது பீதாம்பரம், இரண்டு புருசூர், துப்பட்டி ஒன்று, படாங்க பச்சவடம் இரண்டு, எழுத்துப்பட்டி நான்கு, சமுதாடு இரண்டு, தோப்பாகத்தி ஒன்று, சிங்க உருவம் உள்ள கடாரி ஒன்று, சிங்காரம் நான்கு ஆகிய பொருள்களை அனுப்பியுள்ளோம் சரி பார்த்துக் கொள்ளவும் என்பதாகும்.

**மராட்டியர் காலச் செப்பேடுகள்**

மராட்டியர் காலச் செப்பேடுகள் மொத்தம் 60 கிடைத்துள்ளன இவற்றில் தமிழில்-43, மராட்டியில்-12, வடமொழியில்-4, வடமொழி-மராத்தி-1, என்ற முறையில் கிடைத்துள்ளன. மராத்தி மொழியில் அமைந்த 12 செப்பேடுகளில் 10 மோடி எழுத்துக்களிலும் 2 நாகரி எழுத்துக்களிலும் எழுதப்பட்டுள்ளன. வடமொழிச் செப்பேடுகள் கிரந்த எழுத்துக்களில் உள்ளன. அவற்றில் மூன்று செப்பேடுகளில் அழகிய தமிழ்ப் பாடல்கள் சிதம்பரம் கோயில் பற்றி அமைந்துள்ள, செப்பேடுகள் அனைத்தும் அரசர்களும், அரசிகளும் அளித்த கொடைகளையே கூறுகின்றன.

பீஜ்ப்பூர் சுல்தானின் ஆதரவுடன் பெங்களூர், ஆரணி, செஞ்சி ஆகிய இடங்களில் சாகீர்களைப் பெற்று அனுபவித்த வீரமிக்க மராட்டியப் படைத்தலைவர்கள் தஞ்சை, மதுரை நாயக்கர்களின் இடையே ஏற்பட்ட பூசலில் தலையிட்டுச் சந்தர்ப்ப வசத்தால் தஞ்சைப் பகுதிக்கு அரசராக அமர்ந்தனர்.

1676-ஆம் ஆண்டு சாசிபோன்சலேயின் இரண்டாம் மகனும், மாவீரர் மராட்டிய சிவாசியின் பெரியம்மா மகனுமான முதலாம் ஏகோசி தஞ்சையில் மராட்டியர் ஆட்சியை நிறுவினார். 1855 வரை 180 ஆண்டுகள் பதின்மூன்று மராட்டிய அரசர்கள் தஞ்சையில் ஆட்சி புரிந்தனர். 1855 வரை ஆட்சி புரிந்த தங்சை மராட்டிய மன்னர்கள் தொடர்புடைய கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் 1855க்குப் பின்னர் தஞ்சை மராட்டிய மன்னர் குடும்பத்தினர் தொடர்புடைய கல்வெட்டுகளும் நமக்குக் கிடைக்கின்றன. மராட்டியர் ஆவணங்களில் 124 கல்வெட்டுகளும் 50 செப்பேடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. கி.பி. 1654 முதல் 1886 வரை சுமார் 232 ஆண்டு எல்லைக்குள் பொறிக்கப்பட்ட 50 செப்பேடுகளை அரசர்கள் வாரியாகக் கீழ்வருமாறு பிரிக்கலாம்.

முதலாம் ஏகோசி - 4

- சகசி - 3
- முதலாம் சரபோசி - 2
- துக்கோசி - 2
- இரண்டாம் ஏககோசி - 3
  - பிரதாபசிங் - 22
  - துளசா - 2
  - இரண்டாம் சரபோசி - 2
  - சிவாசி - 1
  - காமாட்சியம்பா பாய் - 4
  - சாம்பேசி (செஞ்சி) - 4
  - சாசி போன்ஸ்லே காலம் - 1

இச்செப்பேடுகளை மொழிவாரியாகப் பிரிக்கலாம்.

தமிழ்ச் செப்பேடுகள் - 33

மராத்திமோடிச் செப்பேடுகள் - 10

மராத்தி செப்பேடுகள்(நாகரி) - 2

வடமொழிச் செப்பேடுகள் - 4

வடமொழி, மராத்திச் செப்பேடுகள் - 1

குறிப்பு

மேலும், 3, 4, 10, 1, 14 எண்ணுள்ள தமிழ்ச் செப்பேடுகளின் இடையே வடமொழிச் சுலோகங்கள் பல உள்ளன. 45-47 வரையுள்ள செப்பேடுகளின் இறுதியில் அழகிய தமிழ்ப் பாடல்கள் உள்ளன. பெரும்பாலான தமிழ்ச் செப்பேடுகளில் வடமொழி ஒலியை எழுதக்கிரந்த எழுத்துக்கள் பயன்டுபடுத்தப் பெற்றுள்ளன.

தமிழகத்தில் கிடைத்துள்ள பல்லவர், பாண்டியர் சோழர்களின் செப்பேடுகள் அனைத்தும் ஓலைச் சுவடிகளின் வடிவத்தை ஒத்துக் காணப்படுகின்றன. அவை பல ஏடுகளாகவும் இருக்கும். ஆனால் தஞ்சை மராட்டியரின் செப்பேடுகள் அனைத்தும் நீண்ட சதுர வடிவில் ஒரே ஏடாகப் பெரிதாகக் காணப்படுகின்றன. இந்த அமைப்பு முறை வட இந்திய செப்பேடுகளின் அமைப்பை ஒட்டித் தோன்றின என்று ஆய்வாளர் டி.சி. சர்க்கார் அவர்கள் கருதுகிறார்கள்.

மராட்டியர் தங்களுக்கு முன் சோழ நாட்டை ஆட்சி புரிந்த சோழர், விசய நகர அரசர், தஞ்சை நாயக்கர் ஆகிய மரபினரைப் பல செப்பேடுகள் கூறுவதும் அவ்வாறே சிறப்புடைய செய்தியாகும். துமிழ்ச் செப்பேடுகளில் முதல் செப்பேட்டைத் தவிர அனைத்திலும் ஆண்டுகளைக் குறிக்கத் தமிழ் எண்களே பயன்படுத்தப் பெற்றுள்ளன. பெரும்பாலும் தமிழ் ஆண்டு, மாதம், தேதி, நாள், நட்சத்திரம் இவை குறிக்கப் பெற்றிருப்பதால் எந்த நாளில் கொடை வழங்கப்பட்டதென்பதை எளிதில் காணமுடிகிறது.

**படேவியா அருங்காட்சியக வெள்ளிப் பட்டயம்**

முதலாம் ஏகோசியால் 30.12.1678இல் தமிழில் 57.1 செ.மீ x 32.8 செ.மீ. அளவுள்ள வெள்ளிப்பட்டயம் வெளியிடப்பட்டது. இது ஹாலந்து நாட்டில் படேவியா அருங்காட்சியகத்தில் உள்ளது.

மராட்டியர் கல்வெட்டுக்கள் 124 ஆகும். இருமொழிக் கல்வெட்டுக்கள் 8, மும்மொழிக் கல்வெட்டுக்கள் 2 நான்கு மொழிக் கல்வெட்டு-1 ஐந்து மொழிக் கல்வெட்டு 1 கிடைத்துள்ளன. பலமொழிக் கல்வெட்டுகளாக இருப்பினும் 144 கல்வெட்டுகளாக வெட்டப்ப பெற்றிருப்பினும் 124 வரிசை எண்களே கொடுக்கப்பட்டுள்ளன. 13 மராட்டிய அரசர்களில் ஏகோசி, காட்டுராசா, சையாசி, சுசான்பாய் ஆகியோருக்குரிய கல்வெட்டுக்கள் செப்பேடுகள் எதுவும் கிடைக்கவில்லை.

தமிழக கல்வெட்டுகளின் பொதுத் தன்மையை கூறும்பொழுது செப்பேடுகளின் துணையையும் கொள்ள வேண்டியுள்ளது. அவ்வகையில் தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் தோற்றி வைத்த, இச்சாசனங்களின் பொதுத் தன்மையில் இடம் பெறுவனவற்றை இனி காணலாம்.

**அக்கால தேர்தல் முறை**

கி.பி. 750ல் பல்லவ அரசன் நந்திவர்மனால் உத்தரமேரூர் சதுர்வேதி மங்கலம் என்னும் பெயரில் 1200 வைணவ வேதம் வல்ல அந்தணர்களுக்குத் தானமாக அளிக்கப்பட்டது. இவ்வூரின் வரலாற்றுச் சிறப்புக்குக் காரணம். பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சோழப் பெருமன்னன் பராந்தகன் காலத்தில் குடியாட்சி முறையில் ஊர்கள் ஆளப்பட்டன என்பதையும், மக்களை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதையும், தேர்தலுக்கு நிற்பவர்களின் கல்வி, கேள்வி ஆகிய தகுதிகள் யாவை, தகுதியற்றவர்கள் யாவர் என்பதையும் விரிவாக எடுத்துக்கூறும் குடவோலை முறையைப் பற்றிய மிக விரிவான கல்வெட்டு இடம் பெற்றுள்ளதாகும்.

உத்தரமேரூர், பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், சம்புவரையர், விஜய நகரப் பேரரசர்கள், நாயக்கர்கள் என எல்லா அரசர்களின் கல்வெட்டு வழியான வரலாறு கிடைக்கும் ஊர்.

உத்தரமேரூரைப் பொருத்தவரை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் நாட்டில் தேர்தல் முறை இருந்திருக்கிறது என எடுத்துக் காட்டும் சான்று உள்ளது சிறப்பாகும். ஊர்ச் சபா மண்டபம் என்னும் கட்டிடத்தில் கி.பி. 750 முதல் 1250 வரை நடைபெற்ற அனைத்து நிர்வாகப் பணிகளும் கல்லில் பொறித்து வைத்துள்ளனர். அதாவது 500 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நடந்த ஊராட்சி முடிபுகள் கிடைக்கும் ஒரே ஊர் உத்தரமேரூர்தான். இவை அனைத்திலும் சிறப்பிடம் பெறுவது பராந்தகசோழன் காலத்தில் எழுதப்பட்ட குடவோலை தேர்தல் முறையாகும்.

**உத்தரமேரூர் ஊராட்சி கல்வெட்டு**

**தேர்தலில் நிற்கத் தகுதயுடையவர்**

1. கால் நிலத்துக்கு மேல் அரை நிலமுடையான்
2. தன் மனையிலே அகம் எடுத்துக் கொண்டு இருப்பான்
3. எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தைந்து பிராயத்தின் மேற்பட்டான்.
4. மந்திர பிராம்மணம் வல்லான்
5. ஓதுவித்தறிவான்
6. அரைக்கால் நிலமே உடையான் ஆயினும் ஒரு வேதம் வல்லானாய் நாலு பாஷ்யத்திலும் ஒரு பாஷ்யம் வக்கணித்து அறிவான்.
7. அவர்களிலும் கார்யத்தில் நிபுணன்
8. ஆசாரம் (ஓழுக்க சீலம்) உடையான்
9. அர்த்த சௌசமும் (பொருள் சுத்தம்) ஆன்ம சௌசமும் (மனச் சுத்தம்) உடையான்.

10. மூவாட்டின் இப்புறம் வாரியம் செய்திலான், பெயர் தீட்டி குடம் புக இடுவதாகவும்,

**தேர்தலில் நிற்கத் தகுதியற்றோர்**

குறிப்பு

1. எப்பேர்ப்பட்ட வாரியங்களுக்கும் கணக்குக் காட்டாது இருந்தான்.
2. இவர்களுக்கு சிற்றவை பேரவை மக்கள்
3. இவர்களுக்கு அத்தை மாமன் மக்கள்
4. இவர்களுக்குத் தாயோடு உடன் பிறந்தான்
5. இவர்கள் தகப்பனோடு உடன் பிறந்தான்
6. தன்னோடு உடன் பிறந்தான்
7. இவர்களுக்குப் பிள்ளை கொடுத்த மாமன்
8. இவர்கள் பிராம்மணியோடு உடன் பிறந்தாளை வேட்டான்
9. உடன் பிறந்தான் மக்கள்
10. தன் மகள் வேட்ட மருமகன்
11. தன் தமப்பன்
12. தன் மகன்
13. அகம் யாகமனத்திலும் மகாபாதகங்களின் முன்பு அடைந்த நாலு மகாபாதகத்திலும் எழுதப்பட்டான்.
14. சம்ஸர்க்கப்பதிதரை பிராயச்சித்தம் செய்யும் ஆள்
15. சாஹஸியராய் இருப்பான்
16. பர திரவ்யம் அபகரித்தான்
17. எப்பேர்ப்பட்ட கையூட்டும் கொண்டான்
18. கிருத பிராயச்சித்தம் செய்து சுத்தன் ஆனான்
19. பாதகம் செய்து பிராயச்சித்தம் செய்து சுத்தன் ஆனான்.
20. கிராம கண்டகராய் பிராயச்சித்தம் செய்து சுத்தன் ஆனான்
21. அகம் யாகமனம் செய்து பிராயச்சித்தம் செய்து சுத்தம் ஆனான்.

**தேர்தல் முறை**

உத்தர-மேரூரில் முப்பது குடும்பிகள் அமைந்திருந்தன. ஓவ்வொரு குடும்பிலுள்ளவரும் தாமே கூட்டம் கூட்டி அவையின் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதி உடையவர்களைத் தேர்ந்தெடுத்தனர். அவர்களது பெயர்களைத் தனித்தனி ஓலைத் துண்டுகளில் எழுதி அப்பெயர் எழுதிய ஓலைகளை ஒன்றாகச் சேர்த்து அவை எந்தக் குடும்பிற்கு உரியவை என்பது புலப்படுமாறு செய்தனர். அக்குடும்பின் பெயர் பொறிக்கப்பட்ட வாயோலை ஒன்றைச் சேர்த்துக் கட்டினர். ஒரு குடத்திலிட்டு வைத்தனர். இவ்வாறு அனைத்துக் குடும்பிகளுக்கும் தேர்வு செய்து தனித்தனியே கட்டிய குடத்திலிட்டனர்.

பின்னர், உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு நாள் குறித்தனர். அன்று மகாசபைக்குரிய பொது மக்களாகிய ஊரிலுள்ள இளையவர் முதல் முதியவர்வரை நிரம்பக் கூடினர். அன்று உள்ளூரில் இருந்த நம்பிமார் அனைவரையும் தவறாமல் அக்குழுவின் உள்மண்டபத்திலேயே இருத்திக் கொண்டனர். குழுவின் நடுவே ஓலைக் கட்டுகள் இட்ட குடத்தினை வைத்தனர். அப்போது அரசனின் ஆணைப்பெற்ற அலுவலர் ஒருவர் பொதுக் குழுவினரின் உடனிருந்து தேர்தலை முறையாக நடத்தி வைத்துள்ளார்.

**சிறுவனைக் கொண்டு வாக்குச்சீட்டு எடுக்கப்பட்டமை**

முதியவராய் இருந்த ஒருவர் குடும்புகளின் ஓலைக் கட்டுகள் போடப்பட்டிருந்த குடங்களில் ஒன்றினை எல்லா மக்களும் காணும் வகையில் இரு கைகளாலும் மேல்நோக்கி எடுத்துக்காட்டிய முறை இருந்தது. அந்தப் பொதுக்குழு பகல் பொழுதில் கூடியது. கேள்வியறிவில்லாத சிறுவன் ஒருவனைக் கொண்டு அக்குடத்திலிருந்து அதனை அவிழ்த்து வேறொரு குடத்தில் இட்டு குலுக்கி அக்குடத்தில் ஒரு ஓலையை அச்சிறுவனைக் கொண்டே எடுக்கச் செய்தனர். அந்த ஓலையை ஊர்க் கணக்கர் நடுவர் கையில் அச்சிறுவன் கொடுக்க குழுவிலுள்ளவர்கள் அனைவரும் கேட்குமாறு நடுவர் தெரிவு செய்யப்பட்ட பெயரை அறிவிப்பார். மேலும் அவ்வோலையில் உள்ள பெயரை அங்குள்ள எல்லோரும் வாங்கிப் படித்துள்ளனர். இவ்வாறு 30 குடும்புகளுக்கு குடும்பிற்கு ஒருவராக முப்பது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**வாரிய உறுப்பினர்கள்**

30… தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் கல்வி கேள்விகளில் சிறந்த முதியவர்களைக் கொண்டு நீதியை விசாரிக்கும் குழுவை அமைத்துக் கொண்டனர். இந்த வாரியத்தில் பன்னிரண்டு பேர் இடம் பெற்றிருந்தனர். தோட்ட வாரிய உறுப்பினராக 12 பேரும், மீதி உள்ள 6பேர் ஏரி வாரிய உறுப்பினராகவும் அறிவிக்கப்பட்டனர்.

இந்த வாரிய உறுப்பினர்கள் தங்கள் அதிகார எல்லையை வரையறுத்துக் கொண்டு ஆண்டிற்குரிய 360 நாளும் பணியாற்றுவர். உறுப்பினர் எவரேனும் தவறு செய்தால் பதிவியிலிருந்து நீக்கப்படுவர். அந்த இடத்திற்குச் சம்வத்சரவாரிய உறுப்பினர் கூடி குடவோலை முறைப்படி மீண்டும் ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பர்.

**மத்தியஸ்தர்**

மேற்கூறியவை தவிர, பஞ்சவாரியம், பொன்வாரியம் ஆகியவற்றிற்குத் தலா ஆறுபேர் குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவர். இவைகளுக்கு மத்தியஸ்தராக செயல்படும் நபரின் தகுதிகளும் இக்கல்வெட்டில் உள்ளன.

1. நேர்மையாக சொத்துக்களைச் சேர்த்தவரும் ஒழுக்கமுடையவருமே மத்தியஸ்தராக பணபுரியத் தகுதியுடையவர்.
2. இவரே கணக்குகளை எழுத வேண்டும்.

3. இவரே கணக்குகளைக் காட்ட வேண்டும். சார்பாளராக எவரும் கணக்கு காட்டக் கூடாது.
4. கணக்குகளைச் சபையின் உறுப்பினர்கள் சரி பார்த்து சரியென சம்மதம் தெரிவித்தால்தான் மீண்டும் அவர் கணக்கெழுத அனுமதிக்கப்படுவார். தவறு ஏற்படின் அவர் நீக்கப்படுவார்.



**கல்வெட்டு**

இந்த உத்திரமேரூர் குடவோலை முறை கல்வெட்டை எழுதியவன் மத்தியஸ்தான் காட்டிப் போத்தன் சிவகுறி இராஜமங்கலம் பரியன் என்பான். கி.பி. 919இல் பொறிக்கப்பட்ட இக்குடவோலை முறை மூலம் அரசனின் ஆணைப்படி அரசு அதிகாரி தத்தனூர் மூவேந்தர் வேறாள் முன்னிலையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதை அறியமுடிகிறது. திருப்பாற்கடல் கல்வெட்டு, செங்கல்பட்டு, பிள்மளையார் பாக்கம் கல்வெட்டு, நன்னிலம் வட்டம் அய்யம்பேட்டைக் கல்வெட்டு ஆகியவை சபையாரின் பணிகளை உறுப்பினர்கள் எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பதைக் கூறுகின்றன.

**சேய்ஞலூர்க் கல்வெட்டு**

உத்திரமேரூர் கல்வெட்டுக் கூறும் விதிமறைகளில் மாற்றம் தேவைப்பட்டதைச் சேய்ஞலூர்க் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது. ஆரசின் உதவியின்றி பட்டறிவிலும், கல்வியறிவிலும் தேர்ந்தவர்கள் கூடி இவ்விதிகளை வகுத்துக் கொண்டார்கள். அவைகளில் சில வருமாறு.

1. ஒரு முறை உறுப்பினராகப் பணியாற்றியவர் அடுத்த ஐந்தாண்டுகள் கழித்துத்தான் உறுப்பினர் போட்டிக்குத் தகுதி பெற முடியும்.
2. பதவி வகித்தவரின் மகன் நான்கு ஆண்டுகள் கழித்தும், உறவினர்கள் மூன்றாண்டுகள் கழித்தும் போட்டி இட முடியும்.
3. நாற்பது வயதுக்கு மேற்பட்டவராய் இருக்க வேண்டும்.
4. உறுப்பினராகப் போட்டியிடும் ஒருவர் அரசியல் அதிகாரிகளின் துணை கொண்டு விதிமுறைகளுக்கு முரணாக நடக்கக் கூடாது அவ்வாறு நடந்தால் அவர்கள் துரோகிகள் என்று அறிவிக்கப்பட்டு சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும்.
5. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அவ்வவர்களுக்கு உரிய பணிகளைப் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் நிறைவேற்ற வேண்டும். விதிக்கப்பட்ட வரிகளைத் தவிர கூடுதலாகப் பெறக்கூடாது.
6. ஓரே நேரத்தில் 2000 காசுகளுக்கு மேல் செலவிட வேண்டுமாயின் மகாசபையின் அனுமதி பெறல் வேண்டும்.
7. அதிக வரி வாங்கின் அல்லது செலவிடின் அவர் ஐந்து மடங்கு தண்டம் கொடுக்க வேண்டும்.

8. ஊர் மக்கள் செலுத்தாது இருக்கும் வரிகள் மட்டும் இரண்டு மடங்கு வசூலிக்கப்பட வேண்டும்.

9. வசூலித்த தண்டத் தொகையானது சபாவினியோகத்தோடு சேர்த்துதான் செலவிடப்பட வேண்டும்.

இத்தகைய அரசியல் கோட்பாடுகளை வகுத்த முறையானது அக்கால சமூக சூழலின் நன்மை கருதி இருந்தது. பாண்டியர் காலத்து எழுதப்பட்ட மானூர் கல்வெட்ட சோழருக்கு முந்தைய அரசியல் சிந்தனையைக் கொண்டுள்ளது.

**மானூர் கல்வெட்டு**

கி.பி. 9ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய நாட்டில் வாரியங்கள் இருந்திருக்கின்றன என்பதை இக்கல்வெட்டால் அறியலாம். தமிழகத்தில் ஊராட்சி முறை நிலவியதைப் பற்றித் தெரிவிக்கும் மிகப் பழமையான கல்வெட்டு இந்த மானூர்க் கல்வெட்டாகும். இது மாறன் சடையனின் 35ஆம் ஆட்சியாண்டில் எழுதப் பெற்றுள்ளது. (9ஆம் நூற்றாண்டின் தொடக்கம் எனில் 803-ல் இச்செயல் பொறிக்கப்பட்டிருந்தால் கி.பி. 768-815 வரையில் 50 ஆண்டுகள் ஆட்சி புரிந்த நெடுஞ்சடைய பராந்தகன் (முதலாம் வரகுணன்) காலத்தது எனலாம். இவன் காலத்து கல்வெட்டுச் செய்திகளில் களக்குடியில் தோன்றிய பாண்டியரின் அணுக்கம் பெற்ற பல அதிகாரிகள் பற்றிய குறிப்பும் உள்ளது. பல அதிகாரிகள் இவ்வூரில் இருந்துள்ளமையால் இம்முறை ஏற்படுத்தப்பட்டிருக்கலாம்.

களக்குடி நாட்டுப் பிரமதேயமான மானநிலை நல்லூர் மகாசபையார் ஒருங்கு கூடிச் செய்த தீர்மானங்களைத் தெரிவிக்கிறது. அத்தீர்மானத்தில் பின்வரும் செய்திகள் காணப்படுகின்றன.

1.ஊரில் பங்குடைய மக்கள் சபையில் உறுப்பினராவதற்கு ஒரு தருமம் உட்பட மந்திரப் பிராமணம் நன்கு கற்றவராக நன்னடத்தை யுடையவராய் இருத்தல் வேண்டும்.

2.ஒரு பங்குடையார் ஒருவர்தான் உறுப்பினராகலாம்.

3.தன்னுடைய பங்கு விலையாகவோ, கொடையாகவோ அல்லது திருமணக் கொடையாகவோ பெற்றிருந்தால் மந்திரம் உட்பட தருமம் உட்பட மந்திர பிராமணத்தில் தேறியவராய் நல்ல நடத்தை உடையவராக இருந்தால்தான் சபையின் நடவடிக்கையில் கலந்து கொண்டு செயலாற்றலாம்.

4.இனிப் புதிதாக நிலம் விலைக்கு வாங்கியோ கொடையாகப் பெற்றோ அல்லது சிரீதனமாகப் பெற்றோ தமக்குப் பங்கு உண்டு என்று கூறிக்கொண்டு சபையில் உறுப்பினராக யாராவது விரும்பினால் அவர்கள் முழுச் சிராவணை இன்றிக்கால், அரை, முக்கால், சிராவணைப் பெற்றிருந்தால் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

5. விலைக்கு நிலம் வாங்கிய பிறகு தாம் பங்குடையார் என்று வருபவர்கள் பரிசிட்டத்தோடு முழு வேகத்தையும் அறிந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
6. இ∴தல்லாமல் சபையில் உறுப்பினராகிறவர்கள் சபையின் தீர்மானப்படி சபையின் உரையாடலில் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.
7. இந்தத் தீர்மானத்தின்படி சிராவணை இல்லாதவர் எந்தவொரு வாரியத்திற்கும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்.
8. இந்தத் தீர்மானத்தை ஒப்புக் கொண்டவர்கள் பின்னர் ஒப்புக் கொள்ளவில்லை என்று கூறக் கூடாது. தீர்மானத்திற்கு எந்த விதக் குந்தகமும் விளைவித்தல் கூடாது.
9. குந்தகம் விளைவிப்பாருக்கும் குந்தகம் விளைவிப்பவர்களுக்குத் துணை நிற்பாருக்கும் தலா 5 காசு வீதம் தண்டம் விதிக்கப்படும். தண்டம் செலுத்தி விட்டோம். பணி தீர்ந்தது என்று எண்ணாமல் அதன் பிறகும் தீர்மானத்தை நன்கு கடைப்பிடித்தல் வேண்டும்.

குறிப்பு

இதனால், கல்வியறிவிலும், தருமசிந்தனையில் தேர்ச்சி உடையவராகவும் உள்ளவரை, சபை நடவடிக்கைகளில் ஈடுபட செய்தமை புலனாகிறது.

**அங்கம் வகிப்பவர்கள்**

| ↓ | ↓ |
|---|---|
| சபையில், உரையாடல்களில் கலந்து கொள்ளலாம். ஆனால் வாரியத்திற்கும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் படமாட்டார்கள். | வாரியங்களுக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்து எடுக்கப்படும் தகுதி எவ்வித உடையவர்கள் இவர்கள் அதிக அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். |

சோழர்கள் 10ஆம் நூற்றாண்டிற்குப் பின்தான் வாரிய முறையைப் பின்பற்றி உள்ளனர். அதிலும் மேற்கண்ட இருமுறைகளை அவர்கள் கையாளவில்லை. இவ்வகையில் பாண்டியர் சிறப்பு பெறுகின்றனர்.

**நீதியும் நிர்வாகத்திறனும்**

மன்னர்கள் நீதிநெறியுடனும், நிர்வாகத்திறனுடனும் செயல்பட்டதைக் காணலாம்.

குறிப்பு

**பல்லவர்**

நீதி வழங்க அமைந்த மன்றம் தருமாசனம் எனப் பெயர் பெற்றிருந்தது. குறித்த காலத்தில் ஒரு பணியினை முடிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு தங்கள் பணியில் தவறிய ஊரவைகள் தர்மாசனத்திற்குத் தண்டத் தொகையினைச் செலுத்தின. பாரபட்சமின்றி நியாயம் வழங்கியதாகச் செப்பேடுகள் கூறுகின்றன.

அதிகரணம், கரணம் என்ற பெயர்களில் நீதிமன்றங்கள் இருந்துள்ளன. சொத்துக்கள் தொடர்பான வழக்குகளை விசாரித்து அதனை உரியவர்க்குச் சேர்ப்பிக்கும் பணி நடைபெற்றுள்ளன. கரணத்தான் என்பான் அறங்கூறு அவையோர் முன் ஆவணத்தில் உள்ளவற்றை உரக்கப்படித்து அனைவரையும் கேட்குமாறு செய்துள்ளான். காரணிகள் நீதிபதியாக செயல்பட்டுள்ளன. வழக்குகளை அறிய மூன்று சான்றுகள் தேவையாக கருதப்பட்டன. அவை 1. ஆவணம், 2. ஆட்சி, 3. அயலார் காட்சி (கண்டதைக் கூறுபவர்) இதன் வழி தீர்ப்புகள் வழங்கப்பட்டன. சாசன சஞ்சாரிகள் நீதிமன்றத் தீர்ப்பினை ஒட்டி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் பெற்றவராக விளங்கினர்.

ஸ்ரீவரமங்கலச் செப்பேடு நீதி தவறாது ஆட்சி செலுத்துவோன் என்னும் பொருளில் பராந்தக நெடுஞ்சடையனை மனுபமன் எனவும் மனுதர்சித மார்க்கத்தினான் என்றும் குறிப்பிடுகிறது. பராந்தக வீரநாராயணன் மனுசமானன் வழுவாத செங்கோளடாவி என்று தளவாய்புரச் செப்பேடு குறிப்பிடுகிறது. இராசசிம்மனைச் சின்னமனூர்ப் பெரிய பட்டயம் நீதிக்குக் கொடித்தம்பம் போன்றவன் என்று கூறுகிறது. ஆவண சான்றுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது (வேள்விக்குடிச் செப்பேடு) ஆவணச் சான்றுகள் இல்லாதபோது நீள் வழக்காற்றுரிமை, ஊரார் சாட்சி அடிப்படையில் வழக்குகளுக்குத் தீர்வு காணப்பெற்றது. தளவாய்ப்புரப் பட்டயம் இதற்குச் சான்று.

நிர்வாகத் துறையில் பணியாற்ற பயிற்சி அளிக்கப்பெற்றுள்ளது. பார்த்திபசேகரச் சாலையில் அப்பயிற்சி அளிக்கப்பெற்றதை அறிகிறோம். வேதம், வியாகரணம், பௌரோகித்யம் முதலிய சாத்திரங்களை நன்கு கற்ற அந்தணரும் நிர்வாகத்தில் சேர்ந்திருந்தனர்.

**சோழர்**

சட்டம் ஒழுங்குப் பிரச்சனையுள்ள வழக்குகள் பெரும்பாலும் சபை போன்ற கழகங்களாலேயே விசாரித்துத் தீர்க்கப்பட்டன. தவிர, தொழில், கழகங்கள், இணையங்கள் போன்ற நிறுவனங்களும் சில வழக்குகளைக் கவனித்தன. ஆயின் பெரும்பாலான வழக்குகள் கிராம சபைகளின் முன் கொண்டு வரப்பட்டன. அவற்றைக் கவனிப்பதற்கென நியாயத்தார் என்னும் குழுக்கள் அமைக்கப்பட்டன. அறக்கட்டளைகள் விஷயமாக எழுந்த வழக்குகளின் தீர்ப்பின்படி கட்டப்பட்ட அபராதத் தொகை தருமாசனம் என்னும் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தருமாசனமம் என்பது அரசனே தலைமை வகிக்கும் நீதிமன்றமாகத் தோன்றுகின்றது. அவருக்குத் தருமாசனப் பட்டர்கள் என்ற கற்றறிந்த பிராமணர்களும் சட்ட

நிபுணர்களும் உதவினர். வழக்குகள் விசாரிக்கப்பட்ட முறைகளைப் பற்றியும், நீதிமன்ற ஆவணங்களைப் பற்றியும் அறிய போதுமான சாசனங்கள் உள்ளன. மேலும் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் எழுதப்பெற்ற பெரிய புராணத்தில் சுந்தரமூர்த்தி நாயனாரின் மீது சுமத்தப்பட்ட வழக்கின் விசாரணை வழியும் பிற இலக்கிய சான்றுகளாலும் நீதி தவறாத சோழர் ஆட்சியை அறிய முடிகிறது.

குறிப்பு

நிர்வாக அமைப்பின் தலைவர் என்ற முறையில் அரசர்கள் அவ்வப்பொழுது நாட்டின் பல பகுதிகளுக்குப் பயணம் செய்து நிலைமையை நேரில் கண்டறிந்து, தேவையானால் அங்கேயே விசாரணையை நடத்தியுள்ளனர். அரசர் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போது அவர் தங்குவதற்கான வசதிகள் கோயில் மண்டபங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவ்வகையில் திருவொற்றியூர், சிதம்பரம், திருவாரூர், காஞ்சிபுரம் ஆகிய தலங்களுக்கு அரசர்கள் அதிகமுறை பயணம் செய்துள்ளனர்.

**நாயக்கர்**

நாயக்கர்கள் விசயநகரத்தின் வழி வந்தவர்கள். அவர்கள் விசயநகரம் வகுத்திருந்த அரசியலின் அடிச்சுவட்டில் ஒரு படைமானிய முறையை அமைத்தனர். இதில் நாயக்கர்கள் கர்த்தா நிலை ஊழியராக விளங்கினர். மேலும் பாளையக்காரர்களின் துணையுடன் நாட்டை ஆண்டனர். அதிகாரப் பரவல் பெற்றிருந்த பேரரசை அரசர் வைத்திருந்தார். விசய நகர மேலாதிக்கத்துடனான தொடர்பும் பாளையப் பட்டுக்களுடைய துணையும் பெற்ற ஒரு வகை கூட்டாட்சி முறையில் அமைந்ததே நாயக்கர் ஆட்சி.

நேர்வழி வாரிசுரிமைப்படி பதவி ஏற்றனர். ஆடம்பரமான அரண்மனை. உயர் அதிகாரிகளைக் கொண்ட அரசவை, பாளையக்காரர்களின் துணை, படைமானிய முறைப்படியிலான காணிக்கையுடன் அரசாட்சி புரிந்தனர். நீதி வழங்க வேண்டியது மன்னனுடைய கடமை அப்பணியைப் பெருந்தன்மையுடைய நீதிபதிகளிடத்து மட்டும் ஒப்படைக்க வேண்டுமம் என்பது கிருட்டிண தேவராயரின் அறிவுரை, அவ்வகையில் மன்னனும், தளவாயும், பிரதானியும் தலைநகரில் நீதி வழங்கினர். பாளையப் பட்டுகளில் பாளையக்காரர்களே நீதி வழங்கினார். கிராமங்களில் இருவர் நீதி நடுவர்களாக இருந்தனர். வழக்காறு, ஆவணம், சாட்சி அடிப்படையில் நீதி வழங்கியதை ஸ்ரீவில்லிபுத்தூர் சாசனம் (கி.பி.1577) கூறுகின்றது.

**மராட்டியர்**

குறிப்பு

தஞ்சை மராட்டியர்கள் கி.பி. 1676 முதல் 1856 வரை தமிழகத்தின் மிகச் செழிப்பான பகுதியை ஆண்டனர் என்றாலும் மக்கள் அளவற்ற தொல்லைகளை அடைந்துள்ளனர். மன்னர்கள் அடிமைகளாகத் தரம் தாழ்ந்து கிடந்தனர் என்றார் சுவாரட்ஸ் பாதிரியார். தன்னைச் சூழ்ந்த உயர்மட்ட பிராமண அதிகாரிகளிடம் பொறுப்பை விட்டு விட்டு கேளிக்கைகளிலும், வடமொழிப் புலவர் கூட்டத்தாருடனும் காலம் கழித்துள்ளனர். மன்னருக்கும், மக்களுக்கும் தொடர்பற்ற நிலை இருந்துள்ளது.

பழைய நிர்வாக முறை அடியோடு மாற்றப்படவில்லை எனினும் அதிகார வரன்முறை செய்யப்பட்ட நிர்வாகம் உருவாகியது. தலைமை நீதி நடுவராக விளங்கியவர் அரண்மனைப் புரோகிதர் ஆவார். அமர்சிங் காலம் வரை ஒருவரிடம் உறைந்திருந்த நீதியின் தலைமை நீதியில் கொடுங்கோன்மையை வளர்த்தது. இலஞ்ச ஊழல்களால் நீதி விற்கப்பட்டது. சுவார்ட்ஸ் பாதிரியாரின் கடும் முயற்சியால் 5 நீதிபதிகள் அடங்கிய நீதிமன்றம் உருவானது. வழக்குகள் திறந்த மன்றத்தில் படிக்கப்பட்டு நீதிமன்ற நடைமுறைகள் மேம்படுத்தப்பட்டன.

**அரசு அதிகாரிகள்**

சாசனங்கள் வழி அக்கால மன்னர்களின் காலத்திலிருந்து அரசு அதிகாரிகளும், அவர்தம் பணிகளும் குறித்துக் காணலாம்.

**பல்லவர்**

ஹீரஹடஹள்ளிச் செப்பேடுகளில் சிவஸ்கந்தவர்மனின் அமைச்சர்களைப் பற்றிய குறிப்புள்ளது. வைகுந்தப் பெருமாள் கோயில் கல்வெட்டில் மந்திரி மண்டலம் பற்றிய குறிப்பொன்று உள்ளது. இக்குறிப்பின்வழி அமைச்சர்கள் அடங்கிய அவையினரை மந்திரி மண்டலம் என அழைத்ததை அறியலாம்.

இரகசியாதிகிருத்தன் என்பான் அரசனின் அந்தரங்கச் செயலாளராகப் பணியாற்றினான் என ஹீராஹடஹள்ளிச் செப்பேடு கூறுகிறது.

வாயில் கேட்பார், நிலங்களை அளந்து கணக்கிடுவோர், குற்றவியல் நயன்மையர் ஆகியோரைப் பற்றிக் கசாக்குடிச் செப்பேடு கூறுகிறது.

நியுக்தர் என்னும் அதிகாரியால் குறுநில மன்னர்களிடம் திறைத்தொகை வசூலிக்கப்பட்டது. வாரிய பெருமக்கள், கோட்டவாரிய பெருமக்கள் ஏரிவாரிய பெருமக்கள் போன்ற குழுநிலை உறுப்பினர்கள் பணிகளைப் பெற்று செயலாற்றியதை உக்கல் கல்வெட்டு கூறுகிறது. பொன் வாரியம், பஞ்ச வார வாரியம் ஆகியவையும் செயல்பட்டுள்ளன.

கணம், அமரித கணத்தார் போன்றோர் ஆலயத்தைக் கட்டி வருமானத் தொடர்பான பணிகளைச் செய்துள்ளனர். இவ்வாறு நாட்டு அமைப்பு முதல் கிராம அமைப்பு வரை பல்வேறு அதிகாரிகள் பணியாற்றி உள்ளனர்.

**பாண்டியர்**

பல்வேறு வகையிலான துறைகளில் தலைவர்களாக இருந்து ஆட்சிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் அமைச்சர், படைத்தலைவர்கள், அரையர், நாடுவகை

செய்வோர், வரியிலார், புரவு வரித்திணைக் களத்தார், திருமுகம் எழுதுபவர் ஆகியோராவர்.

குறிப்பு

நன்றாகப் பணியாற்றிய அதிகாரிகளுக்கு அரையன், பேரரையன், விசையரையன், தென்னவன் பிரமராயன், தமிழவேள், காவிதி, ஏனாதி, பஞ்சவன்மாராயன், பாண்டிய மூவேந்த வேளாண், செழியதரயன், பாண்டிய விழுப்பரையன், தென்னவதரயன், பாண்டிப் பல்லவ தரையன், தொண்டைமான், பாண்டியக் கொங்கராயன், மாதவராயன், வத்தராயன், குருகுலராயன், காலிங்கராயன் முதலிய பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

காவிதி, ஏனாதி முதலான பட்டங்களைப் பெற்ற அதிகாரிகளுக்குப் பொற்பூவும், மோதிரமும், இறையிலி நிலமும் வழங்கப்பட்டுள்ளன.

அரசனுக்கு உறுதுணையாக விளங்கிய அரசியல் தலைவர்கள் மாறன்காரி மாறன் எயினன், சாத்தன் கணபதி. ஏனாதி சாத்தன், தீரதீரன், மூர்த்தி எயினன், சங்கரன், சீதரன் முதலிய அரசியல் தலைவர்களின் பெயர்கள் செப்பேடுகளிலும், கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன.

மகாசாமந்தர் என்பார் படைத் தளபதியாவார், சாத்தன் சாத்தன் மகாசாமந்தனுக்குக் கீழ்ப்பட்ட படைத்தலைவர் ஆவார். உத்தரமந்திரி பொறுப்பு வகித்தவர்கள் சிறந்த கல்வியறிவு நிரம்பியவராகவும் சமய உயர்வுடையவராகவும் விளங்கினர்.

திருமந்திர ஓலை என்னும் அலுவலர் மன்னரின் ஆணையை நிறைவேற்றியவர் ஆவார். அதனை மேற்பார்வையிட்டுக் கையொப்பமிட்டவர். திருமந்திர ஓலை நாயகம் ஆவர். தவிர பல்வேறு உறுப்பினர்கள் வாரிய நிர்வாகத்தாராக இருந்துள்ளனர்.

**சோழர்**

கல்வெட்டுகளின் வழியாக கடிகை, மாராயன், வாச்சிய மாராயன் போன்ற விருதுகள் சிறப்பாகப் பணி புரிந்தோருக்கு வழங்கப்பட்டுள்ளன. நாட்டியம் அல்லது நிருத்தக்கலையில் வல்லுநருக்கு நிருத்தப் பேரரையன் என்ற பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

உயர்ந்த இராணுவ அரசாங்க அலுவலர்களும் பொதுவாக அதிகாரிகள் என்றே அழைக்கப்பட்டனர். அதிகாரியின் மனைவி அதிகாரிச்சி என்று அழைக்கப்பட்டாள். அதிகாரிகளில் பெருந்தரம், சிறுதரம் என்ற இரு பிரிவுகள் இருந்துள்ளன. பெருந்தரம் என்ற சொல்லை, மதுரை கொண்ட இராஜகேசரியின் ஐந்தாவது ஆட்சியாண்டான கி.பி. 961இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் முதல் முறையாகக் காணப்படுகிறது. இரண்டாம் இராஜராஜன் காலத்தில் நியாயத்தார் பெருந்தரம், சிறுதரம் என்ற பிரிவுகளாய் வகுக்கப்பட்டிருந்ததை ஒரு கல்வெட்டு தெரிவிக்கின்றது.

குறிப்பு

முகவெட்டி அதிகாரிகளில் இருவகையினர் இருந்தனர். பட்டோலை என்னும் அதிகாரிகள் சற்றுக் கீழ்நிலை அலுவலர் ஆவர். முகவெட்டி என்பது ஸ்ரீமுக வெட்டியின் சுருக்கமே. ஸ்ரீமுகம் என்ற அரசாங்கத் தாக்கீதைச் செப்பேட்டிலோ அல்லது கல்லிலோ வெட்டியவர் அல்லது வரைந்தவர் என்று நினைப்பது பொருத்தமாக இருக்கும்.

மத்திய அரசின் சார்பில் மாவட்டங்களில் பணிபுரிந்த அதிகாரிகளைப் பற்றி கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. ஆயின் அவர்கள் செய்த பணி என்னவென்று தெரிவதற்கில்லை. அவற்றில் சந்து விக்கிரகம், மகா மாத்திரர், நாடுவகை, நாட்டு கண்காட்சி, நாடு கூறு அதிகாரி ஆகியோர் இருந்துள்ளனர்.

**உத்தம சோழன் கல்வெட்டால் அறியப்படுவன**

முதலாம் ஆதித்தன் பல்லவனாகிய அபராஜிதனைத் தோற்கடித்துத் தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றிய பிறகு சிற்றியாற்றூர் என்னும் ஊரைத் தேவதானமாகவும் பிரமதேயமாகவும் அளித்தார். இதற்கு வேண்டிய சாசனம். அதற்கு அடுத்த ஆண்டின் எழுதப்பட்டாலும், உரிய பதிவேடுகளில் 12 ஆண்டுகளுக்குப் பிறகே அதாவது முதலாம் பராந்தகன் காலத்தில் குறிக்கப்பட்டது. அவ்வாறே முதலாம் பராந்தகன் காலத்தில் புதுப்பாக்கம் கோயில் நிலங்களின் மீது புதிய வரிகள் விதிக்கப்பட்டன. ஆனால் அவ்வூர்ச்சபை வரியைக் கட்டாமலேயே இருந்துவிட்டது. உத்தமசோழன் காலத்தின் இறுதியில், அரசர் காஞ்சியில் தங்கியிருந்த பொழுது அவர்முன் இப்பிரச்சனை விசாரணைக்கு வந்தது. வரிக் கொடாமைக்குரியவர்கள் தண்டிக்கப்பட்டனர்.

அரசனின் முன்னிலையில் சோழர் மூவேந்தர் வேளாண் என்ற பெரிய அதிகாரியிடம் புதுப்பாக்கம் சபையின் மீது குற்றச் சாட்டுக்கள் வைக்கப்பட்டன. மன்னனே இதற்கு தீர்ப்பளித்தான். அதன்படி அவ்வூர்க் கோயிலுக்கு வழங்கப்பட்ட தானங்களை விடுப்பித்துக் கொடுத்துப் புதுபாக்கம் ஊர்ச்சபை குறிப்பிட்ட அளவு நெல்லும் பொன்னும் கோயிலுக்குக் கொடுக்கும்படி பணித்து அத்தீர்ப்பை அரசாங்கப் பதிவேடுகளில் பொறிக்கும்படி செய்தான். இந்நிகழ்ச்சியின் போது பின்வரும் அதிகாரிகள் அங்கு வீற்றிருந்தனர்.

கருமி (ஒருவர்), இரு நாடு விருக்கையர் அல்லது ஆணத்தியர், அரசர் கூறிய தீர்ப்பை எழுதியவர். ஓலை எழுதும் உத்தம மந்திரி என்பவர். அதைச் சரிபார்த்துக் கையொப்பம் இட்டவர். ஓலை நாயகம் என்பவர். இச்சாசனத்தை அரசாங்கம் பதிவேடுகளில் எழுதச் சொன்னவர் வரியிலிட்டுக் கொள்ளும் மற்றொரு கருமி என்பவர், இவர்களைத் தவிர புரவு வரி அதிகாரிகள், வரிப்பொத்தக அதிகாரிகள், நான்கு முகவெட்டி அதிகாரிகள், தொண்ட நாட்டு புரவு வரி அதிகாரிகள் போன்றோர் அரசாங்கப் பதிவேடுகளில் குறித்துக் கொண்டு கையொப்பம் இட்டுள்ளனர். லெய்டன் செப்பேடும் இம்முறையிலேயே வெளியிடப்பட்டுள்ளது.

இந்த முறையே திருவாலங் காட்டுச் செப்பேடுகளிலும் கையாளப்பட்டுள்ளது. அவற்றில் நாட்டார் அற ஓலை வெளியிட்டது குறிப்பிடப்பட்டுள்ளது. புரவுவரித் திணைக்களம் பட்டோலை, கீழ்முகவெட்டி, புரவுவரித் திணைக் களத்துக் கண்காணி போன்ற சில அதிகாரிகள் பெயரும் இப்பட்டயத்தில் உள்ளன.

உலகில் கிடைத்த மிக நீளமான கல்வெட்டுகளில் திருமுக்கூடல் கல்வெட்டும் ஒன்றாகும். அதிலும் மேலே கூறப்பட்ட அதிகாரிகள் பலரும் கூறப்பட்டுள்ளனர். சோழர்கள் அதிகார பகிர்வு முறையில் அரசாங்க அதிகாரிகள் பலரையும் நியமித்து நிர்வாக ஆற்றலில் சிறந்து விளங்கினர்.

**நாயக்கர்**

நாயக்கர்கள் காலத்தில் புதிய பெயர்களால் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

1. தளவாய், 2. பிரதானி, 3. ராயசம், 4. அரசுக் கணக்கர், 5. ஸ்தானாதிபதி ஆகியோர் அதிகாரிகள் ஆவர். தளவாய் கூடுதல் அதிகாரம் உடையவர் ஆவார். கிராமங்களை நிர்வகிக்க கர்ணம், தலைமை அதிகாரி, தலையாரி ஆகியோர் செயல்பட்டுள்ளனர்.

நாயக்கர் ஆட்சியில் இதற்குமுன் இல்லாத அளவிற்கு அதிகாரிகள் மிகுந்த அதிகாரங்களைப் பெற்றுச் செயல்பட்டுள்ளனர்.

தளவாய் - அமைச்சர் போன்றவர் மிக்க அதிகாரமுடையவர்.

பிரதானி - நிதி ஆலோசகர் (அமைச்சர்)

ராயசம் - அரசனின் கட்டளைகளை நிறைவேற்றுபவர்

அரசு கணக்கர் - வருவாயும், செலவினமும் குறித்த கணக்கினை பாதுகாப்பதோடு இவர் வழியாகவே பொருளுதவி பெற முடியும்.

ஸ்தானாதிபதி - வெளியுறவுத்துறை அமைச்சர் போல், பிற நாட்டு செய்திகள் மற்றும் நாட்டுத் தொடர்புடையவற்றை அரசனுக்கு கூறுபவர்.

1. கர்ணம் - வரி வசூலிப்பவர்
2. தலைமை அதிகாரி – நீதியை காப்பவர்
3. தலையாரி – காவல் தொழிலில் ஈடுபட்டவர்

என்றிவ்வாறு நாயக்கர் காலத்தில் முன்பில்லாதவாறு புதிய பெயர்களில் அதிகாரிகள் இருந்தனர்.'

**மராட்டியர்**

அதிகார வரன்முறையோடு அதிகாரிகள் விளங்கினர். தலைமை நீதிபதியாக அரண்மனைப் புரோகிதர், மன்னனின் ஆலோசகராக மந்திரி, படைத்தலைவனாகத் தளவாய், வருவாய்த்துறை அதிகாரியாகத் திவான் என்ற முறைகளில் கீழ்நிலை வரை பல அதிகாரிகள் இருந்தனர். அதிகாரிகள் விவசாயிகளைச் சூறையாட இது வழி வகை வகுத்தது.

குறிப்பு

**பேராட்சியும் - ஊராட்சியும்**

பேராட்சி ஊராட்சி முறையில் பல மாற்றங்களைச் செய்து செம்மைபடுத்தியவர்கள் சோழர்கள் எனலாம். தமிழக ஆட்சி முறையின் உச்ச கட்ட நடவடிக்கைகளில் காணத்தக்க பெருமையுடைய செயலாக இவை விளங்குகின்றன. பேராட்சியும், ஊராட்சியும் பல்லவர், பாண்டியர் காலத்தில் தோன்றி வளர்ந்தது எனினும் அதனை முழுமை பெறுமாறு செய்தவர்கள் சோழர்கள் ஆவர். எனினும் பல்லவர், பாண்டியர், சோழர், நாயக்கர், மராட்டியர் கால ஆட்சி முறைகளையும் காணலாம்.

## பல்லவர்

| பேராட்சி | ஊராட்சி |
|---|---|
| 1. பெருநாடுகள் மண்டலங்களாகவும், கோட்டங்களாகவும் விளங்கின. மேலும் தமக்கு முன்பிருந்த கோட்டம், நாடு, ஊர் முதலிய பிரிவுகளையும் ஏற்றுக் கொண்டனர். தொண்டை மண்டலம் 24 கோட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. | 1. ஊராட்சி முறையில் நாடு, நகரம், ஊர் ஆகிய முறைகள் காணப்பெறுகின்றன. நாட்டாரின் பணி மன்னனின் ஆணையை செயல் வடிவம் செய்தலாகும். ஊர்கள் பிரம்ம தேயமாக மாற்றி அந்தணர்களுக்கு வழங்கப்பட்டன. |
| 2. இரு பக்கம் உயர்ந்த விளக்குகளுக்கு இடையே படுத்த நிலையில் நந்தி காணப்படுவது பல்லவர் முத்திரையாகும். அரசனின் ஆணைகளை செயல்படுத்த அரசமுத்திரை இன்றியமையாதது ஆயிற்று. | 2. ஊரார் சபையாருடன் கூடி ஊர்ப் பணிகளைச் செய்தனர். ஊரவையார் பெரு மக்கள் என்றழைக்கப்பட்டனர். ஒவ்வொரு அவையும் ஏரிவாரியம், தோட்டவாரியம் என்ற பிரிவுகளைப் பெற்றிருந்தது. (எ.கா.) உக்கல், கல்வெட்டு. |
| 3. தமிழ்ப் பேரரையன், உள்படு, கருமத் தலைவர் வாயில் கேட்போர், சேனைத் தலைவர் போன்ற அரசு அதிகாரிகள் இருந்துள்ளனர். | 3. கிராம சபையானது சபை, மகாசபை என்ற இருவகையாக இருந்தது. சபை தவிர கணங்கள் என்ற அமைப்பும் இருந்துள்ளது. கிராம சபை பல வாரியங்களைப் பெற்றிருந்தது. பணியாற்றியவர்கள் பொன்னை முதலாகப் பெற்றுள்ளனர். |

## பாண்டியர்

| பேராட்சி | ஊராட்சி |
|---|---|
| 1. பாண்டிய மன்னர்களின் தலைநகராக மதுரை, விளங்கிற்று ஆட்சிக்கு உரிய பகுதிகளை வளநாடு, கூற்றம் நாடு, ஊர், நகரம், சதுர்வேதி மங்கலம் போன்ற பிரிவுகளைக் கையாண்டனர். வளநாடு நாட்டுப்பிரிவுகளுள் பெரியது ஆகும். இது பல நாடுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும்.<br>2. வளநாடுகளில் அமிர்த குண வளநாடு, நித்த வினோத வளநாடு, ஸ்ரீ வல்லப வளநாடு, பாண்டி மார்த்தாண்ட வளநாடு, திருவழுதி வளநாடு போன்றவற்றை காணமுடிகிறது.<br>3. வளநாட்டிற்கு அடுத்து கூற்றம், நாடு ஆகியவை கருதப்பட்டுள்ளன. (எ.கா.) மிழலைக் கூற்றம். நடுவிற் கூற்றம், களக்குடி நாடு, தென்கள வழிநாடு.<br>4. நாட்டினை அடுத்துள்ள சிறிய பிரிவு ஊர்ஆகும். ஊர்கள் பிரம்மதேயம், (அ) சதுர்வேதி மங்கலம், இவை நகரம், நல்லூர், பட்டினம் எனவும் பெயர் பெற்றன. | 1. சபை, ஊர், நாடு என்ற அவைகள் ஊராட்சி நிர்வாக அவைகள் ஆகும். பிரம்மதேயங்களில் இருந்த அவை சபை என்றும், பிற இடங்களில் இருந்தவை ஊரவை என்றும் வணிகர்கள் வசித்த பகுதி நகரவை என்றும் சபை அலுவலர்கள் சபையார் ஊர் அலுவலர் ஊரார் என்றும், நகரவை அலுவலர் நகரத்தார் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். (உதாரணம் திருச்செந்தூர்க் கல்வெட்டு) ஒவ்வொரு நாட்டிலும் ஒரு நாட்டவை இயங்கி வந்துள்ளது.<br>2. சபை கூடிய இடம் கோயில் அல்லது பொது மன்றமாக இருந்தது.<br>3. வீதிகள், தெருக்கள், தொழில் புரிவோர் அடிப்படையில் இருந்தன. அரசன் நகரத்தில் வாழ்ந்தான் என்பதை ஸ்ரீவரமங்கலச் செப்பேடு கூறுகிறது. |

## சோழர்

குறிப்பு

குறிப்பு

| பேராட்சி | ஊராட்சி |
|---|---|
| 1. சோழர்கள் தங்கள் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைப் பல மண்டலங்களாகப் பிரித்துக் கொண்டனர். இராசராசன் காலத்தில் சோழ மண்டலம், மும்முடிச் சோழ மண்டலம், நிகரிலிச் சோழ மண்டலம், அதிராசச் சோழ மண்டலம் எனப் பலமண்டலங்கள் இருந்தன. இதில் சோழ மண்டலம் தவிர உள்ள மண்டலங்களைப் பிற மன்னர்களும் ஆண்டுள்ளனர்.<br><br>2. பேராட்சியின் தலைவனாக மன்னனே இருந்தான். அரசுரிமை தந்தைக்குப் பின் மூத்த மகனுக்கு வழங்கப்பட்டது. மன்னன் ஆளும் போதே மூத்த மகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டப்பட்டு அரசியல் முறைகள் அறிய வாய்ப்பு கொடுக்கப்பட்டது. | 1. மண்டலங்கள் பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டன. வளநாடுகளின் உட்பிரிவுகள் நாடுகள் அல்லது கூற்றங்கள் என்றழைக்கப்பட்டன. நாடுகள் பல ஊர்களையும், தனியூர்களையும், சதுர்வேதி மங்கலங் களையும் கொண்டு விளங்கின. இவ்வகையில் கட்டுக் கோப்பான கிராம ஆட்சி முறையைச் சோழர்கள் செய்துள்ளனர்.<br>2. நீர்நிலைகளின் அமைப்பிற்கேற்ப ஊர்கள் ஏற்படலாயின. தேரோடும் திருவீதிகளையும் குடியிருப்புத் தெருக்களையும் கொண்டு ஊர்கள் இருந்தன. பெருந்தெருக்கள் யாவும் மன்னனின் பெயரால் அழைக்கப்பட்டன. (எ.கா) மும்முடிச் சோழப் பெருந்தெரு வீரசோழப்பெருந்தெரு மேலும் சில தெருக்கள் வாழும் மக்களின் செய்தொழில் பெயரால் அழைக்கப்பட்டன. (ஆணை ஆட்கள் தெரு, சாலியத் தெரு). பல நாடுகளைக் கொண்டது பெருநாடு. நாடுகள் பல சிற்றூர்களைக் கொண்டிருந்தன. சிற்றூர்கள் மற்றும் பிரம்மதேயங்கள் பல சபைகளைக் கொண்டிருந்தன. ஓவ்வொரு நாட்டிற்கும் தனிச்சபை இருந்தது. வாரியங்கள் வழி நடத்தின. |

நாயக்கர்

குறிப்பு

கி.பி. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தின் பேரரசுகள் அனைத்தும் வீழ்ச்சியுள்ளன. வந்தவரெல்லாம் ஆங்காங்கே ஆட்சி புரியத் தொடங்கினா். இச்சமயத்தில் விஜயநகரப் பேரரசா்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தமிழகத்திற்கு அனுப்பி வைத்தனா். அவா்கள் விஜய நகரப் பேரரசின் காரிய கா்த்தா்கள் என்றழைத்துக் கொண்டு ஒரு நிலையான ஆட்சியைத் தர முயன்று வெற்றி கண்டதன் விளைவாக நாயக்கா் ஆட்சித் தோன்றியது. நாகம நாயக்கன் முதலிலும் அடுத்து அவனது மகன் விசுவநாதநாயக்கன் இவனைத் தொடா்ந்து கி.பி.1529 முதல் 1736 வரை சுமாா் இருநூறு ஆண்டுகள் நாயக்கா் ஆட்சி நிலைத்திருந்தது. தளவாய் எனும் பதவி பெரியதாக இருந்தது. பிரதானி, நாயகம், ஸ்தானபதி, கணக்கன் போன்ற அரசு அலுவலா்களும் இருந்தனா்.

தங்களின் வசதிக்கு ஏற்ப 72 பாளையங்களாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு பாளையத்துக்கும் ஒரு தலைவனை நியமித்து ஆளச் செய்தனா். கொத்தளத்தையும் ஒரு பாளையக்காரன் காத்து வர ஆணையிடப்பட்டுள்ளது. பாளையத்தைக் காத்தவா் பாளைக்காரா்கள் எனப்பட்டனா். இவா்களுக்கு மேலானவன் தளவாய்ப் பதவியில் இருப்பவன். இவனது நாடு இராஜ்ஜியம் என்றழைக்கப்பட்டது. இராஜ்ஜியங்கள் மண்டலங்களாகவும், சீர்மைகளாகவும், நாடு மற்றும் ஊா்களாகவும் பிரிக்கப்பட்டன. மக்களின் பலன் மக்களுக்கே சேர பேராட்சி, ஊராட்சி முறை வேண்டும் என்பதில் கவனம் கொண்டிருந்தது.

ஊா்கள், மங்கலம், சமுத்திரம், குடி, பட்டி, இளம், குறிச்சி என்றெல்லாம் அழைக்கப்பட்டன. இத்தகைய நிலைகள் மீண்டும் வீழ்ச்சி அடையத் தொடங்கின.

**மராட்டியா்**

தஞ்சை மராட்டியா்கள் கி.பி. 1676 முதல் 1856 வரை ஆண்டனா். தஞ்சையை ஆண்ட மன்னா்களில் மராட்டியா் காலமே பல்வேறு இன்னல்களைச் சந்தித்தது எனலாம். அதிகார வரன்முறை செய்யப்பட்ட நிா்வாகம் இயந்திரகதியாய் உருவானது. தலைமை நீதி நடுவராக அரண்மனைப் புரோகிதரும், மன்னனின் ஆலோசகரான மந்திரியும், படைத் தலைவனாய் தளவாயும், வருவாய்த் துறைத் தலைவராகத் திவானும் இப்படிக் கீழ்நிலை வரை பல நிலைகளில் அதிகாரிகள் இருந்தனா்.

(தஞ்சை) நாட்டை பட்டுக்கோட்டை மன்னாா்குடி கும்பகோணம், மாயவரம், திருவடி என்ற சுபாக்களாகவும், சுபாக்களைச் சீமைகளாகவும், மாகாணங்களாகவும், 5753 கிராமங்களாகப் பிரித்து ஆட்சி செய்துள்ளனா்.

## அரசியலில் பெண்கள்

பல்லவா் காலம் முதல் மராட்டியா் காலம் வரை அரசியலில் ஈடுபட்ட பெண்கள் குறித்துக் காணலாம்.

**பல்லவா் காலம்**

குணபதேயம் செப்பேடு வழியாக சாருதேவி எனும் பெண்மணியைக் குறித்த செய்தியில் புத்தவா்மன் தேவியும், அங்குரன் என்று முடியும் பெயருள்ள மகனின் தாயுமான சாருதேவியின் கட்டளைப்படி கோயிலுக்கு அளிக்கப்பட்ட நில தானத்தைக் குறித்து அறிய முடிகிறது. தமிழக வரலாற்றில் ஏன் இந்திய வரலாற்றில் தானம் வழங்கிச் செப்பேடுகள் தந்த முதல் பெண்மணியாகச் சாருதேவியைக் குறிப்பிடலாம்.

**பாண்டியர் காலம்**

தமிழக வரலாற்று நூல்களை வைத்துக் காணும் பொழுது அரசுப் பணிகளில் பெண்கள் இடம் பெறவில்லை. கோயில்களில் தொண்டாற்றும் பணிப் பெண்களும், கோயிலில் ஆடல் பாடலில் ஈடுபட்ட பெண்களுமிருந்துள்ளனா். பெற்றோர் தமக்குப் பிடித்தமான கடவுளரின் பணிக்காகக் கன்னியரைக் கோயிலில் ஒப்படைத்தள்ளனா். இளம் கன்னியரைக் கோயில்களுக்குப் பொட்டுக் கட்டியிடும் வழக்கம் இருந்துள்ளது. மடத்து வாழும் துறவிகள் தெய்வங்களுக்கு விழா எடுக்கும் போது ஆடல் பாடல்களில் தேறின தேவா் அடியார்களை அழைப்பது ஒரு சிறந்த வழக்கமாக இருந்துள்ளது.

கூன் பாண்டியனின் மனைவி மங்கையா்க்கரசியார் சோழா்குல விளக்கும், பாண்டிமா தேவியுமாவார் என்பதால் பாண்டியர் சோழவம்சத்து மகளிரை மணமுடித்துள்ளனா். மங்கையா்க்கரசியார் சைவ சமயத்திற்குப் பலவாறான தொண்டுகளைச் செய்துள்ளாா்.

**சோழா் காலம்**

சமூக வாழ்வில் பங்கேற்க பெண்களுக்குத் தடை ஏதும் இல்லை. கற்பும், அடக்கமும் போற்றப்பட்டது. சொத்து வைத்துக் கொள்வதற்கும் அந்தச் சொத்துக்களைத் தாங்கள் விரும்பியடி அனுபவித்து வரவும் அவா்களுக்கு உரிமை இருந்துள்ளது. அரச குடும்பத்துப் பெண்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்துள்ளது. செம்பியன் மாதேவியார், குந்தவை பிராட்டியார், உலோகமா தேவியார் போன்றோர் தொடா்புடைய கல்வெட்டுகள் வழி இதனை அறிய முடிகிறது. உடன்கட்டை ஏறும் வழக்கம் வானவன் மாதேவி வழி அறியப்படுகிறது.

அரசனுக்குப் பட்டத்தரசியைத் தவிர பிற மனைவியரும் இருந்துள்ளனா். இராசராசன் காலத்தில் ஆடல், பாடல், இறைத் தொண்டு செய்ய 400 தேவரடியார்கள் நியமிக்கப்பட்டிருந்ததைக் கல்வெட்டுகள் புலப்படுத்தகின்றன. தவிர பெண்கள் அடிமைகளாக விற்கப்பட்டுள்ளனா். விலைக்கு வாங்கப்பட்டுள்ளனா்.

அரண்மனை சேவைகளுக்கு வாங்கப்பட்ட பெண்ணின் உடலில் அரச முத்திரையும், சிவன் கோயிலுக்கு வாங்கப்பட்ட பெண்கள் மீது திரிசூலமும் பொறிக்கப்பட்டது. தேவரடியார்கள் மணம் செய்து கொண்டு வாழ்ந்துள்ளமையைத் திருவொற்றியூா்க் கல்வெட்டினால் அறிய முடிகின்றது. சோழா் காலத்தில் பெண்கள் இறை பணியில் அதிக ஈடுபாடு கொண்டிருந்ததைச் சாசனங்கள் வழி அறியலாம்.

குறிப்பு

**நாயக்கர் காலம்**

விசயநகர அரசியின் தங்கையை மணந்ததால் செவ்வப்ப நாயக்கனுக்குச் சீதனமாகத் தஞ்சை வழங்கப்பட்டது. தஞ்சை நாயக்க மன்னர்களின் வரிசையில் முதலாமவர் செவ்வப்ப நாயக்கராவார். இவர் விசய நகரப் பேரரசர் அச்சுதராயரின் மனைவியான திருமலாம்பாவின் தங்கை மூர்த்தியம்மாளின் கணவர் ஆவார். திருமலாம்பா பேரரசி சிறந்த புலமைமிக்கவர் இவர் வரதாம்பிகா பரிணயம் எனும் நூலில் குறிப்பிட்டுள்ள வரிகளால் அச்சுதராயரின் உள்ளம் கவர்ந்தவள் என்பது தெளிவாகிறது. மன்னனின் உள்ளங்கவர் நாயகியின் தங்கையான மூர்த்திமாம்பா மீது உள்ள பாசத்தால் அவளது கணவனான தளவாய் செவ்வப்ப நாயக்கனைத் தஞ்சையின் அரசனாக்கி, சீதனமாகச் சோழ மண்டலத்தை (தஞ்சையை) அவனுக்கு அளித்தார். இதனால் சோழ நாட்டில் நாயக்கர் ஆட்சி உதயமாவதற்குக் காரணமாகத் திகழ்ந்தவள் மூர்த்திமாம்பா எனும் அரசி ஆவாள். இவளின் செப்புத் திருமேனிகளும், புடைப்புச் சிற்பங்களும் கோயில்களில் உள்ளன. மூர்த்தியம்மாள்புரம் எனும் ஊர்ப்பெயரும் வழங்கப்பட்டு வருகிறது.

**இராணி மங்கம்மாள்**

கி.பி. 1688இல் விசயரங்க சொக்க நாதனின் பாட்டி பகராண்மையாட்சி மேற்கொண்டார் 1706 வரை இவர் மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்தார். மொகலாயர்களின் பலத்தையும் நாயக்கர்களின் பலவீனத்தையும் அறிந்த மங்கம்மாள் மொகலாய மன்னனுக்குப் பணிந்து, திறை செலுத்த இணங்கி, மொகலாய தளபதிக்கு விலை உயர்ந்த பொருள்கள் அன்பளிப்பாகக் கொடுத்து அவருடைய உதவியைப் பெற்றார். மராட்டியர்களிடம் இழந்த பகுதிகளை மீட்டுக் கொண்டார். 1702-ல் கர்னாடக நவாப்பாகவிருந்த தாதுக்கானின் துணையுடன் உடையார் பாளையச் சிற்றரசன் கைப்பற்றி வைத்திருந்த பகுதிகளையும் மீட்டார். மராட்டியர் தொல்லைகளையும் மைசூர் படையினரின் தாக்குதல்களையும் பணம்கொடுத்து தவிர்த்தார். சிற்றரசர்களை வென்று பொன்னும் பொருளும் பெற்றார்.

மங்கம்மாளின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் இராமநாதபுரத்தை ஆண்ட கிழவன் சேதுபதி, நாயக்கர் நாட்டுக்குத் தொல்லை தந்தான். இதனால் ஏற்பட்ட போரில் இராமநாதபுரம் மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்தனர்.

மதுரையில் இருக்கும் கிறித்தவர்களை வெளியேற்றும்படி தஞ்சை அரசன் வேண்டியதை மங்கம்மாள் புறக்கணித்து பிற சமயத்தாரோடு பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார். இதனைப் பாதிரிமார்களின்

கடிதங்களும், கி.பி. 1692ஆம் ஆண்டு செப்புச் சாசனமும், கி.பி. 1701 தெலுங்குச் சாசனம் முஸ்லீம் பள்ளிவாசல்களுக்கும், தர்க்கர்க்களுக்கும் இராணி மங்கம்மாள் கிராமங்களைத் தானமாகக் கொடுத்ததை விளக்குகின்றன.

கி.பி. 1687-லும், 1704-லும் இராணி மங்கம்மாள் உய்யக் கொண்டான் வாய்க்காலைச் செப்பனிடச் செய்தார் என்று சாசனங்கள் கூறுகின்றன. புண்ணியத் தலங்கள் செல்லும் பயணிகளுக்காகவும் பிறருக்காகவும் நெடுஞ்சாலைகள் தோன்றின. சாலை ஓரங்களைச் சோலைகளும், மரங்களும், அன்னச் சாவடிகளும், சத்திரங்களும், தண்ணீர்ப் பந்தல்களும் அழகுபடுத்தின. அவரின் ஆட்சி மங்கம்மாள் சாலை மலை மேலே சோலை என்ற பாராட்டுதலைப் பெற்றது. நாயக்கரின் ஆட்சி வீழ்ச்சியை நோக்கிய போது தடுத்து காத்து நிறுத்தியவர். பல சிக்கலான காலத்தில் நாட்டைக் காத்ததோடு போர்கள் பலவும் தவிர்க்கப்பட்டன. இம்பெருமாட்டியின் உருவம் ஓவியமாக மதுரைப் பொற்றாமரைக் குளத்தின் அருகில் உள்ள திருமண மண்டபத்தில் நினைவுச் சின்னமாக விளங்குகிறது.

**மீனாட்சி**

விசயரங்கன் பாட்டியின் வளர்ப்பில் வளர்ந்தாலும் இறைபணியிலும் ஆடம்பரத்திலும் அதிக செலவிட்டான். வாரிசு இல்லாது கி.பி. 1732-ல் காலமானான். இவனின் மனைவி மீனாட்சி ஆட்சியை மேற்கொண்டார். அரசியல் நெருக்கடியில் சிக்கிய பொழுது மீனாட்சியின் உதவிக்கெனச் சென்ற சந்தா சாகிபு மீனாட்சியைச் சிறைப்படுத்தி திருச்சியைக் கி.பி. 1736-ல் கைப்பற்றினான்.

சோழர்குல மகளிர் அரசனுக்கு இணையான மதிப்பும், செல்வமும், அதிகாரமும் பெற்றிருந்தாலும், தனியே அரியணையேறவில்லை எனினும் அவர்களின் பெயர்கள் பேசப்பட்டன. அதைத் தொடர்ந்து வந்த நாயக்கர் காலத்தில் மகளிர் அரியணை ஏறி ஆட்சி புரிந்துள்ளார்கள்.

**மராட்டியர் காலப் பெண்கள்**

தஞ்சை மராட்டியர் ஆட்சியிலே அரியணையில் அமர்ந்த ஒரே பெண்ணரசி சுசான்பாய் ஆவார். கி.பி. 1736-37இல் ஒரே ஆண்டு மட்டும் மன்னராகத் திகழ்ந்த பாவாசாகிப் எனும் இரண்டாம் ஏகோசியின் மனைவியே சுசான்பாய், தமக்கு மகப்பேறு இல்லாததால் தம் கணவரின் மரணத்திற்குப் பின்பு தாமே அரியணையில் அமர்ந்தார். சுசான்பாயின் ஆட்சி 3 ஆண்டுகள் நடைபெற்றதாகச் சுவடிகள் கூறுகின்றன. கோட்டையின் இராணுவப் பாதுகாப்புத் தலைவனான கில்லோதார் பதவி வகித்த சையத் இராணுவத்தினரைத் தனக்குச் சாதமாக்கிக் கொண்டு காட்டு ராசாவுக்கு உதவுவது போல சுசான்பாயைக் கைது செய்ய முற்பட்டான். அப்போது சுசான்பாய் தாமே வாளேந்தி சையத்துடன் போரிட்டு வீர மரணம் அடைந்தார்.

சோழ மண்டலத்து வரலாற்றிலேயே ஒரு பெண் அரியணையமர்ந்து அரசாட்சி செய்து, வாளேந்திப் போர் புரிந்து வீரமரணம் அடைந்தார் எனில் அது சுசான்பாயைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது.

குறிப்பு

சோழர் குல அரச மகளிர் செய்த தானங்களை ஒத்த தானங்களை மராட்டிய குல அரச மகளிர் செய்துள்ளனர். தஞ்சையில் தற்போதுள்ள அரசு இராசா மிராசுதார் மருத்துவமனை அமைந்த இடத்தைத் தானமாக மருத்துவமனை அமைக்க கொடுத்தவர் மராட்டிய அரச குலபெண்மணி ஆவார். செப்புத் திருமேனிகளைத் திருகோயில்களுக்கு வழங்குதல், இறை ஈடுபாடு ஆகியவற்றில் மராட்டிய குல மகளிரின் பங்களிப்பும் தக்கதொரு இடம் வகிக்கின்றது எனலாம்.

## குற்றங்களும் - தண்டனைகளும்

அக்காலத்தில் நடைபெற்ற குற்றங்களும் அதற்காக விதிக்கப்பட்ட தண்டனைகளும் குறித்து காணலாம்.

### பல்லவர்

உடலைத் துன்புறுத்தும் தண்டனையை அரசர்கள் அளித்தனர் என்ற குறிப்பு காணப்படுகிறது. குற்றமிழைத்தவர்கள் கைது செய்யவும் தண்டிக்கவும் பட்டனர். கடுங்குற்றவாளிகள் சேனை தண்டனையிலிருந்து தப்பி வெளிவர இயலாதபடிக் காவலில் வைக்கப்பட்டோடு, எளிதில் திறக்க இயலாத இரும்புத் தாளினைப் பலமுறை திருகிக் கோத்த அரிய காவலில் வைக்கப்பட்டனர். சிறியயோரின் குற்றங்களுக்குப் பெற்றோரை வருத்தினர்.

### பாண்டியர்

ஊர்ச்சபை நடவடிக்கைகளில் ஒவ்வொரு முன்னீட்டையும் கட்டுப்பாட்டையும் எதிர்க்கக்கூடாத. தடுக்கவும் கூடாது. அவ்வாறின்றித் தடங்கல் செய்தோர் தாமும் தம் சார்பாளருமாகத் தம்மால் செய்யப்பட்ட குத்துக்காலுக்கு (தடங்கலுக்கு) ஐந்து காசுகள் தண்டம் விதிக்கப்பட்டது. தவறுகளும் ஊழல்களும் காணப்படின் பாரபட்சமின்றித் தக்க தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. வேள்விக்குடிச் செப்பேடு வழி நிலத்தை அபகரித்தவனிடமிருந்து அரசன் மீட்டுக் கொடுத்தமை அறியப்படுகிறது.

### சோழர்

களவு கூடா ஒழுக்கம் பொய்க் கையெழுத்துப் போடுதல் இம்மூன்றும் கொடிய குற்றங்களாகக் கருதப்பட்டன. இவற்றைச் செய்தவர்கள் வாரியங்களில் அங்கத்தினராக ஆவதற்குத் தகுதியற்றவர்கள் என்று உத்தரமேரூர் கல்வெட்டு கூறுகிறது. இக்குற்றவாளிகள் கழுதை மீது ஏற்றப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டனர். சில குற்றங்களுக்கு அபராதங்கள் மட்டும் விதிக்கப்பட்டன.

குறிப்பு

கொலைக்குற்றம் செய்தவர்கள் கூட மன்னிக்கப்பட்டு கோயில் நந்தா விளக்கு ஏற்றி வைக்குமாறு பணிக்கப்பட்டனர்.

மூன்றாம் இராஜராஜன் காலத்தில் ஏறக்குறைய கி.பி. 1223-இல் நடந்த நிகழ்ச்சியைத் தஞ்சையிலுள்ள திருநாகேஸ்வரம் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. பல கோயில்களில் கணக்கெழுதி வந்த மூவர் கோயில் சொத்தைப் பலவிதமாகச் சூறையாடினர். கடவுளுக்குக் கொடுக்கப்பட்ட ஆடைகளைத் தாங்களே உபயோகித்தனர். கோயிலுக்காக வாங்கப்பட்ட செங்கற்களைக் கொண்டு சொந்த வீடுகள் கட்டினர். அரசர் ஒரு சமயம் அங்கு வந்தபோது அவர் முன்னிலையில் உயர் அதிகாரி யாதவராயரிடம் இதைப்பற்றி கோயில் அதிகாரிகள் முறையிட்டனர். உடனடியாக விசாரணை செய்யப்பட்டு, கணக்கர்கள் தண்டிக்கப்பட்டனர். அவர்களது நிலங்கள் அனைத்தும் விற்கப்பட்டு, அதில் கிடைத்த 40,000 காசுகள் கோயில் கணக்கில் சேர்க்கப்பட்டது. கணக்கு எழுதும் உரிமையும் 3000 காசுகளுக்கு விற்கப்பட்டுள்ளது.

தேவதான கிராமத்திலிருக்கும் ஆடு மாடுகளைக் களவாடியவர்களின் சொத்து கோயிலைச் சாரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த சௌ.சூ.குவா என்னும் சீன ஆசிரியர் சோழர் நீதிமுறையைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார். குற்றம் புரிந்தோரை அமைச்சரவையிலுள்ள ஒருவரே விசாரித்துத் தண்டிக்கிறார். குற்றம் சிறியதாயிருந்தால் குற்றவாளி, கம்பத்தில் கட்டப்பட்டு 50, 70 அல்லது 100 கசை அடிகள் பிரம்பால் கொடுக்கப்படுகிறது. பெரும் குற்றங்கள் செய்தோரின் அங்கங்கள் துண்டிக்கப்பட்டன. அவர்கள் யானைகளால் மிதிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

நில அபகரிப்பு தொடர்பாகப் பல வழக்குகள் தீர்க்கப் பெற்றுள்ளன. சோழர் காலத்தில் நடைபெற்ற குற்றங்களும் தண்டனைகளும் பற்றி அறிய பல்வேறு சாசனங்கள் துணை நிற்கின்றன.

**நாயக்கர்**

கள்வர்கள் தொல்லை மலிந்திருந்தது. வழிப்பறி கொள்ளை நடைபெற்றன. அதிகாரிகளில் பலர் மக்களிடம் முறையின்றி நடந்து கொள்ளையடித்தனர். சிறைகள் இருந்தன. பகை காரணமாக சிறைபடுத்தப்பட்ட நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன. குற்றங்களைத் தடுத்து நிறுத்தி தண்டனைகள் கொடுப்பதை விட பகைவரை எதிர்கொள்வதே பெரும் சவாலாக இருந்தன. அடிமட்டத்தில் உள்ளோரிடம் நீதி சென்று சேரவில்லை.

**மராட்டியர்**

கிறித்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். துறவிகள் சிறையில் அடைக்கப்பட்டனர் என்று மனூச்சி கடிதங்கள் கூறுகின்றன. மன்னர்கள் பெரும் ஆடம்பர விரும்பிகளாய்

இருந்தனர். மக்கள் உழைப்பையும், செல்வத்தையும் பறிகொடுத்து வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

குறிப்பு

### பட்டங்களும் பெயர்களும்

பொறையன், ஆதன் போன்ற பெயர்கள் சேரரைச் சார்ந்தன. சேழியன், சேந்தன் எனும் பெயர்கள் பாண்டியரைக் குறிக்கின்றன. கிள்ளி, வளவன் முதலியன சோழர் பெயரறிய இலக்கியங்கள் கூறுகின்றன. இவை மன்னர்களைக் குறிக்கின்றன.

மன்னர்களுக்குப் பல்வேறு விருது பெயர்கள் சாசனங்களில் இடம் பெற்றுள்ளன. அவற்றைக் கல்லில் பொறித்து மன்னர்கள் பெருமிதம் அடைந்துள்ளனர். பல்லவ மன்னர்கள் இதில் குறிப்பிடத்தக்கராவர். நூற்றுக்கணக்கான விருத பெயர்களைப் பெற்ற மன்னர்கள் இருந்துள்ளனர்.

ஏனாதி, காவிதி, மாராயன், கிழவன் எனும் பட்டங்களும், வேளாண் எனும் குடிப்பெயரும் முத்தரையயர், சோளிங்கர் முதலியவர்களும் தொண்டைமான்களும், முதலிகளும், சிறந்தவர்களாக மதிக்கப்பபட்டுள்ளனர். நாயக்கர் கால முதல் தளவாய் முதலிய பதவிப் பெயர்கள் வழங்கப்பட்டன. மராட்டியர் காலத்தில் அரசு ஊழியர்களாக அதற்குரிய பணிப்பெயருடன் இணைத்து அழைக்கப்பட்டுள்ளனர்.

### ஆவணப்பதிவு முறை

மக்கள் தங்கள் சொத்துக்களைப் பாதுகாக்க முறையான ஆவணங்களைப் பயன்படுத்தியுள்ளனர். அதற்கான துறை அரசின் கீழ் செயல்பட்டுள்ளது. ஆவணம், பிரமாணம், தீட்டு, ஓலை, ஆள்ஓலை எனும் சொற்கள் சோழர் காலத்து சாசனங்களில் மிகுதியாக உள்ளன. இதனால் சோழாகள் காலத்து முறைகளைக் காணலாம். ஆவணம் எனுஞ் சொல் விலை ஆவணம், நிலவிலை ஆவணம், பங்குவிலை ஆவணம் என்று கல்வெட்டுகளில் உள்ளன.

பிரமாணமானது விலைப் பிரமாணம், நிலவிலைப் பிரமாணம், பூமி பிரமாணம், இறைகாவல் பிரமாணம், ஆசிரியப் பிரமாணம், சண்டேச்வர பிரமாணம் எனக் கல்வெட்டுகளில் இடம் பெறுகின்றன. இதில் ஆசிரியப் பிராமணம் என்பது அஞ்சியவர்களுக்கு அடைக்கலமளிப்பது தொடர்பானது. இறைகாவல் பிரமாணம் என்பது வரியைக் கட்டுவதற்கு விலக்களிப்பது தொடர்பானது.

தீட்டு எனில் எழுதப்பட்டது என்ற பொருளில் ஒட்டிசைவுத் தீட்டு, ஏவல் தீட்டு, உபயத்தீட்டு, இசைவுத் தீட்டு எனுமாறு கல்வெட்டில் காணப்படுகின்றன. இசைவுத் தீட்டு எனில் இருவர் தத்தமக்குரிய விலை முறைகளை ஏற்று

எழுதிக் கொள்வது எதிர்காலத்தில் இப்படி நடைபெற வேண்டும் எனும் உடன்படிக்கையானது நிலைமைத் தீட்டு எனப்பட்டது. இறை நாமத்தில் கோயிலுக்கு நிலத்தை எழுதித் தருவது அந்நிய நாமகரணத் தீட்டு எனப்பட்டது.



ஓலையானது அறையோலை, இறையோலை, ஓட்டோலை, சிலவோலை, செம்போலை, ஆளோலை, அறுதிப் பரிவர்த்தனை ஓலை, விலையாவணவோலை, கையெழுத்து ஓலை எனப்பல வகைகளில் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளன. இறையோலை என்பது வரி விலக்குத் தொடர்பானதாகும்.

ஆள் ஓலை என்பது மனிதனை விலைபேசி விற்று அதற்கான எழுத்துப்பதிவு செய்யும் ஆவணச் சான்றாகும்.

எடுத்துக்காட்டாக, மூன்றாம் இராஜராஜன் காலத்தில் ஆள் விலைப் பிரமாணத்தீட்டு ஒன்று எழுதப்பட்டுள்ளது. (தெ. இ.க. 17:541) இதன் வழி அரியான் பிச்சை என்பவனால் 10 பேர் 1000 காசுக்கு விற்கப்பட்டுள்ளனர். தவிர பெண்களை இறை பணிக்காகவும் அரண்மனை பணிக்காகவும் விலை கொடுத்து பெறப்பட்ட சான்றுகள் சாசனங்களில் இடம் பெற்றுள்ளன.

ஆவண வழக்காற்றில் எழுத்து, அறிவேன், ஸயிக்ஞை, தற்குறி, மாட்டறிதல், முதுகண், புணை, திரிவிட்டுக் கொடுத்தல், ஒட்டிக்கொடுத்தல், அடுத்துக் குடுத்தல் மற்றும் ஆவணம் எழுதியவர் பற்றிய செய்திகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

| | |
|---|---|
| எழுத்து | உடன் படிக்கையின் இறுதியில் கையெழுத்து இடுதல். |
| அறிவேன் | சாட்சி கையெழுத்து இடுபவரின் கையெழுத்து |
| ஸயிஞ்ஞை அல்லது தற்குறி- | கையெழுத்து இடத்தெரியாதவர்கள் ஏதாவது ஒரு கீறலை இடுவர் அக்கீறல் ஸயிஞ்ஞை அல்லது தற்குறி எனப்பட்டது. |
| மாட்டறிதல் - | ஸயிஞ்ஞை அல்லது தற்குறிக்கு அருகே கையெழுத்திடத் தெரிந்தவர் ஒருவர் கையெழுத்திடல் (அதற்கும் சாட்சியாக) |
| முதுகண் - | சொத்துக்களுக்குரிய பாதுகாவலர் பிரதிநிதி கையொப்பம் (தாயின் சொத்துக்குப் பிள்ளை பிரதிநிதி அதுபோல அடுத்து அனுபவிக்கும் உரிமை உடையவர் கையொப்பம்) |
| புனை | தர்ம செயல் ஒப்புக் கொண்டாரின் பிரதிநிதி கையொப்பம் (அவர் செய்யவில்லை எனில் அவருக்குப் பதிலாகச் செய்யக் கூடியவர்) |
| திரிவிட்டுக் கொடுத்தல் | ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவர் பெயருக்கு மாற்றிக் கொடுத்தல். |
| ஒட்டிக் கொடுத்தல் | சம்மதம் செய்து கொடுப்பது, (ஒரு செயல் செய்ய) |

அடுத்துக் குடுத்தல் - தாம் செய்த தானத்தைப் பாதுகாக்க மேலும் கொடுக்கக் கூடிய பராமரிப்பு சலுகைகள்.

ஆவண எழுத்தர் - ஊர் கணக்கர், மத்யஸ்தர் போன்றோர் இதனை எழுதி வைக்கும் பணியைச் செய்து வந்தனர்.

குறிப்பு

**போர்கள்**

புறத்திணைகளும், புறப்பாடல்களும், நடுகற்களும் வீரத்தின் அடையாளங்களாகக் கருதப்படினும் சாசனங்கள் வழி அறியலாகும் போர் - போர் நடைபெற்ற இடங்கள் ஆகியவற்றைக் குறித்து அறியலாம்.

சேரர்களின் போர்கள் இலக்கியங்கள் அறியப்படுகின்றன. பல்லவர் காலம் முதல் உள்ள சாசன சான்றுகளைக் கொண்டு காணலாம்.

**பல்லவர் போர்கள்**

வடமொழிப் பட்டயங்கள் வழியாகப் பல்லவர்கள் செய்த போர்கள் குறித்து காண்போம். கி.பி.340 முதல் 575 வரை பல்லவர்கள் மேற்கொண்ட போர்கள் குறித்து அட்டவணை வழிக் காணலாம்.

| போர் எண் | காலம் (கி.பி.) | பல்லவ மன்னன் | போரிடப் காரணமானவர் |
|---|---|---|---|
| 1. | 340-350 | குமாரவிஷ்ணு I | குப்தர் I (முதல்முறை) |
| 2. | 345-360 | குமாரவிஷ்ணு (அ) கந்தவர்மன் - I | கதம்பர் - I |
| 3. | 350-375 | வீர கூர்ச்சவர்மன் | வாகாடகர் - I |
| 4. | 400-436 | கந்தர்வர்மன் - II | வாகாடகர் I (இரண்டாம் முறை) |
| 5. | 436-460 | சிம்மவர்மன் I | கதம்பர் II |
| 6. | 436-460 | குமாரவிஷ்ணு III | வாகாடகர் III |
| 7. | 460-475 | கந்தவர்மன் III | கதம்பர் III |
| 8. | 460-475 | புத்தவர்மன் | சோழர் |
| 9. | 475-480 | சிம்மவர்ாமன் II | கதம்பர் IV |
| 10. | 500-525 | விஷ்ணுகோபவர்மன் | கதம்பர் V |
| 11. | 525-550 | நந்திவர்மன் I | சாளுக்கியர் I |
| 12. | 550-575 | சிமமவர்மன் III | சாளுக்கியர் III |

இடைக்காலப் பல்லவர்களாகிய இவர்கள் இடைவிடாது போர் புரிந்து குப்தர், வாகாடகர், கதம்பர், சாளுக்கியர், சோழர் ஆகியவர்கள் பாதிப்படைந்தும் எதிர்கொண்டு வெற்றிபெற்றும் ஆண்டனர்.

குறிப்பு

**பிற்காலப் பல்லவர் போர்கள் (கி.பி. 575-900)**

புள்ளலூர், மணிமங்கலம், நெல்வேலி, பெருவளநல்லூர், தெள்ளாறு, திருப்புறம்பியம் முதலிய ஊர்களில் பல்லவர்கள் போர் மேற்கொண்ட செய்தியைச் சாசனங்கள் கூறுகின்றன. அவை வருமாறு,

**புள்ளலூர்ப் போர்**

புலிகேசிக்கும் மகேந்திரவர்மனுக்கும் இடையே போர் நடைபெற்றது. இப்போர் காஞ்சிபுரத்துக்கு 15கி.மீ தொலைவிலுள்ள புள்ளலூரில் நடந்தது. இப்போரில் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி தோற்கடிக்கப்பட்டான். 'காசாக்குடிப் பட்டயம்' மகேந்திரன் தன் பகைவனைப் புள்ளலூரில் அழித்தான் என்கிறது.

**மணிமங்கலப் போர்**

மணிமங்கலத்தில் கி.பி. 642ல் முதலாம் நரசிம்மவர்மன் மீது இரண்டாம்புலிகேசி போர்புரிய வந்தான். இப்போரில் நரசிம்மவர்மன் வெற்றி பெற்றதையும் இரண்டாம் புலிகேசி தலைநகரான வாதாபியை வென்று வெற்றித்தூண் நாட்டி வைத்ததையும் கூரம்செப்பேடு, உதய சந்தி மங்கலப் பட்டயம், வேலூர் பாளையப் பட்டயங்கள் கூறுகின்றன. வாதாபி 13 ஆண்டுகாலம் பல்லவர் கையில் இருந்தது.

**நெல்வேலிப் போர்**

பாண்டியன் நெடுமாறனுக்கும்-பல்லவருக்கும் நடைபெற்ற போரில் பாண்டியர் வெற்றி பெற்றனர் என அறியப்படுகிறது. கூரம் பட்டயம் விக்கிரமாதித்தன் தோற்றுஓடியதைக் கூறுகிறது. வேலூர் பாளைப் பட்டயம், சாளுக்கிய அரசனை அழித்தமையையும் கூறுகின்றது.

கேந்தூர் பட்டயம் தமிழரசர்களைத் துச்சமாக நினைத்த விக்கிரமாதித்தன் மீது பாண்டியர், சோழர், பல்லவர் என அனைவரும் சேர்ந்து போரிட்டு வென்றனர். எனவே இவ்வெற்றி தமிழ் மன்னர்கள் அனைவரின் வெற்றியும் ஆகும் என்கிறது.

**பெருவளநல்லூர்ப் போர்**

முதலாம் பரமேஸ்வரவர்மன் சாளுக்கிய மன்னன் முதலாம் விக்கிரமாதித்தியனோடு போரிட்டான். இதனைக் கத்வல் பட்டயமும், உதயேந்திரப் பட்டயமும் கூறுகின்றன. இப்போர் திருச்சிக்கு அருகே 15கி.மீ. தொலைவில் உள்ள இவ்வூரில் நடைபெற்ற

போரில் பல்லவனால் சமாளிக்க முடியாத பொழுது கி.பி.675இல் பிற தமிழ் மன்னர்கள் கூடி வெற்றி கண்டுள்ளனர்.



**தெள்ளாற்றுப் போர் (கி.பி. 834)**

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் வந்தவாசிக்கு அருகில் தெள்ளாறு எனும் இவ்வூர் உள்ளது. மூன்றாம் நந்திவர்மனின் காலத்துப் போர்களில் கி.பி.834ல் நடந்த தெள்ளாற்றுப் போர் சிறந்ததாகக் கருதப்பட்டது. 'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்' என்ற தொடர் இப்போரில் வெற்றி பெற்றமையைச் சிறப்பிக்கின்றது. கலம்பகம் பாரதவெண்பா முதலான நூல்களும் இப்போரில் வென்ற நந்திமன்னனைச் சிறப்பித்துக் கூறுகின்றன.

**திருப்புறம்பியப் போர் (கி.பி. 880)**

கும்பகோணத்திற்கு அருகிலுள்ள இவ்வூரில் பெரும் போர் கி.பி.880-இல் நடைபெற்றது. இப்போரில் பல்லவர் பெற்ற வெற்றி சோழருக்குச் சாதகமாகவும், பல்லவர் ஆட்சிக்குப் பாதகமாகவும் பின்னாட்களில் அமைந்தது. இரண்டாம் வரகுணன் எனும் பாண்டியனை எதிர்த்த பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மன் ஆவான். இப்போரில் பல்லவனுக்கு உதவியாகக் கங்க மன்னன் பிருதிவிபதியும், ஆதித்த சோழனனும் விளங்கினர். கங்க மன்னன் போரில் இறந்தான், ஆதித்த சோழன் பல்லவன் தந்த தஞ்சை உள்ளிட்ட பகுதிகளைக் கொண்டு சோழப் பேரரசு உருவாக அடிகோலிட்டான்.

**பாண்டியர் காலத்துப் போர்கள்**

வேள்விக்குடிச் செப்பேடுகள் வழியாகப் பாண்டியன் கடுங்கோன் கி.பி. 575 முதல் கி.பி. 600 வரையில் ஆட்சி புரிந்தான். பாண்டிய நாட்டைக் களப்பிரரிடமிருந்து முதலில் கைப்பற்றி மீண்டும் பாண்டியர் ஆட்சியை மதுரையில் நிலைபெறுமாறு செய்தவன் என்பதை அறியமுடிகிறது.

மாறவர்மனுக்கும் நந்திவர்மப் பல்லவ மன்னனுக்கும் இடையே பல போர்கள் நிகழ்ந்தன. குழும்பூர், நெடுவயல், குறுமடை, மன்னக்குறிச்சி, திருமங்கை, பூவலூர், கொடும்பாளுர், பெரியலூர் என்னும் ஊர்களில் பல்லவரை வென்றுள்ள பொழுதினும், நென்மேலி, மண்ணை முதலிய இடங்களில் நடந்த போர்களில் பல்லவர்கள் வென்றுள்ளனர்.

பாண்டியரும் பல்லவரும் - சோழர் முதலியோரை வென்றும், அவர்களிடம் தோற்றும் நடைபெற்ற போர்கள் பற்றி பல்வேறு சாசனங்கள் கூறுகின்றன.

**சோழர் காலத்துப் போர்கள்**

முதலாம் இராசராசன் தொடங்கி மூன்றாம் இராசராசன் வரை சோழ மன்னர்கள் ஏற்று செய்த போர்கள் குறித்துக் காணலாம்.

குறிப்பு

**காந்தளூர்ப் போர் (கி.பி. 988)**

கி.பி. 988 முதலாம் இராசராசன் வெற்றிகளில் மிகவும் சிறப்பித்துக் கூறப்படுவது காந்தளூர்ப் போரில் சோழனுடன் பாண்டியன் அமரபுயங்கனும் போரிட்டான். முடிவில் மும்முடி சோழன் என்ற பட்டம் பெற்றான். தமிழகத்தின் முழுமுதல் அரசன், தென்னாட்டின் தலைசிறந்த அரசன் என இராசராசன் பெயர்பெற இப்போரின் வெற்றி காரணமாயிற்று.

**கங்கைப் போர் (கி.பி. 1022-23)**

முதலாம் இராசேந்திரன் பெரும்படையுடன் வடதிசையில் கங்கைக்கரை வரை சென்று போரிட்டு சக்கரக் கோட்டம், ஒட்டரதேசம் (ஒரிசா) கோசலம், தண்டபுத்தி, தக்கணலாடம், உத்திரலாடம், வங்காளதேசம் ஆகியவற்றை வென்றான். மீண்டு வந்த அவன் அவ்வெற்றியின் நினைவாகக் கங்கைகொண்ட சோழபுரம் என்னும் பெருநகரை நிறுவி, அதனைத் தன் தலைநகரமாகக் கொண்டான். சோழகங்கம் என்னும் ஏரியை அமைத்துத் தம் வெற்றியின் அடையாளச் சின்னமாக ஆக்கினான்.

**கடாரப் படையெடுப்பு (கி.பி. 1025)**

முதலாம் இராசேந்திரன் தம் கடற்படையைக் கொண்டு சுமத்ரா, மலாயா, நிக்கோபார் தீவுகள் போன்ற அயல் தேசங்களை வென்றுள்ளான்.

**வடகலிங்கப் போர் (கி.பி. 1112)**

குலோத்துங்கனின் தளபதி கருணாகரத் தொண்டைமான் பெற்ற கலிங்க வெற்றி வரலாற்றுச் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.

**தஞ்சைப் போர் (கி.பி. 1219)**

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்து மூன்றாம் இராசராசன் ஆண்ட காலத்தில் தஞ்சையைப் பாழாக்கினான். பின்னர் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள பொன்னமராவதியில் பாண்டியன் அரியணையில் வீற்றிருந்த சமயம் மூன்றாம் இராசராசன் அவனைப் பணிந்து வேண்ட அவனும் சோழ நாட்டை மீண்டும் சோழனுக்கே அளித்தருளினான்.

**தெள்ளாற்றுப் போர் (கி.பி. 1232)**

தெள்ளாற்றில் நடைபெற்ற போரில் மூன்றாம் இராசராசன் கோப்பெருஞ்சிங்கன் என்னும் பல்லவர்குலத் தோன்றல் தோற்கடித்தான். மூன்றாம் இராசராசனையும் அவன்

குடும்பத்தாரையும் கோப்பெருஞ்சிங்கன் சேந்தமங்கலத்துக் கோட்டையில் சிறை படைத்தலைவர்களான அப்பண்ணனும், சமுத்திர சொப்பையனும் பெரம்பலூர் என்னும் ஊரில் நடைபெற்ற போரில் கோப்பெருஞ்சிங்கனை முறியடித்து சோழ மன்னனை விடுவித்தனர்.

குறிப்பு

**மாலிக்காபூர் படையெடுப்பு (கி.பி. 1309)**

அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக்கபூர் கி.பி. 1309இல் தெற்கே படையெடுத்தான். பாண்டியனின் உள்நாட்டுக் கலகத்தைப் பயன்படுத்தி தமிழகத்தில் தம் ஆட்சியை நிறுவ விரும்பினான். ஆதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சுந்தரபாண்டியனும் அவனின் சிறிய தந்தையான விக்கிரம பாண்டியனும் மாலிக்கபூரை எதிர்த்து நின்று வெற்றி பெற்று மதுரையைக் காத்தனர். ஆயின் சோழநாட்டுப் பகுதியில் வீரகவளப்பட்டினத்திலிருந்து ஆண்ட பாண்டியன் தலைநகரை விட்டு ஓடி விட்டான். அவனுடைய செல்வத்தையும், இராமேஸ்வரத்தில் நிகழ்த்திய கொள்ளையின் போது கைப்பற்றிய பொருள்களையும் எடுத்துக் கொண்டு மாலிக்காபூர் தில்லியை அடைந்தான்.

**மூக்கறுப்புப் போர் (கி.பி. 1656-1659)**

உடல் நலம் குன்றிய திருமலை நாயக்கன் படுக்கையில் வீழ்ந்தான். மைசூர் அரசன் முதலாம் கண்டீரநாசன் மதுரையைத் தாக்க படையை அனுப்பினான். இப்படை முதலில் சத்தியமங்கலத்தைப் பிடித்துக் கொண்டு தடையில்லாமல் மதுரையை நோக்கி வந்தது. இடையில் வழியெங்கும் மைசூர் மன்னனின் கட்டளைப்படி ஆண், பெண், குழந்தைகளை ஆயிரக்கணக்கில் பிடித்து மூக்கறுத்து மைசூருக்கு அனுப்பியது. இதனைக் கேட்ட திருமலை நாயக்கர் தன் நண்பன் சேதுபதியை உதவிக்கு அழைத்தான். ரகுநாதன் சேதுபதி எதிரிகளை எல்லை வரை துரத்தினான். மைசூர்வரை சென்று மதுரையில் மைசூர்ப்படை நிகழ்த்திய மூக்கறுப்புப் பணியை மைசூரில் நடத்தி பழிக்குப் பழி வாங்கினான். எனவே இப்போர் மூக்கறுப்புப் போர் எனப்பட்டது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற ஆர்க்காட்டுப் போர் (கி.பி. 1751), பாஞ்சாலங்குறிச்சிப் போர் (கி.பி. 1775-1798) வேலூர்ச் சிப்பாய்க் கலகம் (கி.பி.1806) ஆகிய போர்களும் தென்னிந்திய வரலாற்றில் இன்றியமையாதவை.

மராட்டியர் காலத்தில் நாயக்கருக்கு எதிராக போர் நடைபெற்றாலும் பெரியளவில் பேசப்படவில்லை. சிவாஜிக்கு வாரிசு இன்மையால் ஆங்கிலேயர் ஆட்சிபுரியத் தொடங்கினர்.

குறிப்பு

## பழக்க வழக்கங்கள்

அக்கால மக்களிடமிருந்த நம்பிக்கைகள், விழாக்கள், கொண்டாடிய முறை, இல்லம், ஊர், நாடு ஆகிய நிலைகளில் கடைபிடித்த நெறிகள் ஆகியவற்றைக் காணலாம்.

**பல்லவர்**

நிலத்தின் எல்லைகளைக் கணக்கிடும் பொழுது கல், கள்ளிச் செடிகள் நில எல்லைகளைக் குறிக்க நடப்பட்டன. மன்னர்கள் தம் முன்னோர்களின் வழியைப் பின்பற்றினர். மக்கள் குறைகளை நேரில் கேட்டறிந்தனர். பிராமணர்களைப் பெருமளவு வரவழைத்து அவர்களை உயரிய பதவிகளில் அமர செய்தனர். இதனால் இங்குள்ள பலரும் ஏற்றத்தாழ்விற்கு உரியவராயினர்.

பிரமதேயக் கிராமத்திலும், தேவதானக் கிராமத்திலும் அரசனின் அனுமதி பெற்றுத் தென்னை பயிரிட வேண்டியிருந்தது.

இரண்டாம் நந்தி வர்மன் பௌத்தத் துறவிகளைக் கழுமரத்துக்கு அனுப்பினான். பௌத்தம் தழுவிய மக்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்தான். இராசசிம்மன் காலத்துக்குப் பின் கணேசர் ஆலயத்தில் பணிபுரிவதில் துப்புரவுகாரி முதல் கூத்துக்காரி வரை எண்ணற்றோர் பங்கேற்றனர். சிற்பிகள், ஓவியர்கள், பாடகர்கள், பௌராணிகர்கள், புலவர்கள், தத்துவ ஆசிரியர்களும், புரோகிதர்கள் போன்றோர் ஆலயப் பரிவாரத்தில் இடம் பெற்றனர். ஆலயங்கள் கல்வி நிலையமாகவும் பண்பாட்டு நிலையமாகவும் விளங்கின.

ஆலயங்கள் பல்கிப் பெருகின. விழாக்களில் தெய்வத் திருமேனி ஊர்வலங்கள் மக்களைக் கவர்ந்தன. காபாலிகர், பாசுபதர் முதலியோரால் பைரவர்க்கும் காளிக்கும் உணவு படைத்துள்ளனர். உயிர் பலியிட்டு வந்தனர். இசையும், நடனமும் மக்களால் மிகவும் விரும்பப் பட்டுள்ளன. இவ்விரண்டையும் வளர்த்த பெண்கள் அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர் முதலிய பெயர்களால் குறிக்கப் பெற்றனர். முத்தீச்சுரர் கோவிலில் மட்டும் 42 அடிகள்மார் இருந்தனர். திருவொற்றியூர், குடந்தை கோயில்களிலும் இவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**பாண்டியர்**

அரசர்கள் தாம் முடிசூடும் நாளில் இறை (வரி) தவிர்த்தமையும், தம் சிங்காதனங்களுக்கு மழவராயன், காலிங்கராயன், முனையதரையன், பல்லவராயன் எனப் பெயரிட்டு வழங்கியுள்ளனர். அரசர்கள் தம் பிறந்த நாள் விழாக்கள் ஆண்டு தோறும் கோயில்களில் நடைபெறுமாறு பொருளும் நிலமும் அளித்து வந்துள்ளனர். போரில் இறந்த வீரர்களின் மனைவி மக்கட்கு மன்னன் உதிரப்பட்டி என்னும் பெயரால் இறையிலி நிலங்கள் வழங்கி அவர்களைக் காத்துள்ளான்.

*Self-Instructional Material*

கல்வியறிவு பெற்றவர்கள், உயர்வாகக் கருதப்பட்டனர். மொழியைப் பேணும் அவையைக் கொண்டிருந்தனர்.

சிவன் கோயில்களுக்கு இறையிலியாக அளிக்கப்பட்ட நிலம் தேவதானம் எனவும், திருமால் கோயில்களுக்கு அளிக்கப் பெற்றதைத் திருவிடையாட்டம் எனவும், சைன பௌத்த கோயில்களுக்கு விடப்பெற்றது பள்ளிச்சந்தம் எனவும், பார்ப்பனர்க்கு அளிக்கப் பெற்ற பிரமதேயம், பட்டவிருத்தி என்றும், மடங்களுக்கு விடப்பட்டவை மடப்புறம் எனவும், புலவர்கட்கு அளிக்கப் பெறுவது புலவர் முற்றுட்டு எனவும், சோதிடர்களுக்கு அளிக்கப் பெற்றது கணி முற்றுட்டு எனவும் வழங்கப்பட்டுள்ளன.

**சோழர்**

சோழர் கால சாசனங்கள் வழி பல்வேறு விதமான பழக்க வழக்கங்களைக் காணமுடிகிறது. தொழிலாளர்களுக்கு ஊதியமாக நெல் வழங்கப்பட்டுள்ளது. இதனை, 'இப்பந்தலுக்கு குசக்கலம் இடுவார்க்கு திங்கள் 1-க்கு நெல் 2 தூணி ஆக திங்கள் 6க்கு நெல்லு 4 நகலமும் எனுந் தொடரால் அறியலாம்.

வரி 'கடமை' என்ற சொல்லால் அழைக்கப்பட்டுள்ளது. செக்குத் தொழில் செய்பவர்க்கும் வாணிகர்களுக்கும் விதிக்கப்பட்ட கடமை (வரி) பற்றி கல்வெட்டு கூறுவதைக் காணலாம்.

**'செக்குக் கடமை வாணிகர் பேராற் கடமை**
**செட்டிகள் வாணிகர் கோட்டத்து கடமை – செக்கிறை'**

கூத்து நடத்தியவர்களுக்கு நிலம் வழங்கப்பட்டுள்ளது. கி.பி. 1088-ல் வீர நாராயணபுரம் கோயிலில் நடைபெற்ற சித்திரைத் திருவிழாவின் போது, ஐந்து தமிழ்க் கூத்து நடத்தியவர்களுக்குக் கூத்துக்காணி அளிக்கப்பட்டுள்ளது. திருவாவடுதுறையிலுள்ள கி.பி. 1117, கி.பி.1121 ஆண்டுக் கல்வெட்டுகள் படைவீரர்களுக்கு நில மானியம் வழங்கியதைக் கூறுகின்றன.

எந்த தொழில் செய்தாலும் ஒவ்வொருவரும் தனக்கென நிலங்கள் வைத்துக் கொள்ள விரும்பினர். மக்கள் தங்கள் சொந்த நிலங்களை விருப்பப்படி விற்கவோ, தானமாகக் கொடுக்கவோ உரிமை பெற்றிருந்தனர். தவிர சொத்துக்களும் முறைப்படி அவரவர் சந்ததிக்குப் போய் சேர்ந்தன.

பெண்கள் ஒருபக்கம் உயரிய நிலையில் இருந்தாலும், தேவரடியார் நிலை மோசமாக இருந்துள்ளது. கி.பி. 1088-ல் திருக்காளத்தி கோயிலுக்குரிய தேவரடியார்கள் தவறுதலாக அரண்மனைச் சேவகத்திற்கு வந்துவிட்டனர். அவர்களை முதலாம், குலோத்துங்கன் மீண்டும் அக்கோயிலுக்கு அனுப்பினான். அப்போது அவர்களின் உடம்பில் பொறிக்கப்பட்ட அரச முத்திரை அழிக்கப்பட்டு சிவன் கோயிலுக்குரிய முத்திரையான திரிசூலம் பொறிக்கப்பட்டது. இரண்டாம் இராஜாதிராஜன் ஆட்சியில் குறிப்பாக கி.பி.1175-ல் தஞ்சை மாவட்டம் திருவாலாங்காட்டுக் கோயிலுக்கு நான்கு பெண்கள் 700

காசுகளுக்கு விற்கப்பட்டுள்ளனர். அரசை எதிர்த்து ஏற்பட்ட கலகங்களில் உயிர்த்தியாகம் செய்ய கோயில் கோபுரங்களிலிருந்து குறித்து தற்கொலை செய்துகொண்ட நிகழ்வுகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

குறிப்பு

கணவரை இழந்த பெண் உடன் கட்டை ஏறுவதைப் பற்றி சில கல்வெட்டுகளில் காணடுமுடிகிறது. ஆயின் மிகக் குறைவாகவே நடந்துள்ளன. பரவலான வழக்கமாக இருந்ததாகக் கருத முடியாது.

சிற்சில குறைபாடுகள் தெரியினும் அக்கால சூழலில் அவை குறைகளாகக் கருதப்படவில்லை. ஒரு முன்னேறிய சமூக அமைப்பை அவர்தம் பழக்க வழக்கங்கள் பலவற்றில் அறியப்பெறுகிறது.

**நாயக்கர்**

நாயக்கர்கள் காலத்தில் நிழல் தரும் மரங்கள் நடப்பட்டன. சத்திரங்கள் பலவற்றை அமைத்தனர். அன்னச் சாவடிகள், தண்ணீர்ப் பந்தல்கள் நிறுவப்பட்டிருந்தன. கிறித்தவர்களும், முஸ்லீம்களும் ஆதரிக்கப்பட்டனர். சமயப்பொறை காணப்பட்டது. வரிவசூல் முறை கொடுமையானதாக விளங்கியது. புதுவிதமான கலைப் பாணியில் கட்டிடங்கள் தோன்றின. இலக்கியங்கள் பலவும் தோற்றம் கொண்டன. தெலுங்கு மொழி வளர்க்கப் பெற்றது.

**மராட்டியர்**

படிக்கும் வழக்கமும், நூல்களைச் சேகரிக்கும் நோக்கமும் மேலோங்கியிருந்தன. ஆதிகாரிகளின் வரம்பு மீறல் மக்களுக்குத் துன்பமாக இருந்தது. சகசி மன்னரின் அவையில் 46புலவர்கள் இருந்துள்ளனர். தத்துவம், இசை, நடனம், மருத்துவம் போன்றவை வளர்ந்தன.

## உணவுமுறை

உணவுக்கென நெல் விளைவிக்கப்பட்டுள்ளது. அது தீவிர தென்னை, பனை, பயிரிடப்பட்டுள்ளன. இவைபோல் உணவுத் தொடர்பான செய்திகளைக் காணலாம்.

**பல்லவர்**

கால்நடைகள் வளர்த்துள்ளனர், செக்காட்டுதல் பற்றி அறியபடுவதால் எண்ணெய் பயன்படுத்தியமையை அறியலாம். பனஞ்சாறு (சார்-அல்லது பதநீர்) பயன்படுத்தியுள்ளனர். நெய் விற்கப்பட்டுள்ளது. தென்னை-பனை பயிரிட வரிகட்ட வேண்டியிருந்த போதிலும் அவற்றை நட்டுள்ளனர். பனம்பாகு (கருப்பட்டி) பயன்படுத்தி உள்ளனர். பாக்கு பயிரிட்டுள்ளனர். மருந்துச் செடிகளாக செங்கொடி, கருசராங் கண்ணி பயிரிட உரிமை தரப்பட்டது வரியும் செலுத்தியுள்ளனர். உப்பெடுத்தல், சர்க்கரை செய்தலை அரசாங்கமே கவனித்தது. மீன், நண்டு, ஆமை முதலியனவும் உணவுக்குரியவையாக விளங்கின.

**பாண்டியர்**

நெல் பெரும்பான்மையான உணவுக்குரியதாக விளங்கிற்று நெல் விளையும் நிலங்கள் தரம் பார்த்து பிரிக்கப்பட்டிருந்தன. சர்க்கரை, காய்கறிகள், புளி முதலான பொருள்கள் துலாம், பலம் என்னும் நிறைகற்களால் நிறுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு

நெல், அரிசி, உப்பு, நெய், பால், தயிர், மிளகு, சீரகம், கடுகு முதலியன செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி என்னும் முகக்குங் கருவிகளால் அளக்கப்பட்டன என்பதால் இவர்களின் உணவுமுறை நம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது. மேநாட்டு மதுவகைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. உப்பு விளைவித்தல், மீன்பிடித்தல் முதலியன சிறப்பாக விளங்கின.

**சோழர்**

நெல் விளைச்சல் அதிகம் உடையது சோழநாடு. 9 குறுணி நெல் ஒரு கழஞ்சு பொன்னுக்குச் சமமாக இருந்தது. உணவு பொருட்கள் பண்டமாற்று அடிப்படையில் விற்கப்பட்டுள்ளன. கோயில்களில் அடியார்களுக்கு உணவு அளிக்கும் முறை பற்றி பல்வேறு கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

கி.பி. 1115-ஆம் ஆண்டு கல்வெட்டின்படி ஒரு வைணவ மடத்தில் அமாவாசையன்று 50 பிராமணர்களுக்கு உணவு அளிக்க ஆளுக்கு ஒரு குறுணி நெல் தேவைப்பட்டது. அரிசி, உப்பு, மிளகு, நெய், தயிர், விறகு, வெற்றிலை, பாக்கு போன்ற எல்லாச் செலவுகளும் இந்த ஒரு குறுணி நெல்லிலிருந்து செய்யப்பட்டன. இதனால் உணவு சமைக்க தேவையானயையும், உணவுண்டபின் வெற்றிலை பாக்கு போடும் பழக்கம் இருந்துள்ளதையும் அறியமுடிகிறது.

ஏலக்காய், கசகசா, தேங்காய் ஆகியவை காசு கொடுத்து வாங்கப்பட்டுள்ளன. ஆடு விலை கொடுத்து பெறப்பட்ட சான்றுகள் பல கல்வெட்டுகளில் காணப்படுவதால் ஆடு இறைச்சிக்கு பயன்பட்டுள்ளதை அறிய முடிகிறது. உப்பளங்கள் வைத்து பெருமளவில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டிருந்துள்ளது. உப்பின் தேவை இதனால் அறியலாகிறது.

**நாயக்கர்**

அன்னச்சாவடிகள் நிறுவப்பட்டு வழிப்போக்கர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. நெல் இன்றியமையா விளைபொருளாக இருந்தது. ஆடம்பரமாதன உணவு முறைகள் கொண்டவர்களாக விளங்கினர். குடிநீர் வசதியைக் குழாய்களின் வழி பெற வசதிகள் ஏற்படுத்தினர்.

**மராட்டியர்**

அன்னச்சாவடிகள் பெருமளவு தோன்றின. மருத்துவ முறைகளில் அரேபியாவிலிருந்து வந்த மருத்துவர்களால் மாற்றம் ஏற்பட்டது. குடிநீர் வசதி

*Self-Instructional Material*

செம்மையான விளங்கிற்று. ஆடம்பரமான உணவு வகைகள் அறிமுகமாயின. நெல் தவிர்த்து இதர தானியங்களுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளன.

**நீர்மேலாண்மை**



பல்லவர், பாண்டியர், சோழர், நாயக்கர், மராட்டியர் காலங்களில் நீர்மேலாண்மைத் தொடர்பான செயல்பாடுகளைக் காணலாம். ஆற்றின் குறுக்கே அணைகட்டி நீரைத் தேக்கி விவசாயத்தை மேற்கொண்ட கரிகால் சோழன் செயல் கல்லணை கட்டியதாகும் இன்றுவரை நமக்கு வியப்பளிக்கும் அணைக்கட்டு மட்டும் இன்றி நீர்மேலாண்மை சிந்தனைகளை அக்கால மன்னர்கள் பெற்றிருந்தை அறிவோம்.

**பல்லவர்**

பல்லவர் காலத்தில் பல ஏரிகள் உருவாக்கப்பட்டன. அவை அரசனின் பெயர், இறந்த தலைவர் பெயர், இறந்த தலைவர் பெயர், நாட்டுப் பெயர் மற்றும் ஊர்ப் பெயர் கொண்டு விளங்கின.

**ஏரிகள்**

இராச தடாகம், மகேந்திரத் தடாகம், சித்தரமேகத் தடாகம், பரமேசுவரத் தடாகம், வைரமேகத் தடாகம், வாலி ஏரி, மார்ப்பிடுகு ஏரி. வெள்ளேரி, தும்பானேரி. காவிரிபாக்கம் ஏரி, மருதநாட்டு ஏரி, கனவல்லித் தடாகம் இவை தவிர பல்வேறு பெயரில்லா ஏரிகளும் இருந்துள்ளன.

ஏரி வாரியம் நீர்நிலைகளின் மேம்பாட்டைக் காக்கும் விதமாக அமைந்திருந்தது. ஏரியைத் தவிர கிணறு, வாய்க்கால், மதகு இவற்றை மேற்பார்வையிடும் பொறுப்புகளை ஏரிவாரிய பெருமக்களே செய்துள்ளனர்.

**கிணறு**

பெரிய அளவிலான கிணறுகள் வெட்டப்பட்டன. முத்தரையர் மரபைச் சார்ந்த கம்பன் அரையன் என்பவன் நந்திவர்மன் காலத்தில் ஒரு பெருங்கிணற்றை உருவாக்கி அதற்கு மார்ப்பிடுகுப் பெருங்கிணறு என்று பெயரிட்டான்.

**வாய்க்கால்**

வாய்க்கால்கள் ஆற்றுக்கால் நாட்டுக்கால் என்ற பெயர்களில் விளங்கின. நந்திவர்மன் காலத்தில் வாய்க்கால் ஒன்றை உருவாக்கி அதற்கு வைரமேகன் வாய்க்கால் என்று பெயரிடப்பட்டுள்ளது. கூரத்திலிருந்த பரமேசுவரத் தடாகத்திற்குப் பாலாற்றிலிருந்து நீர் கொண்டு வரப்பெற்ற வாய்க்கால் பெரும்பிடுகு வாய்க்கால் எனப்பட்டது. இவை தவிர ஸ்ரீ தர வாய்க்கால் கணபதி வாய்க்கால் போன்ற பெயர்களிலும் வாய்க்கால்கள் இருந்தன.

பெரும் வாய்க்கால்களிலிருந்து பிரியும் சிறு வாய்க்கால்களுக்குக் குறங்கு, ஓடை, கிளைக்கால் என்ற பெயர்கள் கட்டப்பட்டுள்ளன.

குறிப்பு

**பாண்டியர்**

பாண்டியர் ஆறு ஏரி, குளம், வாய்க்கால் ஆகியவற்றைப் பேணினர். மதகுகளை ஆற்றிடையே அமைத்துள்ளனர். நீர்ப் பாசனத்தின் இன்றியமையாமை அவர்களால் அறியப்பட்டிருந்தது.

**ஆறு**

வைகையும், தாமிரபரணி போன்ற பேராறுகளும், பல சிற்றாறுகளும் பாண்டி நாட்டிற்குப் பேருதவியாய் அமைந்தன. சேந்தன் மாறனின் வைகைக் கரைக் கல்வெட்டு வைகையாற்றில் கட்டியமதகு பற்றிய செய்தியைத் தருகின்றது. தளவாய்ப்புரச் செப்பேடு,

**'ஆறுபல தலைகண்டும் அமராலையம் பலசெய்தும்**

**சேறுபடு வியன் கழனித் தென் விழிஞ் நகர் கொண்டும்'**

என்கிறது. சேந்தன் மாறன் வீரநாராயண மதகு ஒன்றை நிலையூரில் ஏற்படுத்தினான். பராக்கிரம பாண்டியன் பேராறு ஸ்ரீ வல்லபப் பேறாறு என்று மன்னர்கள் பெயரால் ஆறுகள் இருந்தன. ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் கால், வாய்க்கால் என்றும், சிறிய பேராறு என்றும் அழைக்கப்பட்டிருந்தன. அவ்வகையில் ஸ்ரீகண்டன் வாய்க்கால் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஏரி**

ஏரி, குளங்கள் வெட்டுவித்து வெள்ளநீர், மழைநீர் ஆகியவற்றைத் தேக்கி வைத்துப் பாசனம் செய்துள்ளனர். அதில் மாறன் ஏரி, திருமால் ஏரி, கிழவனேரி, நாரணன் ஏரி மற்றும் புள்ளனேரி ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்.

**சோழர்**

சோழ நாடு சோறுடைத்து எனும் புகழ் பெற்றது. இத்தொடருக்குக் காரணம் சோழர்களின் நீர் மேலாண்மை குறித்த சிந்தனைகளும் செயல்பாடுகளும் எனில் மிகை இல்லை.

ஆற்றின் குறுக்கே அணை கட்டியமை

கரிகாலன் காவிரிக்குக் கரை எழுப்பிய செய்தியைத் திருவாலங்காட்டுச் செப்பேடும், வீரராசேந்திரன் கன்னியாகுமரிக் கல்வெட்டும் கூறுகின்றன. வீரராசேந்திரன் ஸ்ரீரங்கத்திற்கு அருகில் பேரணை ஒன்றினைக் கட்டியுள்ளான். தற்காலம் வரை இந்த அணை வலுவுடையதாக அமைந்திருக்கிறது. திருவாவடுதுறை கல்வெட்டு ஒன்றில் பரகேசரி கரிகாலச்சோழன் காவிரியின் கரையை உயர்த்திய செய்தி மேற்போக்காகச் சொல்லப்பட்டுள்ளது.

**ஆறுகள்**

வீரசோழன் ஆறு, வீரசோழ வடவாறு, மதுராந்தக வடவாறு, கீர்த்திமானாறு, முடிகொண்டான் ஆறு போன்ற ஆறுகள் சோழர்களால் பேராறுகளிலிருந்து வெட்டப்பெற்ற கிளை ஆறுகள் ஆகும்.

**ஏரிகள்**

வீர நாராயணன் ஏரி முதற் பராந்தக சோழனால் வெட்டுவிக்கப்பட்டது. சோழிங்கபுரத்தில் உள்ள சோழவாரிதி, மதுரை மாவட்டம் ஆனைமலைக்கு அருகே கலியனேரி, சோழபுரத்தில் கள்ளிநங்கைக்குளம், உத்திரமேரூரில் பல்லவா் சோழபுரத்தில் புகழ்பெற்ற வைரமேக தடாகம், பாகூா் பெரிய ஏரி, புங்களூா் இராஜேந்திர சோழ பெரிய ஏரி, கண்டராதித்தப் பேரேரி, சுந்தரசோழப் பேரேரி, குந்தவை பேரேரி எனச் சோழா் குலப் பெயரைத் தாங்கிய பல ஏரிகள் உருவாக்கப்பட்டன.

முதலாம் இராஜேந்திரன் தனது கங்கை வெற்றியைக் கொண்டாடும் வகையில் தன்னுடைய புதிய தலைநகராகிய கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மேற்கே 'சோழகங்கம்' என்ற பெரிய ஏரியை வெட்டி வைத்தான். அதனை 'நீா்மயமான வெற்றித்தூண்' என்று பெருமையாகக் கூறிக் கொண்டான்.

**வாய்க்கால்கள்**

'இராசராசன் வாய்க்கால்' போன்ற வாய்க்கால்கள் ஏரி, ஆறுகளிலிருந்து நீரைப் பாசனப் பகுதிகளுக்குக் கொண்டு செல்ல பயன்பட்டன. நீா் நிலைகளை மேம்படுத்த பல வாரியங்கள் இருந்தன. வரிகள், பொன் முதலியவை வசூலிக்கப்பட்டு கரைகள், அணைகள், வாய்க்கால்கள் மேம்படுத்தப்பட்டன. பல்வேறு சபைகள் கூடி நீா்ப்பாசனம் குறித்த தீா்மானங்களை எடுத்தன. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நீா்ப்பாசனப் பிரச்சனைகளை அணுகி உள்ளனா்.

**நாயக்கா்**

நாயக்கா் காலத்தில் விசுவநாத நாயக்கன் பேரேரி என்ற ஏரி மன்னன் பெயரால் அவன் காலத்திலிருந்த அரிய நாத முதலியாரால் வெட்டப்பட்டுள்ளது. இன்று இவ்வேரி தளவாய்க்குளம் என்று அழைக்கப்படுகிறது.

கிருஷ்ணப்ப நாயக்கன் மகன் நாயினியப்ப நாயக்கன் தேவிகாபுரத்தில் குளம் வெட்டி, கிணறுகள் ஏற்படுத்தி அவ்வூரை வளப்படுத்தியதைக் கல்வெட்டால் அறிய முடிகிறது. செல்லங்க சமுத்திரம் எனும் பெயரில் குளம் வெட்ட தானம் வழங்கப்பட்டதைக் கல்வெட்டு கூறுகின்றது. முத்துவீரப்ப நாயக்கா், ராணி மங்கம்மாள் காலத்தில் குளத்தில் கலிங்குகள் ஏற்படுத்தப்பட்டன. உய்ய கொண்டான் காலில் ஏற்படுத்திய மடை மங்கம்மாள் மடை எனப் பெயா் பெற்றது.

**செவ்வப் நாயக்கன் ஏரி**

செவ்வப் நாயக்கனின் மாபெரும் சாதனை, தஞ்சை நகருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீா் அளித்ததுதான். தஞ்சைப் பெருங்கோயில் சிவகங்கைக் கோட்டை உள்ள பகுதிகளுக்கு கோட்டைச்சுவா் எடுத்து அகழியைத் தோண்டிய பணி இவருடைய காலத்தில் நடைபெற்றது. சிவகங்கைக் கோட்டையின் உள்ளே உள்ள சிவகங்கைக் குளத்திற்குத் தேவையான நீா் கிடைப்பதற்காகத் தஞ்சைப் பெருங்கோயிலுக்குப் பின்புறம் மிகப்பெரிய ஏரி ஒன்றை வெட்டுவித்தாா். தஞ்சையின் மேற்குப் பகுதியில் பல சதுர மைல்கள் பரப்பளவில் பெய்யும் மழைநீா் பல வாரிகள் மூலமாக இந்த ஏரியில் தேங்கவும் வழி செய்தாா். ஏரியில் தேங்கிய

குறிப்பு

மழைநீர் தெளிந்த பின் ஒரு மதகு வழியாகக் கோட்டை அகழி நீரில் கலக்காமல் அதனைக் கடந்து குளத்திற்கு வர ஒரு பாதுகாக்கப்பட்ட பால அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் சிவகங்கைக் குளம் நிரம்ப ஏற்பாடுகள் செய்தார். பின்பு அந்த நீர் பூமியல் புதைக்கப்பட்ட சுடுமண் குழாய்கள் வழியாகத் தஞ்சை நகரிலுள்ள முக்கியக் குளங்களான ஐயங்குளம், சாமந்தன் குளம் முதலிய குளங்களுக்கும் நகரில் உள்ள முக்கியக் கிணறுகளுக்கும் அனுப்பப்பட்டது. செவ்வப்ப நாயக்கனால் ஏற்படுத்தப்பட்ட இந்தப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் பின்னாளில் மராட்டியரால் பாதுகாக்கப்பட்டது. ‘சேப்பன்னவாரி’ எனத் தற்போது அழைக்கப்படும் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவ்ஏரியின் வரலாற்றைப் போல் ஒவ்வொரு ஏரி தோன்றியதற்கும் வரலாறுகள் உண்டு.

**மராட்டியர்**

1781ல் துல்சாசி காலத்தில் பவன பண்டிதர் துவக்கிய பட்டகர் முறை வேளாண்மை கண்காணிப்பையும் வரி வசூலையும் ஒன்றாக இணைத்தது. ஐதரின் சூறையாடல்களுக்குப் பின் தோன்றிய பட்டகர் முறை அகல்முறை வேளாண்மைக்கு வசதி செய்தது. நீர்நிலைகள் பேணப்பட்டன. காவிரியில் பாசனத்தின் கண்காணிப்புப் பெருகியது. தமக்கு முன் ஆட்சி புரிந்தவர்கள் ஏற்படுத்தி வைத்த நீர்நிலைகளை இவர்கள் பேணினர்.

**மருத்துவமும் கல்வியும்**

மக்களைக் காத்தல் தொடர்புடையவற்றில் உடலைக் காக்கும் மருத்துவம் பற்றியும், அக இருள் போக்கும் கல்வியையும் வளர்த்த முறைகளைச் சாசனங்கள் வழியாக அறியலாம்.

**பல்லவர் காலத்திய மருத்துவமும் கல்வியும்**

மருந்து செடிகள் பயிரிட வரி பெறப்பட்டுள்ளது. செங்கொடி, கருசராங் கண்ணி, குவளை ஆகிய மருத்துவத் தொடர்புடைய இவற்றைப் பயிரிட வரி வசூலிக்கப்பட்டுள்ளது.

காஞ்சியில் கல்லூரி இருந்தமையைக் கி.பி. 345-370இல் கதம்ப அரசர் மரபைத் தோற்றுவித்த மயூரசன்மன் முதற்பல்லவர் காலத்தில் காஞ்சியில் வடமொழிக் கல்லூரியில் படிக்க வந்தான் என்பதன் வழி சிறந்த வடமொழிக் கல்லூரி செயல்பட்டதை அறிய முடிகிறது.

பாகூர் எனும் தென்னார்க்காட்டு கோட்டத்திலிருக்கும் திருப்பாதிரிப்புலியூருக்கும் புதுச்சேரிக்கும் இடையில் உள்ள பெரும் பாதையில் அமைந்துள்ள சிற்றூராகும். இங்கிருந்த கல்லூரி பற்றி நிருபதுங்கவர்மன் காலத்து பட்டயத்தின் வழி அவன் காலத்திற்கு முன்பே அக்கல்லூரி திறம்பட செயல்பட்டதை அறிய முடிகிறது. கற்றவர்கள் கற்பித்தவர்கள் அனைவரும் மறையோர். இங்கு 14 கலை, 18 வகை வித்தைகள் கற்பிக்கப்பட்டுள்ளன.

*Self-Instructional Material*

**பாண்டியர்**

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமையைச் சின்னமனூர் செப்பேடு கூறுகிறது. சங்க இலக்கியங்களில் பாண்டியர் காலத்திய இலக்கியங்கள் வழி நோய் தீர்க்கும் மருந்து பற்றி அறிந்திருந்ததைக் காண முடிகிறது. பாண்டியர் காலத்தில் அரசவையே சிறந்த அறிவினை வெளிப்படுத்தும் களமாக இருந்துள்ளது.

**சோழர்**

சோழர் காலத்தில் மருத்துவம் சார்ந்த மேம்பாட்டு பணிகளும், கல்வியும் உன்னத நிலையைப் பெற்றிருந்தன.

இராசராசனின் தமக்கையான குந்தவை பிராட்டியார் தஞ்சை பெருநகரில் 'சுந்தர சோழ விண்ணகர் ஆதுலர் சாலை' என்னும் மருத்துவமனையைத் தம் தந்தையின் நினைவாக நிறுவியுள்ளார். அம்மருத்துவமனையை நடத்துவதற்கு மருத்துவக் காணியாக நிலத்தையும் அவ்வம்மையார் அளித்துள்ளார். பாம்பு கடிக்குத் தேவையான நச்சு முறிப்பிற்கு மருத்துவத் தொடர்புடைய செடிகள், ஊர்கள் தோறும் வளர்க்கப்பட்டன. மருத்துவர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

தென்னார்க்காடு மாவட்டம் எண்ணாயிரம் என்ற ஊரில் காணப்படும் முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டு கல்லூரி இயங்கிய முறையினை எடுத்தியம்புகின்றது. கோயிலே கல்விக் கூடமாகவும், விளங்கியது. கல்வி வளர மன்னன் பாடுபட்டுள்ளான். மாணவர் மற்றும் ஆசிரியர்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரிபுவனம், திருமுக்கூடல் ஆகிய ஊர்களில் கல்லூரிகள் இயங்கின. திருவாவடுதுறையில் மருத்துவக் கல்லூரியும் திருவொற்றியூரில் இலக்கணக் கல்லூரியும் இயங்கியுள்ளன.

கன்னியாகுமரியிலிருந்த கல்விச் சாலைக்குத் தேவையான உப்பினை மகிபாலகுல காலப் பேரளத்திலிருந்து வழங்க உப்பள அதிகாரிக்கு ஆணை இட்டத்தை இராசாதிராசனின் கன்னியாகுமரிக் கல்வெட்டு கூறுகின்றது. இதே கல்விச் சாலைக்கு இரண்டாம் இராசேந்திரன் ஊர் வரிகளைத் தானமாக அளித்ததை இம்மன்னனின் கல்வெட்டு கூறுகிறது.

வடமொழி மற்றும் தமிழ் ஆகிய இருமொழிகளும் கற்பிக்கப் பெற்றதை அறிய முடிகிறது. தமிழின் வளர்ச்சியும் தமிழ் மீதுள்ள பற்றும் உயர்வடையத் தொடங்கின எனலாம்.

**நாயக்கர்**

நாயக்கர் காலத்தில் வடமொழியை விட்டு தெலுங்கிற்கு முன்னுரிமை அளித்தனர். தமிழ் நாயக்கர் அவையிலும் வளர்ந்தது. தமிழை வளர்த்தெடுத்த பெருமை இவர்களுக்கும் உண்டு. இவர்களின் சாசனங்களில் செப்பேடும், கல்வெட்டும் தமிழிலேயே பெருமளவு இயற்றப்பட்டன. திருமலை நாயக்கர் காலத்தில் குமரகுருபரர் ஆதரிக்கப்பட்ட புலவர் ஆவார். பல தமிழ் நூல்கள் உருவாகியுள்ளன.

தர்ம சாத்திரம் வகுத்த சமூக நீதி அடிப்படையிலான சமஸ்கிருதக் கல்வியை ஆலயம் வழியாக அரசு பேணிக் காத்தது. விதிகளை மீறியவர்கள் தண்டிக்கப்பட்டனர்.

சமஸ்கிருதம் பயிற்று மொழியாகவும், பிராமணர் ஆசிரியர்களாகவும், பிராமண இளைஞர்கள் மாணவர்களாகவும் விளங்கினர். ஆசிரியர்களுக்கு நிலமானியமும், மாணவர்களுக்கு இலவச உண்டியும் உறையுளும் கிட்டின. திருமலை, சொக்கநாதர், காலங்களில் தெலுங்கு இலக்கியக் கல்வி நிலையங்களும் உதவி பெற்றன. சைவ மடங்கள் தமிழ்க் கல்வி சித்தாந்தக் கல்வியை வழங்கின. வசதியுடையோர் திண்ணைப் பள்ளிகளை நம்பி கல்வி பெற்றனர். மக்கள் நோய் நொடியிலிருந்து காக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**மராட்டியர்**

சரபோசியின் காலத்தில் கல்வி உன்னத நிலையைப் பெற்றது. பழைய ஆவணங்கள் புத்தகங்களைத் திரட்டி சரசுவதி மஹால் நூலகத்தில் சேமித்தனர். வேதாந்தம், காவியம், இலக்கியம், இசை, நடனம், கட்டிடக்கலை, வான இயல், மருத்துவம் முதலிய பல்துறை சார்ந்த 2200 சுவடிக்கு மேல் சேர்க்கப்பட்டன. பெரும்பான்மையும் சமஸ்கிருதத்தில் இருந்தன. மராட்டியர் ஆட்சிக் காலத்தில் பல்துறை ஆய்வுக் கூடமாக சரஸ்வதி மஹால் இருந்தது. சரபோசி மருத்துவ ஆய்வில் மிகுதியான கவனத்தைச் செலுத்தினார். இந்து, கிறித்துவ, இஸ்லாமியர் உயர் கல்வியுடன் ஆய்வு நடத்தும் கல்வி நிலையம் இயங்குகிறது.

தஞ்சையில் மருத்துவமனை அமைக்கப் பொன் பொருள் கொடுத்து இடமுதவி செய்த மராட்டிய அரசியின் செயல் சிறப்புடையது. இதனால் மருத்துவமும் கல்வியும் அடிப்படையானவை என்பதை அக்காலத்தே உணர்ந்து செயல்பட்டுள்ளமையை அறிய முடிகிறது.

**கல்வெட்டால் அறியலாகும் சமயப்பொறை**

சைவ வைணவ சமயம் சார்ந்த மன்னர்களில் சமயம் பாராது சிவனை வழிபட்டாலும் திருமால் கோயிலுக்குக் கொடை கொடுத்துள்ளனர். அதுபோலத் திருமாலை வழிபட்டாலும் சிவன் கோயிலுக்குக் கொடையளித்துள்ளனர். சைவ, வைணவ சமயத்தைச் சார்ந்திருந்தாலும் சமணப் பள்ளிகளுக்குக் கொடையளித்துள்ளனர். இப்பொறையுணர்வின் உச்சமாக இஸ்லாமிய கிறித்தவ சமயத்தாருடனும் இணக்கத்தோடு இருந்த சமயப் பொறை உடையவர்களாக மன்னர்கள் விளங்கியதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

சிம்மவிஷ்ணு, நரசிம்மவர்மன், இரண்டாம் நந்திவர்மன் ஆகிய பல்லவகுல மன்னர்கள் வைணவப் பற்றுடையவர்கள் ஆயின் பல சிவத்தலங்களுக்குக் கொடைகளை அளித்துள்ளனர். அதே போல் சோழ

மன்னர்களில் குலோத்துங்கசோழன் முதலான சோழர்கள் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாயினும் வைணவ கோயில்களுக்கு நிவந்தங்களும் பிறவும் வழங்கியுள்ளனர்.

குறிப்பு

சேரர், பாண்டியர், பல்லவர், சோழர் ஆகிய மன்னர்கள் சமண சமயத்தாருக்குக் கொடைகள் வழங்கியமையைச் சாசனங்களாக அறியமுடிகிறது.

கி.பி. 1010-ல் தஞ்சை பெரிய கோயிலுக்குக் கொடை அளித்தவர்களில் சோனகன் சாவூர் (ஜா.ஃ.பர்) பரஞ்சோதி எனும் இசுலாமியர் கொடையளித்த விபரம் அறியப்படுகிறது. சோழ மன்னர்களிடம் இவர் நம்பிக்கைக்குரிய பெரிய அரசு அலுவலராகவும் பணியாற்றி உள்ளார். ஆணைமங்கலம் செப்பேட்டில் துருக்கன் அகமுதன் என்பவர் அரசு ஊழியராக இருந்துள்ளார். பாண்டியர்களில் கூன்பாண்டியன் 14 ஆயிரம் பொன் கொடுத்து ஆறு ஊர்களை விலைக்கு வாங்கிக் கோரிப்பாளையம் சுல்தான் பள்ளிவாசலுக்குத் தானமாக அளித்துள்ளார். மன்னர் குடும்ப நலன் கருதி இஸ்லாமியர் தம் தர்காவில் பாத்தியா ஓதியுள்ளனர்.

நாயக்கர் காலத்தில் இஸ்லாமியர்கள் தர்காவிற்குப் பெருமளவு கொடை கொடுக்கப்பட்டுள்ளன. அவை பற்றிய குறிப்புகள் பள்ளிவாசல்களில் கல்வெட்டுகளாக உள்ளன. 1645-ல் விசயராகவ நாயக்கன் நாகூர் ஹஷரத் காதர் அலி தர்காவின் முதல்வாயில் அருகில் உள்ள மினார் கோபுரத்தைக் கட்டித் தந்துள்ளார். இராணி மங்கம்மாள் காலத்தில் இஸ்லாமியர்களுக்கு மட்டுமின்றிக் கிறித்தவர்களுக்கும் கொடைகள் வழங்கப்பட்டுள்ளன.

மராட்டியர் காலத்தில் மசூதிகளுக்கும், தேவாலயங்களுக்கும் கொடைகள் அளிக்கப்பட்டுள்ளன. பாதிரிமார் உயிர்நீத்த பொழுது அவர் பெயரில் தேவாலயம் கட்ட பெருமளவு உதவியை சரபோஜி முதலிய மன்னர்கள் செய்துள்ளனர். நாகூர் கந்தூரியின் போது மராட்டியர் கொடைகள் பல கொடுத்து வந்துள்ளனர். ஏர்வாடி தர்காவிற்கும் பல உதவிகள் செய்துள்ளனர்.

சமயம் சார்ந்து பல கலவரங்கள் நடைபெற்ற பொழுது சமயப் பொறையுடன் பிற சமயத்தையும் அச்சமய மக்களையும் காத்த செயல் வழி சமயம் போற்றப்பட்டதா அல்லது பக்தி போற்றப்பட்டதா? எனும் வினாவும் எழச் செய்கிறது. எனினும் எச்சமயத்தாரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதே அம்மன்னர்களின் உணர்வாக இருந்திருக்க வேண்டும்.

**சாசனங்களால் அறியலாகும் ஊரும் - பேரும்**

தமிழகத்தின் பல்வேறு ஊர்களின் பெயர்கள் அக்காலத்து வழங்கிய முறைமையைக் காணலாம்.

**தகடூர்**

தற்காலத்து தருமபுரி எனப்படும் இவ்வூரில் போர் நடைபெற்றதை அறிய முடிகிறது.

**வஞ்சி**

அக்காலத்தது வஞ்சி என்றழைக்கப்பட்ட ஊர் தற்போதைய கரூர்

**பழையாறை**

பல்லவ மன்னர்களால் நந்திபுரம் என்றழைக்கப்பட்ட ஊர் இதுவாகும்.

**அழிந்தியூர்**

இவ்வூரைத் தஞ்சை மாவட்டத்திலுள்ள கம்பர் பிறந்து ஊரோடு சேர்த்து தேரழுந்தூராக இருக்கலாம் என வரலாற்றறிஞர்கள் கூற அவ்வூரின் நான்கெல்லை ஊர்களை வைத்துக் காணும் பொழுது இவ்வூர் திருச்சிக்குத் தெற்கே 18 கி.மீ. தொலைவில் உள்ள அழுந்தூர் என்பதை அறியமுடிகிறது.

**சோழகுலவல்லிப் பட்டினம்**

சோழர் காலத்தில் நாகப்பட்டினத்தின் பெயர் இதுவாகும். சிறந்த துறைமுகமாக விளங்கியது. மேலை நாட்டாரின் பயணக் குறிப்புகளில் நிகமா, நாகவதனா, படன, மலிபடன், நெகபடன் முதலிய பெயர்களும் இவ்வூருக்கு இருந்துள்ளதை அறியமுடிகிறது.

பழமை வாய்ந்த ஊர்களின் பெயர்கள் ஆட்சியாளர்கள் மாறும் பொழுது, பெயர் மாற்றித் தரப்படும் பிரம்மதேய முறைகளால் ஊர் பெயர்களும் சிதைந்து போயுள்ளன. இவை தனி ஆய்விற்குரிய பகுதியாகும். ஊர்கள் மட்டுமின்றிப் பலரின் பெயர்களும், பெயர்களுக்கு முன்னும் பின்னும் வரும் பட்டங்களுகம் கூட ஆய்விற்குரியன.

குறிப்பு

## வரிகள்

**பல்லவர் கால வரிகள்**

அரசு நிர்வாகத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு வருவாய் தேவைப்பட்டது. அவ்வருவாய் மக்களிடமிருந்து வரியாகப் பெறப்பட்டது. அவ்வகையில் பல்லவ நாட்டில் பல வகையான வரிகள் நடைமுறையில் இருந்தன. வரி, ஆயம், காணம், தண்டல், இறை, கடமை, விலை, நாழி போன்ற பல சொற்றொடர்கள் வரியினைக் குறிப்பதாக உள்ளன. வரியைக் கடமை என்ற சொல்லால் அழைக்கப்பட்டமையால் மக்கள் வரி செலுத்துவதைத் தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டும் என்றே கருதினர்.

அரசின் வருவாயில் நிலவரியே மிக முக்கிய இடம் பெற்றிருந்தது. இதே போன்று கால்நடைகளை வளர்ப்போர், புரோகிதர், வேட்கோவர், கொல்லர், வண்ணார், ஆடை விற்போர், ஆடை நெய்வோர், ஓடக்காரர், தரகர், செக்கார், நூல் விற்போர், வலைஞர்கள், கள் இறக்குவோர், நெய் விற்போர், மணவீட்டார் போன்ற பலதரப்பட்ட மக்களும் ஒரு குறிப்பிட்ட வரியைச் செலுத்தி வந்தனர் என்பதைச் சாசனங்களால் அறியலாம்.

நிலவருவாய்

*Self-Instructional Material*

வரி செலுத்தும் நில உடைமையாளர்களின் நிலங்கள் 'பயல்' நிலமெனப்பட்டது. அவைகளிலிருந்து அரசினர் ஆறில் ஒரு பங்கினை இறையாகப் பெற்றனர். அது பணமாகவும், பொருளாகவும் பெறப்பட்டன எனலாம். அதனைப் புரவுவரி என்றனர். தினைக்களத்தார் என்னும் அலுவலர் வரியினைப் பெற்று அரசக்குச் செலுத்தினார். அரசருக்குரிய பயிரிடும் நிலங்கள் அடைநிலம் எனப்பட்டது. தென்னை, பனை, பாக்கு ஆகிய மரங்கள் வளர்ப்போருக்கு வரியிடப்பட்டது.

**தென்னை-பனை-பாக்கு முதலியனவற்றிக்கு வழங்கப்பட்ட வரிகள்**

தென்னை, பனை முதலிய மரங்கள் சிறப்பாகப் பிரம்மதேய தேவதான சிற்றூர்களில் அரசர் உரிமைப் பெற்று வரி செலுத்தாது பயிரிடப்பட்டன. இதனால் பிற ஊர்களில் அவற்றைப் பயிரிட விரும்பினார். அவற்றின் விளைவில் ஒரு பகுதியை அரசர்க்கு வரியாகச் செலுத்தினர். பனம்பாத செய்ய வரி கட்டினர். கடைகளில் விற்கப்பட்ட பாக்குக்கு வரி விதிக்கப்பட்டது.

**மூலிகைச் செடிகளுக்கு வழங்கப்பட்ட வரிகள்**

செங்கொடி என்னும் சித்ர மூலம் என்ற மூலிகைக் கொடிக்கு வரி விதிக்கப்பட்டது. அது பலவகை நோய்களையும், இரணங்களையும் ஆற்ற வல்லதாக அமைந்திருந்தது. செங்கொடிக்கானம் என்ற வரியினைச் செலுத்தி அக்கொடியினைப் பயிரிட்டனர் என இராசமாணிக்கம் கூறுகின்றார்.

நீலோற்பலம் எனப்படும் குவளைச் செடிகள் நடுவதற்கு அரசினர் குவளைக்காணம் என்ற வரியினைப் பெற்று உரிமை வழங்கினர். சீன நாட்டிலிருந்து பெறப்பட்ட மருக்கொழுந்து செடிகள் பயிரிடவும் வரி விதிக்கப்பட்டது.

**நீர் வரி**

பயிர்த்தொழிலுக்கான நீர் ஏந்துகள் அரசால் செய்யப்பட்டிருந்தன. அந்நீர் ஏந்துகள் ஓர் குறிப்பிட்ட அளவு நீரினைப் பாசனத்திற்கு வழங்கிற்று மேலும் நீர் பெற விரும்பியவர்கள் 'நேர்வயம்' என்ற வரி செலுத்தி நீரைப் பெற்றனர். கிணறு தோண்ட விரும்புவோர்கள் உல்லியக் கூலி என்னும் தொகையினைச் செலுத்திய பின்னர் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**நெல் வரி**

விற்கும் தானியங்களுக்கு வரி விதிக்கப்பட்டது. ஆறு குருவி அல்லது நாற்பத்தெட்டு படி அளவு நெல் விற்றபோது ஒரு படி நெல் அரசனுக்கு இறையாகச் செலுத்தப்பட்டது. இதுவே வட்டி நாழி எனப்பட்டது. வட்டி என்ற கூடையானது நாற்பத்தெட்டு படியினைக் குறிக்கும் என எஸ்.கே.அய்யங்கார் கூறுகின்றார். பிறவரிகளும் பல்லவ அரசாங்கத்தில் வசூலிக்கப்பட்டன. தொழில் வரிகள் என்று உப்புவரி, பட்டினச்சேரி, ஈழப்பூட்சி, இடைப்பூட்சி, குசக்காணம், தட்டுக்காயம், விஷக்காணம், பாறைக்காணம், புட்டக விலை, பட்டிகைக் காணம், தறிக்கூறை, செக்கு, தரகு, பாடாம் கழி, பத்தூர் சாற்று, கத்திக் காணம், நெடும்பறை,

நெய்விலை, எச்சோறு, மன்றுபாடு, திருமுகக் காணம் போன்ற வரிகள் பல்லவ காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகளாகும்.

குறிப்பு

இவ்வாறு பல துறைகளிலும் வந்த வருவாய் அரசாங்க பண்டாரத்தை அடைந்து வந்தது. இதுகாறும் கூறியவற்றால், பல்லவ அரசாங்கம் கணக்கற்ற துறைகளில் வருவாய் பெற்று வந்ததை அறிய முடிகிறது.

**பாண்டியர் காலத்தில் வரிகள்**

அரசு தன் கடமைகளைச் செய்வதற்குப் பொருளாதாரம் தேவைப்பட்டது. அப்பொருளாதாரம் பல்வேறு வரிகளால் பெறப்பட்டது. அவ்வரிகள் மக்கள் மீது அரசு விதித்தவையேயாகும். அவற்றில் நிலவரியே அரசுக்கு பெரும் தொகை ஈட்டித் தந்தது. ஆதலால் அரசே நிலங்களை முறையாக அளந்து, தரத்திற்கு ஏற்றவாறு வரி விதித்தது. விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு அரசிற்கு வரி விதிக்கப்பட்டது.

கோயில், குளம், ஊருணி, நந்தவனம், ஓடை, சுடுகாடு, பாதைகள், ஊர்ப்பொது நிலம் முதலியவை மீது வரி விதிக்கப் பெறவில்லை.

வரிச்சுமை அதிகமாயிருப்பின் மக்கள் தாங்கள் வாழும் ஊரை விட்டுவிட்டு வேறு ஊருக்குச் செல்வதன் மூலம் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டனர். இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் வரிச்சுமைப்பற்றி மக்கள் முறையிட்ட போது அதனைப் பரிசீலனை செய்து விளையாத நிலத்திற்கு வரிவிலக்கு அளித்த செய்தியையும் காண முடிகின்றது. நிலவரியைத் தவிர பல வரிகளும் அரசுக்கு வருவாய் அளித்தன. தறியிறை, செக்கிறை, தட்டார்பட்டம், இடை வரி, சான்று வரி, பாடிகாவல், மனையிறை, உல்கு முதலான வரிகளும் இருந்துள்ளன.

இறை, பாட்டம் என்பன வரியையுணர்த்தும் மொழிகள், தட்டார்ப்பாட்டம் என்பது கம்மாளர்கள் செலுத்தி வந்த வரியாகும். பாடிகாவல் என்ற வரி நாடு காவல் எனவும் வழங்கப்பட்டது. இது ஊர்களை காத்தற்கு வாங்கிய வரியாகும். மனையிறை குடியிருப்பு பகுதிக்கு வாங்கிய வரியாகும். உல்கு என்பது சுங்க வரியாகும். சலாபத் தேவை என்ற வரி முத்துக் குளிப்போரிடம் வசூலிக்கப்பட்டது. இவ்வாறு பாண்டியர் காலத்தில் வரிகள் வசூலிக்கப்பட்டன.

**சோழர் காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள்**

சோழர்கால அரசியலில் பொருளை முறையாகத் திட்டமிட்டு ஈட்டி அதனைப் பல்வேறு நல்வழிகளில் செலவு செய்தனர்.

பொருளை ஈட்டுவதற்கு நிலவரி, ஊர் வரி, வணிகவரி போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டிருந்தனர். தொழில் வரியும் விதிக்கப்பட்டது. நிலவரியைக் கடமை எனவும், காணிக்கடன், இறை எனவும் கல்வெட்டுகள் சுட்டுகின்றன.

நிலவரியானது நிலங்களின் தரத்திற்கேற்பவும், அளவிற்கு ஏற்பவும் வசூலிக்கப்பட்டது. ஊர்தோறும் இருந்த சபையார் குடிமக்களிடமிருந்து மேற்படி

வரியைப் பெற்று அரசுக்குச் செலுத்தக் கடமைப்பட்டிருந்தனர். விளைச்சலில் ஆறில் ஒரு பங்கினை வரியாக வசூலித்தனர். இச்செய்தியினைக் கூறும் முதல் பராந்தகனின் செங்கற்பட்டுக் கல்வெட்டு

**ஆறு கூறில் புரவுமாயதியும் பொன்னும்**
**பெறுமாறு சோழ கோன்....... பறிவையர்கோன்**
**மங்கல வீரசோழன் அத்தி மல்லன்**
**மூங்கில் வரி என்னும் வயல்தான் கொடுத்தான்**

என்று கூறுவதைக் காணலாம். மேலும் நிலம் பார்த்து விளைந்ததற்கு ஒரு மா நிலத்திற்கு நெல் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை,

**நீங்கா நெற்றுகை ஆங்கொரு**
**மாவிற்கு அறுகலமாக**

என்று இராசராசனின் கல்வெட்டு கூறுவதை அறியலாம்.

நிலவரியேயன்றித் தறியிழை, செக்கிறை, மனையிறை குமரக் கச்சாணம், மீன்பாட்டம், இலைப்பாட்டம், ஊர்க் கழஞ்சு, பாடிகாவல் கூலி, ஆயம், தரகு கூலி, வண்ணாரக் காணம், குசக்காணம், ஓடக்கூலி, தரகு, உல்கு எனப் பலப்பல வரிகள் இருந்ததைக் காணலாம். நிலவரியே புரவுவரி என்று அழைக்கப்பட்டது. மற்ற வரிகள் அந்தராயம் என்று அழைக்கப்பட்டன. வரி, இறைகுடிமை, சுங்கம் போன்ற பெயர்கள் மக்களிடமிருந்து பெறப்பட்ட வரிகளின் பெயர்களாகும்.

அன்பில் செப்பேடு, ஆனைமங்கலச் செப்பேடு, திருவாலங்காட்டுச் செப்பேடு எனப் பல சோழர்காலச் செப்பேடுகள் மூலம் வரிகள் பல இருந்ததை அறிந்து கொள்ள இயலுகின்றது. சில சிறப்புத் தேவைகளுக்காகவும், அவ்வப்போது வரிகள் விதிக்கப்படுவது இருந்தது. நாட்டைக் காக்கும் பணியே மன்னனின் பணிகளுள் தலையானதாகும். ஆதலின் படையெடுப்பின்போது ஏற்படும் செலவுகளைச் சரிக்கட்டத் தனி வரி விதிக்கும் முறை இருந்தது. முதற் குலோத்துங்கச் சோழன் ‘சுங்கம்’ என்ற வரியை நீக்கியதால் சுங்கம் தவிர்த்த சோழன் எனப் பெயர் பெற்றான்.

சில வேளைகளில் வரிகள் சுமையாகும் போது மக்கள் கிளர்ந்தெழுந்து எதிர்த்ததையும் கல்வெட்டின் வாயிலாக அறிய முடிகின்றது. இராசராசச் சதுர்வேதி மங்கலத்து நாட்டார் வரிக் கொடுமை அதிகமாக இருந்த காரணத்தால் வேளாண்மை செய்வதில்லை என்று எதிர்ப்புத் தெரிவித்தனர். இதன் விளைவாகச் சபை, மகாசபை, பேரிளமைநாடு போன்ற அமைப்புகள் சுத்தவல்லிச் சதுர்வேதிமங்களத்துத் தனியூர் இராசராசச் சதுர்வேதி போன்ற அமைப்புகள் பல தீர்ப்புகளை வழங்கியுள்ளன.

கிராமப் பொது நிலங்களின் வருவாய்களைக் கிராம சபைகள் வசூலித்தன. வரியைப் பணமாகவோ, பொருளாகவோ பெற்றனர். வசூலான வரியில் ஒரு பங்கு அரசின் பங்காகச் செலுத்தப்பட்டது. எஞ்சிய பங்கு கிராமத்தின் பொதுப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டது.

குறிப்பு

இவ்வாறு சோழர்கள் காலத்தில் வரிகள் வசூலிக்கப்பட்டு அவை சிறந்த முறையில் நாட்டின் நிர்வாகத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது.

**நாயக்கர் காலத்தில் வரிகள்**

கிராம வருவாய்த்துறை அதிகாரிகள், வரி வசூலித்து சாவடிகளில் செலுத்தினர். இப்பணம் மாகாண அதிகாரியிடம் சேர்க்கப்பட்டது. மாகாண அதிகாரியிடமிருந்து பிரதானியின் பொறுப்பிலிருந்த கருவூலத்தில் சேர்ந்தது. விஜயநகர ஆட்சி காலம் முதல் வரி பணமாக வசூலிக்கும் வழக்கிலிருந்தது. நாயக்கர் காலத்தில் உற்பத்தியான தானியத்தில் பாதியை வரியாகச் செலுத்தினர். ஆனாலும் நில வருவாயே தலையாயது. அதே வேளையில் தொழில் புரிவோர்களிடம் வரி வசூலிக்கப்பட்டது. குறிப்பாகக் கைத்தறி தொழிலாளர்களிடம் தறி ஒன்றுக்கு மாதம் ¼ பணம் வரியாகப் பெறப்பட்டது.

சேரன் மாதேவியைச் சுற்றியுள்ள இறையிலி நிலங்களுக்கு வரி வசூலிக்கப்பட்டதை எதிர்த்துக் குடியானவர்கள் நிலங்களைப் பயிரிடாமல் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றனர். இதனை அறிந்த விசுவநாத நாயக்கன் நிலைமையை விசாரித்து உழவுவரி பண்டார வாடை போன்ற எல்லா வரிகளையும் நீக்கி நாலில் ஒரு பங்கு மட்டும் அரசுக்கு வழங்கினால் போதும் எனக் கூறி தீர்வு கண்டுள்ளான்.

விஜயரங்க சொக்கநாத நாயக்கன் காலத்தில் மிகுந்தவரி விதிக்கப்பட்டதை ஒருவன் எதிர்த்து கோயில் கோபுரத்தின் மீதேறி விழுந்து தற்கொலை செய்து கொள்கிறான். இந்நிகழ்ச்சி தளவாய், பிரதானி கோட்டைத் தளபதி, சம்பிருதி கோயில் மேலாளர் மற்றும் கோயில் சபை உறுப்பினர்கள் போன்ற அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இவ்வாட்சி காலத்தில் விசுவநாத நல்லூரில் தவறாக வரி வசூல் செய்யப்பட்டதை மன்னன் அறிந்து மீண்டும் அவர்களிடமே பணத்தைத் திருப்பிக் கொடுத்த செய்தியையும் அறிய முடிகின்றது. இதன் மூலம் இவர்கள் காலத்தில் பணம் வழக்கிலிருந்ததை அறிய முடிகின்றது.

**மராட்டியர்**

வரிகளைக் கொண்டே தங்களை வளர்த்துக் கொண்டவர்கள் மராட்டியர். பட்டகர் முறை, அமணிமுறை, ஐரோப்பியர் வருகையின் ஊடே உள்நாட்டில் சுங்கம் வழி வருவாயைத் தேடினர். மராட்டியர் காலத்தில் வரிச் சுமையால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**பண்டையத் தமிழகத்து உழவு வரிகளும், வருவாய்ச் சொற்களும்**

| வருவாய் வரி | உழவு வரி |
|---|---|
| அப்பு வரி | ஆற்றுப்பாட்டம் |
| அரிசக்காணம் | இலைக்கூலம் |
| அரிமுக்கை | உழவிறை |

குறிப்பு

| | |
|---|---|
| அளக்கம் கரணம் | ஏத்தக்காணம் |
| அறிவாட்பதக்கு | ஏர்க்கடமை |
| ஆடிப்பச்சை | ஏர்க்காடி |
| ஆற்றங்கரைப் பாட்டம் | ஏர்ப்பொன் |
| ஏர்வரி | கொடிக்கடமை |
| ஏரிப்பாசிவிலை | செங்கொடிக்காணம் |
| ஏரில் ஒரு காசு | சென்னீ வெற்றாள் |
| கடமை | தானிய வர்க்கம் |
| கழுகுக் கடமை | நீர்க்கூலி |
| காணி இறை | நீர்விலைக் காசு |
| கார் கடமை | நீராணிக்கவரி |
| கார் வரகு | மரக்கடமை |
| கிணர் | மாக்கலம் |
| கடைக்காசு | மாப்பதக்கு |
| கீழ்வாரம் | மாவடை |
| குடிமை | வாரக்கூலி |
| குலைவெட்டி | வெற்றிலைத்தரகு |

**தொழில் வரி**

| | |
|---|---|
| அக்கசாலை வரி | உப்புக்காசு |
| அச்சத் தறி | உப்புப்பிடி |
| அணியடுவான் வரி | உலை |
| ஆயம் | உலைப்பாட்டம் |
| இடைப்பூச்சி | உலைவரி |
| இடைவரி | உவச்சன் பேர் கடமை |
| ஈழப்பூச்சி | ஊசிவாசி |
| உப்பு | எடைவரி |
| எண்ணெய் வரி | தட்டிறை |
| ஏணிக்காணம் | தட்டுக்கானம் |
| ஓடக்காசு | தச்சு |
| ஓடக்கூலி | தச்சுத்தேவை |
| கண்ணாடி | தச்சுத்துலாம் தோணிக் கடமை |
| கரு ஆயம் | தறியிறை |
| கருவி ஆயம் | திருத்தேர் ஊழியம் |
| கல்லாயம் | நாட்டு நூலாயம் |
| கீற்றுவரி | பட்டை ஆயம் |
| காணிக்கை | பட்டை சிற்றாயம் |

| | |
|---|---|
| குசவர் ஊழியம் | பறக்கூலி |
| குறுபட்டறை | பாண்டி வரி |
| சேனியார் தறி | வாள் வரி |
| தட்டார் பாட்டம் | வில்வரி |
| செக்காயம் | வண்ணான் பேரால் இனவரி |

குறிப்பு

## செல்வ வளம்

**பல்லவர்**

இரண்டாம் விக்கிரமாதித்தன் காஞ்சியின் மீது படையெடுத்து வந்து பல்லவ மல்லனைத் தோற்கடித்தான். காஞ்சி சாளுக்கியன் வசப்பட்டது. சாளுக்கியன் பல்லவனின் கடுமுகவாத்தியம், சமுத்திரகோஷம், கத்வாங்கக் கொடி, போர் யானைகள், சிறந்த விலையுயர்ந்த மணிகள் முதலியவற்றைக் கைப்பற்றினான். பின்னர் காஞ்சி நகரத்தை அழிக்காமல் உள்நுழைந்த விக்ரமாதித்தன் கைலாசநாதர் கோவில் செல்வத்தைப் பார்வையிட்டு வியந்து அதனைத் தான் எடுத்துக் கொள்ளாமல் அக்கோவிலுக்கே விட்டுவிட்டான். இதனைக் கைலாசநாதர் கோவிலில் உள்ள அவனது கன்னட மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டு கூறகின்றது. அவன் ஏழைகட்கும் மறையவர்க்கும் பொன்னைத் தானமாக வழங்கியுள்ளான்.

நகர அமைப்பைக் கூறும் பொழுது நகர அமைப்புத் திட்ட வல்லுநரான திருகெட்டிஸ் துரை அவர்கள் கச்சி நகராண்மைக் கழக அறிக்கையில் இந்த நகர அமைப்புத் திட்டத்துக்கு இணையான ஒன்று இந்தியாவில் உள்ள வேறு எந்த நகரத்திலும் இல்லை. உலகத்தில் உள்ள வேறு எந்த நகரத்திலும் இல்லை. வீடுகள் பாதை மட்டத்திற்குப் பல அடிகள் உயர்த்திக் கட்டப்பட்டிருப்பதும், சாலை அமைப்புகளும் பாராட்டத்தக்கன. கட்டிட அமைப்பிலும், செல்வ செழிப்பிலும் பல்லவர் காலம் சிறந்து விளங்கியதை மறுக்க முடியாது.

**பாண்டியர்**

காவிதி, ஏனாதி முதலான பட்டங்களைப் பெற்ற அதிகாரிகளுக்குப் பொற்பூவும் மோதிரமும், இறையிலி நிலமும் வழங்கப்பட்டுள்ளது. பொன், வெள்ளி முதலான உயர்ந்த பொருள்கள் கழஞ்சு, காணம் என்னும் நிறைகற்களால் அளக்கப்பட்டுள்ளன. பத்துப் பொன் கொண்டது ஒரு காசு என்பதை இரண்டாம் வரகுண பாண்டியனது திருச்செந்தூர்க் கல்வெட்டால் அறியலாம். ஒரு பொன் ஒரு காணம் எடை கொண்டது. ஒரு காணம் நான்கு குன்றி எடையுடையது எனும் இத்தரவுகளால் பொன்னின் பயன்பாடு தெரிகிறது.

குறிப்பு

பொன் வேய்தல், துலாபாரம் அளித்தல் ஆகிய திருப்பணிகளை இதுவரை வரலாற்றில் எந்த ஒரு மன்னனும் செய்யாத அளவிற்குச் செய்து ஈடிணையில்லாப் பெரும்புகழ் கொண்டவன் சடாவர்மன் சுந்தரபாண்டியன். இவன் செய்த பொன் தானங்களால் பொன் வேய்ந்த மகிபதி, பொன் வேய்ந்த பெருமான், ஹேமாச்சாதன ராஜா என்றெல்லாம் சிறப்புப் பட்டங்கள் பெற்றுள்ளான். கி.பி.1250 அக்டோபர் 25கும் கி.பி. 1251 மார்ச்சு 7ஆம் நாளுக்குமிடையே முடிசூடியவன். 1274வரை ஆட்சி புரிந்துள்ளான். தில்லை, வேங்கடம், மதுரை, திருவரங்கம் முதலான திருக்கோயிலுகளுக்கு எண்ணிலாத் திருப்பணிகள் செய்து தன் சாதனைகளைக் கல்லில் பொறித்தவன். 'பொன் வேய்ந்த பெருமாள் சுந்தரபாண்டிய தேவர்' என்று சாசனங்களும், அரங்கத்துக் கோயிலொழுகும் இவனைப் புகழ்கின்றன. ஹேமாச் சாதன ராஜா என்ற சிறப்பு விருது பெற்ற இம்மன்னன் செய்தது அத்தனையும் பொன்மயமான திருப்பணிகளே.

காவிரி துலாபாரம் செய்த சுந்தரபாண்டியனின் செயலைக் கோயிலொழுகு வழி காணலாம்.

பொதுவாக மன்னர்கள் துலாபாரம் செய்யும் போது தனியான துலாபுருஷ மண்டபம் கட்டு வித்து அதில் துலாக்கோல் மாட்டி தான் ஒரு தட்டில் ஏறி எடைக்கு எடை பொன்னை நிறுத்துக் கொடை நல்குவதே வழக்கம். சுந்தரபாண்டியன் இதன்படி திருவரங்கம் இராசமகேந்திரன் திருவீதி முதலாக நான்கு திருவீதிகளில் இருபத்து நாலு துலா புருஷ மண்டபங்கள் கட்டுவித்துத் துலாபாரம் அளித்தான். இதுவே மகத்தான சாதனை….! ஆனால் இம்மன்னன், தான் மட்டும் துலாத்தட்டில் ஏறுவதா? தனது வெற்றிகளுக்கெல்லாம் துணை நின்ற தனது பட்டத்து யானையுடன் அல்லவா துலாபாரம் ஏற வேண்டும் என முடிவு செய்தான். இத்தகு செயலுக்குத் துலாத்தட்டு கிடைப்பது அரிது இயலாது என்பதால் ஒரே அளவுள்ள இரண்டு படகுகளைச் செய்வித்து அப்படகுகளைத் தங்கத் தகடுகளால் போர்த்தி அழகு செய்து காவிரியில் மிதக்கச் செய்தான் ஒரு படகில் தான் தன் பட்டத்து யானை மீது தனது ஆயுதங்களுடன் ஏறி அமர்ந்தான். படகு நீரில் அமிழும் அளவைக் குறிக்கச் செய்து அதே அளவை மறு படகிலும் குறிக்கச் செய்தான். அக்குறியீடு நீரில் அமிழும் அளவு அப்படகில் பொன், முத்து, நவமணிகளை நிரப்பச் செய்தான். பின்பு பொன் மயமான அவ்விரண்டு படகுகளையும், நவமணிகளையும் அரங்கனுக்கு அர்ப்பணித்தான். இத்தானங்களைத் தந்த அவன் அரங்களின் சந்நிதியில் தன் உருவச் சிலையையும் வைக்க விரும்பி சபையோரிடம் அவ்விருப்பதைக் கூறினான். சபையார் ஏற்கவில்லை. அம்மன்னன் கொடுத்த பொருளையும், தீண்டவில்லை. இதனால் அத்தனை பொன்னும் மணியும் இரண்டாண்டு காலம் சந்நிதியின் முன் கிடந்தன.

விபரமறிந்த மன்னன் சபையோரின் திறம் மெச்சி, தன் விருப்பத்தை மாற்றிக் கொண்டு, தான் கொடுத்த அத்தனைப் பொன்னையும் கருவூலத்திலிட்டதோடு

குறிப்பு

அரங்கனின் விமானத்தையும், மண்டபங்களையும், தூண்களையும், துலாபாரம் செய்த பொன்னால் தகடுகளாய்ப் போர்த்தி ஒளிவிடச் செய்தான். தனது பெயரைப் பொன் வேய்ந்த பெருமாள் எனக் கொண்டு தனது பெயரால் தேவியருடன் அரங்கனுக்குப் பொன் திருமேனியையும் செய்தளித்தான்.

மேலும், இரண்டாம் திருச்சுற்றின் கிழக்குச் சுவரில் இரண்டு பக்கங்களிலும் கயல்களைப் பொறித்து இடையே மிக நீண்ட கிரந்தக் கல்வெட்டொன்றையும் வெட்டுவித்தான். ஹேமாச்சாதன ராஜா எனத் தன்னைச் சிறப்பாகக் குறிப்பிட்டு, தான் செய்த தங்கத்திருப்பணி அத்தனையையும் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளான்.

சொத்துக்களைப் பாதுகாக்க ஆவணகளரி இருந்துள்ளது. வாங்குபவர் விற்பவர் இருவரும் நான்கெல்லை தெரிவித்து உறுதிமொழி கூறி ஆவணங்களுக்கு வழி ஆவணக் காப்பு பெற்றுள்ளனர். இதனால் பொருளாதார சிந்தனையும், செல்வ வளமும் சிறந்து விளங்கியதை அறியலாம்.

**சோழர்**

தஞ்சை பெருங்கோயில் மேற்குச் சுவர் மாடத்தில் மூன்றாவது கல்வெட்டாக அமைந்துள்ளது. பொய்கை நாட்டுத் தலைவன் ஆதித்த சூரியன் இவன் தென்னவன் மூவேந்த வேளாண் என்ற பட்டம் பெற்றவன். சோழப் பேரரசில் இராசராசனின் அரசியல் அதிகாரியாகப் பணியாற்றிய ஆதித்த சூரியன் தஞ்சைப் பெருங்கோயிலின் மேற்பார்வையாளனாகவும் விளங்கினான். இராசராச மாமன்னனின் 29ஆம் ஆட்சியாண்டில் இந்தப் பொய்கை நாட்டுத் தலைவன் ஆதித்த சூரியன் ஏற்படுத்திய கல்வெட்டே பொய்கை நாடு கிழவன் சாசனம் என்று பெயர் பெற்றது.

பட்டத்தரசி உலகமாதேவி, தட்சிணமேரு, விடங்கராகிய சந்திரசேகரர் ஆகியோரை உலோகச் சிலைகளாக உருவாக்கி அளித்தான். மேலும் இந்தச் சிலைகளுக்கு அணிகலன்களை வழங்கியுள்ளான். அச்செய்தி வருமாறு.

1. சுந்தரர் சிலைக்கு உத்திராட்சத் தாழ்வடம் அளித்தான். அதில் 56 பொன் திருகாணிகளும் 56 உத்திராட்ச மணிகளும் இருந்தன. அவ்வடம் 8 கழஞ்சு 9 மஞ்சாடி அளவுடையது.
2. பரவையார் படிமத்துக்குத் திருக்கைக்காறை இரண்டு, திருக்காற்காறை இரண்டு, மோதிரம் ஆகியன அளிக்கப்பட்டுள்ளன.
3. நாவுக்கரசர் படிமத்துக்கு உத்திராட்சச் சரியும், கழுத்தணிமாலை ஒன்று, திருப்பொற்பூ ஒன்று, திருக்காறை இரண்டு, வழங்கியதோடு அதைப்போலவே திருஞானசம்பந்தர் படிமத்துக்கும் பொன்னணிகள் வழங்கியுள்ளான்.
4. இராசராசன் படிமத்துக்குத் திருக்கைக் காறைகளையும், திருக்குறம்பைகளையும் அளித்தான்.

மேலும் பரகேசரிபுரத்து நகரத்தார். வெண்ணி நகரத்தார் ஆகியோரும் சுந்தரர், பரவையார், நாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆகியோருக்குப் பொன்னணிகள் வழங்கியுள்ள செய்தி கல்வெட்டால் அறியலாகிறது.

குறிப்பு

**ஆதித்த சூரியன் அளித்த பொன்னின் எடை அளவு**

பரவையார் கையில் அணிந்த காறை ஒன்றின் எடை ஒன்றரை கழஞ்சு, அப்படியெனில் இரண்டு கைகளிலும் இடம் பெற்ற அளவை மூன்று கழஞ்சு எடையுள்ளவை. அதைபோலவே காலில் அணிந்த காறை ஒன்றரை + ஒன்றரை = மூன்று கழஞ்சு மோதிரம் அரை கழஞ்சு பதினாறு மஞ்சாடி ஒன்று குன்றி எடையுள்ளது.

திருநாவுக்கரசர்கு திருக்கைக்காறை ஒன்று இரண்டரை கழஞ்சு எடையுள்ளது. மற்றொன்று பதின்மூன்று/நான்கு கழஞ்சு நான்கு மஞ்சாடி எடையுடையது.

திருஞானசம்பந்தர் திருக்கைக் காறைகள் இரண்டில் ஒன்று இரண்டு கழஞ்சு, ஒன்றில் குன்றி எடையும், மற்றொன்று பதின்மூன்றில்/நான்கு கழஞ்சு நான்கு மஞ்சாடி எடையும் கொண்டன.

முதலாம் இராசராசன் திருக்கைக் காறைகள் இரண்டரை கழஞ்சு இரண்டு மஞ்சாடி ஆறு மா எடையுடையவை.

இக்கல்வெட்டுள்ள பெரிய கோயிலில் அணிகலன்களில் உள்ள இரத்தின கற்கள் சரடு நீக்கி தட்சிண மேரு விடங்கன் என்ற நிறைகல்லால் இத்தனை என்றும், அணிகலன்களில் உள்ள பொன் ஆடவல்லான் என்ற நிறை கல்லால் இத்தனை எடை உடையது என்றும் கல்வெட்டில் குறித்து வைக்கப்பட்டுள்ளன.

விக்கிரமசோழன் தன் ஆட்சியின் பத்தாம் ஆண்டில் தான் பெற்ற திறைப் பொருளால் தில்லையில் பொன்னம்பலத்தைச் சுற்றியுள்ள திருமாளிகை, கோபுரவாசல், கூட சாலைகள், பலி வளர்பீடம், திருத்தேர்க்கோயில் முதலியவற்றை பொன்னால் வேய்ந்தான். இறைவன் திருமேனிக்கு முத்து மாலைகள் பல கொடுத்தான். இறைவன் திருவமுது கொள்ளும் பரிகலம், கற்பகத்தரு/பரிச்சின்னம் முதலியவைகளைப் பொன்னால் செய்வித்துள்ளான்.

சோழர் குலப் பெண்டிர் பலரும் திருக்கோயில்களுக்கு தங்களின் கொடையாக ஆபரணங்களை வடித்துக் கொடுத்துள்ளனர். பராந்தக சோழன் காலத்தில் தொடங்கிய பொன் வேய்தலை எல்லா சோழ மன்னர்களும் பின்பற்றினர். ஆரூரனின், விமானத்தைப் பொன் தகடால் போர்த்தியவன் கடாரம் கொண்ட இராசேந்திர சோழன் ஆவான்.

திருக்கோயில்கள் ஒவ்வொன்றும் கருவூலங்களாக விளங்கின. எடைக்கு எடை பொன்னை இறைவனுக்கு அளிக்கும் வழக்கம் இருந்துள்ளது. இச்செயல் துலாபாரம் அளித்தல் எனப்பட்டது.

**நாயக்கர்**

குறிப்பு

தமிழகத்திலேயே மிக உயரமான கோபுரமாகிய திருவண்ணாமலை இராசகோபுரத்தை எடுப்பித்த செவ்வப்ப நாயக்கன் ஸ்ரீசைலம், திருப்பதி முதலிய கோயில்களில் விமானங்களுக்குப் பொன் வேய்ந்துள்ளான். மன்னார்குடி இராஜகோபால சுவாமித் திருக்கோயிலின் மண்டபத்தின் தென்புறத் தூணில் மலையாகக் குவிக்கப்பட்டுள்ள தங்கப் பாளங்களுக்கு எதிரே ஒரு புறம் இரகுநாதனும் அவனது பட்டத்தரசியும் அமர்ந்து நீர் வார்த்துக் கொடுப்பது போன்ற காட்சியும், இதே தென்புற முள்ள பிறிதோர் தூணில் இரகுநாதன் துலாத்தட்டில் அமர்ந்திருக்க எடைக்கு எடை பொன் நிறுக்கப்படும் காட்சி உள்ளது. இதனால் இக்கோயிலுக்குப் பொன் தானம் அளிக்கப்பட்ட செய்தி உறுதியாகிறது. கும்பகோணம் மகாமகக்குளத்து 16 மண்டபங்களில் மிகப்பெரியது துலாபுருட மண்டபமாகும். இதில் இம்மன்னன் துலாத்தட்டு அமைத்து பொன் தானம் அளித்துள்ளான். இதர 15 மண்டபங்களினும் அமர்ந்து பிற வகையான துலாபாரம் அளித்துள்ளான். நாயக்கர் காலத்திலும் திருக்கோயில்கள் கருவூலங்களாக விளங்கின.

**மராட்டியர்**

யானைத் தந்ததால் ஆன வேலைப்பாடுகள் உருவாயின. பிரதாப சிம்மனும் இரண்டாம் துளாசவும் வண்ணமயமாக வரையப்பட்டுள்ள ஓவியம் சரஸ்வதி மஹால் நூலகத்தில் தங்க ரேக்குகள் இழைக்கப்பட்டதாக உள்ளது. அரச குடும்பத்தார் அணியும் உடைகள் தங்க சரிகைகள் வேலைப்பாடுகள் கொண்டதாக இருந்துள்ளன.

மராட்டியர் கால பெண்களும், ஆண்களும் ஆடம்பரமான செல்வ செழிப்புள்ள வாழ்க்கை வாழ்ந்ததை அவர்களின் ஓவியங்களும் இதர கால வேலைப்பாடுகளும் உறுதி செய்கின்றன.

## அளவு முறைகள்

நீர்வளமிக்க நிலத்தை முறையாக அளந்து வரி விதித்தலும் மன்னனின் கடமைகள், அதனால் முறைப்படுத்தப்பட்ட அளவு கருவிகள் தேவைப்பட்டன. அம்முறைப்படுத்தப் பெற்ற அளவுகளைக் கொண்டு நிலங்கள் அளக்கப்பட்டதைக் கல்வெட்டுகள், செப்பேடுகள் வழி அறிய முடிகின்றது. நில அளவுகளையும், நில அளவைக் கணக்குகளையும் கணக்கிட சிற்றூரிலும், பேரூரிலும் அரசு அலுவலர்கள் வைத்திருந்தனர்.

பல்லவர் கால அளவு முறைகள்

முறைப்படுத்தப்பட்ட அளவுகோல்கள் சாண் கணக்கில் கணக்கிடப்பட்டுப் பயன்பாட்டிலிருந்தன. அவை நாற்சாண் கோல் எண்சாண் கோல் பன்னிருசாண்கோல், பதினாறு சாண்கோல் போன்ற அளவுகளில் விளங்கின.

*Self-Instructional Material*

நில அளவுப் பெயர்களாகக் குழி, பாடகம், பட்டி, வேலி போன்ற அளவைகளும் இருந்தன. காட்டாக நிரூபதுங்கன் கல்வெட்டு 27,000 குழி நிலம் பல்வேறு மக்களுக்கும் பிரித்து கொடுக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.

குறிப்பு

பல்லவர் காலத்தில் நீட்டல் அளவை, முகத்தல் அளவை, நிறுத்தல் அளவை போன்றவை வழக்கில் இருந்தன.

**நீட்டல் அளவை**

கலப்பை, நிவர்த்தனம், பட்டிகா, பாடகம் என்னும் நான்கு அளவைகள் பல்லவர் ஆட்சியில் இருந்தன.

1. கலப்பை-இரண்டு எருதுகள் பூட்டப் பெற்ற ஒரு கலப்பையைக் கொண்டு குறிப்பிட்ட ஒரே நேரத்தில் ஒருவன் உழும் நிலத்தின் அளவாகும்.
2. நிவர்த்தனம்-ஒருவன் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியிலிருந்து குறிப்பிட்ட நேரத்திற்குள் அவனால் எல்லைக் கோலப்பட்ட நில அளவாகும்.
3. பட்டிகள்-ஆட்டை ஓர் இடத்தில் கட்டி அதன் கயிற்றின் உதவியால் சுற்றும் அளவையுடைய நிலப்பகுதியே ஆகும்.

**முகத்தல் அளவை**

நாழிகள் பல பெயர்கள் பெற்றிருந்தன. அவை,

1. கருநாழி, 2. நால்வா நாழி, 3. மாநாய நாழி, 4. பிழையா நாழி, 5. நாராயண நாழி முதலியன. உறி என்பது ஒரு முகத்தல் அளவைக் கருவியாகும்.

**நிறுத்தல் அளவை**

கழஞ்சு, மஞ்சாடி என்பன பொன் முதலியன நிறுக்கும் அளவைகள் கழஞ்சி என்பது பல பட்டங்களில் காணப்படும் அரசாங்க அளவை ஆகும். கழஞ்சியின் பன்னிரண்டில் ஒரு பாகம் மஞ்சாடி ஆகும். பட்டயங்களில், கழஞ்சிற்கு வட்டி குறிப்பிட்ட போதெல்லாம் மஞ்சாடி அளவை குறிப்பிடப்பட்டுள்ளதால் இதனை அறியலாம்.

இவ்வாறு பல்லவர் காலத்தில் அளவை முறைகள் பயன்படுத்தப்பட்டன.

**பாண்டியர் கால அளவைகள்**

அரசு வருமானத்தில் நிலவருவாய் முதன்மையானதாக இருந்ததால், தங்கள் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியிலுள்ள விளை நிலங்களை முறையாக அளந்து வரி விதிப்பது என்பது அரசின் கடமையாக இருந்தது. அவ்வாறு அளப்பதற்காக அளவுகோல்கள் முறைபடுத்தப்பட்டன. இதனைக் கல்வெட்டுகள், செப்பேடுகள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. புறநாஞ்சில் கோல், குடிதாங்கிக் கோல் 18 அடி வீரபாண்டியன் கோல், 24 அடி சுந்தரபாண்டியன் கோல், ஊர்க்கோல். குழிக்கோல் (கல்லிடைக் குறிச்சி), பிரம்மராட்சன் கோல் (கரி வலம் வந்த நல்லூர்) என்று அளவு கோல்கள் இருந்தன. முறைபடுத்தப்பட்ட அளவு கோல்களின் நீளம் கோயில்களிலும், பொது இடங்களிலும் பொறித்து வைக்கப்பட்டு இருந்தன. கொற்கையில் சுந்தரபாண்டியனுடைய, 24 அடிக்கோல் பொறித்து வைக்கப்பட்டுள்ளது.

இதைப் போன்று குழி காணி, மா, வேலி போன்ற நில அளவுகளும் பாண்டியர் காலத்தில் இருந்தன.

**'பண்டுள்ள பேர் தவிர்த்தது**

**அளப்பனவும் நிறுப்பனவும் கயலெழுதி'**

என்ற கல்வெட்டு வரிகளின் மூலம் முறைப்படுத்தப்பட்ட அளவு கருவிகளின் மீது கயல் சின்னம் பொறித்துள்ளனர்.

குறிப்பு

**சோழர் கால அளவை முறைகள்**

நீர் உயர நெல்லுயரும் என்ற பழமொழிக்கேற்ப மன்னனால் செய்யப்பட்ட நீர்பாசனத்தின் வழி நிலவளம் பெருகிற்று. விளைவு பெருகப் பெருக மன்னனுக்கு வருவாய் மிகுதியாகக் கூடியது. நிலவருவாய் நிர்ணயிக்க நிலங்களின் தரம் அறியப்படுவது அவசியமாயிற்று. அதற்கு நிலமளத்தல் பணி முக்கியம். வரி விதிப்பதில் உள்ள குறைபாடுகளை அகற்றுவதற்கு நிலங்கள் முறையாக அளக்கப் பெற்றன.

முதலாம் இராசராசன் தனது 16ஆம் ஆட்சியாண்டில் உலகளந்தான் இராசராச மாராயன் என்ற அதிகாரியைக் கொண்டு நிலத்தினை முறையாக அளந்து கணக்கிட்டான். அவ்வாறு அளப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட அளவுகோல் உலகளந்தான் கோல் என்ற பெயரால் வழங்கப்பட்டது. இதுவே இராசராசன் காலத்தில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோலாக இருந்திருத்தல் வேண்டும். இந்த அளவுகோல் தமிழ்நாட்டின் பல இடங்களில் வழக்கில் இருந்துள்ளது.

குடிமல்லம் என்ற ஊரிலுள்ள முதலாம் ஆதித்தன் கல்வெட்டில் கடிகைக் களத்து பதினாறு சாண் கோலால், ஐம்பது குழி கொண்டது ஒரு மாவாகவும், 1000 குழி கொண்டது ஒரு படியாக விலை கொடுத்துக் கொண்ட நிலம் இரண்டு பட்டியிலும் என்று வருவதன் மூலம் பதினாறு சாண் கோல் வழக்கிலிருந்துள்ளதை உணரலாம். முகத்தல் அளவு கருவிகளும் முறைப்படுத்தப்பட்டன. திருமறைக்காடன் வழக்கு, இராசகேசரி எண்ணாழிக்கால், நாலுழக்கு, வழுவா நாழி, அருண்மொழித் தேவன் எண்ணாழிக்கால், உலோக விடங்கண் நாழி, அருண்மொழித் தேவன் மரக்கால், கேரளாந்தகன் மரக்கால் போன்ற பெயர்கள் அளவு கருவிகளுக்கும் வழங்கப்பட்டிருந்தன.

**1. முகத்தல், நிறுத்தல் அளவைகள்**

2 செவிடு - 1 பிடி

5 செவிடு - 1 ஆழாக்கு

2 ஆழாக்கு- 1 உழக்கு

2 உழக்கு - 1 உரி

2 உரி - 1 நாழி

8 நாழி - 1 குறுணி

2 குறுணி - 1 பதக்கு

2 பதக்கு - 1 தூணி அல்லது காடி

3 தூணி - 1 கலம்

குறிப்பு

**2. பொன்னின் அளவு**

1 மஞ்சாடி - 2 குன்றி 10 மா 40 காணி

20 மஞ்சாடி- 1 கழஞ்சு (68 அல்லது 72 கிரைன்)

3. படிமங்களை அளக்க உதவிய நீட்டல அளவைகள்

8 தோரை (நெல்) - 1 விரல்

12 விரல் - 1 சாண்

2 சாண் - 1 முழம்

மா ஒரு வேலியின் 1/20 பாகம் }

காணி ஒரு வேலியின் 1/80 பாகம் } முதலில் ஒரே அளவாகவும் பின்னா் மாறுபட்டும் அமைகின்றன.

பணம் ஒரு கழஞ்சு பொன்னின் 1/10பங்குக்குச் சமம்

மாவின் மதிப்பு – ½ காசு

**நாயக்கர்**

விளைச்சலில் 3-ல் ஒரு பங்கு உள்ள அளவு வரி வசூலிக்கப்பட்டுள்ளது. பணம் புழக்கத்தில் வந்தது. கிராமத்தின் வரிக் கணக்கும் நிலக் கணக்கும் கா்ணம் பராமரித்தார். கிராமத்தின் எல்லை, நிலப்பரப்பு, தோட்டங்கள், தோப்புகள், இறையிலி நிலங்கள், காடு, இடுகாடு, குளம், கிணறு வாய்க்கால் முதலியவற்றின் கணக்குப் பதிவும், வரி, வருவாய்க் கணக்கும் கா்ணத்தின் பொறுப்பில் இருந்தன.

**மராட்டியர்**

1781-ல் துல்சாசி காலத்தில் பவன பண்டிதர் துவக்கிய பட்டகா் முறை வேளாண்மை கண்காணிப்பையும் வரி வசூலையும் ஒன்றாக இணைத்தது. ஐதரின் சூறையாடல்களுக்குப் பின் தோன்றிய பட்டகா் முறை அகல் முறை வேளாண்மைக்கு வசதி செய்தது. நீா் நிலைகள் பேணப்பட்டன. எனினும் பிற்காலத்தில் கொடுங்கோன்மையை ஏற்படுத்தியது.

1771-ல் தாபிா் பண்டிதர் உருவாக்கிய அமணிமுறை வரித்திட்டம் அதிகாரிகள் கூடி விவசாயிகளைச் சூறையாட வழி வகுத்தது. சுங்கவரி பெற்றறாா்கள் இவற்றின் அளவால் தங்களை உயர்த்திக் கொண்டார்கள்.

**கல்வெட்டில் இயற்றமிழிலக்கியம்**

தமிழன் வரலாற்றையும் தமிழ் வழங்கும் முறைகளையும் அறிவதற்கும் தமிழில் உள்ள நூற்பரப்பு இன்றியமையாத கருவி, அதைப் போல் மற்றொரு கருவியாகக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் விளங்குகின்றன.

இக்கல்வெட்டும் செப்பேடும் பக்தித்திறம் உடைய உத்தமா்களால் ஆலயங்களுக்கும் தா்மங்களுக்கும் பலன் கருதாது செய்த அறச்செயல்களைக் கூறுகின்றன என்றும்

*Self-Instructional Material*

நிலைக்க வேண்டி செய்யப்பட்ட அறமாதலின், அரசரிடத்தும், அதிகாரியிடத்தும் அனுமதி பெற்றுக் கோயில் முதலிய பொதுவிடங்களில் சாசனங்கள் கல்லிலும் செம்பிலும் வெட்டிப் பலரும் அறியப் பகிரங்கப்படுத்தப் பெற்றுள்ளன.

குறிப்பு

இந்தச் சாசனங்களும் இலக்கியமும் ஒன்றை ஒன்று விளக்குமானால், தமிழரின் வரலாறு நிகரில்லா இடத்தைப் பெறுவது திண்ணம். ஆயினும் சாசனங்களின் மொழி நடைக்கும் இலக்கிய மொழி நடைக்கும் வேறுபாடு உள்ள காரணம் என்னவெனில் சாசனங்கள் மக்கள் பேசுவது போலவும், இலக்கியங்கள் மரபு சார்ந்தும் எழுதப்பட்டதனால் மொழி நடையில் ஒற்றுமை கூற இயலாது.∴ இலக்கியங்கள் படித்தவர்களால் எழுதப்பட்டவை. ஆயின் சாசனங்களில், பிழைகள் கணிசமாகக் காணப்படுவதால் வழக்கு நிலையிலும் மொழியில் சிறந்த அறிவு இல்லாமலும் கூட சாசனங்கள் இருப்பதைக் காண முடிகிறது.

சாசனங்கள் பெரும்பாலும் அவை அமைந்த எழுத்தமைதி கொண்டு இந்த நூற்றாண்டினைச் சார்ந்தது எனத் தொல்லியலறிஞர்கள் கல்வெட்டாய்வாளர்கள் கூறிவிடுவர். அதே போல் இலக்கியங்களும் அவற்றின் உள்ளீடு வழக்கு, வரலாறு கொண்டு இந்த நூற்றாண்டைச் சார்ந்தது என்று மதிப்பிட முடியும்.

வினோதரச மஞ்சரி போன்ற புலவர் வரலாற்று நூல்களை நோக்குவோமாயின் முற்காலத்தவரைப் பிற்காலத்தவராகவும், ஒருவர் கதையை மற்றவரது கதையாகவும், பழையவர் பாடல்கள் புதியவர் பாடலாகவும் பலவகையில் தவறாகக் கூறப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. முற்காலத்தவரான ஔவையாரையும், பிற்காலத்தவனான ஏகம்பவாணனையும் கம்பர் வரலாற்றுடன் இணைத்து வழங்கும் கதைகளை அந்நூல் முதலியவற்றில் காணலாம்.

ஏகம்பவாணன் 16ஆம் நூற்றாண்டில் தென்காசியை ஆண்ட சீவலமாறன் காலத்தவன் என்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் உள்ளன. இவ்வாறு, ஆழ்வார்கள் காலங்களைப் பற்றிச் சரித்திரம் எழுதினோர் சிலர் குலசேகரப் பெருமாள் ஸ்ரீவல்லபப் பாண்டியன் என்பன போன்ற பெயர்கள் சாசனங்கள் சிலவற்றில் காணப்படுவதைக் கொண்டு இராமானுஜர்க்கும் பிற்பட்ட காலத்தவர்களாக எழுதிவிட்டனர். தவறெனத் தெரிந்தும் கூட நாதமுனிகள் காலத்தும் அவர்கட்குப் பின்பும் அவ்வடியார்களைக் குறித்து எழுதி வருகின்றனர்.

சாசனங்களில் எத்தனையோ பாடல்கள் உள்ளன. அவையெல்லாம் சேர்த்து தொகுக்கப் பெற்றால் ஒரு சிறந்த இலக்கியமாகத் தடையில்லை என மு.இராகவையங்கார் கூறுகிறார்.

கல்வெட்டுகளில் தமிழ்ப் புலவர் பெயர்களும், பல்வேறு பாடல்களும் இடம் பெற்றுள்ளன. கல்லில் பாடல்களை வடித்தல் எளிதன்று. இத்தகைய ஆர்வமும், மொழி நடையும் இலக்கிய நூல்களில் காண்பது எளிது. ஆயின் கல்வெட்டில் காண்பது அரிது. எனவே, கல்வெட்டுகள் வெளிப்படுத்தும் இலக்கியப் பாடல்களைக் காணலாம்.

**1. செந்தலைக் கல்வெட்டு**

ஏறத்தாழ கி.பி.6 அல்லது 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்பிடுகு முத்தரையன் என்ற சிற்றரசனைப் புலவர் நால்வர் பாராட்டிப் பாடிய பாடல்கள், திருச்சிராப்பள்ளியை அடுத்த செந்தலை என்னும் ஊரிலுள்ள சிவன் கோயிலில் கல்வெட்டுகளாகக் காணப்படுகின்றன. அவற்றைப் பாய்ச்சில் வேள் நம்பன் ஆசிரியர் அநிருத்தர், கோட்டாற்று இளம் பெருமானார், குவாவங்கஞ்சன் என்னும் நால்வரும் பாடியுள்ளனர். பாடல்கள் வருமாறு.

**பாய்ச்சில் வேள் நம்பன் பாடிய பாடல்**

**வெங்கட் பொருகயல்சேர் வெல்கொடியோன் வாண்மாறன்**
**செங்கட் கரும்பகடு சென்றுழக்க - அங்குலந்தார்**
**தேரழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்த**
**ஊரழுந்தி யூரென்னு மூர்.**

**ஆசிரியர் அநிருத்தர்**

**போலரசு பிறவா பிறநெடு மேருநெற்றிப்**
**பொன் போல் பசுங் கதிராயிரம்**
**வீசும் பொற்றேர் பருதிக் கென்போதர வீடு**
**மோவினைச் சோதியிரு விசும்பே**

**கோட்டாற்று இளம் பெருமானார்**

**சேட்டிணர் பூந்தண் பொழிற் செம்பொன் மாரிக்கடியரண்**
**மூட்டின சீற்றமுன் சென்றது பின்பு பகட்டிணத்தோர்**
**கெ (மர்) மாறன்கட்டி-க்க**

**குவாவங்கஞ்சன் பாடியது**

**(பல பாடல்கள் பாடியுள்ளார் எ.கா. ஒன்று மட்டும்)**
**செருவ லரானதனாற் சிந்தியார் போலும்**
**மருவலராய் வாண்மாறன் சீறக்-கருவிகளை**
**கண்டோற்ற வேண்டரங் கார் தோற்றுங் காந்தளூர்**
**மண்டோற்ற வேந்தர் மறம்.**

**(2) திருத்தணிகை வீரட்டானேசுவரர் கோயில் பாடல் கல்வெட்டு**

கி.பி.9ஆம் நூற்றாண்டின் இறுதியில் பல்லவ அரசனாக இருந்த அபராஜிதவர்மன் திருத்தணிகை வீரட்டானேசுவரர் கோயிலில் பாடிய வெண்பா கல்வெட்டு வருமாறு.

**திருந்து திருத்தணியில் செஞ்சடை ஈசற்குக்**
**கருங்கல்லால் கற்றளியா நிற்க-விரும்பியே**
**நற்கலைகள் எல்லாம் நவின்றசீா் நம்பியப்பி**
**பொற்பமையச் செய்தான் புரிந்து**

குறிப்பு

திருத்தணியில் வீரட்டானேசுவரா் கோயில் என இந்நாளில் கூறப்பெறும் தூங்கானை மாடக்கோயிலை அபராசிதன் காலத்தவனாகிய நம்பியப்பி என்பவன் முழுக்கற்றளியாக எடுப்பித்தான் என்று இப்பாடல் கூறுகிறது.

**3. தந்திவா்மனின் திருவெள்ளறைப் பாடல் கல்வெட்டு**

திருச்சிராப்பள்ளியிலிருந்து 12 கல் தொலைவில் திருவெள்ளறை என்ற ஊா் உள்ளது. இவ்வூரில் ஸ்வஸ்திக வடிவில் நான்மூலைப் பெருங்கிணறு ஒன்று உள்ளது. இக்கிணற்றின் சுவரில் ஒரு கல்வெட்டு உள்ளது. அதன் இறுதியில் இப்பாடல் காணப்படுகிறது.

*ஸ்ரீ கண்டார் காணா வுலகத்திற் காதல் செய்து நில்லாதேய்*
*கண்டேய் பரமன் படைத்த நாள் பார்த்து நின்று நைய்யாதேய்*
*தண்டார் மூப்பு வந்துன்னை தளரச் செய்து நில்லாமுன்*
*லுண்டேல் லுண்டு மிக்கது உலகம் மறிய வைம்மினேய்*

பல்லவ அரசன் தந்திவா்மனுடைய (775-923) காலத்தில், ஆலம் பாக்கத்து விசையநல்லூழான் என்பவனுடைய தம்பியாகிய கம்பன் அரையன் என்பவன் இக்கிணற்றினை வெட்டினான். இது தந்திவா்மனின் நான்காம் ஆண்டில் தொடங்கி ஐந்தாமாண்டில் முடிக்கப் பெற்றது. இக்கிணற்றுக்கு மாா்ப்பிடுகு பெருங்கிணறு என்பது பெயா்.

**4. செங்கம் பாடற் கல்வெட்டு**

வட ஆர்க்காடு மாவட்டம் செங்கம் என்னும் ஊரில் உள்ள ரிஷபேசுவரா் கோயிலில் இருவெண்பாக்களுடன் கூடிய வடமொழிக் கல்வெட்டொன்று உள்ளது. இதன் காலம் கி.பி. 12-13ஆம் நூற்றாண்டுகளுக்குரியது. இது சோழா் காலத்துக் கல்வெட்டு ஆகும்.

வண்டறைதாா் மன்னா் மலை படைத்தென் மன்னரைவெந்
கண்டதிறல் காங் கேயன் கண்சிவப்ப – பண்டே
மலைகடாம் பாட்டுண்ட மால்வரை செஞ்சோரி
அலைகடாம் பாட்டுண் டது.

மலைபடுகடாம் என்பது பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றாகும். வண்டுகள் ஒலிக்கும் மாலையணிந்த மன்னா்களோடு போா்செய்து வென்ற படையை உடைய பாண்டிய மன்னரைப் புறங்கண்ட காங்கேயன் சினமுற்றமையால் முன்பு மலைபடு கடாம் என்னும் நூல் பாடப் பெற்ற மலை தற்போது செங்குருதி அலைகளால் மோதப்பட்டது ஆயிற்று. (சங்ககால நூல் இடம் பெற்றிருப்பது சிறப்பு).

*Self-Instructional Material*

குறிப்பு

**5. அரிகேசரி பராக்கிரம பாண்டியர் பாடல் கல்வெட்டு**

திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் விசுவநாதர் கோயிலின் முன்பு இடிந்துள்ள கோபுரத்துச் சுவர்களில் இப்பாடற் கல்வெட்டு உள்ளது. இக்கோயில் கட்ட கால்கோள் சகம் 1368-ல் அதாவது கி.பி. 1446இல் வைகாசித்திங்கள் 10ஆம் நாள் வளர்பிறை தசமி வெள்ளிக்கிழமை மீன லக்கினத்தில் நடப்பட்டது என்பதை கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அமைந்த பாடல் கூறுகிறது.

**கட்டளைக் கலித்துறையில் அமைந்த ஒரு பாடல் வருமாறு**

*சேலே றியவயல் தென்காசி ஆலயம் தெய்வச் செய*
*லாலே சமைந்ததிங் கென்செய வல்ல அதனையின்னம்*
*மேலே விரிவுசெய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர்நம்*
*பாலேவல் செய்து பணிவன் பராக்கிரம பாண்டியனே.*

தென்காசிக் கோயில் இறையருளால் கட்டப் பெற்றது. என் செயலால் அல்ல, இதனை இன்னும் விரிவு செய்து காப்பாற்றுபவரின் திருவடியை வணங்குவேன் அவர்க்கு ஏவலாளன் ஆவேன் என மன்னன் கூறியதை எழுத்தாகக் காண்பதில் அவர்களின் பக்தியும் தன்னடக்கமும் தெரிகிறது.

**சங்கப் புலவர்கள் பற்றிய கல்வெட்டுகள்**

முதலாம் இராஜராஜனின் 27-ம் ஆட்சியாண்டில் (கி.பி.1012) திருக்கோவிலூர் வீரட்டானேசுவரர் திருக்கோயில் கருவறையில் அமைந்துள்ள மிக அரிய நீண்ட கல்வெட்டுப் பாடலொன்று மாமன்னன் முதலாம் இராஜராஜசோழனின் அவையில் அறங்களை எடுத்துக்கூறும் உயர்நிலை அலுவலனான சோழநாட்டு ஆலங்குடியான் கம்பன் ஆதிவிடங்கன் என்பான் செய்த அறக்கொடைகளை விவரிக்கிறது. இந்த விவரிப்பில் திருக்கோவிலூரின் பெருமைகளாக இரண்டு நிகழ்வுகள் குறிப்பிடப்படுகின்றன.

முதலாவது நிகழ்வு திருக்கோவிலூர் மலையமானின் மகளும் இராஜராஜன் என்னும் புலியைப் பயந்த பெண்மானுமான வானவன் மாதேவி தன் கணவன் சுந்தரச் சோழனுடன் சிதையேறிய நிகழ்வு. இரண்டாவமது என்னவெனில், பாரியின் பிரிவை (மரணத்தை)த் தாங்க இயலா நண்பனான புலவன் கபிலன்-பாரியின் மகளை மலையமானுககு மணமுடித்துவிட்டு நெருப்பில் புகுந்து உயிர் நீத்த நிகழ்வு.

இந்த இரண்டு நிகழ்வுகளுக்கும் இடையே உள்ள ஒரே ஒற்றுமை நெருப்பு, செந்தழல் தீ ஆகும். இதனை அகவற்பா விவரிக்கின்றது. இதில் கபிலனைப் பற்றி வரும் பகுதியைக் காணலாம்.

**……. வன்கரைப் பொருது வருபுனற் பெண்ணைத்**
**தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது**
**மொய்வைத் தியலு முத்தமிழ் நான்மைத்**
**தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்**
**மூரிவண் டடக்கைப் பாரிதன் னடைக்கலப்**

**பெண்ணை மலையிற் குதவிப் பெண்ணை**
**அலைபுன லழுவத் தந்தரிட் சஞ்செல**
**மினல்புகுங் விசும்பின் வீடுபோறெண்ணிக்**
**கனல்புகுங் கபிலக் கல்லது புனல்வளர்**
**பேரெட்டான வீராட்டனம்**
**அனைத்தினு மநாதி யானது**

குறிப்பு

**கல்வெட்டுப் பாடல்களும் - புலவர்களும்**

ஏறத்தாழக் கி.பி.10 ஆம் நூற்றாண்டில் வெட்டப்பட்டதாகக் கருதப்படும் கல்வெட்டு ஒன்று மதுரையை அடுத்துள்ள கீழ்மாத்தூர் சிவன் கோவிலில் உள்ளது. அக்கோயிலைக் கட்டியவர் பல்கலை விற்பன்னரும், பெரும் புலவருமாகிய தென்னவன் தமிழவேள் என்று அக்கல்வெட்டுக் கூறுகிறது.

புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள சித்தன்னவாசல் மலைக்குகையில் பாடல் வடிவில் அமைந்த கல்வெட்டு, மதுரையாசிரியன் இளங் கௌதமனார் என்பவரால் பாடப்பட்டது. இவர் காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டு முதற் குலோத்தங்கன் காலத்தில் (கி.பி. 1070-1120) தமிழ் நாட்டுப் பெரும் புலவராக விளங்கியவருள் மருதத்தூருடையான் குன்றம் திருச்சிற்றம்பலமுடையான், கவி குமுத சந்திரன், திருநாராயண பட்டன், வீரைப்பரசமய கோளரி மாமுனி, நெற்குன்றங்கிழார் களப்பாளரசர் என்பவர் குறிப்பிடத்தக்கவர்கள், திரு நாராயணபட்டர் முதல் குலோத்துங்க சோழன் சரிதை பாடிய பெரும்புலவர்.

பூம்புலியூர் நாடகம், கன்னிவன புராணம் என்பனவற்றைப் பாடியவர் பரமசமய கோளரி மாமுனி ஆவார். இவருக்கு நிலதானம் செய்யப்பட்டுள்ளது.

குன்றம் திருச்சிற்றம்பலமுடையான் பாடிய கவிக்குப் பரிசிலாகப் பெற்ற ஊர் குடிக்காடு இரும்பூதி. களப்பாளராசர் திருப்புகலூர் அந்தாதி பாடியவர். மூன்றாம் குலோத்துங்கனின் அவைக்களப் புலவருள் ஒருவர் வீராந்தப் பல்லவரையர், சொக்கசீயர் எனும் புலவர் கோப்பெருஞ்சிங்கனைப் புகழ்ந்து பல பாடல்கள் இயற்றியுள்ளார். அவை பல கோவில்களில் கல்வெட்டுகளாகக் காணப்படுகின்றன. மாறவர்மன் சுந்தரபாண்டியனுடைய (கி.பி. 1216-38) அவைக்களப் புலவராக இருந்தவர் காரானை விழுப்பரையர் ஆவார்.

சிதம்பரம் தெற்குக் கோபுரத்து எதிரிலுள்ள நந்தி மண்டபத்தில் உள்ள கல்வெட்டு ஆறு பாடல்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஐந்தைப் பாடியவர் புவனேக வீரத் தொண்டைமானான தாயினல்ல பெருமாள் முனையதரையன் என்பான். காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டாகும்.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி வட்டத்தில் இராமநாதபுரம் என்று அழைக்கப்பெறும் பூசன்குடியில் உள்ள பிள்ளையார் கோவில் கல்வெட்டில் உள்ள பாடல்களைப் பாடியவர் முத்துக்குமார சுவாமி எனும் புலவர் அவர் காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டின் இறுதியாகும்.

குடுமியான் மலைக் கல்வெட்டில் ஆதிநாதர் எனும் புலவர் பாடிய வெண்பா உள்ளது. புலவர் பெயருடனும், புலவர் பெயர் இன்றியும் பல பாடல்கள் கல்வெட்டினும் செப்பேடுகளிலும் உள்ளன.

குறிப்பு

**புலவர்கள் பெற்ற பரிசில்கள்**

முதலாம் இராசேந்திரன் காலத்தில் அவன் மகனான வீரராசேந்திரன் மீது வீர அனுக்க விஜயம் என்ற நூலைப் பூங்கோயில் நம்பி என்பவர் பாடி அதற்காக நிலங்களைத் தானமாகப் பெற்றுள்ளார்.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1216-1235) காலத்தில் புதுக்கோட்டையிலுள்ள திருவரண்குளத்துக் கல்வெட்டு தேவன் திருவரண்குளமுடையான் என்ற புலவர் பாடிய பேர் வஞ்சி என்ற நூலை ஊரார் கேட்டு மகிழ்ந்து அவருக்கு மறச்சக்கரவர்த்திப்பிள்ளை என்ற பட்டமும், ஒரு சிற்றூரில் பாதியும் வழங்கிச் சிறப்பித்தனர் என்கிறது.

மூன்றாம் இராசராச சோழன் காலத்தில் காஞ்சி வரதராசப் பெருமாள் கோயிலில் வெட்டபப்பட்ட கல்வெட்டு திருஆழிப் பரப்பினான் கூத்தன் என்ற புலவர் சிந்துப் பிரபந்தம் ஒன்று பாடி வள்ளுவப்பாக்கம் என்னும் ஊரை முற்றூட்டாகப் பெற்றுள்ளார் என்று குறிக்கின்றது.

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் உத்தண்ட வேலாயுதக்கலி என்பவர், திருவதிகைச் சிவன்மீது கலம்பகம் ஒன்று பாடி, மனையும் நிலங்களும் பெற்றார் என்று திருவதிகைக் கல்வெட்டு கூறுகின்றது.

**கல்வெட்டுகளால் அறியலாகும் தமிழ் நூற் செய்திகள்**

அமிதசாகரர் யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலம் எனும் இரண்டு நூல்களையும் இயற்றியவர். இவர் சைன முனிவர் என்பதும், குணசாகரரின் மாணவர் என்பதும் யாப்பருங்கலப்பாயிரம் கூறும் செய்தி, இச்செய்திகளின் உண்மையை நீடூர்ச்சிவன் கோவிற் கல்வெட்டு உறுதிசெய்கின்றது. காரிகைக்குளத்தூர் மன்னவன் அமிதசாகர முனிவரைக் கொண்டு காரிகை செய்வித்தவனுடைய வழித்தோன்றல் என்கிறது. பாண்டி நாட்டுக் கழுகுமலைக் கல்வெட்டுகள் இரண்டில், குணசாகரர் என்ற சமண ஆசிரியரின்சமயக் கொள்கைகளைப் பரவச் செய்ய சிலரை நியமித்தனர் என்ற செய்தி அறியப்படுவதால் அமிதசாகரரை அவரது நூல் வழியும், கல்வெட்டின் வழியும் அறிய முடிகிறது.

இதைப்போல் ஒட்டக்கூத்தர் பற்றியும், சேனாவரையர் பற்றியும், பரிமேலழகர் காளமேகப் புலவர், அரிதாசர், காலிங்கராயர், உண்ணாமுலை எல்லப்ப நயினார், சைவ எல்லப்ப நாவலர் முதலிய புலவர்களின் காலத்தைக் கணிக்க கல்வெட்டுகள் துணைபுரிந்துள்ளன.

இதன்வழி கல்வெட்டில் உரைநடையிருப்பினும் செய்யுள் நடையை இயற்றமிழாய் கொண்டு பாடல்களையும் பாடிய புலவர்களையும் ஓரளவிற்கு அறிய முடிந்தது.

குறிப்பு

## கல்வெட்டில் - இசைத்தமிழ்

இசைக் குறியீடுகளை முதன் முதலாகச் சமண முனிவர்கள் தங்கிய குகைத்தளங்களில் ஒன்றான அரச்சலூர் மலையில் கல்லில் பொறித்திருப்பதைக் காணமுடிகிறது. இது கி.பி.2-3ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகும்.

**அரச்சலூர் இசைக் குறியீடுகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| த | தை | தா | தை | த |
| தை | தா | தே | தா | தை |
| தா | தே | தை | தே | தா |
| தை | தா | தே | தா | தை |
| த | தை | தா | தை | த |

| | | | | |
|---|---|---|---|---|
| கை | த | தை | த | கை |
| த | தை | | தை | த |
| தை | த | தை | த | தை |
| த | தை | | தை | த |
| (கை | த | தை | த | கை) |

குறிப்பு

தமிழக இசை வரலாற்றில் ஏன் இந்திய இசை வரலாற்றிலேயே முதல் முதலில் கல்லில் பொறித்து வைத்த பெருமையுடைய சான்றாக இது திகழ்கிறது. இதன் தொடர்ச்சியைக் குடுமியான் மலைக் கல்வெட்டிலும், திருமெய்யத்திலும் காணமுடிகிறது. சங்கீர்ண ஜாதி என்ற இசைத்துறைப்பட்டப் பெயர் பெற்றவன் முதலாம் மகேந்திரவர்மன், இவன் காலத்துக் கல்வெட்டில் ஜாதி என்ற சொல் இசைத்துறையில் இராகத்தினைக் குறித்தது. தமிழர் இசை என்ற சொல்லால் இதனைக் குறித்தனர். ஏழு பேரிசையும், ஐந்து சிற்றிசையுமாகப் பன்னிரு இசையினையும், ஏழ்வகைப் பண்களையும் தமிழர் கண்டிருந்தனர். மேலும் வட்டம், திரிகோணம், சதுரம் ஆகிய வகைகளில் பண்ணுப்பெயர் செய்ததன் வழியாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலைப் பண்களை உருவாக்கியிருந்தனர். எழுவகைத் தாளங்களையும் கால அளவு அடிப்படையில் அமைந்த ஐந்து வகைகளில் (லகு) உறழ் (பண்ணுப்பெயர்) 35 தாளங்கள் பிறக்கின்றன. இவ்வாறு உறழ்வால் பிறக்கும் ஒரு இராகத்தினை மகேந்திரன் உருவாக்கினான் என்பதையும், அந்த வாய்ப்பாட்டின் ஓசையினை நரம்புக் கருவியில் இசைக்கும் வகையில் 'பரிவாதினி' என்ற வீணையினை உருவாக்கினான் என்பதையும் அறிய முடிகிறது.

**குடுமியான் மலைக் கல்வெட்டு**

சித்தன்னவாயிற் சித்திரங்களும், குடுமியான் மலையிலே, கற்பாறையிலே தீட்டப்பட்ட இசை நூலும் தமிழரது அழியாச் செல்வங்கள் ஆகும்.

சித்தன்னவாயிலுக்குப் பத்து மைல் தூரத்திலே குடுமியான்மலை அமைந்துள்ளது. இங்குள்ள கோயிற் சுவரிலே அநேக கல்வெட்டுகள் எழுதப்பட்டிருக்கின்றன. கோயிலின் தென்புறத்திலுள்ள பாறையிலே தேவநாகரி லிபியில் இசை நூற் கல்வெட்டு எழுதப்பட்டிருக்கின்றன.

கல்வெட்டானது ஏழு தொகுதிகளாக, 38 ஆளத்திகளை உடையது. ஏழு தொகுதிகளும் ஏழு இராகங்களைக் குறிப்பன. இசை நாடகம் இரண்டிற்கும் வேண்டப்படுவதாகிய ஏழு இராகங்களைக் கல்லிற் பொறித்து வைத்தோன் பல்லவ குலத் தோன்றலாகிய மகேந்திரவர்மன் என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். ஏழு இராகங்களைக் கல்லில் பொறித்து வைத்த மன்னன் செயல் பெரிதும் பாராட்டிற்குரியது.

சிலப்பதிகார வேனிற்காதை யுரையிற் கண்ட பதினாறு நரம்பு நிரல்களைப் போலக் கல்வெட்டிலும் (4 x 4 = 16) பதினாறு நரம்பு கொண்ட நிரல்களே வருகின்றன. அத்தகைய நான்கு நிரல்கள் ஓர் ஆளத்தியாதலின், ஆளத்திக்கு நரம்பு 64, முதற் தொகுதியின் முதலாளத்தி,

**சநெபுச கிநெகிச நெதுநெச முபுநெச**
**மிரகிச ருகிகதுச சகிநெச நெமுபெசு**
**மிகநெச பெமுநெச ரமிகசெ துநெகிச**
**நெபுநெச பிமபிசெ கதுநெச முரிநபு(ச)**

மேலும், மகேந்திரன் காலத்தில் ஷட்வ, சாதாரித, பஞ்சம, கைசிகி, மத்யம் என்று தொடங்குவதாகிய மேலும் ஐந்து இராகங்கள் பற்றியும், அவைகளுக்குரிய பண்ணின் திறங்களும் முழுமையாகப் பெறிக்கப்பட்டு பிற்காலத்தில் பெரும்பகுதி சிதைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு

மகேந்திரனின் பேரனாகிய இராசசிம்மன் ஸ்ரீவாத்யவித்யாதரன், ஸ்ரீஆதோத்ய தும்புரு, ஸ்ரீவீணாவிநோதன் ஆகிய பட்டங்களைப் பெற்றிருந்தான் என்று காஞ்சி கைலாசநாதர் கோயிற் கல்வெட்டு கூறுகிறது. இப்பெயர்கள் இவனுக்கு இசையிலும் இசைக்கருவிகளிலும் இருந்த ஈடுபாட்டைக் காட்டுகிறது. ஆதோத்யம் என்ற சொல்லானது வீணை, முரசு, குழல், தாளம் ஆகிய நால்வகைக் கருவிகளையும் குறிக்கும் சொல் என்று அமர கோஷத்தில் கூறப்பட்டுள்ளது.

**திருமெய்யம் கல்வெட்டு**

கோபிநாதராவ் அவர்களால் கண்டுபிடிக்கப் பெற்ற இக்கல்வெட்டு புதுக்கோட்டைக்குத் தெற்கே 14கல் தொலைவில் இருக்கும் திருமெய்யத்தில் பாறைச்சரிவில் உள்ள குடைவரைக் கோயிலில் இக்கல்வெட்டு உள்ளது. திருமெய்யம் மலைக்கோவில் குடபோக வாயிலின் வாசல்படிக்கு இடதுபுறத்தில் உள்ள பாதையில் உள்ள இசைக்குறியீடுகள் வருமாறு,

**பரிவாதிநிதா**
**கற்கப்படுவது சாண்**
**ஞ்சொல்லிய புகிற்பருக்கும் நிம்**
**முக்கந் நிருவத்துக்கும் உரித்து**
**குணவெண ப்ரமாணஞ்**
**செய்த வித்யா பரிவாதிநகற்**

இதன் அருகில் இருக்கக்கூடிய சத்தியகிரிசுவரர் கோவிலின் வடப்புறத்தில்,

**பரிவாதிநிதா**
**ஞ்சொல்லிய புகிற்பகருக்கும் எண்ண**
**. . . . . தெமி முக்கஞ் நிருவத்துக்கும்**
**. . . . . ப்பியம்**

என்று அமைந்துள்ளது.

மேற்கண்ட கல்வெட்டுத் தொடர்களில் உள்ள ஒற்றெழுத்தை நீக்கிக் காணுங்கால் புகி பரு, நிமிமுக, நிருஅது, தெமிமுக என்பன அட்சரமாகக் குடுமியான் மலைக் கல்வெட்டை ஒத்துள்ளன என அறிஞர்கள் கூறுகின்றனர்.

**சோழரும் இசையும்**

சோழர் காலத்தைப் பொறுத்தவரை இசை நுட்பத்தினைக் கூறும் கல்வெட்டுகள் என்று எதையும் கூற இயலாவிடினும் இசை வகைகளைப் பற்றிக் குறிப்பிடும் சில கல்வெட்டுக்களைக் குறிப்பிடலாம். சோழர்கள்

குறிப்பு

காலத்தில் திருப்பதியம் பாடப் பலரைக் கோயில்களில் பணியமர்த்தி உள்ளனர். உத்தம சோழன் காலம் முதல் திருப்பதியம் பாடுவோர் கோயிலிற் பணியமர்த்தப்பட்டனர். முதலாம் இராசராசன் காலத்தில், ஆரியம் பாடுவார் மூவர், தமிழ்பாட ஒருவர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் இவர்களன்றிப் பாடுவோராகக் கந்தர்விகள் குறிக்கப்படுகின்றனர். திருவையாற்றிக் கல்வெட்டு காமரப் பேரையன் ஒருவனைச் சுட்டுகிறது. காமரம் என்பது பண் எனவே தமிழ்பாடுவோனாகக் குறிக்கப்பட்டுள்ளான்.

மதுரைக் கோயிலில் மார்கழி மாதத்தில் திருவெம்பாவையினைச் சாதாரிப் பண்ணில் பாட நிவந்தம் அளிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் சிம்ம நந்தன தாளம், சப்தசூளாதி தாளம் ஆகிய தாளப் பெயர்கள் கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

**கல்வெட்டால் அறியலாகும் இசைக்கருவிகள்**

சோழர் காலக் கல்வெட்டுகளில் மிக அதிகமான குறிப்பு இசைக் கருவிகள் பற்றியனவாக அமைந்துள்ளன. இசைக்கருவிகளைக் கொடையாகக் கொடுத்ததையோ, இசைக்கக் கொடுத்த கொடையையோ குறிப்பவை இவை, இசைக் கருவிகள் பலவற்றை இன்றும் தமிழகக் கோயில்களில் காணலாம். தமிழ் கல்வெட்டுகள், உடுக்கை, கண்டிகை, மத்தளம், தாளம், கரடிகை, டமருகம், தவில், திமிலை, தாரணி, படகம், முரசு, மேளம், காளம், தட்டளி, சங்கு, தாரை, வீணை, குழல், பணை, கொம்பு, மணி, சகடை, செண்டை, குடமுழா போன்ற பல இசைக்கருவிகளைக் குறிப்பிடுகின்றன. நடனத்துக்கும், பாடலுக்கும், இசைக்கும் இசைக்கருவிக் கலைஞர்களைப் பக்கவாத்யர் என்றே கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. நால்வகை இசைக் கருவிகளும், மிடற்றிசையும்ம இணையின் அது பஞ்சமகா சப்தம் என்று வழங்கப்பெற்றது.

இம்முறையில் இசைக்க ஒன்பது பேரை நியமித்ததைத் திருச்செங்கோட்டு செப்பேடு கூறுகிறது. திருச்செந்துறை, பூவாலைக்குடி, திருமெய்யம், சோழமாதேவி ஆகிய ஊர்களிலும் பஞ்சமகாசப்தத்திற்கு ஏற்பாடு செய்ததை இவ்வூர்களில் உள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

**நந்தலூர் சௌமிய நாதர் கோயில் கொடைச் செய்தியில் காளம்**

பிற்காலச் சோழர் காலத்தில் துளைக் கருவிகளில் காளம் என்பது ஒரு இசைக் கருவியாகும். இக்கருவி குழல் வடிவில் நீண்டு முன்வாய் அகன்றிருக்கும். இதன் பகுதிகள் கங்கில், குழல் மோதிரம் என்பனவாகும். செயம்கொண்ட சோழ மண்டலத்துப் புறக்கோட்டமான விக்கிரம சோழ வளநாட்டு, வெண்கல நாட்டு, வெண்கற் சேற்றுப் பேடன், திருநாடுடையான் பொன்னான குலோத்துங்க சோழ காடுவெட்டி என்பவர் நந்தலூர் சௌமாய நாதர் கோயில் பெருமாளுக்குச் செம்பால் செய்த தனிக்காளம் ஒன்றை வழங்கியுள்ளார். அச்செய்தியைக் குறிக்கும் கல்வெட்டுத் தொடர் வருமாறு.

**எம்பெருமானுக்கு சேஷமாகக் குடுத்தன செம்பால்**
**தீர்த்தை மண்டைஒன்றும் ஸ்ரீபலித்தாலமொன்றும்**
**திருமண்டையொன்றும் சங்கொன்றும் காலொன்றும்**
**சட்டுவமொன்றும் தாரை இரண்டும் தனிக்காள**
**மொன்றும் சின்னமிரண்டும் பண்ண இட்டார்**

குறிப்பு

**தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் வங்கியம் வாசித்தமை**

பிற்காலச் சோழர் காலத்தில் காற்றுக் கருவிகளில் வங்கியம் எனப்பட்ட குழல் இசைக் கருவியை இசைப்பதற்காகத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் மூவர் பணியிலமர்த்தப்பட்டிருந்ததையும் அவர்களுக்கு மற்ற இசைக் கலைஞர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட்டதையும்,

**வங்கியம் ஒன்றுக்கு நிகரிலி சோழத்தெரிந்த உடனிலைக்**
**குதிரைச் சேவகரில் நின்றும் புகுந்த தஞ்சை கணவதிக்குப்**
**பங்கு ஒன்றையும். . . . என்னும் கல்வெட்டுத்**

தொடர் காட்டுகின்றது.

**தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் சங்கு இசைத்தமை**

முதலாம் இராசரானின் இருபத்தொன்பதாவது ஆட்சியாண்டில் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு முத்திரைச் சங்கு ஊதுவார் மூவரை நியமித்தமையை 'முத்திரைச் சங்கு ஒன்றூதத்தயிலன் விக்கியண்ணுக்குப்பங்கு' என்றும் கல்வெட்டுத் தொடர்கள் உறுதி செய்கின்றன. மேலும் சங்குகளை ஊதக்கூடியவர்களை உவைச்சர்கள் என்று அழைத்துள்ளமையும் புலனாகிறது.

**திருமழபாடிக் கல்வெட்டில் செயகண்டிகை**

செய கண்டிகை என்பது வெண்கல உலோகத்தால் ஆன தட்டிசைக் கருவியாகும். சேகண்டிகை என்றும் குறிப்பிடப்படுகின்றது. திருமழப்பாடிக் கல்வெட்டில் செய கண்டிகை வாசித்தவருக்கு நிவந்தமாக நிலம் கொடுக்கப்பட்டமையும், அந்நிலம் செயகண்டிகைப்புரம் என்று அழைக்கப்பட்டமையும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாம் இராஜராஜனின் பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டில் கோனேரிராசபுரத்தில் உள்ள கோயிலில் செயகண்டிகையோடு தலைப்பறை, மத்தலி, கரடிகை, கைம்மணி ஆகிய இசைக்கருவிகள் இசைக்கப்பட்டதை,

**இந்நிலங்கொண்டு உவச்சர்கள் கொட்டக்கட்டளை,**
**தலைப்பறை ஒன்றும்**
**மத்தளி மூன்றும் கரடிகை ஒன்றும் சேகண்டிகை ஒன்றும்**
**கைம்மணி**
**ஓரணையும் இவ்வணம் ஆளேழுங் கொட்டுவதாகும்**

என்னும் கல்வெட்டுத் தொடர்கள் உறுதி செய்கின்றன. இதன்வழி பிற இசைக் கருவிகளோடு இணைந்து சேகண்டிகை என்னும் இக்கருவி இசைக்கப்பட்டதை அறிய முடிகிறது.

குறிப்பு

**கோனேரிராஜபுரம் கோயிலில் கரடிகை**

இக்கருவி கரடி கத்துவது போன்ற ஒலி தரும் தோற் கருவியாகும். முதலாம் இராஜராஜனின் ஏழாம் ஆட்சியாண்டில் கோனேரிராஜபுரம் கோயிலில் தலைப்பறை, மத்தளி, சேகண்டிகை, கைம்மணி போன்ற இசைக்கருவிகளோடு இயைந்து கரடிகையும் இசைக்கப்பட்டுள்ளது. திருவான்மியூர் வேதபுரீஸ்வரர் கோயிலில் கரடிகை வாசித்த ஒருவருக்கு அறுநாழி நெல் ஊதியமாக வழங்கப்பட்டது.

**தலைப்பறைக் கொட்டி ஒருவனுக்கு நெல் குறுணி**

**கரடிகை கொட்டுவான் ஒருவனுக்கு நெல் அறுநாழியும்-இருநாழியும்**

என்றமையால் தலைப்பறையோடு இயைந்து கரடிகை என்னும் கருவி இசைக்கப்பட்டமையை அறியலாம்.

**திருவிடைமருதூர் கோயிலில் திமிலை இசைத்தமை**

முதலாம் பராந்தகனின் 30ஆம் ஆட்சியாண்டில் திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி திருக்கோயிலில் திருப்பள்ளி எழுச்சியின் போதும் மூன்று சந்தி பூசையின் போதும் இசைக் கருவிகள் இசைக்கப்பட்டுள்ளன. இவ்விசைக் கருவிகளுள் திமிலையும் ஒன்றாகும். **'திமிலைக்கு நிலம் பத்.... கயம்மணிக்கு நாலும்'** ஆக நிலம் எனும் கல்வெட்டுத் தொடர் இதை உறுதி செய்கிறது. திமிலை என்பதைப் பம்பை என்றும் கூறுவர்.

**திருப்பழனத்தில் செண்டை இசைக்கருவி**

தற்போது கேரளாவில் புகழ் பெற்றிருக்கும் இந்த இசைக்கருவி, அரிஞ்சய சோழனின் இரண்டாவது ஆட்சியாண்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருப்பழனம் ஆபத்சகாயசுவரர் கோயிலில் செண்டை வாசிப்பார் ஐவருக்கு நிவந்தமாக 30 கலம் நெல் கொடுக்கப்பட்டுள்ளதை,

**வீமன் திருப்பழனத்து மஹாதேவர்க்கு செண்டை-கொட்டுவாரே**

**ஐவர்க்கு பேரால் முப்பதின் கலமாக மூன்று வேலி- இல்லும்**

என்னும் கல்வெட்டுத் தொடர்கள் வெளிப்படுத்துகின்றன.

**பெருவுடையார் கோயிலில் வீணை**

முதலாம் இராசராசன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் வீணை வாசிப்போரை நியமித்து, அவர்களுக்கு ஊதியமும் கொடுத்தமையை,

**வீணை வாசிப்பார் இருவர்க்கு சிவபிரம்வரணயன் கூத்தனான**

**செம்பியன் வீணை ஆதித்தனுக்குப் பங்கு மூன்றையும்**

**இவன் செத்தமையல் இவன் மகளைக் கொண்டஇவன். . . .**

**மகன் அரையன் சதா சிவனுக்குக் காணியாகவும்**

எனும் கல்வெட்டுத் தொடர் கூறுகிறது.

சோழர் காலத்தில் தமிழ்ப்பாடல்கள் பாடுவோரையும், ஆரியப் பாடல்கள் பாடுவோரையும் திருக்கோயில்களில் நியமித்து உள்ளனர். இசைக்கலைஞர்கள் உயரிய நிலையில் இருந்துள்ளனர் என்பதைப் பல்வேறு கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன.

நாயக்கர் காலத்தில் தெலுங்கு மொழி கீர்த்தனைகள் வளரத் தொடங்கின. மராட்டியர் காலத்தில் இசையொடு கூடிய நொண்டி, சிந்து, குறவஞ்சி பாடல்கள் வளரத் தொடங்கின. அதைத் தொடர்ந்து வடபுல இசையும் மேலை நாகரிக பாணியும் சேர்ந்த இசையமைப்பு உண்டாயிற்று.

**கல்வெட்டில் நாடகத்தமிழ்**

**பல்லவர் காலம்**

'பல்லவர் காலத்தில் கி.பி. 3-7ஆம் நூற்றாண்டுகளில் நடிப்பும் உரையாடலும் கலந்த வடிவமாக நாடகம் வளர்ச்சியுற்றது.

மகேந்திரவர்ம பல்லவன் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் மத்தவிலாசப் பிரகசனம் என்ற நாடகத்தை இயற்றினான். பல்லாவரம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள குகைக்கோயில்களில் காணும் கல்வெட்டுகள் இதனைக் குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டுக்களில் மத்தவிலாசம் எனும் சொல் காணப்படுகிறது. மாமண்டூர் குகைக்கோயிலில் வடமொழியில் அமைந்த கல்வெட்டொன்றில் மத்த விலாசப் பிரகசனம் என்ற சொல் உள்ளது. இக்கோயில் மகேந்திரன் காலத்தில் உருவானதாகும். பிரகசனம் எனில் நகைச்சுவை என்று பொருள். இதனைக் குறிப்பிடும் நாடகவியல் நூற்பா வருமாறு,

**நகைச்சுவை தன்னை மிகுத்துக்காட்டி**
**ஒன்றே யாதல் இரண்டே யாதல்**
**அங்கங்கொண்ட தரும்பிர கசனம்**

மத்த விலாச பிரகசனத்தில் நகைச்சுவை, அங்கதம் இரண்டும் நிறைந்துள்ளன. இந்நாடகம் காபாலிகம் பாசுபதம் என்ற சைவ சமயப் பிரிவுகளையும் புத்த சமயத்தையும் மிகவும் நுட்பமாகத் தாக்குகிறது.

**மத்த விலாச பிரகசனத்தின் கதை**

சத்திய சோமன் எனும் காபாலிகன் தன் மனைவி தேவ சோமையோடு காஞ்சிநகரில் உள்ள கள்ளுக் கடையில் கள்ளுண்ணுகின்றான். பின்னர் கள் குடித்த மயக்கத்தோடு இருவரும் செல்கின்றனர். அச்சமயம் தன் பிச்சை பாத்திரத்தைக் பாலிகன் (சத்திய சோமன்) கள்ளுக்கடையில் வைத்துவிட்டு சென்று விடுகிறான். பின்னர் தன் பிச்சை பாத்திரம் காணவில்லை என உணர்ந்து தன் மனைவியோடு சேர்ந்து தேடுகிறான். புத்த துறவி ஒருவர் தன் பையில் ஒரு பாத்திரம் கொண்டு இவர்களைக் கடக்கின்றார். உடன் தன் பாத்திரத்தைத் தருமாறு புத்த துறவியிடம் கேட்கிறான். காபாலிகன் மனைவி

குறிப்பு

மீது காமம் கொண்டு அவளது கையைப் புத்தத்துறவி இழுக்கிறார். பாசுபதன் என்பவன் அவ்வழியே வருகிறான். அவனிடம் புத்த துறவி தங்கள் பாத்திரத்தைத் திருடி வைத்திருப்பதாகக் கூறுகின்றனார். பாசுபதனுக்கும் காபாலிகன் மனைவி மீதுகாமம் பொங்குகிறது. துறவியிடம் பாத்திரத்தை வெளியே எடுக்கச் சொல்கிறான். அப்பாத்திரம் கருப்பாக இருக்கக் கண்ட காபாலிகன் புத்ததுறவி சாயம் பூசிவிட்டான் எனக் குறை கூறினான். கேட்க மன்றத்திற்குச் செல்கின்றனர். வழியில் பைத்தியக்காரன் ஒருவன் காபாலிகனின் பாத்திரத்தை வைத்திருக்கிறான். காபாலிகன் தந்திரமாக அதைப் பெறுகிறான். பின்னர் மகிழ்ச்சியாகச் செல்கின்றனர்.

மகேந்திர வர்ம பல்லவன் தொடக்க காலத்தில் சமணனாக இருந்ததால் பிற சமயங்களில் நடைபெறும் ஒழுக்கக் கேட்டினை எடுத்துக் கூறும் விதமாக இந்நாடகத்தை இயற்றியுள்ளான்.

இராசசிம்மன் காலத்தில் வடமொழி நாடகங்கள் எழுதப்பெற்று அவனுடைய அரண்மனை அரங்கில் நடிக்கப்பட்டுள்ளன.

**பாண்டியர் காலம்**

பாண்டியர் இசையைப் போற்றினர். எழுவகைப் பாடலுமியலுடன் பரப்புவது அவர்களுடைய குறிக்கோள் என்பதை மெய்க்கீர்த்தி வாயிலாக அறியலாம். இசையில் பாண்டிய அரசன் நெடுஞ்சடையப் பராந்தகனுக்கு ஈடுபாடு இருந்ததைக் கீத கின்னரன் எனும் அவனுடைய விருது காட்டுகிறது. முதலாம் மாறவர்மன் மதுரைச் சொக்கர் ஆலயத்தில் பணியாற்றிய இசைக் கலைஞர்களுக்கு நிலங்கள் அளித்த செய்தியினைக் கல்வெட்டு வாயிலாக அறிகிறோம்.

அம்மன்னருக்குப் பாண்டிய வாத்ய மவியா என்ற பட்டமும் இருந்தது. கழுகுமலை வெட்டுவான் கோயில் திருமெய்யம் கோயில் சொக்கநாதர் கோயில் சிற்பங்களில் வீரமத்தளம், மத்தளம், திமிலை, சேமக்கலம், திருச்சின்னம் முதலிய இசைக் கருவிகளைக் காட்டும் சிற்பங்கள் உள்ளன.

தேவரடியார்களில் பலர் இசையால் இறைவனை மகிழ்வித்தனர். திருப்பரங்குன்றத்தில் நடராசப் பெருமானின் சதுரதாண்டவத் திருக்கோலம் அழகிய சிற்பமாய் அமைந்துள்ளது. பாண்டிய நாட்டுக் கோயில்களில் நடனமும், நாடகமும் நடைபெற்றமைக்குக் கல்வெட்டுகள் சான்று தருகின்றன.

பெரியாழ்வார் பாடல்களில் சில கூத்துவகைகளைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. குடக்கூத்து என்பது கூத்து (ஆயர்கள் ஆடுவது) வகைகளில் ஒன்று. இது தலைமீது குடங்களை ஒன்றன்மேல் ஒன்றாக வைத்துக் கொண்டு ஆடுவதாகும். குடங்களைத் தலைமீதும் தோள்மீதும் வைத்துக் கொண்டு ஒன்றன்பின் ஒன்றாய் மேலே போட்டுப் பிடித்தல் குடத்தாடல் என்பதாகும்.

உயரமான மூங்கில் கழிகள் மீது நின்று, கூத்தாடுவது மரக்கால் கூத்து அல்லது கழைக்கூத்து எனப்படும். திருவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயிலில் இதனைக் காட்டும் சிற்பம் உள்ளது.

திருநெல்வேலி அருகிலுள்ள ஆத்தூரிலுள்ள கோயிலில் ஆவணித் திருநாளன்று நாடகங்கள் நடைபெற்றன. நாடக அரங்கு அழகிய பாண்டியன் கூடம் என்று பெயர் பெற்றது. அங்கு நடைபெற்ற நாடகங்கள் 'திருநாடகம்' என்று குறிக்கப் பெற்றன. நாடகங்களில் பங்கு கொண்ட கலைஞர்களுக்கு அளிக்கப் பெற்ற நிலங்கள் கூத்துக்காணி என்று வழங்கப்பெற்றன.

சாந்திக்கூத்து, விநோதக் கூத்து என்னும் இருவகைக் கூத்துகள் இருந்தன. சாந்திக் கூத்தில் நான்கு விதக் கூத்துகள் இருந்தன. அவை சொக்கம், மெய்க்கூத்து, அவிநயம், நாடகம் ஆகும். இவை அகக்கூத்து வகையின. வினோதக் கூத்து என்பது ஏழை எளியவர்களும் கண்டு களிக்கும் வகையில் அமைந்த கூத்து வகையாகும். ஆடல் மகளிருக்குப் பாண்டியர் தலைக்கோல் முதலான விருதுகள் வழங்கியுள்ளனர்.

**பாண்டியன் மதிவாணன்**

இவன் கடைச் சங்கத்தைப் புரந்து வந்த பாண்டிய அரசர்களுள் ஒருவன். சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் இவன் கடைச்சங்கம் இரீஇய பாண்டியருள் கவியரங்கேறியவன் என்று தம் உரைப்பாயிரத்திற் கூறியுள்ளார். இவன் ஒரு நாடகத் தமிழ் நூல் இயற்றியுள்ளான். அது மதிவாணர் நாடகத் தமிழ் நூல் எனப்படும். அந்நூல் நூற்பாவாலும், வெண்பாவாலும் இயற்றப் பெற்றது என்பர். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதுவதற்கு மேற்கோளாகக் கொண்ட ஐந்து இசை நாடக நூல்களுள் மதிவாணர் நாடகத் தமிழ் நூலும் ஒன்றாகும். இந்நூல் கிடைக்கவில்லை எனினும் சிற்சில சூத்திரங்கள் சிலப்பதிகார உரையில் காணப்படுகின்றன.

விக்கிரமபாண்டியன் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1249) நெல்லை மாவட்ட ஆற்றூரில் ஒரு நாடக சாலை இருந்துள்ளது. அத்திருக் கோவிலில் ஆவணித் திருநாளில் ஒரு நாடகம் நடத்தப் பெற்றுள்ளது. அதற்காகப் பிரியாதரன் என்பவருக்கு இரண்டு மா நிலம் கூத்தாடு காணியாக நிலம் குன்றமொழிச் சிங்கப் பிரானான குருகுலத்தரையன் என்பவரால் அளிக்கப் பெற்றது என்பதைக் கல்வெட்டால் அறிய முடிகிறது.

**சோழர்கள் கால நாடகங்கள்**

ஆடல் சிறந்து விளங்குவதற்கு ஆடலோடு இணையும் இசையும் சிறப்புற்று அமைய மன்னர்கள் பெருங்கவனமெடுத்தார்கள் என்பதற்குச் சோழ மாமன்னன் இராசராசனுடைய தஞ்சைப் பெருவுடையார் கோயிற் கல்வெட்டொன்றே போதிய சான்றாகிறது.

ஆடலிலும் இசையிலும் தலைசிறந்து விளங்கிய நானூறு மகளிரைத் தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களிலிருந்து தேர்ந்தெடுத்துத் தஞ்சைப் பெரிய

கோயிலில் இருத்தி வீடும், நிவந்தமும் கொடுத்து ஆடற் கலையை மிகச் சிறந்த முறையில் ஆதரித்து வளர்த்தவன் முதலாம் இராசராசசோழன் (கி.பி. 985-1014) மகளிர் ஆடிய ஆடல் வகைகள் சிறந்து விளங்க ஆடலுக்கு வேண்டிய இசையின் தரமும், தகுதியும் உயர்ந்திருக்க மன்னன் தக்க ஏற்பாடுகளும் செய்திருந்தான்.

ஆடல் நிகழ்ச்சியில் இசையாளரின் பங்கையும் முதன்மையையும் தஞ்சைப் பெரிய கோயிற் கல்வெட்டுத் தரும் செய்திகளைக் கீழ்காணுமாறு நிரல்படுத்திக் கண்டு கொள்ளலாம்.

| **கலைஞர்கள்** | **தொகை** |
|---|---|
| ஆடல் மகளிர் | நானூறுவர் |
| நட்டுவ ஆசான்கள் | பன்னிருவர் |
| கானபாடிகள் | ஐவர் |
| வங்கியம் இசைப்போர் | மூவர் |
| உடுக்கை வாசிப்போர் | இருவர் |
| வீணை இசைப்போர் | மூவர் |
| ஆரியம் பாடுவோர் | மூவர் |
| தமிழ் பாடுவோர் | நால்வர் |
| கொட்டி மத்தளம் இசைப்போர் | இருவர் |
| முத்திரைச் சங்கு ஊதுவோர் | மூவர் |

அக்காலத்தில் மொழியை அடிப்படையாகக் கொண்டு ஆரியக்கூத்து, தமிழ்க் கூத்து என்ற இருவகைக் கூத்துகள் ஆடப் பெற்றிருக்கின்றன.

**இராசராசேசுவர நாடகம்**

முதலாம் இராசராச சோழனின் காலத்தில் (கி.பி. 985-1014) இயற்றப்பட்டது. இது இராசராசனின் பிறப்பு, இளமைக்காலம், வீரம், தியாகம் முதலானவற்றையும், அவன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை எடுப்பித்த வரலாற்றையும் பற்றிய வரலாற்று முதன்மை கொண்ட நாடக நூல், திருவிழாக் காலங்களிலும் மற்றச் சிறப்பு நாட்களிலும் இந்நாடகம் தஞ்சையில் சாந்திக் கூத்தர்களால் நடிக்கப்பட்டது.

முதலாம் இராசேந்திரனது ஆட்சிக் காலத்தில் இந்நாடகம் நடிக்கப்பட்டது. இதற்காக இராசேந்திரன் நிவந்தங்கள் விட்டுள்ளான்.

இரண்டாம் இராசேந்திர சோழனது ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1051-1063) வைகாசித் திங்களில் நடைபெற்ற பெரிய திருவிழாவின் போது, தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராசேசுவர நாடகம் நடித்துக் காட்டுவதற்குச் சாந்திக் கூத்தன் திருவாளன் திருமுதுகுன்றன் ஆன விசய ராசேந்திர ஆசாரியனுக்கும் அவன் கால்வழியினருக்கும் 120 கல நெல் ஆண்டுதோறும் ஊதியமாக அளிக்க நிவந்தம் அளிக்கப்பட்டது. இதனை இவ்வேந்தனே அளித்துள்ளான் என்பதனை இரண்டாம் இராசேந்திரனது ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாலறியலாம்.

குறிப்பு

இராசராசேசுவர நாடகத்தில் ஆசியன் (ஹாஸ்யன்) விக்கிரமாதித்தன் அச்சனான இராசராச நாடகப் பிரியன் என்பான் முக்கியப் பங்கேற்று நடித்தான் என்பதனை இவனது பெயரே உணர்த்தும் என வாழ்வியற் களஞ்சியம் இந்நாடகங் குறித்து கூறுகிறது.

இந்நாடகம் திரைப்படமாகச் சில மாற்றங்களுடன் வெளிவந்திருப்பதும் குறிக்கத்தக்கது. இராசேந்திர தேவன் என்னும் சோழ மன்னன் தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராசேசுவரம் என்னும் நாடகம் நடத்துவதற்காகக் கி.பி. 1056இல் அறக்கட்டளை நிறுவினான். அதன்படி விசய ராசேந்திர ஆசாரியன் என்னும் திருவாளன் திருமுது குன்றன் என்ற நாடகக் கலைஞனுக்கும் அவன் சந்ததியருக்கும் ஆண்டுதோறும் கோயிலிலிருந்து 120 கலம் நெல் வழங்கப்பட்டது. அதோடு நிலமும் மானியமாக வழங்கப்பட்டது. இந்நாடகம் வைகாசித் திங்களில் பொது மக்களின் முன் நடத்தப்பெறும்.

இராசாதிராசன் என்ற மற்றொரு சோழ மன்னன் (கி.பி.1048) திருவிடை மருதூரிலுள்ள மகாலிங்கசாமி கோயிலில் நாடகங்கள் நடத்துவதற்காக அறையன் திருவிடைமருதூருக்கும் அவனுடைய நாடகக் குழுவினருக்கும் அறக்கட்டளை ஒன்று நிறுவினான். சோழ மன்னர்கள் நாடக வளர்ச்சிக்கென தொண்டாற்றியுள்ளதை இதனால் அறியலாம்.

முதலாம் இராஜராஜனின் (985-1038) பத்தாம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த திருப்பந்தனை நல்லூர் பசுபதீசுவரர் கோயில் கல்வெட்டு மூலம், இராஜராஜ நாடகம் நடைபெற்றதாக அறியலாம். இரண்டாம் இராஜேந்திர சோழனின் தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டு இராஜராஜேஸ்வர் நாடகம் நடந்ததாகக் குறிப்பிடுகிறது. இந்நாடகம் பற்றிய குறிப்பினைக் கீழ்வருமாறு அறியலாம்.

திருவாளன் திருமுதுகுன்றான விஜயராஜேந்திர ஆசாரியன் உடையார், வைகாசிப் பெரிய திருவிழாவில் ராஜ ராஜேஸ்வர நாடகமாட இவனுக்கும் இவனுடைய வர்க்கத்தார்க்கும், காணியகப்பங்கு ஒன்றுக்கும் ராஜகேசரியோ டொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் நித்த நெல்லுத் தூணியாக நூற்றிருபதின் கல நெல்லும் ஆண்டாண்டு தோறும் தேவர் பண்டாரத்தே பெறச் சந்திராத்யர். . . . கல்வெட்டித்து இந்நாடகத்தை இராசராசேசுவர நாடகம் என்று கருதுவோரும் உண்டு.

திருமூல நாயனார் நாடகம் பற்றி ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. திருப்பாதிரிப் புலியூர்க் கல்வெட்டு. கண்ணவன் புராண நாடகம் ஒன்று இருந்த செய்தியைத் தருகிறது. திருப்பந்தனை நல்லூர் கல்வெட்டு இராஜராஜேஸ்வர நாடகம் திரும்பத்திரும்ப அங்குள்ள ஆலயத்தில் நடத்தப் பெற்றதாகக் கூறுகிறது. கி.பி. 1119ஆம் ஆண்டைச் சேர்ந்த கடலூர்க் கல்வெட்டுக் கமலாலயப்பட்டர் என்பவரால் பூம்புலியூர் நாடகம் நடத்தப் பெற்ற செய்தியை அறிவிக்கிறது.

குறிப்பு

**நாயக்கர் கால நாடகங்கள்**

தஞ்சை நாயக்கர்கள் வரிசையில் தனக்கு ஒப்பர்யாரும் இலர் என்று சொல்லுமளவு வாழ்ந்து மறைந்தவன் மன்னன் இரகுநாத நாயக்கனாவான்.

ஓர் இரவின் இரண்டு யாமத்திற்குள் 'பாரிஜாத பகரணம்' எனும் காவியத்தை இவன் படைத்தான் என்பதை அறியமுடிகிறது. இந்நூலின் பெருமை உணர்ந்த அச்சுதப்ப நாயக்கர் இரகுநாதனுக்குக் கனகாபிஷேகம் செய்து பெருமை அடைந்தாராம். மேலும், கஜேந்திர மோட்சம், ருக்மணி, கிருஷ்ண விவாகம், ஜானகி பரிணயம் எனும் மூன்று யஷகான நாடகங்களையும் இரகுநாதனே எழுதினார்.

இரகுநாத நாயக்கரின் யஷகான படைப்புகள் பற்றி விஜயராகவ நாயக்கர் இரகுநாதப்யுதயமு எனும் நூலில் கூறுகிறார்.

'சங்கீத சுதா' எனும் மிகச்சிறந்த இசை நூலை வகுத்த இரகுநாதன் அந்நூலுள் பல இசை நுட்பங்களைக் கூறியுள்ளான். 'ஜெயந்த சேனா' எனும் புதிய இராகத்தையும் ராமானந்தா எனும் தாளத்தினையும் இம்மன்னனே இசையுலகிற்கு அர்ப்பணித்தவன் ஆவான். இம்மன்னனால் வீணை அமைப்பில் செய்யப் பெற்ற மாற்றமே இன்றளவும் தொடர்ந்து இருந்து வருகிறது. தஞ்சை வீணை எனத் தற்காலத்தில் புகழ்பெற்றுத் திகழும் வீணை அமைப்பினை உருவாக்கியவர் இவரே.

இம்மன்னனின் காலத்தில் நாட்டிய மகளிருக்கு மாணிக்கம் என்ற பட்டங்கொடுத்து நிலமும் வழங்கப் பெற்றதாம். இவ்வாறு மாணிக்கம் பட்டம் பெற்ற நாட்டிய நங்கையர்களில் முதலாவதாக ராமச்சந்திரமாணிக்கம் எனும் பட்டத்தையும் கொடை நிலத்தையும் பெற்றவள் பெயர் தெரியவில்லை. கி.பி. 1614இல் வடுகவகைத் தேவரடியாரில், அத்தகிரி மகள் முத்து எனும் நங்கைக்குப் பேர் மானியம் பெற்றுள்ள செய்தி வருமாறு.

விசயராகவ மாணிக்கம் என்று பெயர் கொடுப்பதற்காக விழா எடுத்து அப்பெண்ணுக்குப் பேர் மனியமாகத் திருவிடையாட்டக் கிராமமான தொற்றம்பட்டில் நிலம் அளித்தனர். இந்நிலக் கொடையைத் தேவரடியார் முத்துவும் அவரது சந்ததியினரும் சூரியன் சந்திரன் உள்ளவரை அனுபவிக்கும் உரிமையுடையதென்றும், இந்நிலத்திற்கு எவ்வகையிலான வரியும் இல்லை எனவும் கூறிக் கொடுத்துள்ளான்.

விஜயராகவ நாயக்கர் தெலுங்கு மொழியில் எழுதிய இரகுநாத நாயக்கரின் வரலாறு கூறும் 'இரகுநாதயதப்யுதயமு' எனும் நூலில் அரண்மனைக் கொலுமண்டபத்தில் இரகுநாத நாயக்கர் முன்பு நடம்புரிந்த மகளிர் பற்றிய குறிப்புகள் காணப்பெறுகின்றன. ரூபவதி எனும் நங்கை நல்லாள் பதஞ்சலியையும், சந்திரரேகா பேரணி ஆடலும், சசிரேகா சக்கினி ஆடலும், லோக நாயகி, ரவாணி எனும் நங்கையர்கள் துரபதகேளிகா, துருஷ்டண கோப்பு எனும் ஆடல்களையும் சிலர் குறவஞ்சி, சீவலீலா, குஜராத்தி, தேசி என்ற நடனங்களையும் ஆடினர் என்ற குறிப்புகள் கிடைக்கின்றன.

குறிப்பு

யக்க நாராயண தீட்சிதர் சமஸ்கிருதம், பிராகிருதம் கலந்த மொழி நடையில் இரகுநாத விலாசம் எனும் நாடகத்தை இயற்றியுள்ளார். இந்நூலுள் தஞ்சை அரண்மனையின் அமைப்பை அப்படியே கண்முன் தோன்றுமாறு இயற்றியுள்ளார்.

விஜயராகவ நாயக்கர் ஹசாரம் எனும் பகுதியில் தொடங்கி, பெத்தபவந்தி, பட்டாணி பவந்தி, விசால சாலை, இராமபத்ரசாலை, கோணவாகிலி, லஷ்மிவிலாசம், நாகபுரிவிலாச கேஹம், கரஷ்கூடம், நாடகசாலை, மதன கோபால விலாச மந்திராங்கணம், ஸ்ரீராம சௌதராஜம், விஜயபவனம், இந்திரா மந்திரம், விஜயராகவ விலாசம் என்ற இடம் முடிய அரண்மனையின் பல்வேறு பகுதிகளையும் நமக்குக் கூறுகிறார்.

**நாடக சாலை**

'நவரத்ன மனமய்ன நாடகசாலை' என்ற விஜயராகவரின் குறிப்பால் நாடகசாலை என்ற கட்டடம் பற்றி அறிய முடிகிறது. இந்நாடக சாலையைப் பின்னாட்களில் மராட்டியர்கள் 'சங்கீத மஹால்' என அழைக்கலாயினர். இந்த அரங்கம் மிக அற்புதமான வேலைப்பாடுகளுடன் திகழ்ந்தது. ஆங்கிலேயர் காலத்தில் ஒருமுறை பழுது பார்க்கப் பெற்றதாலும், அண்மைக்காலத்தில் செய்யப் பெற்ற சில மாற்றங்களாலும் நாயக்கர் காலக் கலை அரங்க அமைப்பு பெரிதும் சிதைந்துள்ளன. ஆடலரங்கம் உயர்ந்த மேடை, ஒப்பனை அறைகள், மேல்தள வசதி ஆகியவற்றோடு திகழ்கின்றது. பார்வையாளர் பகுதி நீளவாக்கில் அமைந்துள்ளதோடு காணப்பெறுகின்றது. இந்த அரங்கத்தின் பலகணிகள் மிக நெருக்கமாக அமைக்கப் பெற்ற கம்பிகளால் அமைந்து எதிரொலி தோன்றாதபடி அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

நாடக மேடைக்கு முன்பாகச் சுமார் 10அடி ஆழமுள்ள ஒரு குளம் போன்ற பெரியபள்ளம் இருந்தது. மேடையில் நிகழ்ச்சிகள் நடைபெறும்போது இப்பள்ளத்தில் நீர்நிரப்பப் பெற்றது. மேடையில் ஒலிக்கும் ஒலி அலைகள் இந்நீர்ப்பரப்பின் மேல் மோதி எதிரொலிக்கும் போது மிக்க நயமுடன் ஒலிப்பதற்காக இவ்வமைப்பு அறிவியல் அடிப்படையில் அமைக்கப் பெற்றதாகும். அண்மையில் இப்பள்ளத்தையும் மூடி பழைமைச் சிறப்பைச் சிதைத்து விட்டனர் என குடவாயில் பாலசுப்பிரமணியன் அவர்கள் தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு எனும் நூலுள் கூறியுள்ளார்.

**மராட்டியர் வளர்த்த நாடகக் கலை**

கி.பி.17ஆம் நூற்றாண்டிலிருந்துதான் எழுத்து வடிவில் நாடக இலக்கியங்கள் கிடைக்கின்றன. சோழர்கள் காலத்தில் அரசர்கள் ஆதரவில் அரண்மனைகளிலும் கோயில்களிலும் நடைபெற்ற நாடகங்கள் 17ஆம் நூற்றாண்டில் மக்களிடையே செல்வாக்குப் பெற்றன. உழவர்களின் வாழ்க்கை

முறையைக் கருவாகக் கொண்டு பள்ளு நாடகங்களும், குறவன் குறத்தியரின் வாழ்க்கையைக் கருவாகக் கொண்டு குறவஞ்சி நாடகங்களும், திருடர்களின் வாழ்க்கைச் சிக்கல்களை மையமாகக் கொண்டு நொண்டி நாடகங்களும், இசைப் பாக்களாகக் கீர்த்தனை நாடகங்களும் இக்காலத்தில் தோன்றின.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் (1676-1855) குறவஞ்சி, விலாசம், நொண்டி, கீர்த்தனை போன்ற நாடக வகைகளில் பல நாடக இலக்கிய நூல்கள் புலவர்களால் இயற்றப்பட்டு மேடைகளில் அரங்கேற்றமும் செய்யப்பட்டிருக்கின்றன. சில நாடகங்கள் மன்னர்கள் முன்னிலையில் நடிக்கப்பட்டிருக்கின்றன.

இவர்கள் காலத்தில் வளர்ச்சி பெற்ற இந்நாடகங்களின் போக்கினை,

(அ) குறவஞ்சி நாடகங்கள் - 4

(ஆ) விலாச நாடகங்கள் - 7

(இ) நொண்டி நாடகங்கள் - 2

(ஈ) கீர்த்தனை நாடகங்கள் - 2

(உ) பிற நாடகங்கள் - 5

என்று ஐந்து பிரிவுகளாகக் காணலாம்.

**குறவஞ்சி நாடகங்கள்**

சுகசிராசன் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, சரபோஜிராசன் குறவஞ்சி ஆகிய நான்கு குறவஞ்சி நாடகங்கள் தஞ்சை மராட்டியர் காலத்தில் தோன்றின.

**விலாச நாடகங்கள்**

பிற மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட நாடகங்களுள் விலாச நாடகங்களும் அடங்கும். தஞ்சை மராட்டிய மன்னர் ஆட்சிக்காலத்தில் ஏழு, விலாச நாடகங்கள் இருந்தன. அவை வருமாறு,

1.சங்கர நாராயண விலாசம் - இரண்டாம் சகசி

2.சகசிராச விலாசம்

3.பூலோக தேவேந்திர விலாசம்

4.சந்திரிகாகாசை விலாசம்

5.விஷ்ணுசாகராச விலாசம்

6.மதனசுந்தரப் பிரசாத சந்தான விலாசம்-அருணாசலக்கவி

7.பாண்டீகேளி விலாசம் - நாராயணகவி

இவ்விசை நாடகங்களுக்குரிய மூலக்கூறுகள் பற்றி எதுவும் தெரியவில்லை. விலாசம் என்ற சொல்லுக்கு நாடக நூல் என்பதே பொருளாகும். இந்நாடகங்கள் தோன்றிய காலம் மராட்டியர் ஆட்சிக்காலமாக இருக்கலாம்.

**நொண்டி நாடகம்**

குறிப்பு

கந்தசாமிப்புலவர் எழுதிய திருச்செந்தூர் நொண்டி நாடகம் முதன்முதல் தோன்றிய நொண்டி நாடகம் ஆகும். மராட்டியர் காலத்தில் அனந்தபாரதி ஐயங்கார் திருவிடைமருதூர் நொண்டி நாடகம் என்பதை எழுதினார். யானை மேலழகர் நொண்டிச் சிந்து என்பது இருந்ததாகத் தெரிகிறது. ஆயன் கிடைக்கவில்லை.

**நாட்டிய நாடகம்**

தஞ்சை மராட்டிய மன்னர் இரண்டாம் சகசி காவேரி கல்யாணம் எனும் இந்நூலைப் பாடியிருக்கின்றார். தமிழிசை நாட்டிய நாடகமாகத் திகழும் இந்நூல் யட்சகானத்தின் ஒரு பிரிவாகிய பாகவதமேளா நாடக மரபைச் சார்ந்திருக்கிறது. காவேரி சாகர கல்யாணம் என அழைக்கப் பெறும் இந்நாடகம் பொதுவியல் மரபில் சகசி மன்னர் அரண்மனை நாட்டிய சாலையில் அரங்கேற்றப்பட்டு நடிக்கப்பட்டிருக்கிறது. இந்நாடகம் திருவையாறு பஞ்சநதீசர் கோயிலில் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. தஞ்சைச் சரசுவதி மகால் நூலகத்தில் இந்நூலின் இரண்டு ஓலைச்சுவடிகள் தெலுங்கு எழுத்தில் மோடி எடுக்கப் பெற்ற தமிழ் நாடகமாக இருக்கிறது. வ. வேணுகோபாலன் இந்நூலினைப் பதிப்பித்திருக்கிறார். இரண்டாம் சகசி மன்னன் இந்நூலைப் பாடியிருக்கிறார் என்ற குறிப்பு காணப்படுகிறது

எனும் மேற்கண்ட செய்திகள் அடிப்படையில் தமிழக கல்வெட்டுகளின் பொதுத்தன்மையை, மேலும் பலவாறாக பிரித்துக் காணல் வேண்டும்.

## கூறு 6: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. இந்திய அளவில் தொன்மை வாய்ந்த செப்பேடு எது?
   சோகௌரா செப்பேடு
2. பாண்டிய மன்னர்களின் பரம்பரையைக் கூறும் செப்பேடு எது?
   வேள்விக்குடிச் செப்பேடு
3. உத்தரமேரூர் ஊராட்சி கல்வெட்டின் சிறப்பு யாது?
   தேர்தலில் நிற்க தகுதி உடையவர், தகுதியற்றவர் பற்றி கூறியுள்ளது.
4. 'கடமை'- என்ற சொல் எதைக் குறித்தது? வரி
5. ஸியிஞ்கை அல்லது தற்குறி என்றால் என்ன?கையெழுத்து இடத்தெரியாதவர் ஒரு கீறலை இடுவர். அது தற்குறி எனப்படும்.
6. தகடூர், வஞ்சி, பழையாறையின் வேறுபெயர்கள் யாவை?
   தர்மபுரி, கரூர், நந்திபுரம்
7. சுங்கம் தவிர்த்த சோழன் யார்?
   முதலாம் குலோத்துங்க சோழன்
8. சோழர் காலத்தில் சிறப்புற்ற பெண்டிர் பெயர்களில் சிலவற்றைக் குறிப்பிடுக.
   குந்தவை, உலோகமாதேவியார், செம்பியன் மாதேவியார்.

*Self-Instructional Material*

9. பொன்னின் அளவை குறித்துள்ள சொற்களைக் கூறுக.

1. மஞ்சாடி, 2. குன்றி, 3. கழஞ்சு

10. 'மத்த விலாசப் பிரகசனம்' நாடகத்தின் ஆசிரியர் யார்?

மகேந்திரவர்ம பல்லவன்

**II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)**

11. செப்பேடுகளின் இன்றியமையாமையை விவரி?

(செப்பேடு அமைப்பு –தென்னகத்தில் கிடைத்த செப்பேடுகள், புகழ்பெற்ற செப்பேடுகள் குறித்த செய்திகளை எழுதுதல் வேண்டும்.)

12. அக்கால தேர்தல் முறைகள் குறித்து கல்வெட்டுகள் தரும் செய்திகள் யாவை? விவரி?

(உத்தரமேரூர், சேய்ஞலூர், மானூர் கல்வெட்டுகள் தரும் செய்திகளை எழுதுக.)

13. ஆவணப்பதிவு முறையை விளக்குக.

(இத்தலைப்பின் கீழ் உள்ள செய்திகளை எழுதுக).

14. போர்கள் பற்றிய செய்திகளை விவரி

(இத்தலைப்பின் கீழ் சோழ, பாண்டியர், பல்லவர் போர்கள் நடைபெற்ற இடங்களும் அதன் வெற்றி தோல்வி குறித்த செய்திகளை எழுதுக.)

15. கல்வெட்டுகளால் அறியலாகும் வரிகள் பற்றி விவரி?

(வரிகள் எனும் தலைப்பின் கீழ் ஒவ்வொரு வகையான வரிகளையும் விளக்கி எழுதுக.)

16. அளவுமுறைகள் குறித்து கல்வெட்டால் அறியலாகும் செய்திகளை விவரி?

(இத்தலைப்பின் கீழ் உள்ள நீட்டல், முகத்தல், நிறுத்தல் அளவுகளை மன்னர்கள் அடிப்படையில் எழுதுக.)

17. கல்வெட்டுகளால் அறியலாகும் இசைக் குறிப்புகளை விளக்குக.

(இசைத்தமிழ், தலைப்பின் கீழ் உள்ள அரச்சலூர், குடுமியான் மலை முதலிய இடங்களில் உள்ள கல்வெட்டுச் செய்திகள் மற்றும் இசைக் கருவிகள் ஆகியனவற்றை எழுதுக.)

**III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)**

18. தமிழக கல்வெட்டுகளின் பொதுத் தன்மையை விவரி?

(அனைத்து உள்தலைப்பு செய்திகளையும் சுருக்கி எழுதுக.)

## கூறு 7: இந்தியக் கல்வெட்டாய்வின் வரலாறு

நமது இந்தியத் திருநாட்டின் தொன்மை வரலாறு எழுதுவதற்குக் கல்வெட்டு என்ற ஒரு வரலாற்றுக் கருவூலம் இருப்பதையே வெளிநாட்டார்தான் நமக்குப் புலப்படுத்தினர். அத்தகைய வெளிநாட்டார்களில் இன்றியமையாதவர்களின் தொண்டினைக் காணலாம்.

**சர்வில்லியம்ஸ் ஜோன்ஸ்**

இவர் 1784 ஜனவரி 15ஆம் நாள் 'வங்காள ஆசியவியல் கழகத்தை நிறுவி இந்திய வரலாற்று ஆய்விற்கு அடிகோலினார். 1788இல் இக்கழகம் ஏசியாடிக் ரிசர்சஸ்' என்ற ஆய்விதழைத் தொடங்கியது.

குறிப்பு

**சர் சார்லஸ் வில்கின்ஸ்**

1785 ஜுலை 7ஆம் நாள் தேவபாலதேவரின் முங்கீர் வடமொழிச் செப்பேட்டினைப் படித்தறிந்து கட்டுரையாக ஆசியவியல் கழகத்திற்குப் படித்தளித்து கல்வெட்டு ஆய்வைத் தொடங்கி வைத்தார். "பூதல் தூண் கல்வெட்டை ஏசியாடிக் ரிசர்சஸ்" ஆய்விதழில் வெளியிட்டார்.

**ஹென்றி டி.ஹோல் புருக்**

1795-1837ஆம் ஆண்டுகளில் 1. அசோகர் தூணில் காணப்பட்ட பிற்காலக் கல்வெட்டைப் படித்துணர்த்தினார். 2. விக்ரபாலரின் கல்வெட்டினைப் படித்து அதில் காணப்பட்ட ஆண்டை விக்ரம ஆண்டு எனச் சரியாகக் கணித்தார். 3. தன்னால் படிக்க இயலாது போன அசோகரின் பிராமி கல்வெட்டின் படியையும் இணைத்து வெளியிட்டு, பிராமி வரிவடிவ ஆய்விற்கு வித்திட்டார். 4. காஞ்சியில் கிடைத்த ஒன்பது சமஸ்கிருத கல்வெட்டுகளை வெளியிட்டுக் கூறியதாவது.

'இந்தியாவின் வரலாற்றையும் அதன் பண்பாட்டையும் மீள அறிய வேண்டுமெனில் இந்தியாவில் விரவிக் கிடக்கின்ற கல்வெட்டுகளையும், செப்பேடுகளையும் பாதுகாத்து ஆய்வுசெய்தால் மட்டுமே" இயலும் என உறுதிபட கூறினார். இவரே கல்வெட்டு ஆய்வின் அவசியத்தை முதன்முதலில் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அணுகியவர் எனலாம். இந்திய அளவில் தொன்மையான கல்வெட்டுகள் அசோகரின் கல்வெட்டுகள் அவை வட பிராமியால் ஆனவை.

**ஜேம்ஸ் பிரின்சப் காலம்**

19ஆம் நூற்றாண்டின் முதல் 30 ஆண்டுகளைக் 'கல்வெட்டின் பொற்காலம்' எனலாம். இக்காலத்தில் 1819-1838வரை காசு அச்சுக் கூடத்திற்கு உலோகங்களின் தன்மையை எடுத்துரைக்கும் அதிகாரியாக வந்தவர். 20 ஆண்டுகாலம் ஆய்வு செய்து பிராமி வரிவடிவத்தையும், கரோஷ்டி வரிவடிவத்தையும் படித்துணர்ந்து இந்திய வரலாற்றில் திருப்பு முனையை ஏற்படுத்தினார். 1837ஆம் ஆண்டு முதன்முதலில் ஜேம்ஸ் பிரின்சப் இந்தியாவில் உள்ள கல்வெட்டுகளை எல்லாம் திரட்டிப் படித்து அறிந்தோமென்றால் இந்தியாவின் பழமையான வரலாற்றை மிகத் தெளிவாக அறிந்து கொள்ளலாம் என்ற கருத்தை வெளியிட்டார். இந்தியாவில் தொல்லியல் ஆய்வு அமையக் காரணமாக இருந்தவர் இவரே ஆவர். இவரது

கருத்து வெளியானதன் பிறகு 1. ஆசியாவின் ஆராய்ச்சிகள், 2. ஆசியக் குழுவின் இதழ், 3. இந்தியாவின் பழைமை ஆகிய நூல்களில் இந்தியாவில் கிடைக்கும் கல்வெட்டுகள் பற்றிச் சில கட்டுரைகள் வெளிவரத் தொடங்கின.

குறிப்பு

ஜேம்ஸ் பிரின்சப் 1840இல் மறைந்தார். அவரின் விருப்பம் அனைத்து பிராமி கல்வெட்டுகளையும் தொகுத்து வெளியிட வேண்டும் என்பதாகும். இவ்விருப்பத்தை 1877இல் அலெக்ஸாண்டர் கன்னிங்காம் *Corpus Inscriptionnum Indicarum* என்ற நூல் மூலம் நிறைவேற்றினார். இதனைத் திருந்திய வாசகங்களுடன் *Inscription of Asoka* என்ற தனி நூலாக ஹீல்சு 1925இல் வெளியிட்டார்.

மெசபடோமியரின் ஆய்வு வடிவ எழுத்துக்கள், எகிப்தியரின் சித்திர எழுத்துக்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்ட போது உலகளவில் ஏற்படுத்திய தாக்கத்தின் முன் ஜேம்ஸ் பிரின்சப்பின் பங்கு உலகளவில் அதிகமாகப் பேசப்படவில்லை. காரணம் குறுகிய காலத்திலேயே அவ்வெழுத்துக்கள் படித்துணரப்பட்டதால் அந்நாட்டின் நாகரிகம் பல்லாயிரமாண்டு பின்னோக்கிக் கொண்டு செல்லப்பட்டது. எனினும் பிராமி வரிவடிவம் சிறிது சிறிதாக முன்னேறி இந்திய வரலாற்றில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது எனில் மிகையில்லை.

**கிறிஸ்டியன் லாசன்**

1836இல் ஜேம்ஸ் பிரின்சப் அவர்களுக்கு எழுதிய கடிதம் பிராமி வரிவடிவத்தில் இருந்தது ஒரு திருப்புமுனை எனலாம். ‘அகதுக்ல ராஜா’ என்ற பிராமி வரிவடிவத்தைச் சரியாகப் படித்தார். அவ்வகையில் பிராமி வரிவடிவத்தை முதன்முதலில் படித்தவர் எனக் கூறலாம். ஆயினும், தொடர்ந்து ஆய்வு மேற்கொண்ட பெருமை ஜேம்ஸ் பிரின்சப்பைச் சாரும்.

கிறிஸ்டியன் லாசன் கண்டுபிடிப்பு பிராமி வரிவடிவத்தின் காலத்தைக் கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட காலத்திற்கு எடுத்துச் சென்றதன் மூலம் இந்தியாவின் வரலாறு ஒரே நாளில் பல நூற்றாண்டுகள் பின்னோக்கித் தள்ளப்பட்டது எனினும் பிராமி எழுத்து முறையை முழுவதும் கற்றுணர்ந்த பெருமை ஜேம்ஸ் பிரின்சப் அவர்களையே சாரும்.

**டாக்டர் ஈ.உல்ஷ் (*Dr. E. Hultzsch*)**

தமிழ் வேந்தர்களது ஆட்சிக்கதிர் மறைந்து தமிழர்கள் உறங்கிக் கிடந்த வேளையில் இக்கல்வெட்டுகளின் அருமையைத் தமிழர் அறியாதிருந்தனர். அந்நிலையில் தமிழ்நாட்டின் நற்காலமாக டாக்டர் ஈ.உல்ஷ் என்ற துரைமகனார் ஜெர்மனி தேசத்திலிருந்து இந்தியாவுக்கு வந்து, இங்குள்ள கோயில்களில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுகளைக் கண்டு அவைகளின் அருமை உணர்ந்து, அக்காலத்திலிருந்த அரச பிரதிநிதியிடம் கூறி அக்கல்வெட்டுகளைப் படியெடுத்து ஆராய்ச்சி செய்வதற்கென்று ஒரு துறையை ஏற்படுத்தியதோடு தாமும் உடனிருந்து ஆராய்ந்துள்ளார். திருவாளர்களான *T.A.* கோபிநாதராயர், *V.*வெங்கையா

என்பவர்களையும் இத்துறையில் பழக்கி வைத்துச் சென்றார். இப்பெரியோர்களாலும் பின் வந்துள்ளோர்களாலும் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு புத்தக வடிவமாய் வெளிவந்துள்ளன.

குறிப்பு

தென் இந்தியக் கல்வெட்டுகளில் இருபது தொகுதிகள் வெளிவந்துள்ளன. இவைகளுள்ளும் முதல் மூன்று தொகுதிகளும் அவைகளின் பாகங்களும் ஆங்கில மொழிபெயர்ப்புகளைப் பெற்றுள்ளன. இவ்வித மொழி பெயர்ப்பு கல்வெட்டு எழுதப்பட்டிருக்கும் மொழிகளை அறியாது ஆங்கிலப் பயிற்சி ஒன்றே உடையவர்களுக்குப் பெருநலம் விளைவிப்பதாய் இருந்தது.

பெரும்பொருட் செலவை முன்னிட்டு இத்தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளை வெளியிடுவதை நிறுத்திவிட அரசாங்கம் எண்ணியிருந்த பொழுது அக்காலம் சென்னைச் சட்டசபையின் உதவித் தலைவராக இருந்த இராமநாதபுரம் அரசர், மூலத்தை மட்டும் வெளியிட்டால் பெரும் பொருட்செலவு ஆகாது என்பதைக் கூற அரசாங்கம் அதனை ஏற்றுக் கொண்டு மூலத்தை மட்டும் வெளியிட்டு வருகின்றது. எனவே நான்காம் தொகுதி முதல் இருபதாம் தொகுதி வரை அந்தந்த மொழிகளிலுள்ள கல்வெட்டுகளின் மூலங்கள் மாத்திரம் பதிப்பிடப்பட்டுள்ளன. 12, 13, 14 தொகுதிகள் வம்ச வாரியாக வெளியிடப்பட்டுள்ளன. இம்முறைப்படி 12ஆம் தொகுதியில் பல்லவ வம்சத்து கல்வெட்டுகளும் 13-ஆம் தொகுதியில் சோழ வம்சத்து மன்னர்களின் கல்வெட்டுகளும் மற்றும் 14ஆம் தொகுதியில் பாண்டியர் கல்வெட்டுகளும் காலவரிசையில் அச்சிடப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுத் தொகுதி மட்டுமின்றி அரசாங்கம் *Annuval Reports on South indias Epigraphy*-யை வெளியிட்டு வருகின்றனர். இது திரு. *V.*வெங்கையா *M.s.*, அரசாங்கத்தின் கல்வெட்டு ஆய்வாளர் நிலையில் *(Officiating Government Epigraphist)* இருந்த பொழுது அவரால் தொடங்கப்பட்டது. இதன் இரண்டாம் பாகம் 1905 முதல் வெளிவருகிறது. இது வரலாற்றுத் துறையில் வேலை செய்பவர்களுக்குப் பெரிதும் உதவி செய்யக் கூடியதாகும். முதலில் 18 பக்கங்களாகவும், 1906-இல் 26 பக்கங்களாகவும், 1907-இல் 32 பக்கங்களாகவும், 1908-இல் 35 பக்கங்களாகவும் 1909-இல் கிருஷ்ண சாஸ்திரியார் அவர்கள் காலத்தில் 58 பக்கங்களாகவும் வெளிவந்த இது 1954-55இல் எழுதப்படாது போயிற்று. தற்சமயம் இந்த அறிக்கை 1960 முதல் 1961ஆம் ஆண்டு முடிய வந்துள்ளது.

இது மட்டுமின்றி *Epigraphia Carnatica, Epigraphia Indica, Epigraphia, birmanica, Annual Reports of Archaeological Surveey of india, Travancore Archaeological Series Pudukottai Inscriptions* முதலான பல நூல்களைப் பெரும் பொருட் செலவில் அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

குறிப்பு

## கூறு 7: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. நமது இந்தியத் திருநாட்டின் வரலாற்றை எழுத கல்வெட்டு ஒரு கருவூலம் என உணர்த்திய வெளிநாட்டார் சிலரை குறிப்பிடுக.

1. சர்வில்லியம்ஸ் ஜோன்ஸ், 2. சர் சார்லஸ் வில்கின்ஸ், 3. ஹென்றி டி. ஹோல் புருக். 4. ஜேம்ஸ் பிரின்சப், 5. கிறிஸ்டியன் லாசன், 6. டாக்டர் ஈ. உல்ஷ்

2. வங்காள ஆசியாவில் கழகத்தினை நிறுவி இந்திய வரலாற்று ஆய்விற்கு அடிகோலியவர் யார்?

சர் வில்லியம்ஸ் ஜோன்ஸ்

3. அசோகரின் கல்வெட்டுகள் எவ்வகை எழுத்தால் ஆனவை?

வடபிராமி

4. இந்தியாவில் தொல்லியல் ஆய்வு அமையக் காரணமானவர் யார்?

ஜேம்ஸ் பிரின்சப்

5. பிராமி வரிவடிவத்தை முதலில் படித்தவர் யார்?

கிறிஸ்டியன் லாசன் 'அகதுக்ள ராஜா' எனப் படித்தார்

6. பிராமி எழுத்து முறையை முழுவதும் அறிந்தவர் யார்? ஜேம்ஸ் பிரின்சப்

### II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)

7. இந்திய வரலாற்றை ஆராய்ந்த கூறிய வெளிநாட்டார்கள் தொண்டினை விவரி?

(சர்வில்லியம்ஸ் தொடங்கி உல்ஷ் பெருமகனார் வரை சுருக்கி எழுதுக.)

8. பிராமி எழுத்து ஆராய்ச்சி பற்றி விவரி?

(கிறிஸ்டியன் லாசன்- ஜேம்ஸ் பிரின்சப் ஆய்வுகளை எழுதுக.)

9. ஆய்வு வெளியீடுகள் குறித்து எழுதுக.

(கல்வெட்டு, தொல்லியல், எழுத்துமுறை அடிப்படையிலான செய்திகளை எழுதுக.)

### III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)

10. இந்தியக் கல்வெட்டாய்வின் வரலாற்றை விவரி.

(இத்தலைப்பின் கீழ் உள்ள செய்திகளைத் தொகுத்து எழுதுக.)

## கூறு 8: தென்னிந்திய கல்வெட்டாய்வில் தோற்றமும் வளர்ச்சியும்

### தமிழ்க் கல்வெட்டுகளின் ஆராய்ச்சி

தமிழகத்தில் தொன்மைத் தமிழ்க் கல்வெட்டுகளைப் படியெடுப்பதற்கான பணிகள் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தொடங்கப்பட்டது. 1882ஆம் ஆண்டு திரு.ராபர்ட் சீவல் அவர்கள் தமிழ்நாட்டில், மதுரை மாவட்டத்திலுள்ள மாங்குளத்தில் முதன் முதலாக இத்தகைய கல்வெட்டினைக் கண்டுபிடித்தார். தமிழறிஞர்களில் 1903-ல் வெங்கோபராவ் அவர்களால் மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கீழவலவு என்னுமிடத்தில் பிராமிக் கல்வெட்டு ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இக்கல்வெட்டின் முக்கியத்துவம் அப்போதைக்கு ஒருவராலும் உணரப்படவில்லை.

1906ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக இருந்த திரு. கமியேடு என்பவர் அம்மாவட்டத்தில் மறுகால்தலை எனுமிடத்தில் ஒரு கல்வெட்டைக் கண்டறிந்து அறிவித்தார். இக்கல்வெட்டு அன்றைய இந்திய அரசின் கல்வெட்டுப் பிரிவில் பணியாற்றிய வெங்கையா, கே.வி. சுப்பிரமணிய ஐயர் ஆகியோரால் படியெடுக்கப்பட்டது.

**கே.வி. சுப்பிரமணிய ஐயரின் கண்டுபிடிப்புகள்**

1906 ஆகஸ்டு மாதத்தில் கே.வி. சுப்பிரமணிய ஐயர் மதுரை மாவட்டத்தில் ஆனை மலையில் ஒன்றும் அரிட்டாபட்டியில் (மாங்குளம்) நான்குமாக மொத்தம் ஐந்து கல்வெட்டுகளைக் கண்டுபிடித்தார். அரிட்டாபட்டி கல்வெட்டுக்களைப் பற்றிய வி.வெங்கையாவின் கருத்து இன்றியமையாதது. இக்கல்வெட்டுகளே தமிழர்களின் தொன்மையான கல்வெட்டுகளாக, தொன்மையான வரலாற்றுச் சின்னங்களாக கருதத்தக்கன. இவை தமிழ், வட்டெழுத்து ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சியைப் பற்றி ஆராய்வதில் முக்கியமான செய்திகளைத் தரத்தக்கதாகும். பாலிமொழியில் இக்கல்வெட்டுக்கள் எழுதப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களும், அவை அமைந்துள்ள கற்படுக்கைகளும் புத்த மதத்தினரோடு தொடர்புடையனவாக இருக்கலாம் என்று கருதினார். மேலும் 1908-இல் திருப்பரங்குன்றத்தில் இரண்டும், அழகர்மலையில் ஒன்றுமாக மூன்று கல்வெட்டுக்களையும் மதுரை மாவட்டம் சோழ வந்தானுக்கு அருகில் உண்டாங்கல் எனுமிடத்திலும் கல்வெட்டுகளை இவர் கண்டறிந்தார். பிராமிக் கல்வெட்டுக்கள் யாவும் தமிழ்மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன என்று முதல் முதலாக நிறுவினார். அவ்வுண்மையை 1924இல் சென்னையில் மூன்றாவது அனைத்திந்தியக் கீழ்த்திசை மாநாட்டில் சமர்ப்பித்தார்.

**எச். கிருஷ்ண சாஸ்திரியரின் கண்டுபிடிப்புகள்**

கொங்கர் புளியங்குளத்தில் எச். கிருஷ்ண சாஸ்திரி இங்கு மீண்டும் ஆய்வு செய்தார். அப்போது அவர் மேலும் சில கற்படுக்கைகளையும் ஒரு பிராமிக் கல்வெட்டையும் கண்டறிந்தார். இவர் முத்துப்பட்டி என்ற இடத்தில் கல்வெட்டைக் கண்டுபிடித்தார்.

இக்கல்வெட்டுக்களின் ஒளிப்படங்களையும் மைப்படிகளையும் தென்னிந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் 1912, 1915, 1918ஆம் ஆண்டுகளில் வெளியிட்டார். 1919-ல் புனேயில் நடைபெற்ற அனைத்திந்திய கீழ்த்திசை மாநாட்டில் *(All India Oriental Conference)* இக்கல்வெட்டுகள் பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரையை அறிஞர்கட்குமுன் சமர்ப்பித்து பிறரும் இவ்வாய்வில் முழுமையாக ஈடுபட்டு உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இவரே தம் துறையில் பணியாற்றிய கே.வி. சுப்பிரமணிய ஐயரை இவ்ஆய்வில் முழுமையாக இறங்கும்படி ஊக்குவித்தவர்.

குறிப்பு

இந்தியாவின் பிற பகுதிகளில் கிடைத்த பிராமி எழுத்துக்களிலிருந்து தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துக்கள் ஒரு சில மாறுபட்டன. இவை தமிழ் மொழிக்கே உரிய சிறப்பு எழுத்துக்கள் என்பது தொடக்க காலத்தில் உணரப்படாமையால் ஆய்வாளர்களிடையே குழப்பம் நிலவியது.

ஐராவதம் மகாதேவன்

1966-இல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத் தமிழ் மாநாட்டில் அவர் வாசித்த கட்டுரையும், அதைத் தொடர்ந்து அவரால் நடைபெற்று வரும் ஆய்வுகளும் சங்க இலக்கிய ஆய்வுக்குப் புத்தொளியூட்டி வருகின்றன.

1988ஆம் ஆண்டு தமிழ் பிராமி எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்களில் பல அரிய கட்டுரைகள் அளிக்கப்ப பெற்றன. புலவர் செ.ராசு போல பல்வேறு தமிழறிஞர்களும் முயன்று இன்று வரை கல்வெட்டுக்களைத் தேடியும் தொகுத்தும் வெளியிட்டும் வருகின்றனர்.

குறிப்பாக 1961க்குப் பிறகு, அதிக அளவிலான கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதோடு, குறைந்த அளவிலான அறிஞர்களே இந்தத் துறையில் ஈடுபட்டிருந்த நிலைமாறி, பல இளைஞர்கள் தாங்களே முன் வந்து கல்வெட்டுகளைக் கண்டு பிடிக்கவும் சரியான பொருளை அறிந்துணர்த்தவும் செய்தனர். அவ்வகையில் தொன்மைத் தமிழ் எழுத்துக்கள் காணப்படும் இடங்களாவன மீனாட்சிபுரம், ஆனைமலை, திருப்பரங்குன்றம், புகளூர், அரச்சலூர், அம்மன்கோவில்பட்டி, பூலாங்குறிச்சி, இருளப்பட்டி மற்றும் பிள்ளையார்பட்டி ஆகியனவற்றைக் கூறலாம். இருப்பினும் காலத்தால் முந்திய கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்படும் பொழுது இவை பின்னுக்குச் செல்லும் வாய்ப்புகளும் உள்ளன.

இந்தியக் கல்வெட்டாய்வியல் கழகம் தொடங்கப்பட்டு அதன் முதல் இதழ் 1975இல் வெளியிடப்பட்டது. பெருமளவிலான இந்திய அறிஞர்கள் கல்வெட்டுத் துறையில் தன் முத்திரையைப் பதித்தனர்.

மெசபொடேமியரின் ஆப்பு வடிவ எழுத்துக்கள், எகிப்தியரின் சித்திர எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டபோது இந்தியாவின் மத்திய பகுதிகளிலும் தென்பகுதியிலும் ஆராய்ந்தவர்களின் பெயர்கள் பெருமளவில் பேசப்படாது போயிற்று.

1990-முதல் தொல்லியல் கழகம் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் ‘ஆவணம்’ என்ற ஆய்விதழைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. 2000த்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் இதன்வழி வெளியிடப்பட்டுள்ளன.

இத்தகைய கல்வெட்டு ஆராய்ச்சி நாள்தோறும் பல பரிமாணங்களைப் பெற்று வருகின்றது.

**கல்வெட்டறிஞர்கள்**

தொடக்க காலத்தில் இக்கல்வெட்டுகள் கண்டுபிடிக்கும் பணியைச் செய்தோர் அனைவரும் கல்வெட்டு ஆய்வைத் தம் வாழ்நாள் பணியாகக் கொண்டு அயராது

உழைத்தமையால்தான் அவர்கள் கல்வெட்டு அறிஞர்களாய்த் திகழ்கின்றனர். வரலாற்றிற்குப் பணியாற்றிய அவ்வல்லுநர்களில் சிலரை நாம் அறியலாம்.

குறிப்பு

**உல்சு நுரைமகனார்**

செர்மானிய நாட்டில் பிறந்த செம்மல், இவருடைய முழுமையான பெயர் இயூசன் சீலியசு தியோடர் உல்சு என்பதாகும். இவர் டிர.ஃச்டன் மாநகரத்தில் மாநகரக் கல்லூரியில் பயின்று, கி.பி.1874 ஆம் ஆண்டு இலிப்சியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கற்றார். இவர் 1857ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 29ஆம் நாள் பிறந்தார். கல்லூரியில் சேர்ந்த நான்கு ஆண்டுகளில் கீழ்த்திசை மொழித் தத்துவங்களைக் கற்றுத் தேர்ந்தார். அக்காலத்தில் இலிப்சியா நகரிலிருந்த தலை சிறந்த ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

1884இல் கையெழுத்துப் படிகளையும், கல்வெட்டுகளையும் ஆராய்ந்தார். அதன் பயனாய் 1886ஆம் ஆண்டில் சென்னை மாநில அரசின் கல்வெட்டு ஆய்வாளராய் அமர்த்தப்பட்டு 1903ஆம் ஆண்டு வரை அப்பதவியில் இருந்து அரும்பணியாற்றினார்.

இக்காலத்தில் இவர், தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் மூன்றையும், வரலாற்று அறிஞர்களுக்கு வற்றாக் களஞ்சியமாய் விளங்கும் ஆண்டு அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளார். ‘இந்திய கல்வெட்டு’ என்னும் மூன்றாம் தொகுதி முதல் ஒன்பதாம் தொகுதியில் ஒரு பகுதி வரை இவர் பதிப்பாசிரியராக இருந்து ஆற்றிய பணிகள் என்றும் எண்ணிப் போற்றத்தக்கன. 1906-இல் தார் என்னுமிடத்தில் கரும்பாறையின் மேல் பொறிக்கப்பட்டிருந்த ‘பாரிசாத மஞ்சரி’ என்னும் கல்வெட்டு இலக்கியத்தை அச்சிட்டு வெளியிட்டார். 1925ஆம் ஆண்டில் ‘அசோகரின் கல்வெட்டுகள்’ என்னும் உயர்ந்த பதிப்பினை வெளியிட்டார். இவர் கல்வெட்டுகளைத் தவிர இலக்கியங்கள், காப்பியங்கள், நாடகங்கள், பிராகிருதம் முதலானவற்றையும் ஆர்வத்தோடு அறிந்தார். ஆராய்ந்தார் அரிய நூல்களாகப் படைத்தார். இவ்வண்ணம் பலதுறை அறிவுடன் கல்வெட்டில் கணிசமான அளவுக்குப் பணியாற்றிய இவர் 1927-இல் சனவரித்திங்கள் 16ஆம் நாள் புகழுடம்பு எய்தினார்.

**சேம்சு பிரின்செப்**

ஆங்கிலேயராகிய இவர் நாணயச் சாலையில் பணிபுரிந்தார். வங்கத்து ஆசியக் கழகத்தின் செயலாளராகவும் இருந்தார். இவர், வழக்கில் இல்லாத பிராமி எழுத்தை ஆராய்ந்து கற்று, ‘அசோகரின் கல்வெட்டுகளைப் படித்து பொருள் கூறிய பெருமைக்கு உரியவர்’. அசோகருடைய கல்வெட்டுகள் முதன் முதலில் 1750-இல் கண்டுபிடிக்கப்பட்டன. ஆயின் 1837இல் சேம்சு பிரின்செப் அவர்களே முதன்முதலில் அவற்றைப் படித்துப் பொருள் கூறினார். பிராமி எழுத்துக்களைப் படிக்கும் திறவுகோலைக் கண்டுபிடித்த அருந்திறலார் இவரே.

*Self-Instructional Material*

குறிப்பு

பிராமி எழுத்துக்கள் பொறித்துள்ள அசோகர் காலக் காசுகளையும் இவர் நன்கு ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

**அலெக்சாண்டர் கன்னிங்காம்**

இவர் பிராமி எழுத்தின் திறவுகோலைக் கண்டறிந்த பெருமைக்குரிய பிரின்செப் அவர்களுடன் இருந்து பணியாற்றிய உயர் அறிஞர். பல்வேறு கோடுகளையுடைய பழங்காலக் கல்வெட்டுகளை எளிதில் படிக்க வழியறிந்து அதில் வெற்றி பெற்றவர்.

**பேராசிரியர் துப் ரேயல் துரைமகனார்**

அரிக்கமேட்டில் அகழ்வாய்வு செய்து தமிழ்நாட்டின் பண்டைச் சிறப்பினை அறியச் செய்தவர். அரிக்கமேட்டைத் தென்னிந்தியத் தட்சசீலம் என வியந்து கூறியதோடு அக்கூற்றைச் சான்றுகளால் நிறுவியவர். ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து கிடைத்துள்ள பல்லவ கிரந்த எழுத்தக்களின் பலவகைகளையும் எடுத்துக்காட்டி விளக்கியவர்.

**டாக்டர் பியூலர்**

தென்னக எழுத்து முறையில் அ∴தாவது தமிழ் முறையில் எகரம் கீழ்நோக்கிய வளைவாகக் காணப்படுவதை முதலில் எடுத்துக் காட்டியவர். பனையோலையில் எழுதும் பழக்கத்தினையும், அதன்
இயல்புகளையும் பற்றி மிகச் சிறப்பாக ஆய்வு செய்தவர்.

**∴சிடெயின்**

வெளியில் புலப்படும் கல்வெட்டுகளை மட்டுமின்றி மண்ணுள் புதைந்திருந்த பல ஆவணங்களையும், கண்டுபிடித்து அவற்றைப் படித்து அறிவித்தவர். பெரும்பாலும் இவர் தன் ஆய்வுகளை மத்திய ஆசியாவிலும், திபெத்திலும் நிகழ்த்தியுள்ளார்.

**பிளீட்**

கல்வெட்டு எழுத்துக்களில் சிலவற்றைப் பறவை எழுத்துக்கள் எனவும் குறிப்பிட்டு அதற்குரிய காரணங்களையும் எடுத்துரைத்தவர். மகாநாமனின் புத்தகயைக் கல்வெட்டு எழுத்துக்கும் சமன்காட்டுச் செப்பேட்டு எழுத்துக்கும் இடப்பட்டவை இரண்டாம் கீர்த்தி வர்மனின் பட்டக்கல்தூண் கல்வெட்டு எழுத்துக்கள் என்பதை ஆராய்ந்து காட்டியவர்.

**முனைவர் பர்னல்**

யாதவர், காகதீயர் ஆகியோரின் எழுத்துக்களினின்றும் பிறந்த நந்தி நாகரி எழுத்துக்களைப் பனையோலைகளில் எழுதிய பழக்கத்தால், அவ்வெழுத்துக்களில் ஒழுங்கற்ற தன்மை உண்டாயிற்று என்பதைப் படிபடியாய் எடுத்துக்காட்டியவர்.

**எலியட்**

பாண்டியர் காசுகளைப் பற்றியும், கல்வெட்டு எழுத்துக்களைப் பற்றியும் ஆராய்ந்தவர். பாண்டியர் காசுகளில் நாகரி எழுத்துக்களை உடையவை. காலத்தால் முற்பட்டவை எனக் கூறியவர்.

குறிப்பு

**முனைவர் கீல்கார்ன்**

திருக்கோவில்களில் உள்ள கல்வெட்டுகளை எல்லாம் படி எடுக்கப் பணியாற்றியவர். அவற்றைத் தக்க வண்ணம் பதிப்பித்து வெளியிட உறுதுணையாயிருந்தவர்.

**எம். காட்டநவ்**

பிரெஞ்சு நாட்டு அறிஞர், புதுச்சேரி மாநிலத்திலுள்ள கல்வெட்டுகளை ஆராய்ந்தவர். மேலும் புதுச்சேரி மாநிலத்தில் கிடைத்த சிலவகை மணிகளை ஆராய்ந்து அவற்றின் காலம் கி.மு. 5ஆம் நூற்றாண்டு எனத் தெரிவித்தார்.

**இராபர்ட் சிவெல்**

ஆரசின் பெரும் பதவியில் இருந்தவர். இவரால் கல்வெட்டுகள் அச்சில் பதிப்பிக்கப்பட்டதோடு, பலரும் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றன. கல்வெட்டுப் பதிப்பில் பாராட்டத்தக்க பணியாற்றியவர்.

**கெய்த்**

கல்வெட்டுகளை நன்கு ஆராய்ந்த கல்வியாளர், தமிழ்நாட்டு வரலாற்றுக்குக் கல்வெட்டின் அருந்துணையை எடுத்துரைத்தவர். கல்வெட்டுகள் மன்னர்களின் இயல்புகளைவிட மக்களின் செயல்முறைகளை விளக்குவன. அவற்றுள்ளும் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் இவ்வகையில் முதலிடம் பெறுவன என்பதை எடுத்தக் காட்டியவர்.

**து.அ. கோபிநாதராவ்**

கல்வெட்டு ஆய்வில் வல்லவராயும், வழிகாட்டியாயும் விளங்கிய அறிஞர் உல்சு துரை மகனார்க்கு உறுதுணையாகவிருந்து, கல்வெட்டு ஆய்வில் ஈடுபட்டு அரும் பணியாற்றியவர். திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டைக்கு அருகில் உள்ள ஆய்குடியில் ஆண்ட ஆய் மன்னர்களின் செப்பேட்டை முதன் முதலில் ஆராய்ந்து வரலாற்றுலகிற்கு வழங்கியவர். இவர் 1902ஆம் ஆண்டு முதல் திருவனந்தபுரம் சமஸ்தானத்தில் கல்வெட்டு ஆராய்ச்சித்துறை தலைவராக இருந்து திருவாங்கூர் சாசனத் தொடர் என்னும் தொகுதிகளை வெளியிட்டவர். இவர் எழுதிய பண்டைத் தமிழ் எழுத்துக்கள் பற்றிய ஆராய்ச்சியாவராலும் போற்றத்தக்கதாகும்.

குறிப்பு

**வி. வெங்கையா**

அறிஞர் உல்சு துரைமகனாரோடு இணைந்து கல்வெட்டு ஆய்வில் ஈடுபட்டு அரும்பணியாற்றினார். பண்டைக்கால நீர்பாசன வசதிகள் பற்றி கல்வெட்டுகளில் இருந்து அரிய செய்திகளை வழங்கியவர்.

**ஐராவதம் மகாதேவன்**

சிந்து சமவெளி எழுத்துக்களையும், பிராமி எழுத்துக்களையும் விரிவான முறையில் ஆய்வு செய்த புகழ்பெற்ற கல்வெட்டாய்வாளராகிய இவர், தமிழகத்தைச் சேர்ந்தவர் இந்தியாவிலேயே முறையாகக் கம்யூட்டர் மூலம் சிந்துசமவெளி எழுத்துக்களை ஆய்வு செய்தார். இவர் திருச்சி மாவட்டத்தில் உள்ள மணச்சநல்லூர் கிராமத்தில் 1930ல் பிறந்தார். திருச்சியில் பட்டப்படிப்பும், சென்னையில் சட்டப்படிப்பும் முடித்தார். இவரது சிந்து சமவெளி எழுத்து ஆய்வுக்காக ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் இவருக்கு 1970-ல் நேரு பெல்லோஷிப் வழங்கியது.

**கல்வெட்டாய்வில் ஐராவதம் மகாதேவனின் சாதனைகள்**

1. 1966இல் ஐராவதம் மகாதேவன் மாங்குளம் கல்வெட்டில் காணப்படும் நெடுஞ்செழியன் மற்றும் வழுதி என்ற சங்ககாலப் பாண்டிய மன்னனின் பெயரைப் படித்ததன் மூலம் இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவம் வெளிச்சத்துக்கு வந்தது.

2. 1894, கேரளாவில் உள்ள பத்தேரி நகருக்கு அருகிலுள்ள குன்றில் பாறைக்கீரல்களுடன் நான்கு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1894இல் கண்டு பிடிக்கப்பட்ட இந்தக் கல்வெட்டு நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் 1995-ல் ஐராவதம் மகாதேவனால் படிக்கப்பட்டது. எண்ணற்ற கட்டுரைகள் இயற்றிய இவர் பிராமி எழுத்தைப் படித்தறிதலில் சிறந்தவர்.

3. சிந்துவெளி எழுத்துக்கள் வலப்புறம் இருந்து, இடது புறமாக எழுதப்பட்டுள்ளது என்ற இவரது நிரூபணம் எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றது. தமிழ் கல்வெட்டாய்வில் இவரது பங்களிப்பைக் கௌரவித்து மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இவருக்கு 1995இல் தமிழ்ச் செம்மல் என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

**வரலாற்றுப் பேரறிஞர் தி.வை.சதாசிவ பண்டாரத்தார்**

பிற்காலச் சோழர் வரலாற்றில் திருப்பு மையத்தை ஏற்படுத்தியது தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டத்திலுள்ள திருப்புறம்பயம் என்னும் ஊரில் நடந்த போராகும். ஆவ்வூரில் சைவசமய நால்வரால் பாடப்பெற்ற தலம் உள்ளது. இத்தகைய சிறப்பைப் பெற்ற அவ்வூரில் 15.08.1892 அன்று திருமதி. மீனாட்சி அம்மையாருக்கும், திரு. வைத்தியலிங்கப் பண்டாரத்தாருக்கும் ஒரே மகனாராகப் பிறந்தார் திரு. தி.வை.சதாசிவப் பண்டாரத்தார்.

குறிப்பு

பள்ளிப் படிப்பின் போதே அறிஞர் பண்டாரத்தார் தமிழ் இலக்கிய, இலக்கணங்களை நன்கு பயின்றார். இவர் தமது தொடக்க காலத்திலேயே செந்தமிழில் எழுதிய கட்டுரைகளைக் கண்டு, தமிழ்ப் புலவர்களிலும் ஒருவர் வரலாற்றுப் புலவராகிய ஆராய்ச்சி மைல் கற்கள் நாட்டப் போகிறாரே! ஏன்று அதிசயமும் ஆனந்தமும் ஒருங்கே அடைந்திருக்கிறார் தமிழறிஞரான பி.ஸ்ரீ.! அதற்கேற்பப் பண்டாரத்தாரின் தொடக்க கால ஆய்வுகள் சிறப்பானவை.

இவர் ஒரு சிறந்த சொற்பொழிவாளராகவும் திகழ்ந்திருக்கிறார். தம் கையில் எந்தவிதக் குறிப்புகளும் இன்றி நீண்ட நேரம் சொற்பொழிவாற்றும் ஆற்றலுடையவர் இவ்வறிஞர். உடல் நோயுற்ற காலத்திலும் கல்வெட்டுத் துறையில் மிகுந்த ஈடுபாடும் நினைவாற்றலும் கொண்டவராக விளங்கிய இவர் 02-01-1960 அன்று அண்ணாமலை நகரில் தமது இல்லத்தில் காலமானார். சோழ, பாண்டிய வரலாறுகளைத் துல்லியமாக வடித்தவர். ‘கல்வெட்டுக்களால் அறியப்பெறும் உண்மைகள்’ ‘இலக்கியமும் கல்வெட்டுகளும்’ எனும் இரண்டு கல்வெட்டுத் தொடர்பான நூல்களை இயற்றியவர். இவரது ‘கரிகாலன்’ – கட்டுரை சிறப்பானதாகும். வட்டெழுத்திலிருந்து தமிழ் எழுத்து தோன்றியது. கம்பர் உத்தம சோழன் காலத்தவர், விநாயகர் வழிபாடு 7ஆம் நூற்றாண்டின் இடையில்தான் தமிழ் நாட்டிற்கு வந்தது. இராசராசன் தஞ்சைத் தனிக் குளத்து கோயிலையே பெரிதாக்கினான் போன்ற அரிய பல செய்திகள் கண்டறிந்து கூறியவர்.

**கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர் வை.சுந்தரேச வாண்டையார்**

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை வட்டம் சோத்தமங்கலம் என்னும் ஊரிலிருந்த குறுநில மன்னர் மரபினரான திரு.வைத்தியலிங்க வாண்டையாருக்கும் திருமதி. சிவசங்கையம்மையாருக்கும் 15-12-1899 அன்று சிதம்பரத்தையடுத்த இராதாநல்லூர் என்னும் ஊரில் மகனாராகப் பிறந்தவர் திரு.வை.சுந்தரேச வாண்டையார்.

சுந்தரேசனாரது ஆசிரியப்பணி முதன் முதலாகத் திருவையாறு அரசர் கல்லூரியில் தொடங்கியது. அரசர் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போதே கல்வெட்டு ஆராய்ச்சியிலும் இவர் ஈடுபட்டார். இவரெழுதிய ‘முப்பது கல்வெட்டுகள்’ என்னும் நூல் தமிழகப் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், தமிழ் பயிலும் மாணவர்களுக்குப் பாட நூலாக வைக்கப்பட்டிருந்தது.

செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில் முதலான இதழ்களில் சுந்தரேசனார் தொடர்ந்து பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வந்தார். இவர் எழுதிய கல்வெட்டுத் தொடர்பான நூல்களாவன கொட்டையூர்த்தல வரலாறு,

குறிப்பு

செம்பியன் மாதேவியார், கல்வெட்டுத் தரும் கருத்துக்கள், தமிழ்நாட்டுக் கோயில் கல்வெட்டுகள் முப்பது கல்வெட்டுகள் ஆகியனவாகும்.

இப்பெருமகனாருக்குத் தருமபுரம் ஆதீனம் கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர் என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. கல்வெட்டு ஆராய்ச்சியின் மூலம் மறைந்து கிடந்த பல வரலாற்று உண்மைகளைத் தேடித் தந்தவர் சுந்தரேச வாண்டையார் ஆவார்.

**டாக்டர் மா. இராசமாணிக்கனார்**

ஆந்திர மாநிலம் கர்நூலில் 12-03-1907 அன்று திரு.மாணிக்கம் என்பவருக்கும், திருமதி தாயாரம்மாள் என்பவருக்கும் மகனாராகப் பிறந்தவர் திரு. இராசமாணிக்கனார் ஆவார். இவரது மனைவியார் திருமதி. கண்ணம்மையார்.

1916வரை ஆந்திரமாநிலத்திலேயே தெலுங்கு பயின்று கொண்டிருந்தார். தந்தையாரின் பணி இடமாற்றத்தின் காரணமாக 1916-இல் மதுரை வந்தார். அப்போது தமிழைப் பயின்றார்.

பி.ஓ.எல்., எல்.பி., எம்.ஓ.எல் ஆகிய பட்டங்களைப் பெற்ற இவர் பள்ளிச் சிறுவர்களுக்காகவும் ஆராய்ச்சி அறிஞர்களுக்காகவும், பாமரர்களிடையே இலக்கிய, இலக்கணங்களை அறிமுகப்படுத்துவதற்காகவும் என்று பல நிலைகளில் நின்று இவர் நூல்களை எழுதியுள்ளார்.

அறச்செல்வி, கலித்தொகை-உரை, கால ஆராய்ச்சி சேக்கிழார் வரலாறும் வேளாளர் வரலாறும் தமிழகப் புதையல், தமிழ் எங்கள் உயிர், தமிழ் மணிமாலை, தாமரை வாசகம், பழமொழி நானூறு-உரை, மதிவாணர் மாலை, மல்லிகை வாசகம், வேதாளக் கதை-பதிப்பு போன்றவை இவரெழுதிய நூல்களாகும்.

சேக்கிழார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, கல்வெட்டுகளில் அரசியல் - சமயம் - சமுதாயம், இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி, இலக்கிய ஓவியங்கள் என்பன. இராசமாணிக்கனார் இறந்த பிறகு வெளிவந்த நூல்களாகும். இவர் பல சிறுவர் நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும், வரலாற்று ஆய்வு நூல்களையும், இலக்கண, இலக்கிய ஆய்வு நூல்கள் பற்றிய பொதுச் செய்திகளையும் வெளியிட்டுள்ளார்.

தமது வாழ்வில் சில குறிக்கோள்களைக் கொண்டு தமிழ்ப் பணி புரிந்த டாக்டர் மா. இராசமாணிக்கனாரைத் திருவாவடுதுறை ஆதீனம் ‘சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர்’ என்றும், ‘மதுரைத் திருஞானசம்பந்தம் ஆதீனம்’ ‘ஆராய்ச்சிக் கவிஞர்’ என்றும், ‘சைவ சித்தாந்த சமாஜம் சைவநெறிக் காவலர்’ என்றும் பாராட்டியதில் வியப்பில்லை.

**மயிலை சீனி. வேங்கடசாமி**

ஆராய்ச்சிப் பேறறிஞர் என்றால் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களைத் தான் குறிக்கும். 16-12-1900ல் சீனிவாச நாயகருக்கு மூன்றாம் மகனாகப் பிறந்த இவர், ஆய்வுலகின் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

குறிப்பு

மயிலையார் ஒரு கோயிலைப் பார்த்தவுடன் அதைக் கட்டிய மன்னன் யார் எந்தக் காலத்தில் அது கட்டப்பட்டது அக்கோயில் எவ்வகையான அமைப்பை உடையது. அக்கோயில் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள் என்ன என்பதைத் துள்ளியமாகக் கூறக் கூடியவர். இலக்கியக்கடல், வரலாற்றறிஞர், மொழிநூற் புலவர், சமய நூல் வித்தகர், வரிவடிவ வரலாற்று வல்லுநர், சொல்லாய்வுச் செம்மல் மற்றும் கல்வெட்டு, சாசனம், தொல்லியல் துறைகளில் தனி முத்திரை பதித்தவர். பன்மொழிப் புலவர்,

**அகல் வரலாறு அனைத்தும்**
**மிஞ்சுதல் இன்றி கற்றோன்**
**மேம்படும் நூலாராய்ச்சி**
**கெஞ்சிடும் தனைத் துலக்க**
**கேண்மையோடு உயர்வு செய்வான்**

எனப் பாரதிதாசனாரால் புகழாரம் சூட்டப்பட்டவர்.

மயிலையாருக்குத் திரு. சுதாசிவப் பண்டாரத்தார். கே.கே.பிள்ளை, மா. இராசமாணிக்கனார் போன்றோர் சிறந்த நண்பர்களாக விளங்கினர்.

**மயிலையார் பற்றிய மூன்று செய்திகள்**

1. பத்தாம் வகுப்புக்கு மேல் படிக்காதவர், இடைநிலைப்பள்ளி ஆசிரியர் எனினும் பல்கலைக் கழகங்களும் போற்றும் வண்ணம் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டார். இவரது நூல்கள் பல பல்கலைக்கழகங்களிலும் பாட நூல்களாக உள்ளன.
2. திருமணம் செய்து கொள்ளாது ஆறுமுக நாவலா் போல் தமிழுக்குத் தொண்டு செய்தவர்.
3. ஆராய்ச்சி செய்வதே வாழ்வாக வாழ்ந்தவர் ஆராய்ச்சியில்
   1. தனக்கெனத் தனி மரபை வகுத்துக் கொண்டவர்.
   2. துணிவோடு முடிவுகளைக் கூறுவார்
   3. நடுநிலைமையோடு ஆராய்ச்சி செய்தார். எதனையும் தகுந்த சான்று காட்டி நிறுவினார்.

தமிழ் இதழ்களில் 200-க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார். 30

நூல்களைப் படைத்துள்ளார்.

1961ல் 'ஆராய்ச்சிப் பேறறிஞர்' எனும் பட்டத்தையும், 1980-ல் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' எனும் பட்டத்தினையும் பெற்றவர். 1970ல் தமிழக அரசு 'தமிழ்நாட்டு வரலாற்று வல்லுநர் குழு உறுப்பினராக' மயிலையாரை நியமனம்

செய்தது. சொல்லில் அடங்காத இவரின் சிறப்பும் உழைப்பும் 08-05-1980ல் இறந்தபின்னும் வாழ்கிறது. 2001-ல் தமிழக அரசு அவரது நூல்களை நாட்டுடைமையாக்கியது.



**கல்வெட்டறிஞர் செ.இராசு**

ஈரோடு மாவட்டத்திலுள்ள பெருந்துறை வட்டத்தைச் சேர்ந்த வெள்ளமுத்துக் கவுண்டன் வலசு என்னும் சிறிய கிராமத்தில் ஜனவரி மாதம் 2-ம் நாள் 1938இல் பிறந்தவர். சென்னியப்ப கவுண்டர் நல்லம்மாள் ஆகியோர் இவர்தம் பெற்றோராவர்.

1995இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் நடுகல், ஓலைச்சுவடி குறித்த ஆய்வுகளை மேற்கொண்டார். 1980-1982ஆம் ஆண்டுகளில் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையில் சேர்ந்தார். ஆய்வுத்துறையிலும் கல்வெட்டிலும் பயிற்சி பெற்றார்.

01-02-1982இல் தமிழ்ப் பல்கலைக்கழத்தில் கல்வெட்டியல் துறையில் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்தார். 17-10-1983-முதல் இணைப் பேராசிரியராகவும், 01-10-1996 முதல் பேராசிரியராகவும் பணிவுயர்வுகளைப் பெற்றார். இவர் ‘பேரூராதீனப் புலவர்’, ‘கல்வெட்டறிஞர்’, ‘கலைச்செல்வர்’, ‘செந்தமிழ்க் காவலர்’ ‘கல்வெட்டியல் கலைக்கோ’ போன்ற பட்டங்களைப் பெற்றவர். ஏறத்தாழ 60 நூல்கள் இவருடைய வெளியீடுகளாகக் காணப்படுகின்றன.

12 நூல்களைப் பதிப்புகளாகக் கொண்டு வந்துள்ளார். அவ்வகையில் கொங்குமண்டல சதகம், மேழி விளக்கம், கொடுமணல் இலக்கியங்கள், திங்களூர் நொண்டி போன்றவை குறிப்பிடத்தக்கவை. 110 ஆய்வுக் க

ட்டுரைகளையும் 500க்கும் மேற்பட்ட தொடர்க் கட்டுரைகள் இதழ்களில் வந்துள்ளன.

**தொல்லியலறிஞர் நடன காசிநாதன்**

கடலூர் மாவட்டம் நெய்வேலிக்கு அருகிலுள்ள தொப்பளிக்குப்பம் என்ற சிற்றூரில் வேளாண்குடியில் திரு நடனசபாபதி-திருமதி.ருக்மணி தம்பதியருக்கு 1940-இல் பிறந்தவர் இவர். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் 1967இல் கல்வெட்டாய்வாளராகப் பணியில் சேர்ந்து 1989இல் ஓய்வு பெற்றார்.

தம் பணிக்காலத்தில் பல அரிய கண்டுபிடிப்புகளையும், சில புதிய செயல் திட்டங்களையும் இவர் நிகழ்த்தியிருந்தார். 1984இல் தஞ்சையில் முதலாம் இராசராசனின் 1000-மாவது முடிசூட்டப் பெற்ற தினத்தை கொண்டாடியதும், அதையொட்டித் தஞ்சையில் இராசராசன் அகழ்வைப்பகம் ஏற்படுத்தியதும், பூம்புகாரில் கடலகழாய்வை மேற்கொண்டு கடலினுள் கி.மு.5ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஐந்து

கட்டட அமைப்புகளைக் கண்டுபிடித்ததும், கி.பி.18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிதைந்த கப்பல் ஒன்றைக் கண்டுபிடித்ததும், 1994இல் தஞ்சையில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி தஞ்சை அரண்மனை, மதுரைத் திருமலை நாயக்கர் அரண்மனை, சரபேந்திரராசன்பட்டினம், மனோரா, தரங்கம்பாடி கோட்டை, இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் ஆகியவற்றை பழமைத் தன்மை மாறாது சீர் செய்ததும் குறிப்பிடத்தக்கவை. இலங்கை, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்குக் கல்விப் பயணம் சென்று வந்துள்ளார்.

குறிப்பு

பணி ஓய்வுக்குப் பின்பு தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனம் என்னும் அமைப்பை ஏற்படுத்தி இதுவரை வரலாற்றுக் கருத்தரங்குகள் 9-நடத்தி, ஆய்வுக் கட்டுரைகளடங்கிய எட்டு நூல்களை வெளிக்கொணர்ந்தார். இவர் 77 நூல்களை எழுதியிருக்கிறார். இவற்றில் 59 தமிழ் நூல்கள் 18 ஆங்கில நூல்கள் ஆகும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மேனாள் ஆளவை உறுப்பினராகவும், நடுவணரசு இந்திய மொழிகள் நிறுவனத்தின் சான்றாதார வல்லுநராகவும், தமிழ் நாட்டரசு வரலாறு எழுதும் வல்லுநர் குழுவின் உறுப்பினராகவும், வன்னியர் வரலாறு தொகுப்புக் குழுவின் தலைவராகவும், இருந்து வரும் இவரைத் தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் ‘காசுநாதன்’ என்றும், கண்ணியம் இதழ் ஆசிரியர் முனைவர் குலோத்துங்கன் அவர்கள் ‘கல்வெட்டுச் செம்மல்’ என்றும் பதிப்புச் செம்மல் முனைவர் ச.மெய்யப்பன் அவர்கள் ‘தொல்லியல் அறிஞர்’ என்றும் கல்வெட்டுப் பேரறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் ‘கல்வெட்டறிஞர்’ என்றும், முனைவர் இரா.நாகசாமி அவர்கள் ‘வட்டெழுத்தில் வல்லவர்’ என்றும், தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் ச.இராமதாசு அவர்கள் ‘தமிழ்ச் செம்மல்’ என்றும் ‘வரலாற்றுத் திலகம்’ என்றும், சிற்பகுரு முனைவர் வை.கணபதி ஸ்தபதி அவர்கள் ‘கல் எழுத்துச் சொல் ஓவியர்’ என்றும், ‘வன்னியர் குலக்குரு’ என்றும் பாராட்டியுள்ளனர். திருவையாறு தமிழய்யா கல்விக் கழகத்தால் ‘வரலாற்றுப் பேரறிஞர்’ என்றும் பாராட்டப்பட்டிருக்கிறார்.

**முனைவர் பூ. சுப்பிரமணியம்**

உ.வே.சா. அவர்களின் வழித்தோன்றலாக ஓலைச்சுவடித் துறைக்குப் பெரும் தொண்டாற்றி வருபவர் முனைவர் பூ.சுப்பிமணியம் அவர்கள், வடஆற்காடு மாவட்டத்தில் வந்தவாசி வட்டம் இரகுநாத சமுத்திரத்தில் 02-07-1927ஆம் ஆண்டு பிறந்தார். தாயார் அங்கம்மாள் தந்தை பூங்காவனம்.

1963ஆம் ஆண்டு முதல் சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அரசினா் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் பணியாற்றிய இவா், மாற்றுப் பணியில் 1979இல் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சுவடித்துறைத் தலைவராகப் பொறுப்பேற்றாா். அந்நிறுவனத்தில் சுவடியியல் பட்டய வகுப்பு நடத்தி ஆண்டுதோறும் ஐந்து முதல் பத்து சுவடிப் பதிப்பாசிரியா்களை உருவாக்கினாா். மேலும் ஓலைச் சுவடிகளைக் கற்பதில் ஆா்வமிக்க ஆசிரியா், பேராசிரியா், மருத்துவா், பிற பணியாளா்களுக்கும் குறுகிய காலச் சுவடிப் பதிப்புப் பயிற்சிகளுடன் வழங்கினாா். 1983ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் மீண்டும் அரசினா் சுவடிகள் நூலகம் வந்து காப்பாட்சியராகப் பொறுப்பேற்று 1985ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பணி ஓய்வு பெற்றாா்.

மீண்டும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 1992ஆம் ஆண்டு வரை பணியாற்றிய பிறகு 1993 ஆம் ஆண்டு முதல் ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் சுவடித் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றாா். அங்கும் பல சுவடிப் பதிப்பாசிரியா்களை உருவாக்கினாா். சுவடிஇயல் ஓா் ஆய்வு என்ற தலைப்பில் முனைவா் பட்ட ஆய்வினை மேற்கொண்டு 1984ஆம் ஆண்டு முனைவா் பட்டம் பெற்றாா்.

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகளாக இவருடைய சுவடியியல், மனைநூல், மெய்க்கீா்த்திகள் போன்ற நூல்கள் வெளிவந்துள்ளன. பதிப்பாசிரியராக இருந்து பல நூல்களை ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தின் வெளியீடுகளின் வழி வரச்செய்தவா். ஆருடசோதிடம் மனையடி சாஸ்திரம் ஆகிய இரு நூல்களை வெளியிட்டுள்ளாா். பல சுவடிப் பதிப்புகள் வெளிவரத் துணை புரிந்துள்ளாா்.

சுவடித்துறைக்கு அவா் ஆற்றிய பணிகளைப் பாராட்டி, மறைந்த கருப்பையா மூப்பனாா் அவா்கள் கும்பகோணத்தில் ஏற்பாடு செய்திருந்த உ.வே.சா. அவா்களின் நூற்றாண்டு விழாவில் உ.வே.சா அவா்களின் நூற்றாண்டு விழாவில் உ.வே.சா. அவா்களின் வழித் தோன்றல் என்ற சிறப்புப் பட்டம் பெற்றாா். தொல்லியல், கல்வெட்டியல், சுவடியியல் ஆகிய துறைகள் நம் தொன்மை வரலாற்றை அறிய உதவும் ஆவணங்கள் ஆகும். பண்டைய இலக்கியங்கள் சுவடிவழியாகவே பெறப்பட்டன என்பதை அறிதரோடு சுவடியியல்துறைக்கு இவா் ஆற்றிய தொண்டினை மறக்க இயலாது.

**முனைவா் குடவாயில் பாலசுப்ரமணியன்**

தஞ்சாவூா் நாயக்கா் வரலாறு, சோழ மண்டலத்து வரலாற்று நாயகா்களின் சிற்பங்களும் ஓவியங்களும் போன்ற நூல்களை இயற்றிய இவா் சோழ மண்டல வரலாற்றை இன்றைய தலைமுறையினருக்கு கூறவல்லவா்.

குறிப்பு

**சரித்திரச் செம்மல் ச. கிருஷ்ணமூர்த்தி**

சரித்திரச் செம்மல் ச. கிருஷ்ணமூர்த்தி செய்யாறு அருகேயுள்ள விலாரிப்பட்டு என்ற சிற்றூரில் 04-04-1949இல் பிறந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் எம்.ஏ. தமிழும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. வரலாறும் முடித்துள்ளார். பி.எட். பட்டமும், கல்வெட்டியலில் முதுகலை பட்டயமும் பெற்றுள்ளார். கடந்த 23 ஆண்டுகளாகத் தொல்லியல் துறையில் தொல்லியல் அலுவலராகப் பணியாற்றி வருகிறார். தஞ்சையில் இவர் பணியாற்றியபோது ஆயிரத்திற்கு மேற்பட்ட ஓலைச்சுவடிகளை அரசிற்காகச் சேகரித்துடன் அச்சில் வராத சுவடிகளை நகல் செய்துள்ளார். 'திருக்குறள் பழைய உரை', 'மதிகெட்டான் நாடகம்', 'சிவகீதை', 'புடைமருதூர் மரபு', 'பிள்ளையார்கதை' ஆகிய நூல்களை இவர் பதிப்பித்துள்ளார்.

இதுவரை 20 புத்தகங்களை எழுதியுள்ள இவ்வாசிரியருக்குச் சிறந்த நூலாசிரியர் விருதினைத் தமிழக அரசு இரண்டுமுறை வழங்கியுள்ளது. நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். தமிழகத்தில் உள்ள தொன்மை வாய்ந்த மடங்களை ஆய்வு செய்துள்ள இவர், திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ள செப்பேடுகளை விரிவாக ஆராய்ந்து நூல் எழுதியுள்ளார்.

திருவாவடுதுறை ஆதீனம் 11-02-2001 அன்று இவருக்குச் 'சரித்திரச் செம்மல்' என்ற விருதினை வழங்கிப் பாராட்டியது. தருமபுரி மாவட்டத்தில் பெருகற்கால ஓவியங்கள் பலவற்றைக் கண்டுபிடித்துள்ள இவர். மௌரியர் காலத்து அச்சுக் குத்தப்பட்ட வெள்ளிக்காசுகளை அரசிற்காகச் சேகரித்துள்ளார். மாளிகைமேடு, திருக்கோயிலூர், சேந்தமங்கலம் அகழாய்வுகளில் பங்குபெற்ற இவ்வாசிரியர் எண்ணற்ற நடுகற்களை நேரில் பார்வையிட்டுள்ளதுடன் நடுகற்கள் தொடர்பாக ஆய்வு செய்து வருகிறார். கல்வெட்டறிஞர் சி. கோவிந்தராசனார் கரந்தைச் செப்பேட்டுத் தொகுதி வெளிவரக் காரணமானவர். பல நூல்களை எழுதிய நாகசாமி, சாசன தமிழ்ச் சரிதம் எழுதிய ஆ. வேலுப்பிள்ளை, ஜே. தர்மராஜ், கலைக்கோவன், மு. நளினி போன்ற ஆய்வாளர்கள் பலரின் பணிகள் நம்மால் அறியப்பட வேண்டும்.

**கண்டறியப் பெற்ற கல்வெட்டுக்கள்**

தமிழ்நாட்டில் கல்மேல் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் ஏறக்குறைய கிறித்துவுக்கு முன் இருநூற்றாண்டுக்கு முன்பு தொடங்கி அண்மைக்காலம் வரை காணப்படுகின்றன. இவற்றோடு செப்புத் தகட்டில் எழுதும் வழக்கமும் ஆறாம் நூற்றாண்டு முதல் இருந்து வந்துள்ளது. ஆறாம் நூற்றாண்டு வரை கல்வெட்டுக்கள் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளன. மேலும் அவை ஓரிரு வரிகள் கொண்டவையாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன. 550க்குப்

குறிப்பு

பின் வட தமிழ்நாட்டில் பல்லவப் அரசும், தெற்கே பாண்டியா் அரசும் வளர்ந்த போது கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் எண்ணிக்கையிலும் வகையிலும் வளர்ந்தன. அதற்குப்பின் சோழர் ஆட்சிக் காலத்தில், 10-13ஆம் நூற்றாண்டுகளில் கல்வெட்டுக்களின் எண்ணிக்கை உலகில் வேறு எங்கும் எப்பொழுதும் கண்டிராத அளவுக்கு உயர்ந்தது. 13ஆம் நூற்றாண்டுக்குப் பின் அவற்றின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்தது. விஜயநகர அரசாட்சிக் காலத்தில் செப்பேடுகள் ஏராளமாக வெளியாயின என்பதைக் குறிப்பிட வேண்டும். தமிழ்நாட்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் எண்ணிக்கையைக் கீழ்க்காணும் அட்டவணை காட்டும்.

| **காலம்** | **அரசு** | **கல்வெட்டுக்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 550-850 | பல்லவர் | 400 |
| 550-850 | பாண்டியர் | 300 |
| 550-850 | பிற | 300 |
| 850-985 | சோழர் | 2000 |
| 985-1300 | சோழர் | 9000 |
| 985-1300 | பாண்டியரும் பிற அரசுகளும் | 7000 |
| 1300-1600 | பாண்டியர், சம்புவரயர் முதலியோர் | 1000 |
| 1300-1600 | விஜயநகர அரசு | 3500 |
| 1600-1900 | நாயக்கர், மராட்டியர் சேதுபதி பிற குறுநில அரசுகள் | 2500 |
| | **மொத்தம்** | **26000** |

மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிக் கல்வெட்டுகளின் செய்திகள் பாடமாக இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டியல் பிரிவு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, கன்னட மாநில அரசு தொல்லியல் துறை, திருமலை-திருப்பதி தேவஸ்தானம், புதுக்கோட்டை, சமஸ்தானம், திருவாங்கூர், கொச்சி சமஸ்தானம், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்கள் மூலம் வெளியாகியுள்ளன.

குறிப்பு

## கூறு 8: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. தமிழ் பிராமி கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப் பெற்ற இடங்கள் சிலவற்றைக் குறிப்பிடு.

மாங்குளம், கீழவலவு, மறுகால்தலை, ஆனைமலை, அரிட்டாப்பட்டி

2. பிராமி கல்வெட்டுக்கள் அனைத்தும் தமிழ் என்று கூறியவர் யார்?

கே.வி. சுப்பிரமணியன்

3. அசோகரின் கல்வெட்டுகளைப் படித்து பொருள் கூறியவர் யார்?

ஜேம்ஸ் பிரின்சப்

4. தென்னிந்திய கல்வெட்டறிஞர்கள் சிலரைக் குறிப்பிடுக.

கோபிநாதராவ், வெங்கையா, ஐராவதம் மகாதேவன், தி.வை. சதாசிவ பண்டாரத்தார், மயிலை சீனி வேங்கடசாமி.

5. சிந்துவெளி எழுத்துக்கள் பற்றி ஆராய்ந்தவர் யார்?

ஐராவதம் மகாதேவன்

### II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)

6. தென்னகத்தில் கல்வெட்டு ஆராயச்சியில் ஈடுபட்ட மேலை நாட்டார் பணிகளை விவரி?

(உல்சு துரைமகனார் முதல் கெய்த் வரையிலான செய்திகளை விளக்கி எழுதுக.)

7. தமிழறிஞர்களில் ‘கல்வெட்டாய்வில்’ தலைசிறந்தவர்களை பற்றி விளக்குக.

(கோபிநாதராவ் தொடங்கி கிருஷ்ணமூர்த்தி வரையிலான செய்திகளை சுருக்கி எழுதுக.)

### III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)

8. தென்னிந்திய கல்வெட்டாய்வின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

(மேலை நாட்டார், தமிழக வரலாற்றறிஞர் பணிகளை விளக்கி எழுதுக.)

குறிப்பு

## பிரிவு – III காலம்

### கூறு 9: கல்வெட்டுகளின் கால கணிப்பு

பல்வேறு ஆண்டு முறைகள் தமிழிலும், இந்தியாவின் பிற இடங்களிலும் இருந்தாலும் இன்றைய காலத்தில் கி.பி. கி.மு. எனும் வழக்காற்றில் மட்டுமே புரிய வைக்க முடிகிறது. கல்வெட்டுகளில் சக சகாப்தம், கலி சகாப்தம், கொல்லம் ஆண்டு, விக்ரம சகாப்தம், குப்த சகாப்தம், சாளுக்கிய விக்கிரம ஆண்டு, யாண்டு போன்ற சகாப்தங்கள் இடம் பெறுகின்றன.

தமிழகக் கல்வெட்டுகளில் சகசகாப்தம் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சக சகாப்தம் கி.மு. 78ல் ஆரம்பமாகிறது. இந்தச் சக ஆண்டோடு 78-னைக் இணைத்து கணக்கிட்டால் கி.பி. ஆண்டு கிடைத்து விடும். சக சகாப்தம் இரண்டாம் புலிகேசியின் காலம் முதல் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தமிழ்க் கல்வெட்டுகளில் நாயக்கர் காலம் வரை சக ஆண்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

பாண்டியரும், பிற்காலச் சோழர்களும் யாண்டு என்ற முறையைக் கையாண்டுள்ளனர். மன்னர்கள் அரியணையேறிய ஆண்டு யாண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகள் தரப்பட்டிருந்தால் ஒன்றினை மற்றொன்றுடன் கூட்டி வரும் தொகையைத் தானம் அறிவித்த ஆண்டாகக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

தமிழகத்தின் தென்பகுதி மற்றும் கேரளாவில் கொல்லம் ஆண்டு கடைபிடிக்கப்பட்டுள்ளது. கி.பி. 822-ல் நிகழ்ந்த கடல் கோளால் பழைய கொல்லம் அழிந்தது என்றும் கி.பி. 825-ல் புதிய கொல்லம் உருவானது என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. ஆகையால் கல்வெட்டுகளில் உள்ள கொல்லம் ஆண்டுடன் 825-னைக் கூட்டினால் கல்வெட்டின் காலம் அறியப்படும்.

இவை தவிர விக்கிரம ஆண்டு என்பது கி.மு.57 முதல் கணக்கிடப் பெறுகிறது. இது ‘சம்வத்சாராமா’ அப்த ஆண்டு என்றும் கூறப்படுகிழறது. வியாழ வட்டம் எனும் கேரள மேற்கு கடற்கரைப் பகுதி கல்வெட்டுகள் தெரிவிக்கும் காலம் வியாழன் கோள் ஒவ்வொரு ராசியிலும் தங்குவதை வைத்துக் கணக்கிடப்பட்ட முறையாகும்.

சூரியக் கிரகணத்தைப் பற்றிய குறிப்பை வைத்து அக்காலத்தில் எந்த மன்னனின் ஆட்சி நடைபெற்றது என்பதைக் கண்டறிந்துள்ளனர். எனவே, வானவியல் அடிப்படையில் சிறந்த அறிவுடையோர் பலர் இருந்ததை அறிய முடிகிறது. இவை தவிர கற்களால் உருவாக்கப் பெற்ற கோயில்களில் உள்ள நவகிரகங்களும், சூரிய,

சந்திர வழிபாடுகளும், நவகிரக ஸ்தலங்களும், இராசி பற்றிய புடைப்புச் சிற்பங்களும், வான சாஸ்திரம் வல்ல பலரின் அறிவாற்றலை வியப்போடு காணவேண்டி உள்ளது.



**கி.பிக்கு மாற்ற (கூட்டல்)**

| | | |
|---|---|---|
| சாலிவாகன (சகம்) ஆண்டு | - | + 78 |
| பசலி | - | + 590 |
| கொல்லம் | - | + 824 |
| ஹிஜ்ரி | - | + 579 |
| போஜ | - | + 50 |
| ஸ்ரீ இராமானுஜர் | | + 1011 |
| ராமதேவ் | - | + 56 |
| கிருஷ்ணராய ஆண்டு | | + 491 |
| பிரதாப ருத்ச | | + 491 |

**கி.பிக்கு மாற்ற (கழித்தல்)**

| | | |
|---|---|---|
| கலியப்தம் | - | -3101 |
| விக்கிரம | - | -57 |

## கூறு 9: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. கல்வெட்டுகளில் காணலாகும் ஆண்டு முறைகளைக் குறிப்பிடு

1. சக ஆண்டு, 2. கலி சகாப்தம், 3. கொல்லம் ஆண்டு, 4. விக்கிரம சகாப்தம் போன்றன.

2. 'கொல்லம்' ஆண்டு எங்கு பயன்படுத்தப் பெற்றது?

கேரளா

3. கொல்லம் ஆண்டை கி.பி.யில் காண என்ன செய்ய வேண்டும்?

குறிக்கப் பெற்ற கொல்லம் ஆண்டோடு + 824 சேர்க்க வேண்டும்.

### II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)

4. ஆண்டுகளை கி.பி. – கி.மு. – வில் அறிய என்ன செய்ய வேண்டும்?

(கி.பி., கி.மு., விற்கு மாற்ற கொடுக்கப் பெற்ற கூட்டல் கழித்தல் முறையை எழுதுக.)

### III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)

5. கல்வெட்டுகளால் அறியலாகும் காலம் குறித்த செய்திகளை விவரி?

(இத்தலைப்பில் உள்ள அனைத்து செய்திகளையும் எழுதுக.)

## கூறு 10: எழுத்துக்களின் தோற்றம்

மனிதன் தன் கருத்துக்களைத் தெரிவிக்கவும் அவன் அறிவில் தோன்றிய வளர்ச்சியைக் காட்டவும், பயன்படுத்திய ஓர் உருவ அமைப்பே

குறிப்பு

எழுத்தாகும். தொடக்க காலத்தில் எழுத்துக்கள் சித்திரங்களாகவும் கருத்துக்களை உள்ளடக்கியதாகவும், ஒலியாகவும் உருவாக்கப்ப பெற்றன. தொல்பழங்கால மனிதன் தன் உணர்வைப் பிறர்க்குக் காட்டச் சித்திரங்களைக் (ஓவியங்களை) குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வரைந்தான். சித்திர எழுத்துக்கள் *(Pictography)* எனும் இம்முறை வளர்ச்சிபெற்று கருத்தெழுத்தாக *(ideograms)* தோன்றின. பின்னர் காலப்போக்கில் ஒலி எழுத்துக்கள் கருத்தெழுத்துக்கள் நிலைகளிலிருந்து உண்டான வளர்ச்சியே ஒலி எழுத்து. இவ்ஒலி எழுத்துக்கள் தோன்றிய பின்னரே நிலையான எழுத்துக்கள் எழுதப்பட்டன.

எழுத்துத் தோற்றத்தில் இத்தகைய வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தமிழர்கள் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே கண்டறிந்துள்ளனர் என்பதைத் தமிழிலக்கண நூலான யாப்பருங்கலத்துக்கு உரை எழுதிய ஆசிரியர் அதன் இறுதிச் சூத்திரத்துக்கு விளக்கம் கூறுகையில் கீழ்வரும் பாடல்களை மேற்கோள் காட்டியுள்ளதன் மூலமாக அறிய முடிகிறது.

**‘உருவே உணர்வே ஒலியே தன்மையென**
**இருவகை யெழுத்தும் ஈரிரண்டாகும்’**

எழுத்தாவது நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பதை உரு, உணர்வு, ஒலி, தன்மை என்று சுட்டுகிறது. ஓவ்வொரு வகை எழுத்துக்கும் விளக்கமான பாடல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

‘காணப்பட்ட உருவம் எல்லாம்
மாணக்காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப்படுவது உருவெழுத்தாகும்’

உருவ எழுத்து எவ்வாறு எழுதப்பட்டது என்பதை மேற்கண்ட பாடல் புலப்படுத்துகிறது. உணர்வு, ஒலி, தன்மை எழுத்துக்கான விளக்கப் பாடல்களும் கீழ்வருமாறு காணப்படுகிறது.

‘கொண்டவோர் குறியால் கொண்டவதனை
உண்டென்று ணர்த்துவது உணர்வெழுத்தாகும்’.
‘இசைப்படு புள்ளின் எழா அல் போலச்
செவிப்புல னாவது ஒலியெழுத்தாகும்’

‘முதற் காரணமும் துணைக் காரணமும்
துணைக் காரணத்தொடு தொடரிய வுணர்வும்
அவற்றொடு புணர்ந்த வகத்தெழு வளியின்

மிடற்றுப் பிறந்திசைப்பது தன்மை யெழுத்து’

நன்னூலுக்கு எழுதப் பெற்ற மயிலைநாதா் உரையிலும் எழுத்தின் வளா்ச்சிக்குச் சில சூத்திரங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இச்சூத்திரங்கள் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவாமிநாத தேசிகரால் எழுதப் பெற்ற இலக்கணத்துக்குக் கூறப்பெற்றுள்ள உரையின் பாயிரத்திலும் காணப்படுகின்றன. அச்சூத்திரங்கள் கீழ் வருமாறு,

குறிப்பு

**‘வடிவு பெயர் தன்மையுண் முடிவு நான்கா**
**நடைபெறு நாவலா் நாடிய வெழுத்தே’**

வடிவு, பெயர், தன்மை, (உண்) முடிவு என நால்வகை எழுத்துக்கள் வழங்கின என்பதை இச்சூத்திரம் தெரிவிக்கிறது. மேலும் ஒவ்வொரு வகை எழுத்தையும் விளக்கும் வண்ணம் கீழ்வரும் சூத்திரங்கள் தரப்பட்டுள்ளன.

‘கட்புலனில்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல வொலியை
உட்கொளற்கிடும் உருபாம் வடிவெழுத்தே’
‘வடிவு முதன் மும்மையின் வழங்கும் எழுத்திற்
படுபல பகுதிக் கிடுபெயர் பெயரே’
‘தான முயற்சி தரக்கொளச் செவிப்புலன்
ஆயவொலி தன்மை யெழுத்தாகும்மே’
‘உருவமுடன் மும்மையோ டொன்றிய வியல்பை
மருவவுளன் துணிவ துண்முடிவெழுத்தே’

கி.பி. 8ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் தமிழ் நிகண்டு திவாகரம்

‘பெயர் எழுத்து முடிவெழுத்து வடிவெழுத்துத் தன்மை
எழுத்தென வெழுத்தின் பெயர் இயம்பினாரே’

என்று எழுத்துக்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறது.

மற்றொரு நிகண்டான பிங்கலந்தை ‘வடிவு, பெயர், தன்மை, முடிவு நான்கெழுத்து’ என்று கூறுகிறது. இந்நிகண்டுகள் மேற்கூறப்பட்ட எழுத்தின் நான்கு கட்ட வளர்ச்சியைத் தான் தெரிவிக்கின்றன.

கிறித்து அப்தத்துக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பும், சில நூற்றாண்டுகளுக்குப் பின்பும் இந்தியாவில் வழக்கில் இருந்த எழுத்துக்களைப் பற்றி கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமவயங்க சுத்த என்ற சமண நூலும், கி.பி. 3ஆம் நூற்றாண்டினது எனக் கருதப்படும் லலிதவிஸ்தர என்ற பௌத்த நூலும் குறிப்பிடுகின்றன. சமண நூலில் 18 வகையான எழுத்துக்களும், பௌத்த நூலில் 64 வகையான எழுத்துக்களும் தரப்பட்டடுள்ளன.

எழுத்தில் ஏற்பட்ட நான்கு கட்ட வளர்ச்சியைத் தெரிவிக்கும் சூத்திரங்களையடுத்து யாப்பருங்கலவிருத்தியில் பின்வருமாறு காணப்படுகின்றது.

‘(மகடூஉ, ஆ, பிடி, குமரி, கன்னி, பிணவு, முடுவன், என்றின்ன சிலவெழுத்தும்) அ க ச ட த ப ய முதலிய வாயவெழுத்தும், அ ச ல வ ர ங ய முதலிய இராசியெழுத்தும், கார்த்திகை முதலிய நாளெழுத்தும், தோப முதலிய நால்வகை எழுத்தும், சாதி முதலிய தன்மையெழுத்தும், உச்சாடன முதலிய உக்கிரவெழுத்தும், சித்திரகாருடம் முதலிய முத்திறவெழுத்தும், பாகியல் முதலிய நால்வகையெழுத்தும், புத்தேள் முதலிய நாற்கதியெழுத்தும், தாது முதலிய வொளியெழுத்தும், மாகமடையம் முதலிய சங்கேதவெழுத்தும், கலி முதலிய சங்கேதவெழுத்தும், பார்ப்பான் வழக்காகிய பதின்மூன்றெழுத்தும் என்று இத்தொடக்கத்தனவும், கட்டுரையெழுத்தும், வச்சிர முதலிய வடிவெழுத்தும் மற்றும் பல வகையாற் காட்டப்பட்ட எல்லா எழுத்தும் வல்லார்வாய்க் கேட்க” என்பதாகக் காணப்படுகிறது. இதில் பதினைந்து வகையான எழுத்துக்கள் குறிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட எழுத்துக்களுக்கு இன்னமும் முழுமையான விளக்கம் யாராலும் தரப்படவில்லை. தி. நா. சுப்பிரமணியம் அவர்கள் 1935ஆம் ஆண்டில், தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் சித்திர எழுத்துக்கள் *(The Pictographs in Tamil Literature)* என்னும் கட்டுரையில் இவைபற்றி எழுதியுள்ளார். மேலும் தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் பாகம்-3 பகுதி-2ல் சில சித்திர எழுத்துக்களை, மேற்கண்ட சமண, பௌத்த நூல்களில் தரப்பட்டுள்ள சில எழுத்துக்களோடு ஒப்பிட்டுக் கீழ்க்காணுமாறு விளக்கியுள்ளார்.

**ஆயவெழுத்து**

ஆயம் என்றால் வருமானம், இலாபம் முதலான பொருள்களைத் தரும். கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் இச்சொல் வரிகள், நுழைவு வரி மற்றும் சுங்க வரியைக் குறிப்பதற்குக் கையாளப்பட்டுள்ளது. சமண நூலில் ‘ஆயஸ’ அல்லது ‘ஆதம்ஸ’ எழுத்து என்று ஒன்று குறிக்கப்படுகிறது. ‘ஆதம்ஸ’ என்ற சொல் சில இடங்களில் ‘பொறித்த’ என்னும் பொருளில் வழங்கப்பட்டிருக்கிறது. ‘அய’ என்றால் இரும்பு என்று பொருள். ஆதலால் இரும்பால் பொறிக்கப்பட்ட எழுத்து என்று பொருள் கொள்ளலாம். தமிழில் வழங்கப்பட்ட ‘ஆயம்’ என்ற எழுத்தும், ‘ஆயஸ்’ எழுத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகக் காணப்படுகிறது.

**இராசியெழுத்து**

‘ராசி’ என்னும் சொல் இராசி மண்டலத்தையும் குறிக்கும். இராசியையும், நட்சத்திரத்தையும் குறிக்க, வான இயலும், சோதிட இயலும் சிற்சில உருவங்களைக் குறிப்பது நமக்கும் தெரியும். பண்டைக் காலத்திலேயே மேற்கூறப்பட்ட இரு இயல்களும் மிகுந்த முன்னேற்ற நிலையில் வளர்ச்சி பெற்றிருந்தன. இத்தகைய வளர்ச்சி சில குறியீடுகளையும் படங்களையும் பயன்படுத்துவதற்குக் காரணமாக

அமைந்திருக்கும். ஆதலால் இத்தகைய படங்களோ அல்லது குறியீடுகளோதான் ‘இராசி எழுத்து’ என வழங்கப் பெற்றிருக்கும்.

குறிப்பு

**நாள் எழுத்து**

நாள் என்னும் சொல் ஒரு பகல், ஓர் இரவு சேர்ந்த நாளைக் குறிக்கும். முற்காலத்தில் இச்சொல் நட்சத்திரத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது நட்சத்திரத்தைக் குறித்த நாள் என்னும் சொல்லையே மக்கள் ஒரு பகல் ஓர் இரவைக் குறிக்கப் பயன்படுத்தியிருப்பர் எனத் தெரிகிறது. தமிழகத்தில் வழங்கப்பெறும் ‘நாள் என்ன செய்யும் கோள் என்ன செய்யும்’ என்ற பழமொழி மூலம் நாள் என்பது நட்சத்திரத்தையும், கோள் என்பது இராசியையும் குறிப்பதாக இதன்மூலம் உணரலாம். ஆதலால் நட்சத்திரம் போன்ற உருவம் எழுத்தைக் குறிக்கப் பயன்பட்டதையே ‘நாள்எழுத்து’ என்று வழங்கியிருக்கின்றனர்.

மேற்கூறப் பெற்ற எழுத்துக்கள் எவ்வாறு வரையப் பெற்றிருக்கலாம் என்பதற்குச் சான்றாக மொகஞ்சதாரோவிலும், ஹரப்பாவிலும் கண்டெடுக்கப்பட்டுள்ள உருவ எழுத்தக்களைக் குறிப்பிடலாம். அத்தகைய உருவ எழுத்துக்கள் குஜராத் மாநிலத்திலுள்ள லோத்தல், துவாரகா போன்ற இடங்களிலிருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**ஓவியத்தில் காணப்பெறும் உருவ எழுத்து**

தமிழகத்தில் முதன் முதலாக இத்தகைய உருவ எழுத்துக்கள் விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், கீழ்வாலை என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பண்டைய ஓவியத்தில் காணப்படுகின்றன. இதில் ஐந்து எழுத்துக்கள் உள்ளன. முதல் எழுத்து தென்னங்கீற்று போன்றும், இரண்டாம் எழுத்து மத்தளம் போன்றும், மூன்றாம் எழுத்து சீப்பு போன்றும், நான்காம் எழுத்து மத்தளம் போன்றும், ஐந்தாம் எழுத்து நான்கு குறுக்குக் கால்களையுடைய சக்கரம் போன்றும் எழுதப்பட்டுள்ளன. இவ்வெழுத்துக்கள் இங்குள்ள ஓவியங்களை வரைந்தவனின் பெயராக இருக்கலாம் என்றும், கி.மு. 1000 லிருந்து கி.மு. 500 ஆண்டுகட்கு உட்பட்டதாக இருக்கலாம் என்றும் பி.எல்.சாமி குறிப்பிட்டுள்ளார்.

**பானை ஓடுகளில் காணப்பெறும் உருவ எழுத்துக்கள்**

தமிழகத்தின் எந்தப் பகுதியில் அகழாய்வு நடத்தப் பெற்றாலும் அங்கெல்லாம் கருப்பு-சிவப்பு *(Black and Red ware)* பானைகளோடு சில உருவங்கள் வரையப்பெற்ற பானை ஓடுகள் பெரும்பாலும் பெருங்கற்காலப் பொருட்களோடேயே கிடைத்து வருகின்றன. ஆதலால் பெருங்கற்கால மக்கள் இவற்றை எழுதியிருக்கின்றனர் என்று உறுதியாகக் கூறலாம். இவ்வுருவங்களும், உருவ எழுத்தின் *(pictograph)* தொடர்ச்சியே என்று கருதலாம். இக்காலக்

குறிப்பு

கட்டத்தில் இவ்வெழுத்துக்கள் ஒலி வடிவம் *(Phonograph)* பெற்று வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால் அதை நாம் அறிய முடியவில்லை. பானை ஓடுகளில் கிடைக்கும் இவ்வுருவங்களை மொஹஞ்சதாரோ, ஹரப்பா உருவ எழுத்தோடு ஒப்பிட்டு ஓர் ஆய்வைத் தொல்லியல் வல்லுநர் பி.பி.லால் மேற்கொண்டார். அவ்வாய்வின் மூலம் பானை ஓடுகளில் அதுவரை காணப்பெற்ற 61 உருவங்களில் 47 உருவங்கள் மொகஞ்சதாரோ, ஹரப்பா கால உருவ எழுத்துக்கள் போன்றே காணப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை சேகரித்து வைத்திருந்த பானை ஓடு ஒன்றின் மீது இருந்த உருவத்தைப் பார்த்துவிட்டு அது ஹரப்பன் கால உருவம் மாதிரியே இருப்பது அறிந்து பெரிதும் வியப்புத் தெரிவித்தார் அஸ்கோ பர்போலோ என்னும் பின்லாந்து நாட்டு அறிஞர்.

**பண்டைத் தமிழ் எழுத்துக்களோடு காணப்பெறும் உருவங்கள்**

எழுத்துக்களின் வடிவம் இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்றும், இந்த ஒலியைத் தான் குறிக்கிறது என்றும் வரையறுக்கப்பட்ட பின்பு தான் இலக்கியங்களும், இலக்கணங்களும் எழுதப்படலாயின. தமிழ் மொழியின் மிகப் பழைய இலக்கண நூலான தொல்காப்பியம், எழுத்தைப் பற்றிக் கூறுகையில்,

**எழுத்து எனப்படுப,**
**அகரம் முதல்**
**னகர இறுவாய் முப்ப.்.து என்ப**

என்று தெரிவிக்கிறது. தொல்காப்பியர் காலத்தில், எழுத்துக்கள் மிகவும் வளர்ச்சி பெற்ற நிலையில் வரையறுக்கப்பட்ட நிலையில், இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது.

நன்னூலில், 'தொல்லை வடிவின எல்லா எழுத்தும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறெனில் தொல்காப்பியம் நன்னூல் காலங்களுக்கு முன்பேயே இவ்வரையறுக்கப்பட்ட நிலை எழுத்து *(Standard Script)* ஏற்பட்டுவிட்டது என்று உணரலாம்.

வரையறுக்கப்பட்ட நிலை எழுத்து ஏற்பட்டதும் இவ்வெழுத்துக்களை இருவகையாகப் பிரித்துள்ளனர் மொழி அறிஞர்கள். அவை (1) அகர வகை எழுத்துக்கள் (2) உயிர்மெய் வகை எழுத்துக்கள் என்ற இரு வகையாகும். அகர வகை எழுத்துக்கள் என்பது மெய்எழுத்துக்குப் பக்கத்தில் உயிர் எழுத்தைத் தனியான எழுதுவது. இவ்வெழுத்து ஆங்கில எழுத்து வகையைச் சாரும். ஆங்கில எழுத்தில் உயிர் மெய்யான 'க' என்பதைக் காட்டுவதற்கு கே+ஏ (K+A) என்று எழுதப்படுகிறது. இதில் கே என்ற மெய்யும், ஏ என்ற உயிரும் உள்ளன. உயிர்மெய் வகை எழுத்துக்கள் என்பது, உயிர்மெய் எழுத்தை மெய் எழுத்து, உயிர் எழுத்து என்று தனித்தனியாக எழுதாமல் உயிர் ஏறிய மெய்யாக, ஒரே எழுத்தாக எழுதுவது, தமிழ் எழுத்து உயிர்மெய் வகை எழுத்தைச் சேர்ந்தது. 'க' என்று எழுதுவதற்கு க்+அ என்று எழுதாமல் உயிர் மெய் மெய்யாக 'க' என்று எழுதுவது ஆகும்.

தமிழ்நாட்டில் காணப்பெறும் குகைக் கல்வெட்டுக்களில் மிகப் பழமையாக உள்ளவற்றில் அகர வகை எழுத்துக்களைக் காணமுடிகிறது. நாளாக நாளாக உயிர்மெய், வகை எழுத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இதைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் எழுத்து வளர்ச்சியில் தன்மை எழுத்துக்கு அடுத்த கட்ட வளர்ச்சியாக அகர வகை எழுத்துக்களும், பின்னர் உயிர்மெய் வகை எழுத்துக்களும் வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது.

இந்தியாவில் கி.மு. 3-2நூற்றாண்டுகளில் பதினெட்டு வகை எழுத்துக்கள் வழக்கில் இருந்தன என்பதை ‘சமவயங்கசுத்த’ மற்றும் ‘பண்ணாவனசுத்த’ என்னும் சமண நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. இந்நூல்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருக்கின்றன. புத்தமத நூல்களான ‘மஹாவஸ்து’ 30 வகை எழுத்துக்களையும் ‘லலிதவிஸ்தரம்’ 64 வகை எழுத்துக்களையும் தெரிவிக்கின்றன. இவ்விரு நூல்களின் காலத்தைச் சரியாகக்கூற முடியவில்லை. ஆயினும் லலிதவிஸ்தரம் சீன மொழியில் கி.பி.308இல் மொழிமாற்றம் செய்யப் பெற்றிருப்பதால் சீன நூலுக்கு ஓரிரு நூற்றாண்டுகள் முன்னதாக லலிதவிஸ்தரம் எழுதப் பெற்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

**பண்டைத் தமிழ் எழுத்து**

தமிழகத்தில் மிகப் பழமையானது என்று கருதப்படும் எழுத்து ‘தமிழ் எழுத்து’ ஆகும். இவை ‘பிராமி’ எழுத்தென்றும், ‘தென்னிந்திய பிராமி’ எழுத்து என்றும் ஆராய்ச்சியாளர்கள் இதுவரை வழங்கி வந்தனர். நாம் இவ்வெழுத்தை நம் வசதிக்காகப் ‘பண்டைத் தமிழ் எழுத்து’ *(Archaic Tamil Script)* என்று கூறுவோம். இவ்வெழுத்து கி.மு.3-2ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் வழங்கி வந்திருக்கிறது என்று அண்மைக்காலம் வரை கருதப்பட்டது. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பூலாங்குறிச்சி கல்வெட்டால் தமிழ் எழுத்தின் பழமை மேலும் ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே இருத்தல் வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது. பூலாங்குறிச்சி கல்வெட்டின் காலம், அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு சக ஆண்டு என்று கொண்டு (192+78 = 270) கி.பி. 270 என்று முடிவு செய்துள்ளார் முனைவர் நாகசாமி. அதிலுள்ள எழுத்தமைதியின் காலம் கி.பி. 3ஆம் நூற்றாண்டெனில், அறச்சலூர்க் கல்வெட்டின் காலத்தை இன்னும் சிறிது முன்னுக்குக் கொண்டு செல்லப்படுதல் வேண்டும். அறச்சலூர் கல்வெட்டு கி.பி. 1-2ஆம் நூற்றாண்டென்றால் புகழியூர் கல்வெட்டின் காலத்தை கி.மு. 2 முதல் கி.மு. 1ஆம் நூற்றாண்டு எனக் கூறுதல் வேண்டும்.

அவ்வாறாயின் சேர அரசர்களின் பரம்பரையை கி.மு. 2-1ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கொள்ளல் வேண்டும். இந்த முடிவு முற்காலக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் எழுத்துக்களின் தன்மைக்கும் ஒற்றுமையாகக் காணப்படுகிறது.

குறிப்பு

தமிழகத்தில் காணப்பெறும் பழந்தமிழ்க் கல்வெட்டுக்களை இரண்டு வகையாகப் பிரித்துள்ளார். ஐராவதம் மகாதேவன் அவர்கள், முதல் வகையில் புள்ளியில்லா மெய் வடிவு, மெய்யை மட்டும் குறிக்கும்; அகரம் ஏறிய மெய்யைக் குறிக்காது. அகரம் ஏறிய மெய்யைக் குறிக்க ஒரு கோடு இடப்பட்டது. இக்கோடு ‘ஆ’ –காரத்தை குறிக்கவும் இடப்பட்டிருக்கிறது. இரண்டாம் வகை எழுத்தில் புள்ளியில்லா மெய்யெழுத்து, அகரம் ஏறிய மெய்யெழுத்தாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் இக்கல்வெட்டுக்களில் எகரம், ஏகாரம், ஒகரம், ஓகாரம், குறில், நெடில் பிரித்துக் காட்டுவதற்கு எவ்விதக் குறியும் இடப்படவில்லை என்றும்; இக்கல்வெட்டுக்களில் கூட்டெழுத்துக்களே காணப்படவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

இக்கல்வெட்டுக்களைப் பற்றி மேலும் ஆய்வு செய்த முனைவர் இரா.நாகசாமி அவர்கள் புகழியூர், அறச்சலூர் கல்வெட்டுக்களில் மெய்யைக் குறிக்க புள்ளியிடப்பட்டிருக்கிறது என்றும், எகர, ஒகரம் குறிக்கவும் புள்ளி இருக்கிறது என்றும் கருத்துக் தெரிவித்து இருக்கிறார். இவர் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரையிலானவையாகும். இதற்கு முந்திய காலத்தில் எழுதப்பட்டிருப்பவைகளில் மெய்யைக் குறிக்கவும், எகர, ஒகரக் குறிலைக் குறிக்கவும் புள்ளி காணப்படவில்லை. அவைகளில் அகரம் ஏறிய உயிர்மெய்யைக் குறிக்க சில இடங்களில் மெய் எழுத்துக்குப் பக்கத்தில் ‘அ’ கரத்தைத் தனியான எழுதிக் காட்டியிருக்கிறார்கள். சில இடங்களில் அகரம், ஆகாரம் ஏறிய உயிரைக் குறிக்க கோடு இடப்பட்டிருந்தாலும், மிகப் பழைய முறையான மெய்யையும், உயிரையும் தனித்தனியாக எழுதிக் காட்டும் முறையையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இம்முறை அக்கல்வெட்டுக்களின் பழைமைத் தன்மையைக் காட்டா நிற்கும். அத்தோடு இக்கல்வெட்டுக்களில் எதிலுமே கூட்டெழுத்துக்கள் காணப் பெறவில்லை என்பதும் இவ்வெழுத்துக்களின் மிகப் பழைமைத் தன்மைக்கு மற்றொரு சான்றாகக் கருதலாம்.

நன்றாக வளர்ச்சியடைந்த நிலைப்படுத்தப்பட்ட *(Standardised)* எழுத்தை அசோகனது கல்வெட்டுகளில் காண்கிறோம். அசோகனது கல்வெட்டுகளில் புள்ளியிடப்பட வேண்டிய இடங்களில் புள்ளியிட்டு எழுதப்பட்டிருக்கின்றன.

ஆனால் தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் உயிரெழுத்துக்கள் பத்துதான் எழுதப்பட்டுள்ளன. 'ஐ'காரமும், 'ஔ' காரமும் காணப்படவில்லை. தமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் 'அகரமும், இகரமும்' மற்றும் 'அகரமும் யகர ஒற்றும்' ஐகாரம் ஆகும் என்றும்; 'அகர, உகரம் 'ஔகாரம்' ஆகும் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. அதன்படி பார்க்கையில் அகரத்தையும், இகரத்தையும்; அகரத்தையும் யகர ஒற்றையும் தனித்தனியாக எழுதி அதை ஐகாரம் எனக் கொண்டார்களென்றும்; அகர, உகரத்தைத் தனித்தனியாக எழுதி அதை ஐகாரம் எனக் கொண்டார்கள் என்றும், அகரத்தையும், யகர ஒற்றையும் தனித்தனியாக எழுதி ஔகாரம் எனக் கருதினர். இந்த வகையில் பார்த்தாலும் தமிழகக் கல்வெட்டுகள் மிகவும் ஆரம்ப கட்ட நிலையிலேயே இருந்திருக்கின்றன என்று கருத வேண்டியுள்ளது.

இதுகாறும் கூறப் பெற்றவைகளைப் பார்க்கையில் திரு. டி.என். சுப்பிரமணியம் தாம் தொகுத்து வெளியிட்ட 'தென்னிந்திய கோயிற் சாசனங்கள், தொகுதி-3, பகுதி-2ல் *(South Indian Temple Inscriptions Vol. 3 Part 2)*, பிராமி எழுத்தானது திராவிட மொழிகளுக்காகவே உருவாக்கப்பட்டது என்றும், குறிப்பாக அவைகளுள் பழைமையானதான தமிழுக்காக அது தோற்றுவிக்கப்பட்டது என்றும், பின்னாளில் பிராகிருத மொழி அதனைப் பயன்படுத்திக் கொண்டது என்றும், நாளடைவில் இந்தியா பூராவும் அதுவே பழக்கத்தில் நிலவியது என்றும் கூறியுள்ள கருத்து முற்றிலும் உண்மையாகக் காணப்படுகிறது.

மௌரியப் பேரரசன் அசோகன் தமது கல்வெட்டுக்களைப் பிராகிருத மொழியிலும், பாலி மொழியிலும் எழுதியபோது இவ்வெழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறான். பின்னர் வந்த குப்தப் பேரரசர்களும் இவ்வெழுத்தையே உபயோகித்திருக்கின்றனர். அவர்களது கல்வெட்டுக்களில் இகரத்திலிருந்து 'ஈ' காரத்தை வேறுபடுத்திக் காட்ட மேலும் ஒரு புள்ளியைச் சேர்த்திருக்கிறார்கள். இம்முறை தமிழ்நாட்டில் நெடிலிலிருந்து குறிலாக்கப் பயன்படுத்திய புள்ளியிடும் முறையை ஒட்டியதாகும் என்றும்; ஆனால் அவர்கள் குறிலுக்குப் பதிலாக நெடிலுக்குப் புள்ளியிட்டிருக்கின்றனர் என்றும் அவர் கூறுவது சிந்திக்கத்தக்கது.

மெய்யைப் புள்ளியிட்டுக் காட்டுவதும், எகர, ஒகரத்துக்குப் புள்ளியிடுவதும் தொல்காப்பிய காலத்தில் நிகழ்ந்திருக்கிறது. ஆதலால்

அறச்சலூர், புகழியூர் கல்வெட்டுக்களின் காலமான கி.மு.2-முதல் கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்குள் உள்ள காலக் கட்டத்தைச் சார்ந்ததாகத் தொல்காப்பியத்தின் காலம் இருக்கலாம். மெய்யைக் குறிக்க புள்ளியிடாமல் எழுத்துக்கள் வழங்கி வந்த காலம் தொல்காப்பிய காலத்துக்கும், முந்தையது. தொல்காப்பியத்தில் பல இடங்களில் 'என்மனார் புலவர்', 'என்ப' என்ற சொற்கள் காணப்படுகின்றன. அவை தொல்காப்பியருக்கு முன்பிருந்த நிலைமையைக் குறிப்பதாகும். தொல்காப்பியர் காலத்திலேயே பழைய சில எழுத்து மரபுகள் வழக்கொழிந்துவிட்டன என்பது பெறப்படுகிறது. அக்காலக் கட்டத்தில் தான் மாங்குளம் போன்ற இடங்களில் உள்ள கல்வெட்டுக்கள் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும். ஆகவே அவை காலத்தால் முந்தையவை ஆகின்றன. ஆதலால்தான் அவை கி.மு. 5-4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாக இருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது.

அண்மையில் இலங்கை நாட்டில் உள்ள அநுராதபுரத்தில் அகழாய்வில் கிடைக்கப் பெற்ற பண்டைத் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப் பெற்ற பானையோடுகளின் காலத்தை கி. 14 என்ற அறிவியல் காலக் கணிப்பு முறையால் கி.மு. 750 எனக் கணித்துள்ளனர். இக்காலக் கணிப்பு நம் கருத்துக்கு அரண் சேர்க்கிறது. மேலும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பட்டிபுரோலுவில் கிடைத்துள்ள கல்வெட்டும் இக்கருத்திற்கு உறுதுணையாகிறது. அக்கல்வெட்டிலும் மெய்யைக் குறிக்க புள்ளியில்லை. மேலும் அகரம் ஏறிய மெய்யைக் காட்ட பக்கக்கோடு ஒன்று இட்டும், 'ஆகாரம்' ஏறிய மெய்யைக் குறிக்க பக்கக் கோட்டோடு கீழ்நோக்கிய கோடு ஒன்று இட்டும் எழுதியிருப்பது மனத்தில் கொள்ள வேண்டியதாகும். இம்முறை மாங்குளம் எனும் இடத்தில் காணப்படும் கல்வெட்டுக்களின் வளர்ச்சி பெற்ற நிலையைக் காண்பிப்பதாகக் கருதுதல் வேண்டும்.

தமிழகத்தில் பழந்தமிழ் எழுத்துப் பொறித்த கல்வெட்டுக்கள் மலைக் குகைகளில் மட்டுமல்லாமல் பானை ஓடுகள், காசுகள் ஆகியவற்றிலும் கிடைத்துள்ளன. அரிக்கமேடு, கொற்கை, உறையூர், காஞ்சிபுரம், கரூர், வல்லம், கொடுமணல், அழகன்குளம் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் பானை ஓடுகளில் இவ்வெழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்துக்கு அருகில் உள்ள ஆண்டிப்பட்டியில் கிடைத்த ஈயக் காசுகள், கரூரில் கிடைத்துள்ள சேரர்களின் செப்புக்காசுகள், பாண்டியன் 'பெருவழுதி'க்காக ஆகியவற்றில் இவ்வெழுத்து பொறிக்கப்பட்டிருக்கிறது. இது அக்காலத்தில் மக்களிடத்தில் இவ்வெழுத்து பெற்றிருந்த செல்வாக்கைப் புலப்படுத்துவதாக உள்ளது. குறிப்பிட்ட ஒரு மதத்தார்தான் இவ்வெழுத்தைப் பரப்பினர் என்ற கருத்தை உடைத்தெறிவதாக இதைக் கருதலாம். அனைத்து மக்களும் நன்குஅறிந்த ஒரு எழுத்தாக இது நிலவி வந்திருக்கிறது. அவ்வாறெனில் தொன்று தொட்டே இவ்வெழுத்துத் தமிழகத்தில் வழங்கி வந்திருத்தல் வேண்டும் என்று நாம் உறுதியாகக் கூறலாம். பானை ஓடுகளிலும், குறிப்பாகக் கருப்பு சிவப்பு

பானை ஓடுகளிலும் இவ்வெழுத்து எழுதப் பெற்றிருப்பது, இவ்வெழுத்துக்களின் பழமை கி.மு. 5-4ஆம் நூற்றாண்டு என்று கொள்வதற்கு மேலும் ஆதாரமாக அமைகிறது.

குறிப்பு

தமிழ் மொழிக்காக ஏற்படுத்தப்பட்ட இவ்வெழுத்தைப் பின்னாளில் பிராகிருத மொழி பயன்படுத்திக் கொண்டது என்னும் கருத்துக்குச் சான்றாகச் சாதவாகனர்களின் இருமொழிக் காசுகளைக் கூறலாம். அக்காசுகளில் ஒரு பக்கத்தில் தமிழ் மொழியிலும், மற்றொரு பக்கத்தில் பிராகிருத மொழியிலும் எந்த மன்னனால் அக்காசு வெளியிடப்பட்டது என்பது குறிக்கப் பெற்றிருக்கும். இரு மொழிகளிலுமுள்ள வாசகங்கள் ஒரே வகை எழுத்திலேயே எழுதப்பட்டுள்ளன.

கி.பி. 2-3ஆம் நூற்றாண்டளவில் இப்பண்டைத் தமிழ் எழுத்தின் வடிவம் மாற்றம் பெறத் தொடங்குகிறது. கல்லில் உளியாலும், துகிரிகை கொண்டு வண்ணத்திலும் எழுதி வந்த தமிழர்கள், ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதத் தொடங்கிய காரணத்தால் இவ்வடிவ மாற்றம் தொடங்கி இருக்கலாம் என்று கருதலாம். எழுத்தாணியால் ஓலையில் நேர்க்கோடுகளையும், பக்கக்கோடுகளையும் எழுதினால் ஓலை கிழிந்துவிடக்கூடிய நிலை ஏற்படும். அதைத் தவிர்க்கும் நோக்குடன் நேர்க்கோடுகளிலும், பக்கக் கோடுகளிலும் சிறு வளைவுகளைச் சேர்த்து எழுதத் தொடங்கியிருக்கின்றனர். இம்மாற்றத்தை அறச்சலூர், ஈரெட்டிமலை, பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்களில் நன்கு காண முடிகிறது. பின்னர் நாளடைவில் மேலும் மேலும் வளைவுகளைப் பெற்று ‘வட்டெழுத்து’ என்று அழைக்கின்ற அளவுக்கு மாற்றம் பெற்றுவிட்டது. முழு வட்ட வடிவம் பெற்ற தமிழ் எழுத்துக்களை கி.பி. 8-9ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் காணமுடிகிறது. வேள்விக்குடி, சீவரமங்கலம், சின்னமனூர் செப்பேடுகளில் இவ்வெழுத்தைப் பார்க்கலாம். இவ்வெழுத்து இவ்வாறு வளைவு பெற்றதால் சில எழுத்துக்களை வேறுபடுத்திப் புரிந்து கொள்ள முடியாதபடி எழுதப்பட்டிருக்கிறது. உதாரணமாகப் ப, ம, ய, வ ஆகிய எழுத்துக்கள் மிகச் சிறு வேறுபாட்டோடு எழுதப்பட்டு காணப்பெறும். அதே போன்று ண, த, ற போன்ற எழுத்துக்களிலும் அதிக வேறுபாடு காணமுடியாது. கி.பி. 17-18ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டிருக்கும் இவ்வெழுத்தைக் காணில் படிப்பதென்பது மிகவும் கடினம். காரணம் அனைத்து எழுத்துக்களும் வடிவில் ஒன்று போன்றே தோன்றும். இவ்வெழுத்து மிகப் பிற்காலம் வரை தமிழகத்தின் தென்கோடிப் பகுதியிலும், கேரளப் பகுதியிலும் வழங்கி வந்திருந்தாலும், தமிழகத்தின் மற்ற பகுதிகளில் இவ்வெழுத்து புரியாத எழுத்தாகத் தமிழக மக்களுக்கு கி.பி. 11-12ஆம் நூற்றாண்டிலேயே ஆகிவிட்டது. அதற்குக் காரணம் அப்பகுதிகளில் மற்றொரு வகை எழுத்து உருவாகத் தொடங்கியதேயாகும்.

குறிப்பு

இந்த மற்றொரு வகை எழுத்தைத்தான் தாம் இன்று தமிழ் எழுத்து என்று அழைக்கின்றோம். இவ்வெழுத்தும் கி.பி. 2ஆம் நூற்றாண்டளவிலேயே வளரத் தொடங்கினாலும், கி.பி.6-7ஆம் நூற்றாண்டில் தான் அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கப்பட்டிருக்கிறது. சிம்மவர்மனின் பள்ளங்கோயில் செப்பேட்டிலும், மகேந்திரவர்மன் காலத்திய வல்லம் குடைவரைக் கோயிற் கல்வெட்டிலும் இவ்வெழுத்தை முதன் முதலில் காண்கிறோம். பின்னர் பாண்டி நாட்டில் மலையடிக்குறிச்சியில் உள்ள சேந்தனின் கல்வெட்டில் இவ்வெழுத்தைக் காணமுடிகிறது.

பல்லவர்கள் தம் செப்புப் பட்டயங்களிலும், குடைவரை மற்றும் கட்டடக் கோயில்களிலும் சம்ஸ்கிருத மொழியை எழுத கிரந்த எழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் அவ்வாறு எழுதுவதை பெருமையாகக் கருதிய பாண்டிய மன்னர்களும் தங்கள் செப்புப் பட்டயங்களிலும், சில குடைவரை மற்றும் தனிப்பட்ட கல்வெட்டுக்களிலும் சம்ஸ்கிருத மொழியையும், கிரந்த எழுத்தையும் பயன்படுத்தியிருக்கின்றனர். உதாரணங்களாக வேள்விக்குடிச் செப்பேடு, ஆனைமலை, திருப்பரங்குன்றம் குடைவரைக்கோயில் கல்வெட்டுகள் மற்றும் வைகைக்கரைக் கல்வெட்டு ஆகியவற்றைக் காட்டலாம். கிரந்த எழுத்துக்களில் சிலவும், புதிதாக உருப்பெற்ற தமிழ் எழுத்துக்கள் சிலவும் ஒன்றுபோலவே காணப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் பாண்டிய மன்னர்கள், தங்களுக்குச் சொந்தமான வட்டெழுத்தில் காணப்பெறும் செப்பேடுகள் சிலவற்றில் சமஸ்கிருதம் பகுதியில் தமிழ்ச் சொல்லை எழுதுவதற்கு வட்டெழுத்தைப் பயன்படுத்தாமல் தமிழ் எழுத்தைப் பயன்படுத்தியிருப்பது மற்றொரு வகைத் தமிழ் எழுத்தைக் கிரந்த எழுத்து உருவாக்குவதற்குப் பயன்படுத்தியுள்ளனர் என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

இவ்வகைத் தமிழ் எழுத்து சோழர் காலத்தில் பெரும் ஆதரவைப் பெற்றது. சோழர்கள் தாங்கள் வென்ற பகுதிகளிலெல்லாம் இவ்வெழுத்தைப் பயன்படுத்த வலியுறுத்தினர். அதன் காரணமாக, முன்பு இருந்த எழுத்தான வட்டெழுத்து மறையத் தொடங்கியத. பல்லவ மன்னர்களும், சோழ மன்னர்களும் தங்கள் செப்பேடுகளில் இப்புதிய தமிழ் எழுத்தைத் தான் பயன்படுத்த வலியுறுத்தியிருக்கின்றனர். அதிலிருந்தே அவர்களின் ஒருமித்த பேராதரவு இப்புதிய தமிழ் எழுத்துக்குத்தான் கிடைத்திருக்கிறதென்பது வெளிப்படை, இவ்வெழுத்தைப் பிற்காலப் பாண்டியர்களும் பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுவிட்டது. ஏனெனில் தாங்கள் வெற்றி கண்ட சோழ நாடு, தொண்டை நாட்டுப் பகுதிகளில் இப்புதிய தமிழ் எழுத்தைத்தான் பயன்படுத்த வேண்டியதாயிற்று. காரணம், இப்பகுதி மக்கள் முற்றிலும், பழைய தமிழ் எழுத்தான வட்டெழுத்தை மறந்துவிட்டமையே ஆகும். 'புரியாத வட்டம்' ஆகையால் அவை தமிழாகப்படுத்தி எழுதப்பட்டன என்று சில கல்வெட்டுக்கள் தெரிவிப்பதிலிருந்தே கி.பி. 11-12ஆம் நூற்றாண்டளவில் வட்டெழுத்து மக்கள் புரிந்து கொள்ள முடியாத நிலையை எய்திவிட்டது என்பதை உணரலாம். ஆனாலும்

தென்பாண்டி நாட்டில் மக்கள் தங்கள் கல்வெட்டுக்களில் வட்டெழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

குறிப்பு

பிற்காலப் பாண்டியர்களுக்குப் பிறகு ஆட்சி புரிந்த விசயநகர மன்னர்களும் பல்லவர்களைப் போன்றே ஆந்திரப் பகுதியிலிருந்து வந்தவர்கள். சமஸ்கிருத மொழிகளும், கிரந்த எழுத்துக்கும் முக்கியத்துவம் தருபவர்கள். ஆதலால் இவர்களும் புதிய தமிழ் எழுத்தையே தங்கள் கல்வெட்டுக்களில் பயன்படுத்தினர். அது மட்டுமல்லாமல் மற்றவர்களைக் காட்டிலும் இவர்கள் ஒரு படி மேலே சென்று கிரந்த எழுத்தையும், புதிய தமிழ் எழுத்தையும் சேர்த்தே கல்வெட்டுக்களில் எழுதலாயினர்.

அவர்களை அடுத்து வந்த நாயக்க மன்னர்களும் இப்புதிய தமிழ் எழுத்தையே பயன்படுத்தினர். ஆதலால் இப்புதிய தமிழ் எழுத்து பொலிவோடும், வலிவோடும் தொடர்ந்து தமிழகத்தில் வழங்கி வரும் நிலை ஏற்பட்டுவிட்டது. அச்சு இயந்திரம் வந்து விட்ட இந்நாளில் இனி இவ்வெழுத்து முறையில் எந்தவித மாற்றமும் ஏற்பட வாய்ப்பில்லை. ஆதலால் இத்தமிழ் எழுத்தே இனி என்றென்றும் செங்கோலோச்சும் என்று நம்பலாம்.

## கூறு 10: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. சித்திர எழுத்தின் வளர்ச்சி எவ்வாறானது?

கருத்தெழுத்தாக உரு பெற்றது.

2. இந்திய எழுத்துக்களைக் குறிப்பிடும் நூல்கள் யாவை? அவை எத்தனை எழுத்துக்களை குறிப்பிட்டுள்ளன?

சமயங்கசுத்த }
பண்ணவசுத்த } - 18
மஹாவஸ்து - 30
லலிதவிஸ்தரம் - 64

3. பழந்தமிழ் எழுத்துக்களை ஐராவதம் மகாதேவன் எத்தனை வகையாக கூறுகிறார்?

புள்ளி இல்லா மெய் வடிவு, அகரம் ஏறிய மெய் வடிவு

4. வட்டெழுத்தை பயன்படுத்தியவர்கள் யாவர்?

பாண்டியர்

5. பிராமி எழுத்து தமிழுக்காகத் தோன்றியது என்றவர் யார்?

டி.என். சுப்பிரமணியம்

### II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)

6. தமிழ் எழுத்துக்கள் 'புள்ளி' பெற்றமையை விவரி?

(தொல்காப்பியம் கூறுவது, மெய், அகரம் ஏறிய மெய் முதலிய செய்திகள்.)

7. பிராமி வரிவடிவ மாற்றம் காணலாகும் இடங்கள் பற்றி விவரி?

குறிப்பு

(பூலாங்குறிச்சி உள்ளிட்ட இடங்களில் காணப்பெறும் எழுத்துகள் பற்றி எழுதுக.)

8. தமிழ் இலக்கண நூல்கள் எழுத்து பற்றி கூறுவன யாவை?

(தொல்காப்பியம் - யாப்பு முதலிய நூல்கள் தரும் செய்திகளை எழுதுக).

**III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)**

9. தமிழ் எழுத்துக்களின் தோற்றம் குறித்து விவரி?

(அனைத்து உள்தலைப்புகளிலும் உள்ள செய்திகளை சுருக்கி எழுதுக.)

## கூறு 11: சிந்துவெளி எழுத்துக்கள்

**தமிழ்நாட்டில் சிந்துவெளி நாகரிகம் குறியீடுகள் கிடைத்த இடங்கள்**

சாணூர், கொடுமணல், சூலூர், மாங்குடி, மோதூர், முசிரி போன்ற பெருங்கற்கால நாகரிக சின்னங்கள் கிடைக்கும் இடங்களிலும், கீழ் வாலை, மகாராஜாக் கடை போன்ற பாறை ஓவியங்கள் உள்ள இடங்களிலும், சிந்துவெளி நாகரிகக் குறியீடுகள் கிடைத்துள்ளன. புதிய தற்கால நாகரிகச் செம்பியன் கண்டியூரில் கைக்கோடரி ஒன்றில் ஹாரப்பா குறியீடுகள் காணப்படுகின்றன.

**இந்தியாவில் அகழ்வாய்வில் சிந்துவெளித் தொடர்பான இடங்கள்**

1.களிமபங்கன், 2. லோத்தல், 3. சூர்கோட்டடா, 4. பனவாளி, 5. தோலவீரா, 6. குண்டசி 7. டைமாபாத், 8. ஹீலாஸ், 9. மண்டா, 10. ராக்கி ஹார்கீ, 11. கோலதோரா.

**பாகிஸ்தானில் சிந்துவெளித் தொடர்பான இடங்கள்**

1.மொகஞ்சதாரோ, 2. ஹரப்பா, 3. சன்குதாரோ, 4. கனீவாலா, 5. சூர்கஜென்டோர் (பலுசிஸ்தானம்).

இந்தியாவில் பண்பாடுகளில் காலக்கணிப்பு – வருமாறு

பழைய கற்காலம் - 100000 ஆண்டுகளுக்கு முன்பு

நுண் கற்காலம் - 10000 ஆண்டுகளுக்கு முன்பு

புதிய கற்காலம் - 5000-3000 (கி.மு.)

செம்பு வெண்கலம் - 3000-2000 (கி.மு.)

சிந்து சமவெளி நாகரிகம் - 3000-1500 (கி.மு.)

பெருங்கற்காலத்திற்கு முந்திய காலம் - 2000-1000 (கி.மு.)

இரும்புக் காலம் - 1000-300 (கி.மு.)

(தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டு சிறப்பிதழ் – ஏப்ரல் - 06)

**ஹரப்பா – மொஹஞ்சதாரோ**

ஹரப்பாவிலும் மொஹஞ்சதாரோவிலும் கண்டுபிடிக்கப்பட்ட சிந்து சமவெளி நாகரிகம். இந்தியத் தொல்லியல் வரலாற்றில் ஓர் மாபெரும் வெற்றியாகும். 1921 மற்றும் 1922ஆம் ஆண்டுகளில் தயாராம் சாஹானி மற்றும் பானர்ஜி ஆகிய

குறிப்பு

தொல்லியல் அறிஞர்கள் சிந்துசமவெளி நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளை ஆய்ந்துள்ளனர். 1944ஆம் ஆண்டில் மேறகொள்ளப்பட்ட அகழாய்வில் இரு நகரங்களிலும் தெற்கு வடக்காக 400 கெஜ நீளமும் 200 கெஜ அகலமும் கொண்ட நீள் சதுர வடிவமான கோட்டைகள் கண்டு பிடிக்கப்பட்டன. இக்கோட்டைக்குள் பல கட்டிடங்கள் காணப்பட்டன. அவற்றுள் நீச்சல் குளம் 80 அடி சதுரங்கொண்ட மண்டபம், 230 அடி நீளமும் 78 அடி அகலமும் கொண்ட ஒரு பெரிய விடுதி போன்ற கட்டிடம், ஸ்தூபி போன்ற கட்டிடம் ஆகியன இருந்தன. ஹரப்பா பண்பாட்டின் நாகரிகப் பகுதிகளின் காலம் கார்பன் 14 அல்லது ரேடியோ கார்பன் காலக்கணிப்பு கி.மு. 2350 – கி.மு.2000த்திற்கும் இடைப்பட்ட காலம், ஹரப்பா கட்டிடங்கள் சிதைந்துள்ளன. எனினும் மொகஞ்சதாரே ஹரப்பாவை விட அளவில் சிறியது.

**முத்திரைகள்**

சிந்துசமவெளிப் பண்பாட்டுப் பகுதிகளில் ஏறத்தாழ 4000 முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் உருவங்களும் எழுத்துக்களும் உள்ளன. யானை, புலி, காட்டெருமை, காளை ஆகியவற்றின் உருவங்களும் ஸ்வஸ்திகள், சக்கரம் போன்ற உருவங்களும் உள்ளன.

**சிந்துவெளி எழுத்துக்கள்**


இவர்கள் சுமேரிய, எகிப்து நாகரிகங்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். டேல் என்பார் சுமேரிய எழுத்துக்கள் என வாதிட்டார். ஹன்டர் எகிப்திய எழுத்து என்றார். ரஷ்ய, பின்லாந்து அறிஞர்களும் இவ்வெழுத்துக்களை ஆராய்ந்து வருகின்றனர். இருப்பினும் இதுவரை சரியாகப் படிக்கப் பெறவில்லை.

**சிந்துவெளி எழுத்துக்களை ஆய்வு செய்த அறிஞர்கள்**


பிரான்ஸ், இ.எச்.ஹண்ட், ஜி.யாஜ்தானி, பி.கே. தாபர், சி.கே.ஜாட், டிகெவசி, பிலிமோனியா, சர்பிரிண்டர்ஸ் பெட்ரி, ஆலன் எஸ், சி.ராஸ், கே.என். தீட்சித், லியோனார்ட் உல்லி, கே.ஏ.என். சாஸ்திரி, சர்.ஜான்மார்ஷல், ஆர்.டி.பானர்ஜி, சுவாமி சங்கரானந்தர், ஸ்டுவர்ட், ராவ் பகதூர் தயாரம் சயானி, சுதன்சுகுமார் ராய், எஸ்.கே. கோலகோஸ்கர், பங்க பிகாரி சக்கரவர்த்தி, எஸ். இராமகிருஷ்ணன், கால்டுவெல், ஹிராஸ்பாதிரியார், மார்டிமர், வீலர், எஸ்.அஸ்கார்பர்போலா, பி.பி.லால், எஸ்.ஆர். ராவ், எ.கொண்ரோடோவ், மாக்கே, அஜாய்மித்ரா சாஸ்திரி, ஆராமுதன் பைலி, டாக்டர். பிரான்நாத், டாக்டர். வேடல், எஸ்.கோஸ், கென்னி மீராஸ், ஜி.ஆர்.ஹண்டர், எஸ்.லாங்டன், வி.நோராசோவ், சங்கர் ஹஜ்ரா, ஜி. பிக்கோலி, க.த. திருநாவுக்கரசு, இரா.மதிவாணன் முதலானோர். இந்நாகரிகம் பற்றியும் எழுத்து பற்றியும் ஆராய்ந்துள்ளனர். கிடைத்துள்ள 4000 முத்திரையில் காணப்படும் எழுத்துக்கள் எம்மொழியைச் சார்ந்தவை என உறுதியாகக் கூறமுடியவில்லை. கி.மு. 1750

குறிப்பு

அளவில் இயற்கை சீற்றத்தால் அழிந்ததாகக் கருதக்கூடிய இவ்விடத்தில் காணப்படும் குறியீடுகளும் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.



குறிப்பு




**(அ) ஆதிச்ச நல்லூர்**

திருநெல்வேலியிலிருந்து தென்கிழக்காக இருபத்தி நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் ஆதிச்சநல்லூர் உள்ளது. இங்கு ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் சாகர் என்பவர் முதன் முதலாக அகழாய்வு செய்தார். அடுத்து பாரீஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த லூயிஸ் லாபிக், அலக்சாந்தர் கிரில், சர்கிராபர்ட் புரூஸ்புட் ஆகியோர் அகழாய்வு செய்து அதிக அளவில் மட்பாண்டங்கள், இரும்பு பொருட்கள், எலும்புக் கூடுகள் மண்டை ஓடுகள், வெண்கலப் பொருட்கள், முதுமக்கள் தாழிகள் ஆகியவற்றைக் கண்டு பிடித்தனர். மேலும் வெண்கலத்தால் செய்யப்பட்ட அணிகலன்கள், தங்கத்தால் செய்யப்பட்ட மகுடங்கள் மற்றும் எருமை, வெள்ளாடு, சேவல், புலி, யானை போன்றவற்றின் உருவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**தாழிகள்**

இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ள தாழிகள் சிவப்பு நிறமும், கூம்பு வடிவத்தில் மூன்றடி விட்டமும் உடையன. இவை சொரசொரப்பான அமைப்பு உடையவை. இத்தாழிகளுக்குள்ளேயே சில மட்பாண்டங்கள் உள்ளன. சில தாழிகளில் முழுமையான எலும்புக் கூடுகளும், சிலவற்றில் மண்டையோடுகள் மட்டும், சிலவற்றில் எலும்புக் கூட்டின் சில எலும்புகள் மட்டுமே காணப்படுகின்றன. இறந்தவர்கள் இந்தத் தாழிகளில் வைத்துப் புதைக்கப் பட்டுள்ளார்கள்.

**வெண்கலப் பொருட்கள்**

மிக உயர்ந்த வேலைப் பாட்டினை உடைய வெண்கலத்தால் ஆன ஜாடிகள், வட்ட வடிவிலான கிண்ணங்கள், குடுவைகள் பலவகைப்பட்ட மிருகங்கள், கழுத்தாணிகள், காப்புகள் ஆகியவை கிடைத்துள்ளன.

**இரும்புப் பொருட்கள்**

ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்டுள்ள இரும்புப் பொருட்கள் உயர்ந்த வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. இரும்பினால் செய்யப்பட்ட அம்புகள், வாள்கள், ஈட்டி, உடைவாள், எரிவேல், புல்லரிவாள், பாட்டாக்கத்தி, மண்வெட்டி, கோடாரி, விளக்கு, திரிசூலங்கள் ஆகியவை கிடைத்துள்ளன. தவிர கல்லினால் செய்யப்பட்ட குழவிகள், மாவரைக்கும் கல், தங்கத்தில் செய்யப்பட்ட மகுடங்கள் காணப்படுகின்றன.

**எலும்புக் கூடுகள்**

இங்குள்ள எலும்புக் கூடுகளை ஆராய்ந்த சென்னை அருங்காட்சியத்தைச் சேர்ந்த தர்கடன் என்பவர் இங்கு வாழ்ந்த மக்கள் நீண்ட தாடை உடையவர்கள் என்று கூறியுள்ளார். மண்டையோடுகள் சீனர்களைச் சார்ந்தவையும், திராவிடர்களைச் சார்ந்தவையுமாக இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

ஆதிச்சநல்லூரில் செய்யப்பட்ட அகழாய்வின் வாயிலாகக் கி.மு.1000ஆம் ஆண்டின் முற்பகுதியில் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் சிறப்பாக வாழ்ந்துள்ளனர் என்று அறிய முடிகிறது.

**(ஆ) அரிக்க மேடு**

பாண்டிச்சேரிக்குத் தெற்கில் நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள காக்கையன் தோப்பு என்ற சிற்றூரின் பகுதியில் அமைந்துள்ளது. 1837இல் இதன் சிறப்பு வெளிவந்த பின்னர் 1945இல் மார்டிமர் வீலர் என்பவர் தலைமையில் அறிவியல் முறையில் அகழாய்வு நடைபெற்றது. இங்கு நடைபெற்ற அகழாய்வில் பல கட்டிடங்கள், ரோம், கிரேக்கப் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மட்கலங்கள், சங்கு, எலும்பு, கண்ணாடி, இரும்பு மற்றும் தங்கத்தினால் செய்யப்பட்ட பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

**கட்டிடங்கள்**

கட்டிடங்களில் இன்றியமையாதது பண்டகசாலை ஆகும். இது தடித்த சுவா்களை உடையது. வலிமையான செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. வெளிப்புறங்களின் மீது சுண்ணாம்புக் காரை பூசப்பட்டுள்ளது. சுவா்கள் நல்ல அடித்தளத்தின் மீது கட்டப்பட்டுள்ளன. மண்சாா்ந்து கொண்டு கட்டப்பட்டுள்ளது. சாயம் தோய்க்கும் தொட்டிகள் காணப்படுகின்றன. தொட்டியிலிருந்து நீரை வெளியேற்ற தனி வசதி இருக்கிறது. துணிகளைச் சாயம் தோய்க்க கட்டப்பட்டிருக்கலாம்.

குறிப்பு

**மட்பாண்டங்கள்**

மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து முக்கியமாக கிரேக்க, ரோமானியப் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மட்கலங்கள் கிடைத்துள்ளன. ஆம்போரா எனப்படும் இரு கைபிடி உள்ள ஜாடிகள், ரௌலட்டட் என்ற வகை வட்டில்கள், அரிட்டைடன் எனப்படும். சிவந்த மண்பூச்சு கொண்ட மட்கலங்கள் கிடைத்துள்ளன. இந்த மட்கலங்கள் மணல், களிமண், மைக்கா, உமி ஆகியவற்றைக் கொண்டு பிசைந்து செய்துள்ளனா்.

**மணிகள்**

அரிக்கமேடு அகழாய்வில் இருநூறுக்கும் அதிகமான மணிகள் கிடைத்துள்ளன. இவை சங்கு, எலும்பு, தங்கம் கண்ணாடி ஆகியவற்றால் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் நவரத்தினக் கற்களால் ஆன மணிகளும், தங்கத்தினால் செய்யப்பட்ட மூன்று மணிகளும், சுடுமண்ணால் செய்யப்பட்ட பல மணிகளும் கிடைத்துள்ளன.

**பிற பொருட்கள்**

சுடுமண் பொம்மை உருவங்கள், சிவனின் தலைப்பகுதி, சதுரங்கக் காய்கள், வட்டமான விளையாட்டு வில்லைகள், காதணிகள், இரும்பு மோதிரம் ஒன்று, கத்தி, ஆணிகள், தாமிரத்தால் ஆன ஒரு கிலுகிலுப்பையும், அம்மிக் கற்களும். குழவிக் கற்களும் கிடைத்துள்ளன.

பிராமி எழுத்துக் கீறல்களைக் கொண்ட மட்கல ஓடுகள் பல முதன்முதலாக இந்த அகழாய்வில் கிடைத்துள்ளன. எழுத்தமைதியை நோக்கினால் கி.மு.5ஆம் நூற்றாண்டைச் சோ்ந்தவையாக இருக்கலாம் என்கின்றனா்.

கிழக்குக் கடற்கரையில் ரோமானியா்களுடன் வாணிக உறவை மேற்கொண்டிருந்த ஒரு வாணிக மையமாகவும், வாணிகா்கள் தங்கியிருந்த இடமாகவும் அரிக்கமேடு இருந்துள்ளது. கி.மு. 2, 3இல் ரோமானியக் குடியேற்றம் நடந்திருக்கலாம் என்றறியப்பட்டுள்ளது. கி.பி. முதலிரு நூற்றாண்டுகளில் நிலவிய கட்டிடக் கலையின் தன்மைகளையும் அறிய முடிகிறது.

இதனால் அரிக்கமேடு ஒரு சிறந்த வாணிப மையமாகவும், மணிகள் உற்பத்தி செய்யும் தொழிற் கூடங்கள் இருந்த இடமாகவும் மெல்லிய துணிகள் உற்பத்தி செய்யும் இடமாகவும் இருந்துள்ளது.

குறிப்பு

**(இ) பையம் பள்ளி**

வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் ஜோலார் பேட்டையிலிருந்து 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பையம் பள்ளி, மத்திய தொல்லியல் துறையைச் சேர்ந்த ஷி.ஸி. ராவ் இங்கு நடத்திய அகழாய்வுகளில் புதிய கற்காலம் மற்றும் பெருங்கற்காலத்தைச் சார்ந்த பல பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் மூலம் தமிழ்நாட்டில் புதிய கற்கால, பெருங்கற்கால மக்களின் பண்பாட்டைப் பற்றி அறிய முடிகிறது.

**(ஈ) கரூர்**

கரூரில் நடத்திய அகழாய்வுகள் மூலம் பல நாணயங்களும், கல்வெட்டுகளும் சங்க கால சேர அரசர்களின் தலைநகராக விளங்கிய வஞ்சியைப் பற்றியும் அறிய முடிகிறது.

**(உ) அழகன் குளம்**

தமிழ் நாட்டில் அழகன் குளம் என்ற இடத்தில் நடைபெற்ற அகழாய்வின் மூலமாகச் சங்க காலத்தமிழரின் சிறப்பை அறிவதுடன், தமிழக-ரோமானிய வாணிகத் தொடர்புகளை அறிய முடிகிறது.

**(ஊ) பூம்புகார்**

புகார் சோழர்களின் துறைமுக நகரமாகச் சங்க காலத்தில் விளங்கியது. இங்கு நடத்தப்பெற்ற அகழாய்வுகளின் விளைவாகச் சங்ககால அணிகலன்கள், புத்தர்சிலை, இடிபாடுகள் கொண்ட கட்டிடங்கள் கிடைத்துள்ளன.

**(எ) உறையூர்**

சங்க கால சோழர்களின் தலைநகரமாக விளங்கிய உறையூரில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் மட்பாண்டங்கள், மணிகள், சதுரவகை வில்லைகள், இதரப் பொருட்கள் கிடைத்துள்ளன. மேலும் கிரேக்க நாணயங்களும் கிடைத்துள்ளன.

**(ஏ) கொற்கை (மதுரை)**

கொற்கை, மதுரை போன்ற இடங்களில் நடத்தப்பட்ட அகழாய்வுகளின் விளைவாகச் சங்ககாலப் பாண்டியர்களின் வரலாற்றை அறிய உதவும் மட்பாண்டங்கள், இடிபாடுகள், பண்டைய பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**(ஐ) காஞ்சிபுரம்**

தொல்லியல் அகழாய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டு பல்லவர் காலத்தோடு தொடர்புடைய செய்திகள் அறியப்பட்டுள்ளன. பல்லவர்களின் தலைநகரமான காஞ்சிபுரத்தில் இந்திய தொல்லியல் துறையினர் மேற்கொண்ட அகழாய்வின்

விளைவாகப் பல்லவர்கள் காலத்தில் பயன்படுத்தப்பட்ட பலவிதமான மட்பாண்டங்கள், சுதை வடிவங்கள், மணிக்கற்கள், தொங்கல் போன்றவை இங்கு எடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு

**(ஓ) மாமல்லபுரம்**

கடல் கோள் அழிவால் அழிந்து போன கடற்கரைக் கோயில்களைக் காண்கையில் பல்லவர் காலத்தில் அந்நகரம் செழுமையான துறைமுக நகரமாக விளங்கியதை அறியமுடிகிறது. மேலும் தமிழ்நாட்டில் முசிறி, தொண்டி, தஞ்சாவூர், பூம்புகார், கங்கை கொண்ட சோழபுரம் போன்ற பல்வேறு இடங்களில் தொல்லியல் துறையினர் வழியாக வரலாற்றை அறிய பல தகவல்களும் சான்றுகளும் கிடைத்த வண்ணம் உள்ளன.

**இந்தியத் தொல்லியல் துறை**

அகழாய்வு என்பது தொல்லியல் துறையின் கீழ் செயல்படுவதாகும். இந்தியாவில் கி.பி.18ஆம் நூற்றாண்டில், இந்திய அறிஞர்கள் மற்றும் ஆங்கிலேயே அறிஞர்களின் முயற்சியில் தொல்லியல் துறை தொடங்கப்பட்டது.

கி.பி. 1784இல் சர் வில்லியம் ஜோன்ஸ் என்பார் கொல்கத்தாவில் உயர் ஆசியக் கழகத்தைத் தொடங்கி வைத்தார். இதன் சிறப்பினை வெளியிட கி.பி. 1788இல் ஆசிய ஆய்வுகள் என்னும் இதழும் தொடங்கப்பட்டது. இக்கழகத்தைச் சேர்ந்த சார்லஸ் வில்கின்ஸ் கோல் புருக், வில்சன் ஆகியோர் இந்தியக் கல்வெட்டுகளை ஆய்வு செய்தனர்.

வில்லியம் சேம்பர்ஸ் என்பார் தென்னிந்திய அரும்பொருட்களை ஆய்வு செய்யும் பணியைத் தொடங்கி வைத்தார். மாமல்லபுரத்தில் பார்வையிட்டு கி.பி. 1788இல் ஆசிய இதழில் ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டார்.

கர்னல் காலின் மெக்கன்சி என்பார் தென்னிந்திய பெருங்கற்காலச் சின்னங்களைப் பற்றி ஆய்வு செய்ததுடன் பல கையெழுத்துப் பிரதிகளைத் தொகுத்தார். ஜேம்ஸ் பிரின்செப் தென்னிந்திய கல்வெட்டியலுக்கு அருந்தொண்டு புரிந்தார். பிராமி, கரோஷ்டி ஆகிய எழுத்துகளைப் படிப்பதில் வெற்றி கண்டார்.

குறிப்பு

கி.பி. 1847இல் டில்லியில் தொல்லியல் கழகம் தற்காலிகமாக நிறுவப்பட்டது. அலெச்சாந்தர் கன்னிங்ஹாம் என்பார் தொல்லியல், காசியல் துறைகளில் பெருந்தொண்டு புரிந்தார். 1861இல் கானிங் பிரபு அவர்கள் கன்னிங்ஹாம் அவர்களை இந்தியாவின் முதல் தொல்லியல் பரப்பாய்வாளராக அமர்த்தினார். இவரது பணிகள் சிறப்பாக இருந்தது. ஆயினும் கி.பி. 1866இல் பரப்பாய்வுத் துறை நிறுத்தப்பட்டது. கி.பி. 1870இல் மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. கன்னிங்ஹாம் அதன் மேனிலை இயக்குநராக அமர்த்தப்பட்டார். இத்துறையில் இந்தியர்கள் சேர்க்கப்படவும் இவர்கட்குத் தொல்லியல் துறையில் பயிற்சி அளிக்கவும் ஆங்கில அரசு அனுமதி அளித்தது. பிளீட் அரசின் கல்வெட்டாய்வாளராக அமர்த்தப்பட்டார்.

கி.பி. 1878இல் இந்தியப் புதையல் சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி பூமியிலிருந்து எடுக்கப்படும். ரூ.10 மதிப்பிற்கு மேற்பட்ட பொருட்கள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட்டன.

டாக்டர் பர்னாஸ் தலைவராக இருந்த போது, தொல்லியல் பரப்பாய்வுத்துறை சென்னை, மும்பை, பஞ்சாப், வடமேற்கு மாகாணம், வங்காளம் என்ற ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. 1898இல் ஊக்கக் குறைபாடு காரணமாக ஆய்வுப் பணிகள் முடக்கப்பட்டன. ஆனால் 20.12.1900ஆம் நாள் கர்சன் பிரபுவின் ஆட்சிக் காலத்தில் புத்துயிர் பெற்றது. 1902ல் சர்ஜான் மார்ஷல் இத்துறையின் பணிகளை முடுக்கிவிட்டார். களஆய்வு, அகழாய்வு, பழங்காசுகள், கல்வெட்டு ஆகியவற்றைப் பற்றிய ஆண்டறிக்கை வெளியிட முயன்றார். 1904இல் பழைமைச் சின்னங்களின் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது.

28.04.1906இல் இந்திய அரசின் கீழ் இயங்கும் ஒரு நிரந்தர துறையாக மாற்றப்பட்டது. முதல் உலகப் போருக்குப் பின் 1919இல் இத்துறை அரசுத்துறை ஆயிற்று, புதிய பதவிகள் உருவாக்கப்பட்டன. அகழாய்விற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. தயாராம் சயாணி அரப்பாவையும், *R.D.* பானர்ஜி மொகஞ்ச தாரோவையும் அகழாய்வு செய்தனர். பின்னர் சர்ஜான் மார்ஷல் மொகஞ்சதாரோ அகழாய்வை மேற்கொண்டார். 1931வரை இப்பணி தொடர்ந்து உலகமெங்கும் இதன் பண்பாடு பெருமை பரவியது.

1944இல் மார்டிமர் வீலர் இத்துறையைப் புதுப்பொலிவுடன் விளங்கச் செய்தார். இவர் கர்நாடக மாநிலத்திலுள்ள பிரம்ம கிரியிலும், பாண்டிச்சேரி அருகிலுள்ள அரிக்கமேட்டிலும் அகழாய்வுகள் செய்தார். அரிக்கமேட்டில் ஆழ்ந்த பொழுது ரோமானிய வணிக தொடர்புகள் வெளிப்பட்டன. உடன் அகழாய்வுப் பிரிவு பண்டைய வரலாற்றுப் பிரிவுகளைத் தனித்தனியே நிறுவினார்.

1945இல் உயர்மட்டத் தொல்லியல் அலுவலர்களைக் கொண்ட மத்திய தொல்லியல் ஆலோசனைக் குழுவை நிறுவினார். பழங்கால இந்தியா எனும் ஆண்டிதழ் வெளிவரச் செய்தார். 1952ல் இந்தியத் தொல்லியல் ஒரு மதிப்பீடு எனும் இதழைத் தொடங்கினார்.

குறிப்பு

1947இல் தொல்லியல் பரப்பாய்வுத்துறை மத்தியத் தொல்லியல் துறை என்று பெயர் மாற்றம் பெற்றது. 1948 ஏப்ரலில் டாக்டர் *N.P.*சக்ரவர்த்தி இதன் மேனிலை இயக்குநராகப் பதவியேற்றார். அடுத்து மதோ சரூப் வாட்சு, அமலா நந்த கோஷ் ஆகியோர் இயக்குநர் பதவியை வகித்தனர். கோஷ் காலத்தில் இத்துறை பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. 1959இல் டில்லியில் தொல்லியல் பள்ளி தொடங்கப்பட்டு பயிற்சி பெற்ற மாணவர்களைக் கொண்டு ஊர்கள்தோறும் கள ஆய்வுப்பணி எனும் திட்டத்தின் கீழ் மைசூர், காஷ்மீர், போயார், புதுக்கோட்டை, பரோடா, ஜெய்ப்பூர் முதலான இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1961இல் நூற்றாண்டு விழா கொண்டாடிய இத்துறை சார்பில் தொல்லியல் கண்காட்சியும் நடத்தியது.

கோஷ் அவர்களின் ஓய்விற்குப் பிறகு, 1972இல் *M.N.*தேஷ் பாண்டே பதவி வகித்தார். இவர் காலத்தில் 1975இல் பெங்களூரில் தொல்லியல் துறையின் பதினோராம் மண்டலம் உருவாக்கப்பட்டது.

## கூறு 11: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. தமிழகத்தில் சிந்து சமவெளி நாகரிக குறியீடுகள் உள்ள இடங்களில் சிலவற்றைக் குறிப்பிடுக.

    1. சாணூர், 2. கொடுமணல், 3. சூலூர், 4. முசிரி

2. ஹரப்பா, மொகஞ்சதாரோ உள்ள இடம் எது?

    பாகிஸ்தான்

3. சிந்துவெளி எழுததுக்கள் எந்த மொழியோடு ஒப்பிடப் பெறுகிறது?

    எகிப்து, சுமேரியா

4. தொல்லியல் துறைக்கும் சிந்துவெளி எழுத்துக்களுக்கும் உள்ள தொடர்பு யாது?

    பானை ஓடுகள், அகலாய்வு பொருட்களில் சிந்துவெளி நாகரிகம் காணப்படுகிறது. எனவே திராவிட நாகரிகம் தான் சிந்துவெளி நாகரிகமாக மாறியதா என்ற கோணத்தில் ஆய்வு செய்ய தொல்லியல் துறை முனைந்து வருகிறது.

5. ஹரப்பா, மொகஞ்சதாரோவை ஆய்வு செய்தவர்கள் யாவர்?

    தயாராம் சயானி, R.D. பானர்ஜி

### II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)

6. சிந்து சமவெளி எழுத்துக்களை பற்றி விவரி?

    (அட்டவணை படத்தில் உள்ளவை மற்றும் ஆராச்சியாளர்கள் தந்த செய்திகளை எழுதுக.)

குறிப்பு

7. தொல்லியல் துறை திராவிட நாகரிகத்தையும், சிந்துவெளி நாகரிகத்தையும் ஆய்ந்ததை விவரி?

(தமிழக தொல்லியல் ஆய்விற்கு உட்படுத்தப் பெற்ற இடங்கள், ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆய்வுகளின் எச்சங்கள் பற்றி எழுதுக.)

**III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)**

8. சிந்துவெளி எழுத்துக்களும், சிந்து சமவெளி நாகரிகமும் குறித்து கட்டுரை வரைக.

(எழுத்து முறை – திராவிட பழக்க வழக்கங்கள்- ஆராய்ச்சியாளர்கள். தமிழக ஆய்விடங்கள் பற்றி விளக்கி எழுதுக.)

## கூறு 12: பிராமி, கரோஷ்டி, தமிழ் பிராமி, வட்டெழுத்து

### பிராமி

குறியீடுகளை அடுத்து இந்தியாவில் புழக்கத்தில் இருந்த வரிவடிவம் பிராமி ஆகும். இவ்வரி வடிவத்தில் இருந்தே அனைத்து வரிவடிவங்களும் தோன்றியமைக்கான சான்றுகள் கிடைப்பதால் இது தாய் வரிவடிவம் என்றழைக்கப்படுகிறது. இந்தியாவில் குறிப்பாகத் தென்னகத்தில் கிடைக்கின்ற குறியீடுகளில் 75% மேல் தமிழகத்திலேயே கிடைக்கின்றன.

பிராமி வரி வடிவம் இந்தியர் வரிவடிவம் இந்தியா மற்றும் இலங்கை முழுவதும் காணப்படுகின்றது. குறியீடுகள் சிந்துவெளி எழுத்துக்களின் வளர்ச்சியே என்றும் இக்குறியீடுகள் பின்னர் பிராமி வரிவடிவமாக உருவாகியது என்றும் அண்மைக் காலங்களில் கருதுகோள்கள் முன் வைக்கப்பட்டு அவை தீவிர ஆய்விற்கும் உட்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தவரை குறியீடுகளுக்கு அடுத்து கிடைக்கும். இவ்வரிவடிவம் தமிழ் பிராமி வரிவடிவம் ஆகும். இந்தியாவில் குறிப்பாக அசோக மன்னனால் வெளியிடப்பட்ட ஆணைகளில் இவ்வரிவடிவம் காணப்படுவதால் இது அசோகர் பிராமி என்றும், மௌரிய பிராமி என்றும் அழைக்கப்பட்டது. பின்னர் தென்னகத்தில் குறிப்பாக ஆந்திர மாநிலத்தில் உள்ள பட்டிப்புரோலு என்ற இடத்தில் கிடைத்தவையும், தமிழகத்தில் கிடைத்தவையும் வரிவடிவத்தில் சில மாற்று வடிவங்களைப் பெற்றுத் திகழ்வதின் அடிப்படையில் இவை தென் பிராமி என்றும், வட இந்தியாவில் கிடைப்பவை வட- பிராமி என்றும் அழைக்கப்படுகிறது.

இவ்வரிவடிவங்களைப் பழந்தமிழ் வரிவடிவங்கள் என்றே அழைக்கலாம் எனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். இருப்பினும் இங்குத் தமிழ்ப் பிராமி என்பது தமிழ் மொழியில் எழுதப்பட்ட பிராமி வரிவடிங்கள் என்று பொருள்படும்.

குறிப்பு

**கரோஷ்டி**

ஹால்வி, *(Halevy)* என்பார் பிராமி வரிவடிவம் என்பது கிரேக்க வரி வடிவத்திலிருந்தும் கரோஷ்டி வரிவடிவத்திலிருந்து பெறப்பட்ட கூட்டு வரிவடிவமே எனத் தெரிவித்ததின் அடிப்படையில் பால்க் *(Falk)* அவர்கள் கரோஷ்டியிலிருந்தே பெரும்பான்மையான வரிவடிவங்கள் தோன்றின எனக் கருத்து தெரிவித்துள்ளார். இதன் மூலம் பிராமி வரிவடிவத்திற்கு முன்பே கரோஷ்டி வரிவடிவம் தோன்றிவிட்டதாகக் கருதப்படுகிறது. இது உண்மையாக இருப்பினும் கரோஷ்டி வரிவடிவங்களுக்கும் பிராமி வரிவடிவத்திற்கும் இடையே மேலோட்டமாக ஒற்றுமை காணப்பட்டாலும் எழுத்து மற்றும் சொல்லமைப்பில் வேறுபாடு இருப்பதைச் சுட்டிக் காட்டி சாலமன் இவ்விருவரின் கருதுகோளை மறுக்கிறார்.

கரோஷ்டி வரிவடிவம் கொண்ட காசுகளை 1830இல் ஜெனரல் வென்கரா கண்டுபிடித்தார். இக்கரோஷ்டி எழுத்து வடிவங்கள் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாட்டில் உள்ள சிந்து நதி சுவாத்நதி மற்றும் காபூல்நதி பள்ளத்தாக்குகளிலும் அதையொட்டிய பகுதிகளிலுமே அதிகமாகக் கிடைக்கின்றன. பாகிஸ்தான் நாட்டின் வடமேற்குப் பகுதி வரலாற்றில் காந்தாரம் என்றழைக்கப்பட்டது. இப்பகுதியில் இந்தோ-சீக்கியன் பெரிதும் உபயோகப்படுத்தப்பட்டது. ஆதலால் இப்பகுதியை கரோஷ்டி வடிவத்தின் மையப்பகுதி எனலாம்.

இவ்வரிவடிவம் பிராமியைப் போல் இன்றி வலமிருந்து இடமாக எழுதப்பட்டவை. பாரசீகப் பேரரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட நிலப்பகுதியில் அராமிக் வரிவடிவம் அரசு எழுத்துருவாகவும் விளங்கியது. பாரசீக காந்தாரி மொழி பேசுகின்ற மக்கள் வாழும் இந்தியாவின் வடமேற்கு மாகாணப் பகுதியான காந்தார நிலப்பகுதியை மைய அரசு அதகாரிகள் ஆட்சிக்குட்படுத்திய போது காந்தார மொழி பேசுகின்ற கரோஷ்டி உருவாகியிருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். அண்மையில் அராமிக் வரிவடிவத்தில் எழுதப்பட்ட அசோகர் கல்வெட்டுகள் மற்றும் அராமிக் கல்வெட்டுகள் இந்தியாவிற்கும் காந்தாரப் பகுதிக்கும் இடையே கிடைத்துள்ளதால் இவை பராசீகப் பேரரசுக் காலத்தில் நிலவிய உறவினை உணர்த்துகின்றன.

இந்தியத் துணைக் கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் சுமார் 500 ஆண்டுகள் நின்று நிலவிய இவ்வரிவடிவம் இறுதியில் குஷானர்களால் உபயோகப்படுத்தப்பட்டது. குஷானர்களும் இந்திய நிலப் பகுதிக்கு இருப்பிடத்தை மாற்றிக் கொண்டு பிராமி வரிவடிவத்திற்கு மாறியபடியால் கரோஷ்டி வரி வடிவத்தின் பயன்பாடு மெல்ல வழக்கொழிந்து போயிற்று.

குறிப்பு

**தமிழ் பிராமி**

தமிழ் எழுத்தின் வரிவடிவம் தொடர்பான ஆய்வுகள் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே ஓரளவு தெளிவு பெற்றது எனலாம். தமிழ் வரிவடிவத்தில் எழுதப்பட்ட ஏழாம் நூற்றாண்டினைச் சார்ந்த பல்லவர்காலக் கல்வெட்டுகளும், வட்டெழுத்து வரிவடிவத்தின் எழுதப்பட்ட 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர் காலக் கல்வெட்டுகள் வரை அறிஞர்களால் அறியப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. ஒரே கால கட்டத்தில் ஒருமொழிக்குத் தமிழ், வட்டெழுத்து என இரு வரிவடிவங்கள் ஏன் உபயோகப்படுத்தப்பட்டன என்பது அக்கால கட்டத்தில் ஆய்வு செய்த வல்லுநர்களுக்குப் புரியாததாக இருந்தது.

வட இந்தியாவில் அப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டு படித்துணரப்பட்ட பிராமி வரிவடிவத்திலிருந்தே தமிழ் வரிவடிவமும், வட்டெழுத்து வரிவடிவமும் தோன்றின என்பதை ஒப்பீட்டாய்வின் அடிப்படையில் டி.ஏ. கோபிநாதராவ், தி.நா. சுப்பரமணியன், சிவராமமூர்த்தி போன்றோர் நிறுவிய போதிலும் தமிழகத்தில் கிடைத்த பிராமி கல்வெட்டுக்களின் முழுத்தன்மை குறித்து அக்காலக் கட்டத்தில் அறிய இயலாது போயின. இருப்பினும் உ.வே.சாமிநாத ஐயர் அவர்களால் 1887ஆம் ஆண்டு முதற்கொண்டு வெளிக் கொணரப்பட்ட சங்க இலக்கியங்கள் குறிப்பாகப் புறநானூறு (1894), பதிற்றுப்பத்து (1904) போன்றவை தமிழ் அறிஞர்களிடையேயும் வரலாற்று அறிஞர்களிடையேயும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின.

புறநானூறு மற்றும் பதிற்றுப்பத்தில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகள் தமிழக வரலாற்றின் பழமையை அறியத்துணை புரிந்தன. ஆனால் புறச்சான்றுகளான கல்வெட்டுகள் நாணயங்கள் போன்றவை மூலம் உறுதிசெய்யப்படவில்லை. அசோகரது பிராமி வரிவடிவத்திற்கு இணையான வரிவடிங்கள் தமிழகத்தில் குறிப்பாக தென்மாவட்டங்களில் கிடைத்த பின்னே தமிழக வரலாறு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாக உறுதியான நிலைப்பாட்டுடன் எடுத்துச் செல்லப்பட்டது.

அசோகர் பிராமி வரிவடிவத்தை ஒத்த வரிவடிவம் மாங்குளம் (1882), எடக்கல் (1984), கீழவலவு (1903) போன்ற இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்ட போதிலும் 1906இல் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மறுகால்தலை என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு மூலமே இவ்வெழுத்துக்கள் அசோகர் பிராமியில் உள்ளது போல் இருப்பதாக உணரப்பட்டது. 1924இல் கே.வி. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் சென்னையில் நடைபெற்ற கீழ்த்திசை மொழிகள் மாநாட்டில் ஒரு கட்டுரை படிக்கப்பட்டது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்கட்டுரையே தமிழ்-பிராமி வரிவடிவத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதன் பரவல் குறித்து அறிஞர்களிடையே ஒரு தெளிவு ஏற்பட வகை செய்தது.

இராபர்ட் சீவல் அவர்களால் 1882இல் மதுரைக்கும் மேலூருக்கும் இடையே அமைந்துள்ள மாங்குளம் என்ற ஊரில் தமிழ் - பிராமி கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதன் மூலமும் பின்னர் அவை வெங்கையா அவர்களால் 1906இல்

குறிப்பு

படித்துணரப்பட்டதன் மூலமும் தமிழக வரலாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக எடுத்துச் செல்லப்பட்டது. முதன் முதல் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் பிராமி கல்வெட்டும் காலத்தால் முந்திய தமிழ்மொழிக் கல்வெட்டும் இதுவே ஆகும். இந்தியாவில் இதுவரை கிடைத்த காலத்தால் முந்திய சமணர் கல்வெட்டும் இதுவே ஆகும். அதுமுதல் தொடர்ந்து பல தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டன.

இந்திய அளவில் கிறிஸ்டியன் லாசன் என்பவர் 1836இல் ஜேம்ஸ் பிரின்சப் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் பிராமி வரிவடிவத்தைக் கையாண்டுள்ளார். அகதுக்ல ராஜா என பிராமி வரிவடிவத்தை முதன் முதலில் படித்தவர் என்ற பெருமையுடன் பிராமி வரிவடிவத்தின் காலத்தைக் கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட காலத்திற்குச் சென்றதால் ஒரே நாளில் இந்தியாவின் வரலாறு பல நூற்றாண்டுகள் பின்னோக்கித் தள்ளப்பட்டது. எனினும் பிராமி எழுத்து முறையை முழுவதும் கற்றுணர்ந்த பெருமை ஜேம்ஸ் பிரின்சப் அவர்களையே சாரும்.

1966இல் ஐராவதம் மகாதேவன் அவர்கள் மாங்குளம் கல்வெட்டில் காணப்படும் நெடுஞ்செழியன் மற்றும் வழுதி என்ற சங்ககாலப் பாண்டிய மன்னரின் பெயரைப் படித்ததன் மூலம் இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவம் வெளிச்சத்திற்கு வந்தது.

புகழூர்க் கல்வெட்டு இந்திய தொல்லியல் அளவீட்டுத் துறையின் அலுவலர்களால் 1928ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு 1927-28ஆம் ஆண்டு இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்ட போதிலும் இக்கல்வெட்டின் முக்கியத்துவத்தை அறிய மேலும் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று.

1966 பிப்ரவரித் திங்கள் புகழூர்க் கல்வெட்டுகளை மீண்டும் கண்ணுற்ற ஐராவதம் மகாதேவன் இக்கல்வெட்டில் காணப்படும் சேர மரபைச் சார்ந்த ஆதன், இரும்பொறை போன்ற சொற்களைக் கண்டறிந்து வெளியிட்டார். இவரது இக்கண்டுபிடிப்பு வரலாற்று அறிஞர்களிடையேயும் தமிழ் அறிஞர்களிடையேயும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. உடன் வரலாற்று வல்லுநர்கள் தமது கவனத்தைத் தமிழ்-பிராமி கல்வெட்டுகளின் பால் திருப்பினர். இது அக்கால கட்டத்தில் ஆய்வு நிலையில் ஏற்பட்ட அக்கால மன்னர்களின் பெயர்கள் தெளிவாகப் படித்தளிக்கப்பட்ட கல்வெட்டு ஆகும். பின்னர் ஆர்.பன்னீர்செல்வம் புகளூர் கல்வெட்டில் காணப்படும், சேர மரபினரைப் பதிற்றுப்பத்துடன் ஒப்புநோக்கி இக்கல்வெட்டிற்கு மேலும் உரமேற்றினார். இதற்கு அடுத்த ஆண்டில் மாங்குளம் கல்வெட்டில் காணப்படும். சங்க கால பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் பெயர் ஐராவதம் மகாதேவன் அவர்களால் கண்டறியப்பட்டது.

அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளில் மிகவும் புகழ்வாய்ந்த கல்வெட்டு திருக்கோவிலூர் வட்டத்தில் தென்பெண்ணை ஆற்றங்கரையில் கிடைத்த 'ஜம்பை' கல்வெட்டாகும். இக்கல்வெட்டை 1981 அக்டோபர் திங்கள் தமிழ்நாடு தொல்லியல் துறையைச் சார்ந்த ஆய்வு மாணவர் கே. செல்வராஜ் கண்டுபிடித்தார். இக்கல்வெட்டில் அதியமான் நெடுமான் அஞ்சி எனும் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அசோகரின் இரண்டாம் பாறைக் கல்வெட்டுகளில் காணப்படும் தமிழ் மன்னர் மரபுகளில் குறிப்பிட்ட 'சதியபுதோ' என்ற சொல்லின் பிராகிருத வடிவமே என்பது உறுதிப்படுத்தப்பட்டது. எனவே மாங்குளம், புகழூர், எடக்கல், ஜம்பை முதலிய இடங்களில் கிடைத்த தமிழ்-பிராமி கல்வெட்டுகள் தமிழக வரலாற்றைச் சங்க இலக்கியங்களுடன் ஒப்பு நோக்கி ஒரு நிலையான கால எல்லைக்குள் வைக்க அடிப்படையாயின.

**பானைக் கீறல்களில் தமிழ் - பிராமி எழுத்துக்கள்**

1882இல் தமிழ் பிராமி கல்வெட்டு மாங்குளம் கற்குகையில் இராபர்ட் சீவல் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் தமிழ்-பிராமி பொறித்த பானை ஓடுகள் முதன் முதலாக 1941-44இல் சங்க கால வேளிர் மரபைச் சார்ந்த வீரை வெளியன் வேண்மானின் ஆளுமைக்குட்பட்டிருந்த அரிக்கமேடு (சங்க காலப் பெயர் வீரை) என்ற சங்க காலத் துறைமுகத்தில் இருந்து வெளிக் கொணரப்பட்டது. தற்பொழுது 20க்கும் மேற்ட்ட சங்க கால ஊர்களிலிருந்து நூற்றுக்கணக்கான தமிழ்-பிராமி பொறிப்புக் கொண்ட பானை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் கொடு மணல் அகாழாய்விலிருந்து மிக அதிகமாக 200க்கும் மேற்பட்ட பானைப் பொறிப்புகள் வெளிக் கொணரப்படன. இந்தியாவில் கிடைத்த மிக அதிக எண்ணிக்கையுடைய பானைப் பொறிப்புகள் கொடுமணல் பொறிப்புகளே ஆகும். இது கொடுமணல் வாழ்விடத்தில் மேற்கொண்ட ஒரு சதவீதத்திற்கும் குறைவான அகழாய்வில் கிடைத்தவை. உறையூர், கரூர், அழகன்குளம் போன்ற இடங்களில் கணிசமான அளவில் இவை கிடைத்துள்ளன.

**தமிழ்-பிராமி படித்தறிதல்**

1882ல் தமிழ்நாட்டில் பிராமி கல்வெட்டுகள் கண்டறியப்பட்ட போதிலும் இக்கல்வெட்டுக்களில் காணப்படும் வரிவடிவங்கள் தமிழ் மொழியைத் தாங்கி உள்ளன என்பதைக் கண்டறிய ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கும் மேல் பொறுத்திருக்க வேண்டியதாயிற்று. பல்வேறு அறிஞர்களின் அயராத உழைப்பின் காரணமாகவே இவை படித்தறியப்படடன. இவை நான்கு கட்டங்களில் நடைபெற்றதாக ஐராவதம் மகாதேவன் கருதுகிறார்.

குகைக் கல்வெட்டுக்களில் காணப்படும் பிராமி வரிவடித்திற்குரிய சரியான தமிழ் ஒலி வடிவத்தைக் கண்டுபிடித்தது முதல் கட்ட வளர்ச்சி எனவும், தமிழ்மொழிக்கு

உரித்தான சிறப்பு எழுத்துக்கள் ழ, ள, ற, ன ஆகிய எழுத்துக்களுக்குரிய வரிவடிவத்தைக் கண்டறிந்தமை இரண்டாவது கட்ட வளர்ச்சி எனவும்', மௌரியர் பிராமி அல்லது அசோகர் பிராமி வரிவடிவத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறைக்கு மாற்றாகத் தமிழ் மொழிக்குரிய எழுத்துமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்தது மூன்றாவது கட்ட வளர்ச்சி எனவும், தமிழகத்தில் உள்ள அனைத்து தமிழ்க் குகைக் கல்வெட்டுகளையும் முறையாக ஆவணப்படுத்தி பதிப்பித்தமை நான்காவது கட்ட வளர்ச்சி எனவும் ஐராவதம் மகாதேவன் இனங்கண்டுள்ளார்.

குறிப்பு

இந்நான்கு கட்டங்களில் ஏற்பட்ட ஒருமித்த வளர்ச்சியின் காரணமாகத் தமிழ் வரிவடிவத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் எழுத்து முறையை முழுமையாக அறிந்து கொள்ள முடிந்தது. இது தமிழர், பண்பாடு பற்றிய புரிந்துணர்தலுக்கு வலுவூட்டியது.

கே.வி.சுப்பிரமணிய ஐயர் 12 இடங்களில் கிடைத்த 30 கல்வெட்டுகளில் காணப்படும் தமிழுக்கே உரித்தான சிறப்பு எழுத்துக்களான ழ, ற, ன ஆகிய வரிவடிவங்களைச் சரியாகக் கண்டறிந்தார். தான் கண்டறிந்த எழுத்துக்களின் துணை கொண்டும் இக்கல்வெட்டுக்களைச் சரியாகப் படித்தறிந்து இக்கல்வெட்டுக்கள் பழந்தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன என்ற தமது சரியான கணிப்பை வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டுரையாக 1924இல் சென்னையில் நடைபெற்ற மூன்றாவது கீழ்த்தசை மாநாட்டில் படித்து தமிழ்ப் பிராமி கல்வெட்டாய்வில் மங்காப் புகழ் பெற்றார்.

1961ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட அரச்சலூர் பிராமி கல்வெட்டில் மெய்யெழுத்துக்குப் புள்ளியிடும் பழக்கம் இருந்தமை கண்டறியப்பட்டது. கே.ஜி.கிருஷ்ணன் இக்கல்வெட்டில் காணப்படும் முதல் எழுத்தான ஏ வரி வடிவத்தில் நடுவில் ஒரு புள்ளி காணப்படுவதைச் சுட்டிக்காட்டி இவ்வரிவடிவம் எ என்ற குறில் வடிவத்தைக் குறிப்பதாக முதன் முதலில் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து இப்புள்ளியிடும் முறை, சாதவாகன மன்னர் சதகர்ணனின் வெள்ளிக் காசின் பின்புறம் தமிழ் வரிவடிவத்திலும், ஆண்டிப்பட்டியில் கிடைத்த சேந்தனின் ஈயக் காசிலும் பின்னர் கிப்ட் சிரோன்மணி அவர்களால் ஆனைமலைக் கல்வெட்டிலும் கண்டு பிடிக்கப்பட்டதன் மூலம் மெய்ப்புள்ளி குறித்த விவாதத்திற்கு முற்றுப்புள்ளி இடப்பட்டது.

தமிழ்-பிராமி கல்வெட்டாய்வில் பெரும் ஈடுபாடு கொண்ட ஐராவதம் மகாதேவன் 1962-66 இடையே கல்வெட்டு உள்ள இடங்களுக்கு நேரடியாகச் சென்று கண்படி, மைப்படி, ஒளிப்படம் ஆகியவை எடுத்து அனைத்துக் கல்வெட்டுகளையும் முறையாக ஆவணப்படுத்தி பின்னர் அவற்றை மீள் ஆய்விற்கு உட்படுத்தினார். இவ்வாய்வின் முடிவுகள் 1966இல் தமிழ்நாடு அரசு

குறிப்பு

தொல்லியல் ஆய்வுத்துறை நடத்திய கல்வெட்டுக் கருத்தரங்கில் படிக்கப்பட்டு பின்னர் கட்டுரையாக 1968இல் வெளியிடப்பட்டது.


தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்து, எழுத்து முறை, வரிவடிவம், மொழியியல் அமைப்பு, சமூகக் கட்டமைப்பு அரசியல் மற்றும் அதில் காணப்படும் பல்வேறு வரலாற்றுச் செய்திகளை ஆராய்ந்து 2003இல் ஒரு நூலை வெளியிட்டார். இது தமிழ் பிராமி கல்வெட்டுக்கள் தொடர்பான ஆய்விற்கு ஒரு ஆவணப் பெட்டகம் ஆயிற்று. அரிக்கமேடு, அழகன் குளம், மாங்குளம், கொடுமணல் அகழாய்வில் இருந்து கிடைத்த தமிழ்-பிராமி பொறிப்பு பெற்ற பானை ஓடுகளின் அடிப்படையிலும் இலங்கையில் கிடைத்த பிராமித் தரவுகளின் அடிப்படையிலும் மகாதேவன் தமிழ்-பிராமிக்குக் கீழ்க்கண்டவாறு காலக் கணிப்பு செய்தார்.

முற்காலத் தமிழ்-பிராமி கி.மு. இரண்டு முதல் கி.பி. முதலாம் நூற்றாண்டு வரை, பிற்காலத் தமிழ் பிராமி கி.பி. இரண்டு முதல் கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை இருப்பினும் இவரது காலக் கணிப்பினை ஏற்றும் மறுத்தும் இரா.நாகசாமி, நடன காசிநாதன், கே.வி. ரமேஷ், எம்.டி.சம்பத், ச.இராஜவேலு, கா.ராஜன், எ.சுப்பராயலு போன்றோர் கருத்துக்களை வெளியிட்டனர்.

இவர்களில் கே.வி.ரமேஷ், எம்.டி.சம்பத் நடன காசிநாதன், சு.இராஜவேலு ஆகியோர் கல்வெட்டுகளின் அடிப்படையிலும், கா.ராஜன் மண்ணடுக்காய்வின் அடிப்படையிலும் தமிழ், பிராமியின் காலத்தை அசோகர் காலத்திற்கு முன்பாக அதாவது கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பாக எடுத்துச் சென்றுள்ளனர்.

1. அசோகன் பிராமியில் கூட்டெழுத்து முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.
2. தமிழ் பிராமியில் தமிழுக்கே உரித்தான ழ ள ற ன எழுத்துக்களுக்குரிய வரிவடிவங்கள் காணப்படுகின்றன.
3. தமிழ் பிராமியில் அசோகன் பிராமியில் உள்ளதுபோல் கூட்டெழுத்து முறை கடைபிடிக்கப்பட வில்லை.
4. அசோகர் பிராமியில் எ, ஒக்குரிய வரிவடிவம் நெடிலாகப் படிக்கப்படும். ஆனால் தமிழ் பிராமியில் குறில், நெடில் என இருவகையாகப் படிக்கப்படும்.

குறிப்பு




(தமிழி (பிராமி) எழுத்து அட்டவணை)
காலம் : கி.மு. 3 – கி.பி. 3–ஆம் நூற்றாண்டு

மிகப் பழமையான குகைக் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய நாட்டில் பல இடங்களில் இக்குகைக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட குகைக் கல்வெட்டுக்களும் தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட குகைக் கல்வெட்டுக்களும் ஏறத்தாழ ஒத்துள்ளன. இக்கல்வெட்டுக்களின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என்பர்.

தமிழகம் முழுவதும் பிராமி கல்வெட்டுகள் பல்வேறு அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வண்ணம் உள்ளன.

**அறிஞர்களின் கருத்துகள்**

கல்வெட்டுகளில் ஒலிப்புடை ஒலிகளும், மூச்சுடை ஒலிகளும் காணப்படாமையை நோக்கி இக்கல்வெட்டுகளின் மொழி தமிழ் என்றும், சில பிராகிருதச் சொற்கள் கலந்திருக்கலாம் என்றும் கருதினர்.

| | அறிஞர்கள் | | கூற்று |
|---|---|---|---|
| 1. | நாராயண ராவ் | - | பிராகிருத மொழி கல்வெட்டு |
| 2. | கே.கே. பிள்ளை | - | தமிழும் பிராமியும் கலந்த விளங்காத மொழி |
| 3. | தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் | - | எழுத்துஎனினும் மொழி தமிழே |
| 4. | ஐராவதம் மகாதேவன் | - | இக்கல்வெட்டு மொழி தமிழே |
| 5. | கே.வி. சுப்பிரமணிய அய்யர் | - | இவ்வெழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களே |
| 6. | டாக்டர் நாகசாமி | - | ‘தமிழே’ என்கிறார். |

பிராமி எழுத்துக்களின்றும் தமிழ் எழுத்துக்கள் வளர்ந்தனவா? அல்லது தென்னாட்டிலிருந்து வடக்கே எழுத்துக்கள் சென்றனவா? அல்லது சிந்து நதிக்கரை எழுத்தினின்றும் பெறப்பட்டதோ? என்ற கேள்விகளுக்குப் பதிலில்லை.

குறிப்பு

சிந்துவெளியின் சித்திர எழுத்துக்களே திராவிடப் பெருங்குடி மக்களது எழுத்துக்களின் மூல வடிவமாக இருக்கலாமென ஹீராஸ் அடிகள் குறிப்பிடுகின்றார். மொஹஞ்சதாரோ ஹரப்பா, சிந்து சமவெளி எழுத்துக்கள் பழந்திராவிடமாக இருக்கலாமென யூகிக்கப்படுகின்றன. தமிழ் எழுத்துக்களின் தோற்ற வளர்ச்சியைப் பற்றி அறிய சிந்து சமவெளி எழுத்து முறையைப் பற்றி நன்கு ஆராய்ந்து முடிவு காண வேண்டும்.

**வடபிராமி**

அசோகா் கண்ட பிராமி எழுத்துக்கள் கி.மு. 1ஆம் நூற்றாண்டில் குசலன் பிராமியாகவும், கி.பி. 4ல் குப்த பிராமியாகவும், கி.பி. 7ல் சித்த மாத்ரிகள் பிராமியாகவும் கி.பி. 10ல் நாகரிக வடிவமாகவும் வரிவடிவம் பெற்றது.

**தென் பிராமி**

தென்பிராமியைத் ‘திராவிடி’ என்றும் வழங்குவா். தென்பிராமியில் வடமொழிக்கு இன்றியமையாத பல ஒலிகள் இல்லை.

மூச்சுடை ஒலிகள் இல்லை. வடமொழிக்கு வேண்டாத எ ஓ குறில்கள் உள்ளன. தொல்காப்பிய பழந்தமிழ் மொழிக்குரிய ஒலிகளை மட்டும் உணர்த்தி வந்துள்ளன. எனவே பழந்தமிழ் எழுத்தையொட்டி அமைக்கப்பட்டதை அறியமுடிகிறது.

இந்தியாவிலுள்ள மொழிகளில் தமிழ் ஒன்றுதான் இவ்விதம் உள்ளது. அங்ஙனமாயின் பிராமி முதலில் தமிழுக்கென அமைந்த லிபியாக இருத்தல் வேண்டும் என்கின்றனா்.

எ, ஏ, ஒ, ஓ வேறுபடுத்தப்படுவதும் ‘ழ’ கரம் இனங் காணப்பட்டதும், ற, ன, ஏ போன்றவற்றின் மெய்களும் இப்பிராமி கல்வெட்டுகளில் உள்ளன.

இன்று வழக்கில் இல்லா பழந்தமிழ்ச் சொற்கள் இக்கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன.

பிராமி எழுத்தைத் ‘தமிழ்’ என்றும் இந்த எழுத்தில்தான் சங்க இலக்கியங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என நடன காசிநாதன் கூறுகிறாா்.

**ஐராவதம் மகாதேவன் கூறுவது**

1. தமிழ் மொழிக்குரிய ஒலிகளே குறிக்கப்பட்டுள்ளன.
2. ழ, ற, ன என்ற எழுத்துக்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.
3. ஆரம்ப காலக் குகைக் கல்வெட்டுகளில் உள்ள புள்ளியில்லா மெய்யுருவம் அகரமேறிய மெய்யாகவே வழங்கப்பட்டது.

4. இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் புள்ளியில்லா மெய்யுருவம் அகரமேறிய மெய்யாகவே வழங்கப்பட்டது.
5. மெய்யைக் குறிக்கும் புள்ளி பயன்படுத்தவில்லை.
6. எகர ஒகர குறில் நெடில் வேறுபாடில்லை
7. உயிர் மயக்கங்கள் மிகுதி.

இந்தியாவில் மிகப் பழைய கல்வெட்டுக்கள் யாவும் பிராமி வரி வடிவத்திலேயே உள்ளன என்பதைத் தெளிவாக அறியமுடிகிறது.


**தமிழி**

கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சமயவங்க சுத்த என்ற சமணநூலில் 18 வகையான எழுத்துக்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவைகளுள் பிராமி, கரோஷ்டி என்பவற்றுடன் தமிழி என்ற பெயரும் குறிக்கப்பட்டுள்ளது. எனவே பிராமியும், தமிழியும் வெவ்வேறானவை என்பதையும் இது தமிழகத்தில் வழங்கிய எழுத்தைக் குறிக்கிறது என்பதும் தெளிவாகிறது. எனவே பிராமி என்ற பெயர் வழங்கப்பட்ட காலத்திலேயே தமிழ் என்ற பெயரும் வழக்கில் இருந்ததை நாம் அறியலாம். எனவே அந்தத் தொல்லெழுத்தைத் தமிழி என அழைப்பதே பொருந்தும் என்று தமிழறிஞர்கள் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

தமிழ் எழுத்து முறையாலும் பேச்சு முறையாலும் மலையாளம், கன்னடம், தெலுங்கு மொழிகளுக்குத் தாயாக உள்ளபோது தனக்கென எழுத்து முறையைக் கொண்டிருக்குமே தவிர பிராமி எழுத்தைச் சார்ந்ததாகக் கொள்ள இயலாது. வட்டெழுத்தைப் பழந்தமிழ் வடிவம் எனலாம் என்று கூறுகின்றனர்.

**தமிழ் பிராமி எழுத்து முறை கற்றல்**

இவ்வெழுத்துக்களை எளிதாகக் கற்றுக் கொள்ள முடியும்.



**தமிழ் பிராமி கல்வெட்டுக்கள்**

தமிழகத்தில் இயற்கையாக அமைந்த குகைத் தளங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவைகளில் முக்கியமானதாகக் கருதப்படுவது மாங்குளம் கல்வெட்டு, சித்தன்ன வாசல் கல்வெட்டு, அழகா் மலைக் கல்வெட்டு, புகளூா் கல்வெட்டு, அரச்சலூர்க் கல்வெட்டு ஆகியவை ஆகும்.

குறிப்பு

**(i) மாங்குளம் கல்வெட்டு**

மதுரைக்கு அருகே உள்ள இக்கல்வெட்டு மீனாட்சிபுரம் கல்வெட்டுகள் என்றும் அரிட்டாபட்டி கல்வெட்டுகள் என்றும் அழைக்கப்பட்டது. ஆயின் ஐராவதம் மகாதேவன் அவர்கள் மாங்குளம் கல்வெட்டு என்று குறிப்பிட்டுள்ளார். மாங்குளம் கல்வெட்டுகள் அமைந்த மலை கழுகுமலை என்றும் ஓவா மலை என்றும் அழைக்கப்படுகிறது. கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இக்கல்வெட்டுகளில் உள்ள செய்தி வருமாறு.

நந்த ஸிரியக்குவன் என்பவருக்கு நெடுஞ்செழியன் பள்ளியமைத்துக் கொடுத்ததை முதற்கல்வெட்டு கூறுகிறது. இரண்டாம் கல்வெட்டு அதே பெரியவருக்கு நெடுஞ்செழியனின் சாலகன் இளஞ்சடிகனின் தந்தை சடிகன் என்பான் பள்ளி செய்வித்ததைக் கூறுகிறது. மூன்றாவது கல்வெட்டு அதே பெரியவருக்கு வெள்ளரை நிகமத்தைச் சேர்ந்த காவிதிகழிதிக அந்தை என்பவனின் மகன் பிணவூ என்பவன் கொடுத்ததைக் குறிக்கிறது. சந்தரிதன் மற்றும் வெள்ளறை நிகமத்தோன் தானம் கொடுத்ததைப் பிற கல்வெட்டுகள் கூறியுள்ளன.

மாங்குளம் கல்வெட்டிலுள்ள எழுத்துக்கள் கி.மு. 2 அல்லது 3ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. எனவே இக்கல்வெட்டில் குறிக்கப்படும் நெடுஞ்செழியன் சங்க காலத்திற்கும் முற்பட்டவன் என ஜே.தர்மராஜ் கூறுகிறார்.

சித்தன்னவாசல் புதுக்கோட்டையிலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ளது. இந்த மலைப் பகுதியில் ஏழடிப்பட்டம் என்ற ஒரு பகுதி உள்ளது. அங்குச் சில கற்படுக்கைகள் இருக்கின்றன. ஒரு கற்படுக்கையின் பக்கவாட்டில் இந்தக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு இரண்டு வரிகள் உள்ள இக்கல்வெட்டின் செய்தி வருமாறு.

‘எருமை நாட்டுக் குமிழூரில் பிறந்த காவிதி ஈதேனுக்குச் சிறுபோவில் இளையர் செய்த அதிட்டானம்’. இந்தக் கல்வெட்டின் வாசகங்களைப் பலர் பலவிதமாகப் படித்துள்ளனர். ஆயின் ஐ. மகாதேவன் அவர்கள் படித்தமைதான் சிறப்பாக அமையப் பெற்றது.

**(iii) அழகர்மலை கல்வெட்டு**

அழகர் மலை பழமுதிர்ச்சோலை என்றும் அழைக்கப்படுகிறது. இந்த மலையின் ஒரு பகுதியில் இயற்கையாக அமைந்த குகைத் தளம் உள்ளது. இதைக் கிடாரிப்பட்டி என்ற ஊரில் இருந்து சுமார் 3 மைல் தொலைவு நடந்து சென்றுதான் அடைய முடியும். மலையில் ஏறிச் சென்று பார்ப்பதற்கு வசதியாக படிகள் அமைத்திருக்கிறார்கள். இந்த இயற்கைக் குகைத் தளத்தில் கற்படுக்கைகள் உள்ளன. கற்படுக்கையின் தளத்திற்கும், பாறை முகப்பிற்கும் உயரம் மிக அதிகம். முகப்பின் புறத்தே நீண்ட பண்டையக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டுகள் தமிழ் பிராமியில் எழுதப்பட்டுள்ளன. இவை கி.மு. இரண்டாம் அல்லது முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

குறிப்பு

இக்கல்வெட்டுகளால் மதுரையைச் சேர்ந்த பல வணிகர்களை அறிய முடிகிறது. பொற்கொல்லன், உப்பு வணிகன், அறுவை வணிகன், கொழு வணிகன் முதலியோர் குறிக்கப்பட்டுள்ளனர். இதனால் மதுரையைச் சேர்ந்த பல செல்வந்தர்கள் சமண சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிய முடிகிறது. பலதரப்பட்ட பிரிவினர் சமுதாயத்தில் வாழ்ந்தனர் பெண் துறவிகளும் இருந்துள்ளனர்.

**(iv) புகளூர் கல்வெட்டு**

திருச்சி மாவட்டம் கருவூரிலிருந்து பத்து மைல் தூரத்தில் உள்ள புகளூரில் ஆறு நாட்டார் மலை என்ற மலை ஒன்று உள்ளது. மலையடி வாரத்தில் வேலாயுதபாளையம் என்ற ஊர் உள்ளது. மலையின் மீது தென்புறத்திலும் வடபுறத்திலும் இயற்கை குகைத்தளங்கள் அமைந்திருக்கின்றன. இதில் வடபுறம் உள்ள குகைத் தளத்தில் ஒரு கல்வெட்டு உள்ளது. இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்ததாகும். தென்புறக் குகைத்தளத்தில் பல கல்வெட்டுகள் உள்ளன. பக்கவாட்டிலும், பாறையின் முகப்பிலும் உள்ள இரு கல்வெட்டுகள் சங்க கால வரலாற்றிற்கு மிகவும் இன்றியமையாத கல்வெட்டுகளாகும்.

மூத்த அமணனாகிய செங்காயபன் என்ற துறவி உறைவதற்காகக் கோ ஆதன் சேரல் இரும்பொறையின் பேரனும் பெருங்கடுங்கோவின் மகனும் ஆகிய இளங்கடுங்கோன் என்பவன் தான் இளங்கோ ஆவதற்காகப் பெருங்கற்படுக்கை செய்து கொடுத்தான் என்று ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது.

இதே இளங் கடுங்கோன் தான் இளங்கோ ஆன பிறகு ஒரு கற்படுக்கை செய்து கொடுத்தான் என்று தெரிவிக்கிறது.

புகளூர் கல்வெட்டுகளில் சேர மன்னர்களுடைய மூன்று தலைமுறைகள் குறிக்கப்பட்டுள்ளன. இவை சிறந்த வரலாற்றுச் செய்தியாகும்.

1. கோ ஆதன் செல்லிரும்பொறை, 2. பெருங்கடுங்கோன்
2. இளங்கடுங்கோன்

இவர்கள் சேரர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. அரசர் காலத்தில் மூன்று தலைமுறைகளைக் குறித்துள்ள மிகவும் தொன்மையான கல்வெட்டுகள் எனலாம்.

இவர்களைச் சங்க இலக்கியத்தோடு இணைத்துக் காணப் போதுமான சான்றுகள் இல்லை.

**(v) அரச்சலூர் கல்வெட்டு**

ஈரோட்டிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் காங்கேயம் செல்லும் பாதையில் அரச்சலூர் என்ற கிராமம் உள்ளது. இந்த ஊரின் எல்லையில் நாகமலை உள்ளது. இதில் ஆண்டிப்பாறை என்ற பகுதி உள்ளது அங்குப் பாண்டியர் குழி என்ற பகுதியில் பண்டைய எழுத்துக்கள் உள்ள குகைத்தளம்

உள்ளது. இதில் தமிழி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள மூன்று கல்வெட்டுகள் உள்ளன. இவையே அரச்சலூர் கல்வெட்டுகள் என்று அழைக்கப்படுகின்றன. அக்காலத்தில் நிலவிய இசையின் மேன்மையை இக்கல்வெட்டுகள் பறைசாற்றுகின்றன.

அரச்சலூரில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. முதல் இரண்டு கல்வெட்டுகளில் ஐந்து எழுத்துக்களைக் கொண்ட ஐந்து வரிகள் உள்ளன. மூன்றாவது கல்வெட்டில் இரண்டு வரிகள் உள்ளன.

**முதல் கல்வெட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **த** | **தை** | **தா** | **தை** | **த** |
| **தை** | **தா** | **தே** | **தா** | **தை** |
| **தா** | **தே** | **தை** | **தே** | **தா** |
| **தை** | **தா** | **தே** | **தா** | **தை** |
| **த** | **தை** | **தா** | **தை** | **த** |

**இரண்டாம் கல்வெட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **கை** | **த** | **தை** | **த** | **கை** |
| **த** | **தை** | **த** | **தை** | **த** |
| **தை** | **த** | **தை** | **த** | **தை** |
| **த** | **தை** | **த** | **தை** | **த** |
| **கை** | **த** | **தை** | **த** | **கை** |

இவற்றை இடமிருந்து வலமாகப் படித்தாலும், மேலிருந்து கீழாகவோ, கீழிலிருந்து மேலாகவோ எப்படிப் படித்தாலும் ஒரே மாதிரியாக அமைந்திருப்பதைக் காணலாம்.

**மூன்றாம் கல்வெட்டு**

**எழுத்துப் புணருத்தான் மணிய்**
**வண்ணக் கன்தேவன் சாத்தன்**

என்றுள்ளது.

இதனால், முதலிரண்டு கல்வெட்டிலுள்ள இசைக் குறியீடுகளைத் தொகுப்பித்தவனைக் கூறுகிறது.

இதன் வழி, பிராமி எழுத்தின் தோற்றம் அதைத் தமிழி எனக் கருதிய அறிஞர்களின் கொள்கைகள், பிராமி எழுத்துக்களின் அட்டவணை, பிராமி எழுத்துக்கள் இடம் பெற்றுள்ள கல்வெட்டுகள் அதில் உள்ள செய்திகள் வழி தமிழின் தொன்மை புலப்படுகிறது.

## 12.4. வட்டெழுத்து

தமிழ் வட்ட வடிவமான ஒரு வகை எழுத்தாக இருந்த பொழுது வட்டெழுத்து என்றழைக்கப்பட்டுள்ளது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய வட்டெழுத்து தொண்டை நாட்டில் எட்டாம் நூற்றாண்டு வரை இருந்து வந்துள்ளது. பாண்டிய நாட்டில் 12ஆம் நூற்றாண்டு வரையிலும், மலையாள நாட்டில் அண்மைக்காலம்

வரையிலும் வழங்கி வந்தது. பின்னர் மலையாள எழுத்தாக உருமாறியது. மலையாள நாட்டில் இவ்வட்டெழுத்து ‘தெக்கன் மலையாளம்’ என்றும், ‘கோலெழுத்து’ என்றும் ‘நானா மோனம்’ என்றும் அழைக்கப்பட்டது.

குறிப்பு

இவ்வட்டெழுத்து தமிழகம் முழுவதும் உபயோகப்படுத்தப் பட்டிருப்பதை கிடைக்கக்கூடிய சாசனங்கள் வழி அறிய முடிகிறது.

**வட்டெழுத்தும் பாண்டியரும்**

தமிழ் நாட்டில் பாண்டிய நாடுதான் செந்தமிழ்நாடு என்று சிறப்பித்துப் பேசப்பட்டது. தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டிய நாடு என்று மாணிக்க வாசகர் பாடியுள்ளார். சங்கம் நிறுவி தமிழ் வளர்த்தவர் பாண்டியர், தமிழை வளர்த்த பாண்டியர்களே வட்டெழுத்தையும் வளர்த்தவர். பாண்டியர் ஆட்சிக் காலத்தில் வட்டெழுத்தே அரசு அங்கீகாரம் பெற்ற எழுத்துமுறையாக இருந்திருக்கிறது. பாண்டிய நாட்டில் 7ஆம் நூற்றாண்டிலிருந்து வட்டெழுத்து நன்கு வளர்ச்சி அடைந்து ஒரு தனி வடிவத்தைப் பெற்று விட்டதாக தி.நா. சுப்பிரமணியம் கருதுகிறார். இக்கால சாசனங்களில் ங, லு, து, லு ஆகிய எழுத்துக்கள் வேறுபாடுகளுடன் விளங்குகின்றன.

8, 9ஆம் நூற்றாண்டுப் பாண்டியர் காலத்திய செப்பேடுகள் அனைத்தும் வட்டெழுத்தில் உள்ளன. செப்பேடுகள் அரசனால் அளிக்கப்படுபவை. இதனால் வட்டெழுத்து பாண்டியன் அவையில் சிறப்புற்றிருந்தது. பாண்டிய நாட்டில் கி.பி. 1000 வரை வட்டெழுத்தில் சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன.’

**வட்டெழுத்து காணப்படும் இடங்கள்**

வட்டெழுத்து தமிழகத்தில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, கோவை, சேலம், தர்மபுரி, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய பகுதிகளிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் சில பகுதிகளிலும் வழக்கில் இருந்துள்ளன. சோழ நாட்டில் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் வழக்கில் இல்லை ஆயின் வட்டெழுத்து கர்நாடகம் வரை பரவியிருந்துள்ளது.

**வட்டெழுத்தின் வீழ்ச்சி**

பாண்டிய நாட்டில் மிகச் செல்வாக்குடன் திகழ்ந்த வட்டெழுத்து, பாண்டிய நாட்டைச் சோழர்கள் கைப்பற்றிய பிறகு வீழ்ச்சியடையத் தொடங்கியது. பிற்காலச் சோழர் குலத்தைச் சார்ந்த முதலாம் பராந்தகச் சோழன், பாண்டிய நாட்டை கி.பி. 910ஆம் ஆண்டில் கைப்பற்றியதாக அறியப்படுகிறது. அவன் தன்னை மதுரை கொண்ட பரகேசரி என்று கூறிக்கொள்கிறான். அவன் காலத்திலிருந்து சோழர் ஆதிக்கம், பாண்டிய நாட்டில் பரவத் தொடங்கியது.

இராசராசன் காலத்தில் பாண்டிய நாடு முழுமையும் சோழர் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. சோழர்கள், பாண்டிய நாட்டில் சிறிது காலம் வட்டெழுத்தையே பயன்படுத்தினர். ஆனால் அவர்கள் வட்டெழுத்தை ஆதரிக்காததால் வட்டெழுத்தின் மதிப்பு குறையத் தொடங்கியது. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் பாண்டியர் பகுதியிலிருந்து வட்டெழுத்து மறைந்து விட்டதாகக் கருதப்படுகிறது.

**(i) திருக்குற்றாலக் கல்வெட்டு**

பராக்கிரம பாண்டியத் தேவர் கி.பி. 1387இல் திருக்குற்றால நாத சுவாமி திருக்கோயிலின் கர்ப்பக் கிரகத்தைப் புதுப்பித்தார். அப்பொழுது அதன் சுவர்களில் இருந்த சாசனங்களைத் தனியாகப் பெயர்த்து எழுதிக் கொண்டு கட்டிடப் பணி முடிந்த பின் மீண்டும் அந்த சாசனங்களைச் செதுக்கியுள்ளார்.

பழைய சுவரிலுள்ள கல்வெட்டு வட்டெழுத்தாக இருந்ததால் படிக்க முடியாமை கருதி அந்த எழுத்தை மட்டும் விட்டு விட்டதாகவும் கல்வெட்டில் எழுதி வைக்கப்பட்டுள்ளது.

கி.பி. 1070இல் சோழர்களிடமிருந்து சேர மன்னன் இராமவர்ம குலசேகரன் சேர நாட்டை மீட்டதாகச் சரித்திரம் கூறுகிறது. இதனால் சேர நாட்டில் வட்டெழுத்து அழிவுறாமல் இருந்துள்ளது.

18ஆம் நூற்றாண்டு வரை வட்டெழுத்து ஒரு சில பகுதிகளில் வழக்கில் இருந்திருக்கிறது. கேரள தொல்பொருள் ஆய்வுத் துறையினரிடம் இவ்வட்டெழுத்து சுவடிகள் அதிக அளவில் உள்ளன. அவற்றைப் படிக்க முடிந்தால் சேரர் வரலாறும் வட்டெழுத்தின் சிறப்பும் வரலாற்றிற்கு மெருகூட்டும்.

ஆராய்ச்சியாளர்கள் வட்டெழுத்தின் வளர்ச்சியை மூன்று கட்டங்களாகப் பிரிப்பர். கி.மு. 2-1ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 7-8ஆம் நூற்றாண்டு வரை வளர்ந்த வளர்ச்சி முதல் கட்ட வளர்ச்சியாகவும், கி.பிஇ 8-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13ஆம் நூற்றாண்டு முடிய வளர்ந்த வளர்ச்சி இரண்டாம் கட்ட வளர்ச்சியாகவும், கி.பி. 13ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.17ஆம் நூற்றாண்டு வரை வளர்ந்த வளர்ச்சி மூன்றாம் கட்ட வளர்ச்சியாகவும் கொள்ளப்படுகிறது.

முதற்கட்ட வளர்ச்சியில் வட்டெழுத்துகளும் தொன்மைத் தமிழ் எழுத்துக்களைப் போன்றே நேர்நேராக எழுதப் பெற்றுள்ளன. இராமநாதபுரம் மாவட்டம் பூலாங்குறிச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டு இதற்குச் சிறந்த உதாரணமாகும். மேலும் இத்தகைய எழுத்துக்கள் உள்ள கல்வெட்டுகள் வடார்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நடுகற்களில் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்களில் உள்ள சில கல்வெட்டுகளில் எகர ஒரகத்துக்குப் புள்ளி உள்ளன. பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் புள்ளியிட்டு எழுதியிருப்பதைத் தெளிவாகக் காணலாம்.

**(ii) பூலாங்குறிச்சி கல்வெட்டு**

குறிப்பு


வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் 1. பூலாங்குறிச்சி, 2. இருளப்பட்டி (தருமபுரி மாவட்டம்), 3. தொண்டூர் (தருமபுரி மாவட்டம்-நடுகல்), 4. திருநாதர் குன்று (தென்னார்க்காடு மாவட்டம்), 5. சாத்தனூர் (தருமபுரி மாவட்டம்) நடுகல், 6. மதுரை ஆகிய இடங்களில் உள்ளன. அவற்றில் பூலாங்குறிச்சி கல்வெட்டின் சிறப்பைக் காணலாம்.

சிவகங்கை மாவட்டத்துத் திருப்பத்தூர் வட்டத்தில் பூலாங்குறிச்சி அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள மதகுமலைச் சரிவின் அடிவாரத்தில் தமிழ் பிராமியின் பிற்கால வடிவத்தில் அமைந்த மூன்று கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் நடுவிலுள்ள கல்வெட்டு மட்டும் இன்னும் முழுமையாகப் படிக்க இயலவில்லை. படிக்கப் பெற்ற ஏனைய இரண்டு கல்வெட்டுகளும் அடுத்தடுத்து ஆண்ட சேந்தன். சேந்தன் கூற்றன் என்ற மன்னர்களின் காலத்தினைச் சார்ந்தவையாகும். சேந்தன் கூற்றன் காலக் கல்வெட்டினை எழுதியவன் நரியங்காரி என்று அக்கல்வெட்டிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகளை ஆய்வு செய்ததன் மூலம் பண்டைய தமிழிலக்கிய காலத்திற்கும் பல்லவர் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ் நாட்டில் வழக்கிலிருந்து தமிழ் பிராமி, வட்டெழுத்து, தமிழ் ஆகிய எழுத்துக்களின் வரிவடிவங்களையும் அவை வளர்ந்த முறையினையும் ஓரளவு அறிந்து கொள்ள முடிகின்றது. சங்க காலத்திற்குப் பின்னர் அதிக அளவில் எழுத்துக்களின் வரிவடிவங்களைத் தரும் முதற்கல்வெட்டுக்கள் இவையெனலாம்.

உயிரெழுத்துக்களில் அ, ஆ, இ, உ, எ, ஒ ஆகிய வரிவடிவங்கள் இக்கல்வெட்டில் உள்ளன. பூலாங்குறிச்சிக் கல்வெட்டிற்கு முன்பு இகரம், ஈகாரம் இரண்டும் வேறுபாடு இல்லாத வகையில் ஒரே வரிவடிவில் விரவி வந்தன. அவற்றில் இகரத்திற்குத் தனி வரிவடிவம் மூன்று கோடுகளின் அடிப்படையில் இருப்பதைப் பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் காணமுடிகின்றது. இதுவே பிற்காலத் தமிழ் வட்டெழுத்துக்களின் இகர வரிவடித்திற்கு முன்னோடியாக விளங்குகின்றது.

மேலும், தமிழில் உள்ள பதினெட்டு மெய்யெழுத்துக்களின் வரிவடிங்களையும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்களில் காணமுடிகிறது. ழ க ர மெய் மட்டும் இல்லை. (புள்ளி இல்லை).

**அட்டவணை**



இவ்வாறு உயிர் மற்றும் மெய்யெழுத்துக்கள் உள்ளன.

பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்கள் தமிழ்நாட்டில் பிராமியிலிருந்து தமிழ், வட்டெழுத்துக்கள் தோன்றி வளர்ந்து கொண்டிருந்த காலக் கட்டத்தில் எழுதப் பெற்றுள்ளன. இதன் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி ஆகும்.

**வட்டெழுத்தின் மூன்று நிலைகள்**

**முதல் நிலை**

தமிழ்-பிராமி வரிவடிவம் வட்டெழுத்தாக மாறும் நிலையைக் காணமுடிகிறது. இத்தகைய மாறும் நிலையைக் கொண்ட கல்வெட்டுக்களாக அரச்சலூர், அரசலாபுரம், அம்மன்கோயில்பட்டி, இந்தளூர், பூலாங்குறிச்சி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இக்கல்வெட்டுக்களில் பெரும்பாலும் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடப்பட்டுள்ளன.


**இரண்டாம் நிலை**

வட்டெழுத்து என்ற அடிப்படைத் தன்மையினைப் பெற்ற கல்வெட்டுக்களாக இருளப்பட்டி (கி.பி.500-550), திருநாதர் குன்று (கி.பி. 600) பறையன்பட்டு, சிம்மவர்மனின் தொண்டமனூர் நடுகல் கல்வெட்டு (550-570) முதலாம் நரசிம்ம வர்மனின் சாத்தனூர் நடுகல் கல்வெட்டு (கி.பி. 630-668) ஆகிய கல்வெட்டுக்களைக் குறிப்பிடலாம்.

**மூன்றாம் நிலை**

குறிப்பு

வட்டெழுத்து முழுமையான வளர்ச்சி பெற்ற அதன் ஒலிக் குறியீடுகள் அனைத்தும் அடிப்படை வரிவடித்துடன் இணைந்து விட்டதை அறியலாம். இதற்குப் பாண்டியன் சேந்தனின் மதுரைக் கல்வெட்டு (கி.பி.770) தமிழகத்தில் கிடைத்த முதல் செப்பேடான பராந்தக நெடுஞ்சடையனின் வேள்விக்குடிச் செப்பேடு (கி.பி. 770) வரகுண பாண்டியனின் அம்பா சமுத்திரம் கல்வெட்டு (கி.பி. 886) சோழன் தலை கொண்ட வீரபாண்டியனின் அம்பாசமுத்திரம் கல்வெட்டு (கி.பி. 966) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.




**(வட்டெழுத்து முதற் கால கட்டம்)**

**குறிப்பு**

தமிழ் பிராமியிலிருந்து வளர்ச்சி பெற்ற வட்டெழுத்தாக உருமாற்றம் பெற்ற இவ்வரிவடிவம் தமிழகத்தில் கி.பி. 4-5ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரை சிறப்புடன் இருந்தது. பின்னாத் தமிழ் வரிவடிவத்திற்கு இடம் விட்டு கி.பி. 12ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழகத்திலிருந்து முழுவதுமாக மறைந்துவிட்ட போதிலும் தமிழகத்தில் குறிப்பாக நடுகற்களிலும் பாண்டிய நாட்டிலும் சுமார் 700 ஆண்டுகள் வட்டெழுத்து கோலோச்சியது.

பல்லவர்கள் தங்கள் செப்பேடுகளில் ஒன்றில் கூட வட்டெழுத்தைப் பயன்படுத்தவில்லை. ஆனால் பாண்டியர்களின் முற்காலச் செப்பேடுகள் வட்டெழுத்தைத் தாங்கி இருக்கின்றன. (வேள்விக்குடி, சின்னமனூர் சிறிய செப்பேடு) மேலும் தங்கள் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் 13-14ஆம் நூற்றாண்டு வரை வட்டெழுத்தைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

பண்டைத் தமிழ் எழுத்துக்களாகிய வட்டெழுத்துக்கள் தமிழ் மக்களாலேயே முற்காலத்தில் அமைக்கப் பெற்றவை என்பதும், அவ்வட்டெழுத்தின் திருந்திய வடிவங்களே இப்போதுள்ள தமிழ் எழுத்துக்கள் என்பதும் உணரற்பாலது. எனவே, தமிழ் எழுத்துக்கள் தமிழ்நாட்டிலேயே தோன்றிய தனி எழுத்துக்கள் என தி.வை.சதாசிவபண்டாரத்தார் 'கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள்' எனும் தம் நூலில் கூறி உரிய சான்றுகளையும் தந்துள்ளார்.

வட்டெழுத்திலிருந்து தான் தமிழ் எழுத்துக்கள் தோன்றியிருக்க வேண்டும் என்று பல ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுகின்றனர்.

இவ்வெட்டெழுத்துக்கள், அசோகரின் பிராமி எழுத்துகளிலிருந்து தோன்றி, வளர்ச்சியடைந்தவை என்று பூலர் கூறுகின்றார். தமிழ் நாட்டிற்கு ஆரியர்கள் வந்து தம் நாகரிகத்தைப் பரப்புவதற்கு முன்னரே இவ்வெழுத்துக்கள் தோன்றியிருத்தல் வேண்டும் என்றும் அதனால் இவை பிராமியின் வழித்தோன்றிய பிராமி எழுத்துக்களுக்கு ஆதாரமாகக் கருதப்படும் பீனிஷிய எழுத்துக்களிலிருந்து பண்டைக் காலத் தமிழ் மக்கள் இவ்வட்டெழுத்துக்களை அமைத்துக் கொண்டிருத்தல் வேண்டும் என்று டாக்டர் பர்னல் கூறுகின்றார்.

இதை மறுத்துக் கூறும் தி.வை. சதாசிவ பண்டாரத்தார், பிராமி எழுத்துக்கள் தமிழகத்தில் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ் மொழிக்குரிய தனி எழுத்துக்கள் இருந்தன என்பது தொல்காப்பியச் சூத்திரங்களால் பெறப்படுகின்றது. அவ்வெழுத்துக்கள் வட்டெழுத்துக்களே, பிராமி எழுத்துக்களிலிருந்து வட்டெழுத்துக்கள் தோன்றியிருத்தல் வேண்டும் என்று கூறுவது சிறிதும் பொருந்தாது. மேலும் வலக்கைப் புறத்திலிருந்து இடக்கைப் புறமாக எழுதப்பட்ட பீனிஷிய எழுத்துக்களிலிருந்து இடக்கைப்


பக்கத்திலிருந்து வலக்கைப் பக்கமாக எழுதப்பட்ட வட்டெழுத்துக்கள் தோன்றியிருக்க முடியாது என்பது உறுதி என்கிறார்.

சங்க காலத்தில் சோழ மண்டலத்தில் வழங்கப்பட்ட தமிழ் எழுத்தானது கண்ணெழுத்துக்கள் என அழைக்கப்பட்டதை சிலப்பதிகாரம் கூறுவதால், இந்தக் கண்ணெழுத்துக்கள் முற்காலத் தமிழகம் முழுவதும் வழங்கி வந்த வட்டெழுத்துக்கள் என்று கருதப்படுகிறது.

**கண்ணெழுத்தாளர் கால் வேந்தன்**
**மண்ணுடை மூட மங்கலம் மன்னவர்க் கலத்து (சிலம்பு)**

வட்டெழுத்து பாண்டியரால் கையாளப்பட்டதால் தமிழ் பாண்டி நாட்டில் வழங்கப்படவில்லை என்று கூற இயலாது. தளவாய்ப்புரச் செப்பேட்டுச் சாசனத்தில் 'சீரிய செழும் பணி இதற்குச் செப்பேடு வாசகத்தை ஆரியம் விராய தமிழ் தொடுத்த மதியோற்கு' (அடிகள் 214-215), தென்னவர்கோன் திருவருளால் சீர்மிகு செப்பேட்டுக்குச் செந்தமிழ்ப்பா தொடை செய்தோன் (அடிகள் 229-230) என இருப்பதால் தமிழ்மொழி எப்பொழுதும் பாண்டி நாட்டில் இருந்து வந்துள்ளது. வட்டெழுத்தில் செதுக்கப்பட்டிருந்தாலும் அவற்றில் தமிழுக்குரிய சிறப்பெழுத்துக்கள் அப்படியே ஆளப்பட்டுள்ளன.


குறிப்பு




**(வட்டெழுத்து இரண்டாம் கால கட்டம்)**

இவ்வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் 1. பூலாங்குறிச்சி, 2. இருளப்பட்டி, 3. தொண்டூர் நடுகல், 4. திருநாதர்குன்று, 5.சாத்தனூர், 6. மதுரை முதலிய இடங்களில் சிறப்பாக உள்ளன.

பல்லவர்களின் தலைநகரான காஞ்சிபுரத்தைத் தன்னகத்தே கொண்ட செங்கல்பட்டு மாவட்டத்தில் வட்டெழுத்துக் கல்வெட்:டு ஒன்று கூடக் கிடைக்கப் பெறாமையாலும், தொண்டை மண்டலப் பகுதிகளில் தருமபுரி, வடார்க்காடு மாவட்டங்களில் அதிகமாகக் கிடைப்பதாலும், இவ்வரிவடிவங்கள் பல்லவர்களுக்கு முன்பிருந்தே தமிழ் மக்களால் வழங்கப்பட்டமையை அறியலாம்.



(கி.பி.10-ஆம் நூற்றாண்டு தமிழ் எழுத்துக்கள்)

கி.பி.850 முதல் சோழர்கள் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரியத் தொடங்கிய பின்னரே இப்பகுதியில் கல்வெட்டுக்கள் அதிக அளவில் உண்டாயின.

குறிப்பு

## கூறு 12: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. குறியீடுகளை அடுத்து இந்தியாவில் புழக்கத்தில் இருந்த எழுத்து வடிவம் எது?

பிராமி

2. உலக அளவில் கல்வெட்டுகளை அதிகம் பெற்ற நாடு, மொழி எது?

இந்தியா குறிப்பாக தமிழ்நாடு, தமிழ்மொழி

3. கரோஷ்டி எழுத்திற்கும் பிராமி எழுத்திற்கும் உள்ள வேற்றுமை யாது?

கரோஷ்டி வலமிருந்து இடமாக எழுதப்பெற்றது. பிராமி இடமிருந்து வலமாக எழுதப் பெற்றது.

4. கரோஷ்டி எழுத்தை பயன்படுத்தியவர் யாவர்?

குப்தர்கள்

### II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)

5. ‘கரோஷ்டி’ எழுத்து முறையை விவரி?

(இத்தலைப்பின் கீழ் உள்ள செய்திகளை எழுதுக.)

6. தமிழ் பிராமி – பற்றி விவரி?

(இத்தலைப்பின் கீழ் உள்ள செய்திகளை அறிஞர்கள், இடங்கள், தொன்மை முதலிய அடிப்படையில் எழுதுக.)

7. வட்டெழுத்தின் செல்வாக்கை விவரி?

(பாண்டியர் பயன்படுத்திய எழுத்துமுறை என்பதையும், அதன் வளர்ச்சி, வீழ்ச்சி உள்ளிட்டவையும் காணப்படும் இடங்கள் குறித்தும் எழுதுக.)

### III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)

8. தமிழகத்தில் தொடக்க கால எழுத்து முறைகளின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் குறித்து விவரி?

(தமிழ் பிராமி, கரோஷ்டி, வட்டெழுத்த ஆகிய தலைப்புகளில் உள்ளவற்றைத் தொகுத்து எழுதுக.)

# பிரிவு – IV எழுத்துக்கள் குறியீடுகள்

## கூறு 13: கிரந்த எழுத்து, தமிழ் எழுத்துக்கள்


குறிப்பு

தமிழகத்தில் வடமொழியை எழுதத் தொன்று தொட்டு பயன்பட்டு வரும் ஒரு வகை எழுத்து கிரந்த எழுத்து எனப்படும் கிரந்தம் என்ற சொல் வடமொழியில் நூல் என்று பொருள்படும். எனவே நூலை எழுதுவதற்கு அடிப்படையான எழுத்தையும் கிரந்தம் என்ற சொல்லால் குறித்தனர். **சமவயங்கசுத்த** என்ற நூலிலும் லலிதவிஸ்தரம் என்ற நூலிலும் கூறப்பட்டுள்ள பல்வகை எழுத்துக்களின் பெயர்களில் கிரந்தம் என்ற பெயர் காணப்படவில்லை. லலிதவிஸ்தரத்தில் திராவிடி என்ற பெயர் காணப்படுகிறது. திராவிடி என்பது பொதுவாக தெலுங்கு, கன்னடம், கிரந்ததிற்கு வழங்கிய பெயராகும்.

கிரந்த எழுத்தின் வடிவை உற்று நோக்குமிடத்து தமிழ் மொழியின் ஒலி அல்லது வடமொழியின் ஒலி வரும் இடங்களிலும் வட மொழிச் சொல்லை எழுத நேருகின்ற போதும் கிரந்த எழுத்தைத் தமிழகத்தில் பயன்படுத்தி வந்துள்ளனர். மேலும் தமிழி கல்வெட்டுக்களில் பிராகிருத மொழியை எழுதப் பயன்பட்ட வடமொழி எழுத்துக்களே கிரந்த எழுத்துக்களின் முன்னோடி எனலாம்.

கி.பி. 4, 5ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர் அவையில் பிராகிருத மொழி செல்வாக்குடன் திகழ்ந்தது. அதே சமயத்தில் சமஸ்கிருதம் செல்வாக்குடன் இருந்தது. எனவே கி.பி.ஆறாம் நூற்றாண்டு முதல் தொண்டை நாட்டில் கிராந்தமும் முழு வளர்ச்சியுடன் திகழ்ந்தது. கி.பி.ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் கிரந்தக் கல்வெட்டுக்கள் தமிழகத்தில் காணப்படுகின்றன. குறிப்பாக முதலாம் மகேந்திர வர்மப் பல்லவன் ஆட்சிக் காலத்திலிருந்தே இவை காணப்படுகின்றன. இதனால் முதன் முதலில் பல்லவர்களே இவ்வெழுத்து முறையைத் தமிழகத்தின் வடபகுதியில், அறிமுகப்படுத்தினர் எனலாம். மேலும் இப்பகுதியில் பழந்தமிழ், வட்டெழுத்துக்கள் ஆகிய எழுத்துக்களுடன் கிரந்தமும் இணைந்து வளர்ந்ததை அறிய முடிகிறது.

**கிரந்த எழுத்து வடிவத்தின் சிறப்பு**



இராசசிம்மனின் காலத்து கிரந்த எழுத்துக்கள் புதுப்பொலிவுடன் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள் கொடி போலவும், கோல மயில் போலவும், அழகிய அன்னம் போலவும், பாம்பு போலவும் அழகுறத் தீட்டப்பட்டுள்ளன.

பல்லவ மன்னர்கள் ஜாவா, சுமத்திரா, கம்போடியா முதலான நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தால் இவை அப்பகுதிகளிலும் பரவியுள்ளன. தகடூர் அதியமான்கள், கொடும்பாளூர் வேளிர்கள், வேணாட்டு ஆய்வேளிர்கள், பிற்காலச் சோழர்கள், விசய நகரவேந்தர்கள், நாயக்க மன்னர்கள் ஆகியோரும் தமது எழுத்துப் பொறிப்புகளில் கிரந்தத்தைப் பயன்படுத்தியுள்ளனர். கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வழங்கிய வந்த கிரந்த எழுத்தின் வளர்ச்சியை ஆராய்ச்சியாளர்கள் மூன்று கட்டமாகப் பிரித்துள்ளனர். கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை வழங்கிய கிரந்த எழுத்தைப் பழமையான

குறிப்பு

கிரந்த எழுத்து அல்லது வளர்ச்சியடைந்த தொன்மைத் தமிழ் எழுத்து என்று கூறுவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரை வழங்கிய கிரந்த எழுத்தைப் பல்லவ கிரந்தம் என்று அழைப்பர். இதை இரண்டாம் கட்ட வளர்ச்சியாகக் கொள்வர். கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் இன்று வரை வழங்கும் கிரந்த எழுத்தை மூன்றாம் கட்ட வளர்ச்சியாகக் கணிப்பர்.

இக்கிரந்த எழுத்தை ஆந்திராவில் சாதவாகனர்களை அடுத்து ஆட்சி செய்த இட்ஷ்வாகு மன்னர்கள் பெரும்பான்மையாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இதை நாகார்ஜுனா, அமராவதி போன்ற இடங்களில் காணமுடிகிறது. அவர்களைத் தொடர்ந்து பல்லவர்கள் இவ்வெழுத்தை அதிக அளவில் கையாண்டுள்ளனர். அவர்கள் காலத்தில் பிராகிருத, சமஸ்கிருத மொழியைத் தங்கள் செப்பேடுகளிலும், கல்வெட்டிலும் பயன்படுத்தியதோடு கிரந்தத்தையும் பயன்படுத்தினர் எனலாம். கி.பி.3 முதல் கி.பி. 6 வரை பல்லவர்கள் தங்கள் செப்பேடுகளைப் பிராகிருத, சமஸ்கிருத மொழியில்தான் எழுதியுள்ளனர். அம்மொழியை எழுத வளர்ச்சி பெற்ற தொன்மைத் தமிழெழுத்து மற்றும் கிரந்த எழுத்தைப் பயனபடுத்தியுள்ளனர்.

பல்லவர் காலத்தில் கிரந்தம்

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சியில் பயன்படுத்தப்பட்ட கிரந்தம் மிகவும் அழகாக எழுதப்பட்டிருந்தது. எனவே இந்த எழுத்து பல்லவ கிரந்தம் என்று அழைக்கப்பட்டது. பல்லவர்கள் கல்வெட்டிலும், செப்பேட்டிலும், குடைவரைக் கோயில்களிலும் தங்கள் பட்டப் பெயர்களைப் பொறிக்கையில் கிரந்தத்தைப் பயன்படுத்தினர். கிரந்த எழுத்துக்களில் ஒப்பற்ற வடிவையும், எழிலையும் தோற்றுவித்தவன் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆட்சி புரிந்த இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற ராஜசிம்மன் ஆவான். இவன் தனது கலை ஆர்வத்தால் கிரந்த எழுத்துக்களைப் பல்வேறு அழகான வடிவங்களில் எழுதியுள்ளான். காஞ்சி கைலாசநாதர் ஆலயத்திலும், மாமல்லபுரத்துக்கு அருகிலுள்ள சாளுவன் குப்பம் அதிரண சண்டேஸ்வர கிருஹத்திலும் கிரந்த எழுத்தினை ராஜசிம்மன் கையாண்டுள்ளான்.

கைலாசநாதர் ஆலயத்தில் கிரந்த எழுத்தை மூன்று வடிவங்களில் காணமுடிகிறது. 1 பலவகை கொடிகள் வடிவம், 2. பறவைகள் வடிவம், 3. தலைக்கட்டுகளோடு எழுதிய பல்லவ கிரந்தம் என்ற தனி கிரந்த வகையை உருவாக்கியுள்ளான்.

**பாண்டியர் காலத்தில் கிரந்தம்**

தமிழகத்தின் தென்பகுதியில் ஆட்சி புரிந்த பாண்டியர் பல்லவர்களைப் போலவே தமிழிலும் சமஸ்கிருதத்திலும் சாசனங்களைப் பொறித்தனர் அவர்களது கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் சமஸ்கிருத மொழி வரும் இடத்தில் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

முற்கால பாண்டிய மன்னன் மாறவர்மன் அரிகேசரியின் மதுரை கல்வெட்டில் முதற்பகுதி கிரந்த எழுத்திலேயே எழுதப்பட்டு உள்ளது. திருப்பரங்குன்றம் கல்வெட்டுகளில் கிரந்த எழுத்துக்களைக் காண முடிகிறது. அவனுக்குப் பின் ஆட்சி புரிந்த இரண்டாம் ராஜ சிம்மனின் சின்னமனூர் பெரிய செப்பேட்டிலும், அவனது தம்பியான பராந்தக வீரநாராயணனின் தளவாய்ப்புரச் செப்பேட்டிலும் சமஸ்கிருதப் பகுதிகள் கிரந்த எழுத்திலேயே எழுதப்பட்டுள்ளன.

குறிப்பு

பாண்டிய மன்னர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக விளங்கிய ஆய் மன்னர்களில் சிலரும் தம் காலத்தில் செப்புப் பட்டயங்களில் கிரந்த எழுத்தைப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

**சோழர் காலத்தில் கிரந்தம்**

சோழ மன்னர்கள் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் அக்கால கிரந்த எழுத்துக்களைக் காணமுடிகிறது. விஜயாலய சோழன் முதல் ஆட்சி புரிந்த சோழ மன்னர்களின் செப்புப் பட்டயங்களின் சமஸ்கிருதப் பகுதியைக் கிரந்த எழுத்தில் காணமுடிகிறது.

இராஜ இராஜ சோழன் காலத்திய சில கல்வெட்டுகளில் முதல்வரி கிரந்த எழுத்திலும் சமஸ்கிருத மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. சோழ மன்னர்களான உத்தமசோழன் இராஜஇராஜசோழன் போன்றோர் தாம் வெளியிட்ட காசுகளில் கூட கிரந்த எழுத்துக்களைப் பொறித்து உள்ளனர். மதுராந்தகன் கங்கை கொண்ட சோழன், மலைநாடு கொண்ட சோழன் போன்ற பெயர்கள் கொண்ட காசுகளில் கிரந்த எழுத்துக்கள் உள்ளன. சோழ மன்னர்களால் வெளியிடப்பட்டுள்ள செப்பேடுகளில் உள்ள முத்திரைகளில் கிரந்த எழுத்துக்களே உள்ளன.

**விஜயநகர மன்னர்கள் காலத்தில் கிரந்தம்**

பல்லவர்கள் காலத்தில் பெற்ற சிறப்பினை மீண்டும் விஜயநகர மன்னர் காலத்தில் கிரந்தம் பெற்றது. ஏனெனில், பல்லவர்களைப் போலவே விஜயநகர மன்னர்களும் ஆந்திரப் பகுதியிலிருந்து தமிழகம் வந்து ஆட்சி செய்தவர்கள் ஆவர். சமஸ்கிருதத்தை அதிக அளவில் பயன்படுத்திய இவர்களின் செப்புப் பட்டயங்களிலும் கல்வெட்டுகளிலும் கிரந்த எழுத்தையே பெருமளவில் கையாண்டனர். மன்னர்களின் மெய்க்கீர்த்தியம், சமஸ்கிருத நூல்களும் கூட கிரந்த எழுத்திலே உள்ளன. இதனால் கிரந்தம் எனில் சமஸ்கிருத நூல் என்று வழங்கப்படலாயிற்று.

இவர்களுக்குப் பின் வந்த நாயக்கர்களும் தங்கள் செப்பேடு மற்றும் கல்வெட்டில் கிரந்தத்தை வெகுவாகப் பயன்படுத்தியுள்ளனர்.

குறிப்பு

### 13.2. தமிழ் நாட்டு எழுத்து முறைகளின் வளர்ச்சி

தமிழ் மக்கள் இடமிருந்து வலமாக விரைந்து எழுதும் பழக்கம் உடையவர்கள். அதனால் எழுத்துக்கள் வளைந்து, உருண்டு செல்லும் அமைப்புடையனவாக இருந்தன. கல்லிலும், செம்பிலும் வெட்டும் போது சதுரம், கோணம், வட்டம் ஆகிய நிலைகள் செம்மையாக அமையும். ஆய்வாளர்கள் முற்கால எழுத்தினைக் கையெழுத்து முறையில் அமைந்தவற்றைக் கோளெழுத்து, வட்டெழுத்து என்றும், கல்லிலும், செம்பிலும் செதுக்கி அமைந்தவற்றை தமிழி (பிராமி) எழுத்து என்றும் கூறுவர்.

தமிழகத்தில் கல்லில் எழுதப்பட்ட எழுத்துக்கள் கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. அவற்றில் கி.பி. 3ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் அரச்சலூர் கல்வெட்டில் தான் முதல் முதலாக எழுத்து என்ற சொல் காணப்படுகிறது. கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சியை அறிய முடிகிறது. தமிழ் மொழியில் கல்வெட்டுச் சாசனங்கள் பல்லவர்களின் ஆட்சிக்காலம் முதல் கிடைக்கின்றன. பாண்டி மண்டலம், சோழ மண்டலம், சேர மண்டலம், தொண்டை மண்டலம் ஆகியவற்றில் கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 11ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் காணப்படும் எழுத்துக்கள் பழைய வட்டெழுத்துக்களைச் சார்ந்துள்ளன என்பர்.

பாண்டி மண்டலத்தை வென்று தன் ஆட்சிக்கு உட்படுத்திய முதலாம் இராசராசசோழன் அதற்கு முன் அந்நாட்டில் வழங்கி வந்த வட்டெழுத்துக்களை நீக்கி விட்டு தொண்டை மண்டலத்திலும், சோழ மண்டலத்தில் வழங்கிய தமிழ் எழுத்துக்களையே பயன்படுத்துமாறு செய்தான். இச்செய்தியைத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குற்றலாத்தில் காணப்படும் இருகல்வெட்டுகள் தெரியப்படுத்துகின்றன.

தமிழ் எழுத்து முறைகளின் தோற்றத்தை,

1.குறியீடுகள்
2.பிராமி (தமிழி)
3.வட்டெழுத்து
4.கிரந்த எழுத்து
5.கரோஷ்டி

முதலிய எழுத்து முறைகளோடு ஒப்பிட்டு அறிந்து கொண்டோம்.

## கூறு 13: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. தமிழகத்தில் வடமொழியை எழுதத் தொன்று தொட்டு பயன்படுத்தப் பெறும் எழுத்து எது?

கிரந்த எழுத்து

2. கிரந்த எழுத்து யாருடைய காலத்தில் வளர்ச்சி பெற்றது?

பல்லவர்கள் காலத்தில்

3. தமிழ் எழுத்துக்கள் எவ்வாறு எழுதப்பெறும்?

வலமிருந்து இடமாக வேகமாக எழுதப்பெறும் வடிவம் பெற்றதாகும்.

4. இன்றைய தமிழ் எழுத்து வளர்ச்சிக்கு வித்திட்டது யார்?

முதலாம் இராஜராஜ சோழன்

குறிப்பு

**II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)**

5. பல்லவ கிரந்தத்தின் சிறப்பை விவரி?

(வடமொழிக்கு மாற்று வடிவம் - அழகிய ஓவிய அமைப்பில் மன்னர்கள் எழுதியமை, தொண்டை மண்டலத்தில் கோலோச்சிய எழுத்து முதலான செய்திகளை எழுதுக.)

6. தமிழ் எழுத்துக்கள் பற்றி விவரி?

(சோழர் காலத்தில் ஏற்பட்ட எழுத்துச் சீர்திருத்த பணியின் செல்வாக்கு – அதன் வளர்ச்சி, உச்சம் இன்றைய நிலை வரையில் எழுதுக).

**III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)**

7. கிரந்த எழுத்தின் வீழ்ச்சியும், தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சியும் பற்றி எழுதுக.

(கிரந்தம் - விளக்கம், பல்லவர் பயன்பாடு, வீழ்ச்சி, கல்வெட்டுகள், சோழர் ஆட்சியில் ஏற்பட்ட மறுமலர்ச்சி ஆகியவற்றைத் தொகுத்து எழுதுக.)

## கூறு 14: குறியீடுகள்

சிந்து சமவெளி பண்பாட்டு எழுத்துக்களின் மறைவிற்கும் பிராமி எழுத்துக்களின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட சுமார் 1200 ஆண்டுகள் இந்தியாவில் வழக்கில் இருந்த ஒருவகை வடிவமே இக்குறியீடுகள் ஆகும். இக்குறியீடுகள் பற்றிய ஆய்வு 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தொடங்கிவிட்ட போதிலும் இக்குறியீடுகள் கருத்துப் பரிமாற்றத்திற்குரிய வரிவடிவங்களாக இருப்பதற்கு வாய்ப்பில்லை என்ற கருத்தின் அடிப்படையில் அகழ்வாய்வுகளில் கிடைத்த இக்குறியீடுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. ஆனால் இக்குறியீடுகளின் எண்ணிக்கையும், தன்மையும் எதிர்பார்த்ததை விட அதிகமாக இருப்பதால் அண்மைக் காலத்தில் இதன் மீதான ஆய்வுகள் முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

இந்தியாவின் பிற பகுதிகளில் கிடைப்பதைவிடத் தமிழகத்தில் இக்குறியீடுகள் அதிக அளவில் கிடைப்பதால் இதன் முக்கியத்துவத்தை உணர்வது அவசியமாகிறது. சங்க இலக்கியம் குறிப்பிடும் பெரும்பாலான ஊர்களில் இக்குறியீடுகள் தனித்தோ அல்லது தமிழ்ப் பிராமியுடன் இணைந்தோ காணப்படுகின்றன.

குறிப்பு

சங்க காலத்தைச் சார்ந்த ஊர்களில் கிடைக்கம் பானை ஓடுகளில் காணப்படும் தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறிப்புகள் பானை சுட்டபின் கீறப்பட்டவையாகும். பானையின் வெளிப்புறத்தில் கழுத்துக்குக் கீழ்ப்பகுதியில் பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளன. இதுபோன்றே குறியீடுகளின் நிலையும் பானைகளில் காணப்படுவதால் இதன் முக்கியத்துவம் மேலும் வலுப்பெறுகிறது. இக்குறியீடுகளின் ஆய்வினை 1881இல் பிரான்பில் என்ற அறிஞர் தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் நிகழ்ந்த தொல்லியல் அகழாய்வுகள் பலவற்றில் இவை மிகுதியாகக் கிடைத்துள்ளன. குறிப்பாகத் திருக்காம்புலியூர், உறையூர், கரூர், கொடுமணல், அழகன் குளம், மாங்குடி, தேரிருவேலி, பேரூர், வல்லம், சாணூர், ஆதிச்சநல்லூர், கொற்கை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கிடைத்த குறியீடுகள் ஒன்றோடொன்று ஒத்துக் காணப்படுகின்றன. இக்குறியீடுகள், தமிழ்ப் பிராமி வரிவடிவம் தமிழகத்தில் தோன்றுவதற்கும் முன்பாகவே மக்களின் எண்ணங்களை ஒலி வடிவமாகவோ, கருத்து வடிவமாகவோ வெளிப்படுத்தக் கூடிய கருவியாக விளங்கியிருக்க வேண்டும்.

இக்குறியீடு தொடர்பான ஆய்வு முழுமையானது தமிழகத்தின் தொன்மை வரலாற்றினை மேலும் வலுப்படுத்தப் பயன்படும்.

வல்லம் அகழாய்வில் அகழ்ந்த குழிகளில் குறியீடுகள் பொறித்த பானை ஓடுகள் கீழ் அடுக்குகளிலும், தமிழ்ப்பிராமி எழுத்துப் பொறித்தவை மேல் அடுக்குகளிலும் கிடைத்தன. தமிழ் பிராமி எழுத்துப் பொறித்த பானை ஓடுகளின் எண்ணிக்கை தொடங்கியது என்பது இவ்வகழாய்வில் காணப்படும் சிறப்பம்சம் ஆகும். கொடுமணலில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் இக்குறியீடு தொடர்பான பல செய்திகளை வெளிக்கொணர்ந்தன. நூற்றுக்கும் மேற்பட்ட குறியீடுகள் கொடுமணல் மற்றும் மாங்குடியில் கிடைத்தன. கொடுமணலில் அகழப்பட்ட பெருங்கற்படைச் சின்னங்களில் இவை கிடைத்துள்ளன. இச்சின்னங்களிலிருந்து மிகவும் இன்றியமையாத தொல்பொருட்கள் பெறப்பட்டுள்ளன. சமூகத்தில் உயர்நிலையில் வாழ்ந்தவர்களால் மட்டுமே இத்தகைய பொருட்களைப் பெற்றிருக்க முடியும் என்பதால் இக்குறியீடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

தமிழ்ப்பிராமி வரிவடிவம் இக்குறியீடுகளிலிருந்து வளர்ச்சி பெற்றது தெரிகிறது. தமிழகத்தில் இக்குறியீடுகள் பரவலாகக் கிடைப்பதால் இந்நிலையை அவை அடைய பல்லாண்டு காலம் ஆகியிருக்க வேண்டும் என்பதும் புலனாகிறது. இக்குறியீடுகள் இந்திய அளவில் தொல்லியல் துறையினரின் அகழாய்வுகள் வழியாகக் கிடைக்கின்றன. எனவே, தொல்லியல் பற்றியும் தமிழகத்தில் அகழாய்வுகள் நடைபெற்ற இடங்கள் குறித்தும் அறிதல் அவசியமாகிறது.

குறிப்பு

**குறியீடுகளில் மட்கலம்**

பண்டைய மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட மிகவும் பழமையான தொழில்களுள் மட்பாண்டங்கள் வனைதலும் ஒன்றாகும். உலகின் எந்தப் பகுதியில் ஆய்வு நிகழ்த்தினாலும் அங்குப் பேரளவில் கிடைப்பது மட்பாண்ட ஓடுகள், மட்பாண்டங்கள் பண்பாட்டினைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடிகள், சுருங்கக் கூறின் பண்பாட்டுச் சின்னங்களாக விளங்கும் மட்பாண்டங்களின் வகைகளையும்அவை உணர்த்தும் பண்பாடுகளையும் அறிவது அவசியம்.

நம் நாட்டு அகழாய்வில் கிடைத்துள்ள மட்கலங்களை 1. இந்திய மட்பாண்டங்கள், 2. தமிழ்நாட்டு மட்பாண்டங்கள், 3. அயல்நாட்டு மட்பாண்டங்கள் என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

இந்திய மட்பாண்ட வகைகள் கருப்பு வண்ணம் பூசப்பட்ட சிவப்பு மட்பாண்டங்கள், பழுப்பு நிற மட்பாண்டங்கள் அல்லது சாம்பல் நிற மட்பாண்டங்கள், கருப்பு சிவப்பு நிற மட்பாண்டங்கள், வட இந்திய பளபளக்கும் கருப்பு மட்கலங்கள், கருப்பு நிற மட்கலங்கள் காவிக் கலவை பூசப்பட்ட மட்கலங்கள் முதலான பிரிவுகள் உள்ளன. இம்மட்பாண்டங்களில் உள்ள குறியீடுகளைக் கொண்டு எழுத்தின் தோற்றத்தை ஆராய்ச்சியாளர்கள் நிர்ணயிக்கின்றனர்.

இந்தியாவில் பானையின் மேல் பொறிக்கப்பட்ட குறியீடுகளின் ஆய்வினை 1881-ல் பிரான்பில் என்ற அறிஞர் தொடங்கி வைத்தார். அன்று முதல் E.H. ஹண்டே, ஜி.யஜ்.தானி, P.K. தாபர், P.P.லால் போன்ற ஆய்வாளர்கள் இக்குறியீடுகளின் தோற்றம், வளர்ச்சி, குறியீடுகளுக்கு இடையிலான தொடர்பு ஆகியவற்றைப் பானைப் பொறிப்புகள், காசுப் பொறிப்புகள், முத்திரைகள் ஆகியவற்றிலிருந்து ஆராய்ந்தனர். 1916இல் யஜ்தானி விரிந்த அளவில் இவ்ஆய்வினை மேற்கொண்டு இறந்தவர்களுக்கு உருவாக்கிய ஈமச் சின்னங்களில் கிட்டிய பானைகளில் காணப்பட்ட பொறிப்புகளை (குறியீடுகளை) வகைப்படுத்தினார். அங்ஙனம், பெருங் கற்படைச் சின்னங்களிலிருந்து 131 குறியீடுகள் கிடைத்துள்ளன. பி.பிலால் சிந்து சமவெளிப் பண்பாட்டைச் சார்ந்த சித்திரப் பொறிப்புகளையும், பெருங் கற்படைச் சின்னங்களில் பானைப் பொறிப்புகளில் காணப்படும் குறியீடுகளையும் ஒப்புநோக்கி இவ்விரு பண்பாடுகளுக்கும் இடையே உள்ள தொடர்பினைச் சுட்டிக் காட்டினார். இக்குறியீடுகளை 61 குறியீடுகளாக வகைப்படுத்தி அதில் 47 குறியீடுகள் சிந்து

*Self-Instructional Material*

சமவெளிப் பண்பாட்டிலும், பெருங்கற்படைச் சின்னங்களிலும் காணப்படுவதாகக் கூறுகிறார். ஆயினும் இவர் தன் கருத்தை வலியுறுத்தும் போது எந்த ஒரு குறியீடும் பெருங்கற்படைச் சின்னத்தைச் சார்ந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். இவரின் ஆய்வைத் தொடர்ந்து பல குறியீடுகளை அகழாய்வாளர்கள் வெளிக் கொணர்ந்தனர். டி. நரசிப்பூர் என்ற இடத்தில் அகழாய்வினை மேற்கொண்ட சேஷாத்திரி 186 குறியீடுகளை வெளிக் கொணர்ந்தார்.

எஸ்.ஆர்.ராவ், எஸ்.எச்.ரித்தி போன்றோர் பிராமி எழுத்து வரிவடிவம் சிந்து சமவெளி எழுத்து வரிவடிவத்தின் வளர்ச்சியே எனக் கருத்துத் தெரிவிக்கின்றனர். தமிழகத்தில் பானை ஓட்டில் காணப்படும் குறியீடுகள் தொல்லியல் அகழாய்வுகளில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இதன்படி திருக்காம்புலியூர், உறையூர், அழகன்குளம், கரூர், வல்லம், கொடுமணல் ஆகிய ஊர்களில் கிடைத்த குறியீடுகள் ஒன்றையொன்று ஒத்த நிலையில் காணப்படுவது சிறப்பாகும்.

இக்குறியீடுகள் பிராமி வரிவடிவம் தோன்றுவதற்கு முன்பிருந்தே மக்களின் எண்ணங்களை ஒலி மற்றும் கருத்து வடிவமாக வெளிப்படுத்தும் கருவியாகப் பயன்பட்டிருக்க வேண்டும். இவை ஓடுகளில் பயன்படுத்தப்பட்ட இடமும் நிலையும் பிராமி வரிவடித்துடன் ஒத்திருப்பதால் பிராமி எழுத்துக்குரிய முக்கியத்துவத்தை இக்குறியீடுகளும் பெறுகின்றன. பிராமி எழுத்துக்கும் இக்குறியீடுகளுக்கும் இடையே ஒரு தொடர்பு இருக்கக் கூடும் அல்லது இக்குறியீடுகளின் வளர்ச்சியே பிராமி எழுத்தின் வரிவடிவமாக இருக்கக் கூடும் என்ற கருத்து இவ்ஆய்வினைத் தீவிரப்படுத்தியுள்ளது.

அண்மையில் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட வல்லம், கொடுமணல் அகழாய்வுகளில் இக்குறியீடுகள் கணிசமான அளவில் கிடைத்துள்ளன. இக்குறியீடுகள் பற்றிய அகழாய்வு வெளிப்படுத்தும் செய்திகளைக் காணலாம்.

**வல்லம்**

வல்லம் அகழாய்வில் அகழ்ந்த குழிகளில் இக்குறியீடுகள் பொறித்த பானை ஓடுகள் கீழ் அடுக்குகளிலும் பிராமி எழுத்து பொறித்தவை மேல் அடுக்குகளிலும் கிடைத்தன. பிராமி எழுத்துப் பொறித்த பானை ஓடுகள் கிடைக்கத் தொடங்கியவுடன் குறியீடுகள் பொறித்த பானை ஓடுகள் எண்ணிக்கை அளவில் குறைந்து காணப்படுவது ஓர் சிறப்பம்சமாகும். இந்தச் செய்தி பிராமி எழுத்து. குறியீட்டினின்று வளர்ச்சியுற்றதா அல்லது இக்குறியீடுகள் பிராமி எழுத்து வந்தவுடன் வழக்கிலிருந்து மங்கி விட்டனவா என்ற கேள்விகளை எழுப்பியுள்ளது. எனினும் எண்ணங்களை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக எழுத்துக்கள் தொடங்குமுன் விளங்கி இருத்தல் வேண்டும்.

குறிப்பு

**கொடுமணல்**


ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் காவிரி ஆற்றின் கிளை ஆறான நொய்யல் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள கொடுமணல் என்ற ஊரில் மேற்கொண்ட அகழாய்வில் இக்குறியீடுகளும், பிராமி எழுத்துப் பொறித்த பானை ஓடுகளும் மிகுதியாகக் கிடைத்துள்ளன. சங்ககால நூலான பதிற்றுப்பத்தில் இவ்வூர் கொடுமணம் என்ற பெயரில் இருந்துள்ளது.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அரிய கற்களைக் கொண்டு மணிகள் செய்யும் தொழிற் கூடமாகவும் இரும்புத் தாதிலிருந்து இரும்பை உருக்கி அவைகளைக் கொண்டு எ∴கு உருவாக்கும் உலைக்கலங்களைக் கொண்ட தொழிற் கூடமாகவும் விளங்கியுள்ளது. இவ்வூரின் வாழ்விடங்களிலிருந்தும், பெருங்கற்படை ஈமச் சின்னங்களிலிருந்தும் கிடைத்த குறியீடுகளும், பிராமி எழுத்துக்களும் பானைகள் சுட்ட பின்னால் எழுதப்பட்டவை ஆகும். இவ்வெழுத்துக்கள் பானையின் வெளிப்புறத்தில் தோள் பகுதியில் அல்லது விளிம்பிற்குக் கீழ் அல்லது கழுத்துப் பகுதிக்குக் கீழ் எழுதப்பட்டவை ஆகும். அரிதாக, தட்டுகள் போன்ற பாத்திரங்களில் உட்புறத்திலோ அல்லது வெளிப்புறத்தின் அடியிலோ பொறிக்கப்பட்டன. கிடைத்த குறியீடுகள் மற்றும் பிராமி எழுத்துப் பொறித்த பானை ஓடுகளில் 90% கறுப்பு, சிவப்பு பானை ஓடுகள், இவை பெரும்பாலும் குவளைகள் போன்ற மட்கலன்களின் பகுதிகளாகும்.

பொதுவாகப் பானை ஓடுகளில் வளைவு கோடுகளை விட நேர்கோடுகள் இடுவது எளிது. எனவேதான் பானை ஓடுகளில் காணப்படும் எழுத்துக்கள் நேர்கோட்டு நிலையைப் பெற்றிருக்கின்றன. உயிர் எழுத்துக்களும், தமிழ்மொழிக்கே உரிய ழ, ள, ற, ன போன்ற எழுத்துக்களும் தமிழியில் (பிராமி) உள்ளன. சங்க காலப் பெயர்கள் காணக் கிடைக்கின்றன.


**குறியீடுகளுக்கான எடுத்துக்காட்டுகள்**

**(அ) கொடுமணல் குறியீடுகளில் சில**




**கொடுமணலில் தமிழ் - பிராமி எழுத்துப் பொறிப்புகள்**

குறிப்பு




**கொடுமணலில் தமிழ் – பிராமி எழுத்துப் பொறிப்புகள்**




இவை போன்று உடைந்த மட்பாண்டங்களில் இருப்பதை ஆய்வாளர்கள் சேகரித்துள்ளனர்.


**(ஆ) ஆனைக்கோட்டை**




**(இ) கொங்கர் புளியங்குளம்**



**(ஈ) அழகர் மலை**






குறிப்பு

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளையும் அவற்றில் கிடைத்த பொருட்களையும் பிற தகவல்களையும் தற்போது கீழடியில் கிடைப்பன போன்று பல தரவுகள் கிடைத்தவாறு உள்ளன.

### கூறு 14: வினா விடைகள்

### I. இரண்டு மதிப்பெண் வினா-விடை

1. 'குறியீடு' என்றால் என்ன?

சிந்து சமவெளி எழுத்தின் மறைவிற்கும், பிராமி எழுத்து தோற்றத்திற்கு இடையிலும், தோன்றியவை குறியீடுகள் ஆகும்.

2. குறியீடுகள் பெருமளவு எதில் உள்ளன?

மட்பாண்ட ஓடுகளில்

3. இந்தியாவில் கிடைக்கும் மட்கல வகைகள் யாவை?

1. இந்திய மட்பாண்டங்கள்,
2. அயல் நாட்டு மட்பாண்டங்கள்
3. தமிழக மட்பாண்டங்கள்

4. இந்தியாவில் மட்பாண்டங்களில் உள்ள குறியீடுகளைப் பற்றிய ஆய்வைத் தொடங்கி வைத்தவர் யார்?

பிரான்பில

.

### II. ஐந்து மதிப்பெண் வினா-விடை (ஒரு பக்க அளவில் விடையளி)

5. குறியீடுகளில் மட்கலம் பெறுமிடத்தை விவரி.

(மட்பாண்ட வகைகள், காணப்பெறும் குறியீடுகள், ஆய்வுகள் பற்றி எழுதுக.)

6. தமிழகத்தில் குறியீடுகள் பற்றிய ஆய்வுகள் நடைபெறும் இடங்களைக் கூறுக.

(கொடுமணல், சாணூர், வல்லம், கொற்கை முதலிய இடங்களில் கிடைத்தவை பற்றி எழுதுக.)

குறிப்பு

### III. பத்து மதிப்பெண் வினா-விடை (கட்டுரை வடிவில் விடை தருக)

7. குறியீடுகளின் இன்றியமையாமையை விவரி?

(குறியீடுகளை ஆய்வு செய்வதன் அவசியம் - தொடக்கால ஆய்வு, குறியீடுகள் கிடைக்கும் இடங்கள் ஆகிய செய்திகளை எழுதுதல் வேண்டும்.)

khjphp tpdh

### I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க 10 x 2 = 20

1. கல்லெழுத்தாளர் எங்ஙனம்ம அழைக்கப் பெற்றனர்?
2. பழந்தமிழ் எழுத்துக்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
3. திராவிட மொழிகளில் தொன்மையானது எது?
4. ஸ்வஸ்தி ஸ்ரீ - என்றால் என்ன?
5. சுங்கம் தவிர்த்த சோழன் யார்?
6. வேள்விக்குடி செப்பேட்டின் சிறப்பு யாது?
7. அசோகரின் கல்வெட்டுகள் எவ்வகை எழுத்துக்களால் உள்ளன?
8. 'கொல்லம் ஆண்டு" பயன்படுத்தியவர் யார்?
9. வட்டெழுத்தை பயன்படுத்தியவர் யாவர்?
10. ஹரப்பா, மொகஞ்சதாரோவை ஆராய்ந்தவர்கள் யாவர்?

### II. ஒரு பக்க அளவில் விடையளி 5 x 5 = 25

11.(அ) தென்னிந்தியக் கல்வெட்டுகளின் சிறப்பை விவரி?

(அல்லது)

(ஆ). இந்தியாவில் வழங்கப்பெற்ற எழுத்துக்கள் பற்றி எழுதுக.

12. (அ). கல்வெட்டின் அமைப்பு முறையை விவரி?

(அல்லது)

(ஆ). மெய்க்கீர்த்தி என்றால் என்ன? முதலாம் இராஜ இராஜனின் மெய்க்கீரத்தியை எழுதுக.

13. (அ). அக்கால தேர்தல் முறைகள் பற்றி விவரி?

(அல்லது)

(ஆ). 'வரிகள்' பற்றி கல்வெட்டுகள் தரும் செய்தியை எழுதுக.

14. (அ). அக்கால அளவை முறைகள் பற்றி விளக்குக.

(அல்லது)

*Self-Instructional Material*

(ஆ). பிராமி எழுத்தின் செல்வாக்கையும் வகைகளையும் விவரி.

குறிப்பு

15. (அ). பல்லவ கிரந்தம் பற்றி விவரி?

(அல்லது)

(ஆ). குறியீடுகளில் மட்கலம் பெறுமிடத்தை விளக்குக.

## III. கட்டுரை வடிவில் விடை தருக 3 x 10 = 30

**(எவையேனும் மூன்றிற்கு மட்டும் விடையளி)**

16. வரலாற்று உருவாக்கத்தில் கல்வெட்டு பெறுமிடத்தை விவரி?
17. இந்திய கல்வெட்டுகளில் அசோகனின் பங்கை குறிப்பிடுக.
18. தமிழகம் கல்வெட்டுகளின் கருவூலமாக விளங்குகிறது என்பதை நிறுவுக.
19. தமிழ் நாட்டில் எழுத்துமுறைகள், வகைகள் பற்றி விவரிக்க.
20. தமிழக மன்னர்கள் கல்வெட்டுகளை உருவாக்கிய காரணத்தை ஆராய்க.

எம்.ஏ. (தமிழ்)

# 319 24

# கல்வெட்டியல்

இரண்டாம் பருவம்




## அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

ISBN 978-93-5338-590-3
9 789353 385903